
உதயன்

38 பக்கங்கள்

விலை ரூபா 25.00

www.onlineuthayan.com

சுடர் 28 கதிர் 058 வள்ளுவர் ஆண்டு 2044 தை 10 புதன்கிழமை (23/01/2013) UTHAYAN - A Lively National Tamil Daily



அஷரன்கா, பெடரர் அசத்தல் 27

டில்லி மாணவி வன்புணர்வு; வழக்கு ஆரம்பம் 08

பயணம் இன்னும் முடியவில்லை– ஒபாமா 09

# இலங்கைக்கு எதிராக அமெரிக்கா பாயும்?

## ஜெனிவா மாநாட்டில் பிரேரணை வரும்

கொழும்பு, ஜனவரி 23

ஜெனிவாவில் எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் சபைக்கூட்டத்தொடரில் இலங்கைக்கு எதிரான மிக முக்கிய தீர்மானமொன்றை நிறைவேற்றுவதற்கு அமெரிக்கா உத்தேசித்துள்ளது. இதற்கான இராஜதந்திர முன்னேற்பாடுகளை இப்போதே அமெரிக்கா முடுக்கிவிட்டிருப்பதாக அறியமுடிகின்றது.

இதன்படி மார்ச் மாத கூட்டத்தொடரில் பங்கேற்கும் நாடுகளின் தூதுவர்களுக்கு இந்த விடயம் குறித்து தெளிவுபடுத்தும் நடவடிக்கைகளை அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சு

பார்க்க பக்கம் 04



இராஜதந்திர முன்னேற்பாடுகளை இப்போதே அமெரிக்கா முடுக்கிவிட்டிருப்பதாக அறியமுடிகின்றது.

### காரைநகர் கொலை: சந்தேகநபர்கள் நிரபராதிகள்

மூவரும் விடுதலை

யாழ்ப்பாணம், ஜன.23

காரைநகரில் 2010 ஆம் ஆண்டு இடம்பெற்ற கொலை தொடர்பில் குற்றஞ்சாட்டப்பட்டவர்களான ஐ.தே.க. வேட்பாளர் உட்பட மூன்று பேரும் நிரபராதிகளாக இனங்காணப்பட்டு ஊர்காவற்றுறை நீதிமன்றினால் விடுதலை செய்யப்பட்டனர்.

காரைநகர், புதுவீதியைச் சேர்ந்த எஸ்.சிவனேஸ்வரராசா (வயது-55) என்பவர் அங்குள்ள கிணறு ஒன்றிலிருந்து 2010ஆம் ஆண்டு டிசெம்பர் 31ஆம் திகதி சடலமாக மீட்கப்பட்டார். அவர் கொலை செய்யப்பட்டு கிணற்றில் வீசப்பட்டிருக்கலாம் என்று சந்தேகம் தெரிவிக்கப்பட்டது.

அதன் அடிப்படையில் விசாரணை மேற்கொண்ட

பார்க்க பக்கம் 04

## இனப்பிரச்சினைக்குத் தீர்வு துரிதமாக வழங்க வேண்டும்

### பீரிஸிடம் இந்தியா வலியுறுத்து

கொழும்பு, ஜன.23

தமிழர் பிரச்சினைக்குத் தீர்வுகாண மேற்கொள்ளப்படும் முயற்சிகளை இலங்கை அரசு துரிதப்படுத்தப்பட வேண்டும் என்று இந்தியா நேற்றுத் திட்டவட்டமாக வலியுறுத்தியுள்ளது.

உத்தியோகபூர்வ பயணம் ஒன்றை மேற்கொண்டு இந்தியா சென்றுள்ள வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித்தை நேற்றுச் சந்தித்தார். அதன்போதே சல்மான் குர்ஷித் இந்தியா சார்பான வலியுறுத்தலை முன்வைத்தார்.

மீனவர் பிரச்சினை, சம்பூர் அனல் மின் நிலைய விடயம், இந்திய வீடமைப்புத் திட்டம், பொருளாதார ஒத்துழைப்புகள், சுற்றுலாத்துறை உட்பட்ட பல விடயங்கள் இந்தச் சந்திப்பின்போது விரிவாகப் பேசப்பட்டுள்ளன.

பார்க்க பக்கம் 04

## குற்றவியல் சட்ட வரைவினால் சர்வதேச நெருக்கடி அதிகரிக்கும்

### ஐ.தே.க. குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன.23

இலங்கை அரசு குற்றவியல் நடைமுறைக்கோவை விசேட ஏற்பாடுகள் சட்ட வரைவைக் கொண்டுவருவதனூடாக சர்வதேச நாடுகள் இலங்கை மீது சுமத்தும் மனித உரிமைகள் தொடர்பான குற்றச்சாட்டுகள் யாவும் உண்மையாகிவிடும் அபாயம் எழுந்துள்ளது. இதனால் சர்வதேச நெருக்கடி இன்னும் அதிகரிக்கும் - என்று அரசு மீது குற்றம் சுமத்தியுள்ளார் ஐ.தே.க. பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க. இது குறித்து அவர் மேலும்தெரிவித்ததாவது:

சந்தேகநபர்களை விசாரணை செய்வது தொடர்பான நடைமுறையில் சர்வதேச ரீதியில் பல முன்னேற்றங்கள் காணப்பட்டுள்ளன. இந்த நிலையில், அரசு குற்றவியல் சட்டவரைவு கொண்டுவருவது சர்வதேச உடன்படிக்கைகளுக்கு எதிரான செயலாகும்.-என்றார். (ஙு-சி)

### ஷிராணியைக் கொல்லவா விலக்கப்பட்டது பாதுகாப்பு?

கொழும்பு, ஜன.23

ஷிராணி பண்டாரநாயக்கவை கொலைசெய்வதற்காகவா அல்லது கடத்துவதற்காகவா அவரின் பாதுகாப்பு வாபஸ் பெறப்பட்டுள்ளது? என்ற கேள்வியை நாடாளுமன்றில் தொடுத்தார் ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன் அமரதுங்க.

அதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பிரதம நீதியரசர் கலாநிதி ஷிராணி பண்டாரநாயக்க பதவிநீக்கம் செய்யப்பட்ட நடைமுறையை முழு உலகமும் கண்டிக்கின்றது.

இன்னமும் நாட்டில் பிரதம நீதியரசர் தானே என்று ஷிராணி பண்டாரநாயக்க தெரிவிக்கின்றார். அரசும் அவர் பதவிநீக்கம் செய்யப்பட்டார் எனக் கூறவில்லை. இதற்கிடையில் புதிய பிரதம நீதியரசரொருவரும் நியமிக்கப்பட்டுள்ளார். அப்படியானால், நாட்டில் தற்போது

பார்க்க பக்கம் 04

## சந்தேகநபர்கள் 48 மணி நேரம் இனிமேல் பொலிஸ் காவலில்

### சட்டவரைவு நேற்று நிறைவேற்றம்

கொழும்பு, ஜன.23

பிடியாணை ஏதுமின்றி கைது செய்யப்படும் சந்தேகநபர்களை 48 மணிநேரங்கள் பொலிஸ் நிலையங்களில் தடுத்து வைத்து விசாரணை செய்யும் அதிகாரம் பொலிஸாருக்கு வழங்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றில் நேற்று நிறைவேற்றப்பட்ட குற்றவியல் நடவடிக்கைமுறை சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலத்தின் மூலம் இந்த அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

சட்டமூலத்துக்கு ஆதரவாக 110 வாக்குகளும் எதிராக 33 வாக்குகளும் அளிக்கப்பட்டன. இதன் அடிப்படையில் குற்றவியல் நடவடிக்கை முறை விசேட ஏற்பாடுகள் சட்டமூலம் 77 மேலதிக வாக்குகளால் நாடாளுமன்றில் நேற்று நிறைவேற்றப்பட்டது.

பார்க்க பக்கம் 04

### கிளிநொச்சியில் ரி.ஐ.டியால் இளைஞன் கைது

கிளிநொச்சி, ஜன.23

கிளிநொச்சி திருவையாறுப் பகுதியில் இளைஞர் ஒருவர் கொழும்பிலிருந்து வந்த பயங்கரவாத தடுப்புப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளதாக கிளிநொச்சி பொலிஸ் நிலையம் உறுதிப்படுத்தியது.

அம்பாள் நகர் திருவையாறைச் சேர்ந்த அரியரெத்தினம் ஜெயகாந்தன் (வயது-25) என்பவரே இவ்வாறு கைது

பார்க்க பக்கம் 04

## 'நெல்சிப்' திட்டத்தின் நிதி உள்ளூராட்சி அமைச்சுக்கு

### இந்த மாதம் 31 ஆம் திகதிக்கு முன் மாற்றப்பணிப்பு

யாழ்ப்பாணம், ஜன.23

பிரதேச சபைகளின், 'நெல்சிப்' வங்கிக் கணக்கில் இருக்கும் மிகுதிப் பணத்தை இந்த மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் வடமாகாண உள்ளூராட்சி அமைச்சின் வங்கிக் கணக்குக்கு மாற்றுமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

மக்கள் பங்களிப்புடன், ஒவ்வொரு பிரதேச சபைகளினாலும் 'நெல்சிப்' வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வந்தன.

வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு முடிவுறுத்தப்பட்டதும் அதற்குரிய கொடுப்பனவுகள் அந்தப்

பார்க்க பக்கம் 04

### க.பொ.த. (உ/த) பெறுபேறு 30 ஆம் திகதி

கொழும்பு, ஜன.23

க.பொ.த. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் இந்த மாதம் 30ஆம் திகதி வெளியிடப்படும் என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் புஷ்பகுமார அறிவித்துள்ளார்

அன்றைய தினம் பரீட்சைகள் திணைக்களத்தின் www.doenets.lk என்ற இணையத்தளத்தினூடாக பரீட்சார்த்திகள் தமது பெறுபேறுகளை அறிந்துகொள்ள முடியும்.

அதேவேளை, குறித்த [illegible] பாடசாலை

பார்க்க பக்கம் 04

## சிறீதரன் எம்.பியின் அலுவலகம் 2 ஆவது தடவையும் சோதனை

### நேற்றுப் பாய்ந்தது பயங்கரவாதப் பொலிஸ்

கிளிநொச்சி,ஜன.23

நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனின் கிளிநொச்சி அலுவலகம் நேற்று இரண்டாவது தடவையாக பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் சோதனைக்கு உட்படுத்தப்பட்டது. இதன்போது அங்கிருந்த கணினி ஒன்றும் அவர்களால் எடுத்துச் செல்லப்பட்டது.

நேற்றுக் காலை சுமார் 9.30 மணிக்கு சிறீதரனின் அலுவலகத்துக்குச் சென்ற பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் மதியம் ஒரு மணி வரை சோதனையில் ஈடுபட்டனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரனின் பிரத்தியேக செயலாளர் பொன்னம்பலம் லக்ஷ்மிகாந்தன் பயங்கரவாதத் தடுப்பு பிரிவினரால் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டதை உறுதிப்படுத்தியதுடன், அவர் வழங்கிய

பார்க்க பக்கம் 04

## பல்கலை மாணவர்களில் இருவர் நேற்று விடுவிப்பு

### தர்ஷானந்த், ஜெனமேஜெயந் விரைவில் விடுதலை?

யாழ்ப்பாணம், ஜன.23

பயங்கரவாதத் தடுப்புப் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டு வெலிக்கந்த முகாமில் புனர்வாழ்வு என்ற பெயரில் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் நால்வரில் இருவர் நேற்று செவ்வாய்க்கிழமை விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம், முகாமைத்துவபீட பீடாதிபதி பேராசிரியர் வேல்நம்பி ஆகிய இருவரும் மாணவர்களின் பெற்றோரையும் வவுனியாவுக்கு அழைத்துச் சென்று விடுவிக்கப்பட்ட இரு மாணவர்களையும் அழைத்து வந்தனர்.

யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் வி.பவானந்தன் (முகாமைத்துவபீடம்), விஞ்ஞானபீட மாணவர் ஒன்றிய உறுப்பினர் [illegible] ஆகிய இருவருமே நேற்று விடுதலை [illegible]

பார்க்க பக்கம் 04

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எஞ்சியிருக்கும் எமது வாழ்காலத்தை இறைவனின் துணைகொண்டு வெல்வோம்

## கிளிநொச்சியில் அருட் தந்தை மங்களராஜா அடிகளார் உரை

கிளிநொச்சி,ஜன.23

கடந்த கால இழப்புக்கள் எங்களைப் பாதித்தாலும் நாங்கள் நம்பிக்கையோடு வாழ வேண்டும். இவை எல்லாவற்றுக்கும் இறைவன் மீது நம்பிக்கை எமக்குத் தேவைப்படுகிறது. இவ்வாறு தெரிவித்தார் யாழ். மறைமாவட்ட நீதி சமாதான ஆணைக்குழுவின் தலைவர் அருட்தந்தை மங்களராஜா அடிகளார்.

கடந்த முப்பது வருடகாலப் போரின்போது இறந்த அனைத்து மக்களுக்குமான சர்வமதப் பிரார்த்தனை நிகழ்வு கிளிநொச்சியில் அமைந்துள்ள கியூடெக் கரித்தாஸ் வன்னி அலுவலகத்தில் நேற்று முற்பகல் 10 மணிக்கு கியூடெக் கரித்தாஸ் வன்னி இயக்குநர் அருட் தந்தை யாவீஸ் அடிகளார் தலைமையில் நடைபெற்றுள்ளது.


இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

போரால் பாதிக்கப்பட்டவர்கள் தங்களுடைய எஞ்சிய வாழ்க்கையை நம்பிக்கையுடன் முன்னெடுத்தச் செல்ல வேண்டும். போரின்போது உறவுகளை இழந்து தனித்திருப்பவர்களை வாழ வைக்க அயராது பாடுபட வேண்டும். இழப்புக்கள் எங்களைப் பாதித்தாலும் நம்பிக்கையோடு வாழவேண்டும். இவை எல்லாவற்றுக்கும் இறைவனுடைய பார்வை எமக்குத் தேவைப்படுகிறது.

கடந்த முப்பது வருடகாலப் போரில் பல்லாயிரக் கணக்கான மக்கள் உயிரிழந்திருக்கின்றனர். அதாவது குடும்பம் குடும்பமாக, பச்சிளங்குழந்தைகள், கர்ப்பிணித் தாய்மார்கள் எனப் பல்லாயிரக்கணக்கானோர் உயிரிழந்துள்ளனர். இதைவிட எண்ணிக்கை உறுதிப்படுத்தப்படாத மக்கள் காணாமற்போயுள்ளனர் எனவும் அடிகளார் தெரிவித்தார்.

நிகழ்வில், முப்பது வருடகால போரின்போது உயிரிழந்தவர்களுக்கு நினைவுச் சுடர் ஏற்றி மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது. தொடர்ந்து உயிரிழந்தவர்களின் ஆத்ம சாந்திக்கான சர்வமதப் பிரார்த்தனைகள் நடைபெற்றன. இதில் மதத் தலைவர்கள், உயிரிழந்தவர்களின் உறவினர்கள், பொதுமக்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தனர். (ஐ-6)

## விபத்தில் ஒருவர் காயம்




நேற்று மாலை யாழ்.நகரில் தந்தை செல்வா நினைவுச் சதுக்கத்துக்கு அருகில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் படுகாயமடைந்தார். பிரதான வீதியால் சைக்கிளில் வந்த ஒருவரை வேகமாக வந்த தனியார் பஸ் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றது.

ஊர்காவற்றுறையைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை செபஸ்தியாம்பிள்ளை (வயது-60) என்பவரே படுகாயம் அடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். (ஐ-17)

# சிறீதரனை அச்சுறுத்தி அடிபணிய வைக்க சதி

## சரவணபவன் எம்.பி. சந்தேகம்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவ ஞானம் சிறீதரனின் கிளிநொச்சி அலுவலகம் மீது பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் திடீர் சோதனையில் ஈடுபட்டமை, அதன் பின்னர் இடம்பெற்ற ஆர்ப்பாட்டம், கைது போன்ற சம்பவங்கள் அவரை அச்சுறுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட திட்டமிட்ட சதி நடவடிக்கைகளோ என்ற சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனின் கிளிநொச்சி அலுவலகம் அண்மையில் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் திடீர் சோதனைக்கு உட்படுத் தப் பட்ட போது, அங்கு வெடி பொருள்களும், ஆபாச இறுவட்டுக்களும் கைப்பற்றப்பட்டதாகப் பாதுகாப்புத் தரப்பினரால் தெரிவிக்கப்பட்டது.

அது மட்டுமன்றி நாடாளுமன்ற உறுப்பினரின் பிரத்தியேகச் செயலாளரும், இணைப்புச் செயலாளரும் நீண்ட நேரம் பயங்கரவாதத் தடுப்புப்பிரிவினரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர். பின்பு இணைப்புச் செயலாளர் வேளமாலிகிதன், பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சோதனைகள் நடத் தப்பட்டதற்குக் கூறப்படும் காரணங்களும் அங்கு இடம்பெற்ற சம்பவங்களும், அதன் பின்பு மேற்கொள்ளப்பட்ட கைதும், அடுத்தடுத்த நாள்களில் அந்த காரியாலயம் இழுத்து மூடப்பட வேண்டும் என்று நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டமும் எம்மிடையே பல கேள்விகளை எழுப்புகின்றன. இது நாடாளுமன்ற உறுப்பினரையும், அவருடன் இணைந்து பணியாற்றுபவர்களையும், கொச்சைப் படுத்தவும், அச்சுறுத்தவும் மேற்கொள்ளப்பட்ட ஒரு திட்டமிட்ட சதியோ என்ற சந்தேகத்தை எழுப்பியுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் ஏற்கனவே பயங்கரவாதத் தடுப்புப் பிரிவுக்கு அழைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டுப் பின் விடுவிக்கப்பட்டார்.

அதன் பின்பு அவருக்கு வழங்கப்பட்ட பாதுகாப்பு எவ்வித காரணமும் கூறப்படாமலே நீக்கப்பட்டது. அது தொடர்பாக அவர் சம்பந்தப்பட்டவர்களிடம் தொடர்பு கொண்டபோதும், எவ்வித பலனும் கிட்டவில்லை.

ஆனால் அவரின் பாதுகாப்புப் பிரிவினர் தங்கியிருந்த காவல் நிலையிலிருந்து வெடி பொருள்கள் மீட்கப்பட்டதாக இப்போது கூறப்படுகின்றது.

இந்த காவல் நிலை காரியாலயத்துக்கு வெளியே அமைக்கப்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. அது மட்டும்ன்றி அங்கு ஒரு வெடி பொருள்கள் நிறைந்த பொதி கைப்பற்றப்பட்டதா கக் கூறப்பட்டாலும், அதற் குள் என்ன இருந்தது என அங்கிருந்த எவருக்கும் திறந்து காட்டப்படவில்லை.

நாடாளுமன்ற உறுப்பினரின் பாதுகாப்பு நீக்கப்பட்டமைக்கு பாதுகாப்புப் பிரிவினர் தங்கும் நிலைக்குள்ளிருந்து பொதி மீட்கப்பட்டமை, பொதிக்குள் வெடிமருந்து இருந்ததாகக் கூறப்படுவது, அந்தப் பொதியின் உள்ளே என்ன இருக்கிறது என எவருக்குமே காட்டப்படாமை போன்ற தொடர் சம்பவங்கள் இவை ஒரு



திட்டமிட்ட அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டவையா என்ற கேள்வியை எழுப்புகின்றன. அதேவேளையில் இந்தச் சம்பவம் இடம்பெற்ற அடுத்தடுத்த நாள்களில் மேற்படி செயலகம் மூடப்பட வேண்டும் எனக் கோரி கிளிநொச்சியில் ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்பட்டது. வேறு காரணங்கள் கூறி அழைக்கப்பட்ட மக்களும், வீதியால் போனவர்களும் பலவந்தமாக இதில் கலந்து கொள்ள வைக்கப்பட்டனர். இதையும் கைது நடவடிக்கையின் ஒரு தொடர்ச்சியாகவே நாம் பார்க்கின்றோம்.

சாவகச்சேரியில் கபில்நாத் என்ற மாணவன் கப்பம் கோரிக் கடத்தப்பட்டு கொன்று புதைக்கப்பட்டான். இது தொடர்பாகக் கைது செய்து நீதிமன்றில் நிறுத்தப்பட்டவர்களில் ஈ.பி.டி.பி சார்பில் தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளரும் ஒருவர். அப்படியான ஒரு நிலையில் ஈ.பி.டி.பி.யின் காரியாலயங்கள் ஏன் இன்னும் மூடப்படவில்லை. தங்கள் முதுகுப் புண்ணை மறந்துவிட்டு மற்றவன் முகப்பருவை விமர்சிக்கும் முட்டாள் தனமல்லவா இது.

நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் அவர்கள் அரச தரப்பாலும், அரச ஆதரவுக் கட்சிகளாலும் [illegible] இடையூறுகளையும், தடைகளையும் பொருட்படுத்தாது, மக்கள் பணியாற்றி வருபவர். அது மட்டுமன்றி கிளிநொச்சி மக்களின் பரந்த அபிமானத்தைப் பெற்றவர். அது மட்டுமன்றி அரசும் அரச படைகளும் அரசுடன் இணைந்துள்ள கட்சிகளும் மேற்கொள்ளும் மக்கள் விரோத நடவடிக்கைகளைத் துணிச்சலுடன் அம்பலப்படுத்தி வருவதுடன், எதிர்த்துக் குரல் எழுப்புபவர்.

அதன் காரணமாக அவரையும், அவரின் பணிகளையும், கொச்சைப்படுத்தவும், பயங்கரவாத முலாம் பூசி முறியடிக்கவும், மக்கள் நலனுக்காக இடையறாது ஒலிக்கும் அவரின் குரலை நசுக்கவும், திட்டமிட்டு மேற்கொள்ளப்படும் சதி என்றே எமது மக்கள் திடமாக நம்புகின்றனர்.

பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரே கைது செய்பவர்களாகவும், சாட்சிகளாகவும், விசாரணையாளர்களாகவும் விளங்கும் நிலையில் நாம் நீதியை எதிர்பார்க்க முடியுமா?

எனினும், இப்படியான நடவடிக்கைகளின் மூலம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், அதன் நாடாளுமன்ற உறுப்பினர்களும், மக்கள் பணி தொடர்வதையோ, நியாயங்களுக்காகக் குரல் கொடுப்பதையோ நிறுத்திவிடவோ முடியாது என்பதை உறுதியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். - என்றுள்ளது. (ங-சி)

## பரந்தன் கொலை சந்தேகநபருக்கு பிணையில் செல்ல அனுமதி

யாழ்ப்பாணம்,ஜன.23

கிளிநொச்சி பரந்தனில் ஒருவரை வெட்டிக் கொலை செய்த குற்றச்சாட்டில் விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்தவர் யாழ்.மேல் நீதிமன்றினால் நேற்றுப் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

யாழ்.மேல் நீதிமன்ற ஆணையாளர் ஜே.விஸ்வநாதன் முன்னிலையில் சந்தேகநபர் தொடர்பான பிணை விண்ணப்பம் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

கடந்த வருடம் மே மாதம் பரந்தன் கமறிக்குடாவைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை நாகேந்திரராஜா (வயது-53) என்பவர் கூரிய ஆயுதத்தினால் வெட்டிக் கொலை செய்யப்பட்டார்.

இந்தக் குற்றச்சாட்டில் அதே இடத்தைச் சேர்ந்த ஆரணியா ஞானராசா என்பவரை சந்தேகத்தில் கிளிநொச்சிப் பொலிஸார் கைது செய்து கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்தினர். அவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டது.

இந்நிலையில் சந்தேகநபரை பிணையில் விடுவிக்குமாறு கோரி பிணை விண்ணப்பம் தாக்கல் செய்யப்பட்டது.

அதனைப் பரிசீலித்த மேல் நீதிமன்று, பிணை அனுமதி வழங்கியது. அதனடிப்படையில் தலா இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான இரண்டு ஆள் பிணையில் செல்ல அனுமதி வழங்கப்பட்டதுடன் மாதாந்தம் இறுதி ஞாயிற்றுக்கிழமைகளில் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் காலை 9 மணிக்கும் நண்பகல் 12 மணிக்கும் இடையில் ஒப்பமிட வேண்டும் என்றும் நிபந்தனை விதிக்கப்பட்டது. (ஐ-4)

## அச்சுவேலி கொலை சம்பவம் இரண்டாம் நபருக்கு பிணை

யாழ்ப்பாணம்,ஜன.23

அச்சுவேலியில் ஒருவரைக் கொலை செய்த குற்றச்சாட்டில் விளக்கமறியல் வைக்கப்பட்டிருந்தவர்களில் இரண்டாவது சந்தேகநபர் யாழ்.மேல் நீதிமன்றினால் நேற்றுப் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

யாழ்.மேல்நீதிமன்றில் ஆணையாளர் ஜே.விஸ்வநாதன் முன்னிலையில் சந்தேகநபர் தொடர்பான பிணை விண்ணப்பம் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சபாரட்ணம் ஜெயந்திரன் என்பவர் மட்டக்குழியில் வசித்து வந்த நிலையில் 2011 மார்ச் மாதம் அச்சுவேலிக்குச் சென்று அங்குள்ள வீடு ஒன்றைத் திருத்தும் பணியில் ஈடுபட்டுள்ளார். அதன் போது இரு தரப்பினரிடையே ஏற்பட்ட முரண்பாட்டால் ஏற்பட்ட மோதலில் ஜெயந்திரன் கொல்லப்பட்டார்.

இந்தக் குற்றச்சாட்டில் அச்சுவேலி மேற்கு கைத்தொழில் பேட்டையைச் சேர்ந்த 5 பேர் கைதுசெய்யப்பட்டனர். இவர்கள் மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

அவர்களில் இரண்டாவது சந்தேகநபரான அச்சுவேலியைச் சேர்ந்த இரட்ணசபாபதி மகாலட்சுமி என்பவரைப் பிணையில் விடுவிக்கக் கோரியே பிணை விண்ணப்பம் செய்யப்பட்டது.

அதனைப் பரிசீலித்த மேல் நீதிமன்று பிணை அனுமதி வழங்கியது. அதன்படி தலா இரண்டு இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு ஆள் பிணையில் செல்ல அனுமதி வழங்கப்பட்டது. தவிர மாத இறுதியில் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் ஒப்பமிட வேண்டும் என்றும் நிபந்தனை விதித்தது. (ஐ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய வீட்டுத் திட்டத்துக்கான அடுத்த கட்ட கிராமங்கள் தெரிவு

யாழ்ப்பாணம், ஜன.23

*இந்திய வீட்டுத்திட்டத்துக்கு அடுத்த கட்டத்துக்குரிய கிராம சேவையாளர்கள் பிரிவுகள் இனங்காணப்பட்டு பயனாளிகள் தெரிவுகள் இடம்பெற்று வருகின்றன என்று யாழ்.மாவட்ட செயலக வட்டாரங்கள் தகவல் தெரிவித்தன. இந்திய அரசின் நிதியுதவியில் யாழ். மாவட்டத்தில் 9 ஆயிரம் வீடுகள் அமைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.*

இதில் 'பைலட்' திட்டத்தில் 150 வீடுகள் யாழ்ப்பாணத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

அடுத்த கட்டமாகப் பயனாளிகளிடம் பணத்தை வழங்கி அவர்கள் மூலமாகவே வீடுகளை அமைக்கும் பணி மேற்கொள்ளப்படவுள்ளது. இதற்காக யாழ்ப்பாணத்தில் முதல் கட்டமாக தென்மராட்சி, வலி. வடக்கு, வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் பிரிவுகளில் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

அதனைத் தொடர்ந்து 15 பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் புள்ளியிடல் மூலம் குறிப்பிட்ட சில கிராம சேவையாளர் பிரிவுகள் தெரிவு செய்யப்பட்டு வீட்டுத்திட்டப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

இதற்கு அடுத்த கட்டப் பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன. இதற்காக ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவுகளிலும் அதிக வீடுகள் தேவையாகவுள்ள கிராம சேவையாளர் பிரிவுகள் இனங்காணப்பட்டு அவற்றில் வீட்டுத் திட்டப் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இதேவேளை, இந்திய அரசு மற்றும் நடைமுறைப்படுத்தும் முகவர் நிறுவனங்களால் பின்பற்றப்படும் புள்ளியிடல் முறைமைகளுக்குப் பதிலாக 2009 ஆம் ஆண்டுக்குப் பின்னர் மீளக் குடியமர்ந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கி, பயனாளிகள் தெரிவு யாழ். மாவட்டத்தில் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டது.

இந்த நடவடிக்கையை நடைமுறைப்படுத்தும் முகவர் நிறுவனங்கள், வடமாகாண விசேட செயலணி என்பன ஏற்றுக் கொள்ள மறுத்து வருவதால் இது தொடர்பில் ஆராயும் கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 29 ஆம் திகதி கொழும்பில் இடம்பெறவுள்ளது எனவும் கூறப்பட்டது. (ம-5)

## கத்திக்குத்தில் காயமடைந்த தொழிலாளி அனுராதபுரத்துக்கு

யாழ்ப்பாணம், ஜன.23

நெடுந்தீவு கிழக்கு 11 ஆம் வட்டாரத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு 7.30 மணியளவில் ஏற்பட்ட கத்திக் குத்தில் படுகாயமடைந்த கடற்றொழிலாளி அனுராதபுரம் வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

அ.அமலேஸ்வரன் என்பவரே இவ்வாறு காயமடைந்தவராவார்.

இருவரிடையே ஏற்பட்ட வாய்த்தகராறின் உச்சக்கட்டமாகக் கத்திக்குத்து இடம்பெற்றதாகக் கூறப்பட்டது.

**இருவரிடையே ஏற்பட்ட வாய்த்தகராறின் உச்சக்கட்டமாகக் கத்திக்குத்து இடம்பெற்றது.**

காயமடைந்தவர் உடனடியாக நெடுந்தீவு ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டார்.

எனினும் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சையளிக்க முடியாத நிலையில் நேற்று அவர் அவசர அவசரமாக அனுராதபுரம் வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக நெடுந்தீவு பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. சம்பவம் நடைபெற்ற இடத்துக்குச் சென்ற பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். சந்தேக நபர் தலைமறைவாகி விட்டார் என்று தெரிவிக்கப்பட்டது. (ம-7)

## மணற்காடு, கட்டைக்காடு பகுதிகளில் உலர் மீன் பதனிடும் நிலையங்கள்

### 3 மில்லியன் ரூபா செலவில் அமைக்கவுள்ளது பாசிக்

யாழ்ப்பாணம்,ஜன.23

பாசிக் நிறுவனத்தால் மணற்காடு, கட்டைக்காடு ஆகிய பிரதேசங்களில் உலர் மீன் பதனிடும் நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன என்று பாசிக் நிறுவனத்தின் யாழ். மாவட்ட இணைப்பாளர் எஸ்.பிரபா தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடற்றொழிலாளர்களின் நன்மை கருதித் தெரிவு செய் யப்பட்ட பிரதேசங்களில் உலர் மீன் நிலையம் அமைக் கப்பட்டு வருகிறது.

2012 ஆம் ஆண்டுக்கான வேலைத் திட்டத்தில் மணற்காடு, கட்டைக்காடு ஆகிய பிரதேசங்களில் உலர் மீன் பதனிடும் நிலையம் அமைக்கப்படவுள்ளது.

3 மில்லியன் ரூபா செலவில் இந்தப் பதனிடும் நிலையம் அமைக்கப்படவுள்ளது.

பிரதேச செயலகத்தின் அனுமதி கிடைக்கப் பெற்ற பின்னர் 2 பரப்புக் காணியில் இந்த நிலையம் அமைத்துக் கொடுக் கப்படவுள்ளது.

அதே வேளை, வடமராட்சி கிழக்கில் மீன் பதனிடும் நிலையமும், வேலணை துறையூரில் இறால் உலர் பதனிடும் நிலையமும் அமைக்கப்பட்டுள்ளன.

பதனிடும் நிலையங்களுக்கு காரைநகரிலிருந்தே மீன்கள் கொள்வனவு செய்யப்படுகின்றன.

ஒரு நாளைக்கு 100 கிலோ மீன் கொள்வனவு செய்யப்படுகிறது.

அதிலிருந்து 50 கிலோ உலர் மீன் பெறப்படுகிறது.

இறால் பருவகாலத்தில் 80 கிலோ தொடக்கம் 100 கிலோவரை கிடைக்கிறது. உலர்ந்த பின்னர் 30 தொடக்கம் 35 கிலோவரையான இறால் கிடைக்கிறது என்று அவர் மேலும் கூறினார். (ம-13)

## பிரதான வீதிகளில் பாதுகாப்பு குறியீடு அமைக்கும் பணிகள் ஆரம்பமாகின

யாழ்ப்பாணம், ஜன.23

பிரதான வீதிகளில் பாதுகாப்புக் குறியீடுகள் மற்றும் பாதசாரிக் கடவைகள் என்பன அமைக்கும் பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வீதி அபிவிருத்தி அதிகாரசபையால், ஒப்பந்தகாரர்களுக்கு விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கு அமைவாகவே இந்தப் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று வீதி திட்டப் பணிகளுக்கு பொறுப்பான திட்டப் பணிப்பாளர் மோறம் மரியதாஸன் தெரிவித்தார். யாழ். மாவட்டத்தில் 4 பிரதான வீதிகளும் அகலிக்கப்பட்டு புனரமைக்கப்பட்டு வருகின்றன.

ஏ-9 வீதி, யாழ்.-பலாலி வீதி, யாழ்.-காங்கேசன்துறை வீதி, யாழ்.-பருத்தித்துறை வீதி என்பனவே புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றன.

வீதி அகலிப்பு பணிகள் முழுமையாக நிறைவடைந்த பின்னரே, வீதிகளில் பாதுகாப்பு கடவைகள், பாதுகாப்புக் குறியீடுகள் என்பன அமைக்கப்படும் என்று முதலில் தெரிவிக்கப்பட்டது.

கடந்த வருடம் இடம்பெற்ற பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் மக்களால் பாதுகாப்புப் குறியீடுகள் அமைக்குமாறு பலதடவைகள் கோரிக்கை விடுக்கப்பட்டது. இருந்த போதிலும் வீதி அகலிப்பு பணிகள் முழுமையாக நிறைவடைந்த பின்னரே அவை அமைக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் வீதிக் குறியீடுகள், பாதசாரிக் கடவைகள் என்பவற்றை முன்னுரிமை அடிப்படையில் அமைக்குமாறு வீதி அபிவிருத்தி அதிகார சபை யால், வீதி திருத்த வேலைகளை மேற்கொள்ளும் நிறுவனங்களிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

இதற்கமைய வீதிக்குறியீடுகள் அமைக்கும் பணிகள் ஒப்பந்தகாரர்கள் மூலம் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. சகல பிரதான வீதிகளிலும் இந்தப் பணிகள் முன்னெடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ம-5)


## முகாமைக் குருவுக்கு வரவேற்பு

வடமராட்சி, ஜன.23

பருத்தித்துறை கட்டைவேலி மெதடிஸ்த சேகரத்தின் புதிய முகாமைக் குருவாக நியமிக்கப்பட்டுள்ள அருட்திரு கே.எம்.ஆர்.ஈஸ்வரன், அல்வாய் திருச்சபையின் நற்செய்திப் பணியாளர் சகோதரர் அன்றூ அருள்நாதன் ஆகியோருக்கு பருத்தித்துறை மெதடிஸ்த தேவாலயத்தில் வைத்து கடந்த சனிக்கிழமை வரவேற்பளிக்கப்பட்டது.

முன்னைய சேகர முகாமைக் குரு அருட்திரு எஸ். டபிள்யூ. தேவகுமார் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் திருமதி டெய்சி தேவகுமார், பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை அதிபர் திருமதி எஸ். சுந்தரேஸ்சன் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினர்.

பருத்தித்துறை மெதடிஸ்த புனர்வாழ்வு, அபிவிருத்தி சேவைப் பிரிவு, திருச்சபை ஊழியர்கள் மற்றும் பொது மக்கள் இணைந்து இந்த நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தனர். (ம-8)



யாழ். ஆஸ்பத்திரி வீதியில் சிவில் அலுவலகத்துக்கு அருகில் தொலைபேசிக் கம்பம் ஒன்று அடிப்பகுதி உடைந்த நிலையில் அபாயம் ஏற்படுத்தும் வகையில் காணப்படுகிறது. (ம)

## நகைகள் மீட்கப்படவில்லையாம்

வலி.வடக்கு,ஜன.23

தெல்லிப்பழை பொலிஸ் பிரிவில் உள்ள ஆசிரியர் வீட்டில் இடம் பெற்ற திருட்டுடன் சம்பந்தப்பட்ட சந்தேக நபர் மட்டுமே கைது செய்யப்பட்டுள்ளார்.

திருட்டுப்போன நகைகள் எவையும் மீட்கப்படவில்லை என்று தெல்லிப்பழை பொலிஸ் பொறுப்பதிகாரி கஸ்தூரி ஆராய்ச்சி உத்தியோக பூர்வமாக தெரிவித்துள்ளார். (ம-86)

## விசேட தேவையுள்ள நிலையில் கடந்த ஆண்டு 290 சிறுவர்கள்

யாழ்ப்பாணம், ஜன.23

**செயலக அறிக்கை தகவல்**

யாழ்.மாவட்டத்தில் கடந்த வருடம் 290 சிறுவர்கள் விசேட தேவையுடைய சிறுவர்களாக இனங்காணப்பட்டுள்ளனர். முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் இது குறைவடைந்துள்ளது என்று யாழ். மாவட்ட செயலக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2009 ஆம் ஆண்டு போர் முடிவடைந்ததன் பிற்பாடு 2010 ஆம் ஆண்டு 417 சிறுவர்கள் விசேட தேவையுடையவர்களாக இனங்காணப்பட்டனர். 2011 ஆம் ஆண்டு இது மேலும் அதிகரித்து 494 ஆகக் காணப்பட்டது. கடந்த 2012 ஆம் ஆண்டு 290 ஆகக் குறைவடைந்துள்ளது.

இதில் நெடுந்தீவுப் பிரதேச செயலர் பிரிவில் 6 சிறுவர்களும் வேலணை பிரதேச செயலர் பிரிவில் 4 சிறுவர்களும் ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவில் 7 சிறுவர்களும் யாழ்ப்பாண பிரதேச செயலர் பிரிவில் 5 சிறுவர்களும்-

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் 11 சிறுவர்களும் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 24 சிறுவர்களும் சங்கானை பிரதேச செயலர் பிரிவில் 27 சிறுவர்களும் உடுவில் பிரதேச செயலர் பிரிவில் 20 சிறுவர்களும் தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் 12 சிறுவர்களும்-

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 29 சிறுவர்களும் சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவில் 86 சிறுவர்களும் கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் 17 சிறுவர்களும் பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் 40 சிறுவர்களும் மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவில் 2 சிறுவர்களுமாக 290 சிறுவர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். (ம-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய மீனவர் அத்துமீறலுக்கு விரைவில் தீர்வு காண்பேன்

## ஜனாதிபதி உறுதி

இலங்கை கடற்பரப்பில் தொடர்ந்து நிகழும் இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் தொடர்பில் அந்த நாட்டு அரசுடன் பேசி மிக விரைவில் தீர்வு காணப்படும்.

இவ்வாறு உறுதி அளித்துள்ளார் ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷ.

அலரி மாளிகையில்நேற்று மாலை நடைபெற்ற தேசிய மீனவர் மகா சம்மேளனத்தின் அங்குரார்ப்பண நிகழ்வில் பேசிய போதே இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

கடந்த காலங்களை விட தற்போது இலங்கையின் மீன்பிடித்துறை அபிவிருத்தி கண்டுள்ளது. நான் முன்பு கடற்றொழில் அமைச்சராக பதவி வகித்த போது இருந்த நிலையை விட தற்போது பலமடங்கு அபிவிருத்தியை எட்டியுள்ளோம்.

குறிப்பாக வடக்கு கிழக்குப் பகுதிகளில் மீன்பிடித்துறை வளர்ச்சி கண்டுவருகிறது.

இலங்கையிலேயே வடக்கு மீனவர் சங்கங்களில் தான் அதிக அங்கத்தவர்கள் இணைந்து ஆர்வத்துடன் பங்காற்றுகின்றனர். இது பாராட்டப்பட வேண்டியது.

வடக்கு மீனவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு வெகு விரைவில் தீர்வுகாணப்படும். குறிப்பாக இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் தொடர்பில் நான் இந்திய அரசுடன் பேச்சுநடத்தி மிக விரைவில் தீர்வு ஒன்றைக் காண்பேன்- என்றார்.

இந்த நிகழ்வில் அமைச்சர்களான ராஜித சேனாரத்ன, டக்ளஸ் தேவானந்தா, ரிஷாத் பதியுதீன் ஆகியோரும், யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த சுமார் 200 இற்கும் மேற்பட்ட சம்மேளனங்களின் பிரதிநிதிகள் உட்பட சுமார் 4 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மீனவர் சம்மேளனங்களின் பிரதி நிதிகளும் பங்குபற்றியிருந்தனர். (ந-16-13-17)

## இனப்பிரச்சினை..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...''

அரசியல் தீர்வு மற்றும் வடக்கு, கிழக்கின் அபிவிருத்தி செயற்பாடுகள் குறித்து அமைச்சர் பீரிஸ் இந்தச் சந்திப்பின்போது விளக்கினார்.

தீர்வு முயற்சிகள் குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் விரைவில் அரசு பேச்சுகளை நடத்தவுள்ளதாகவும் அமைச்சர் பீரிஸ் அதன்போது குறிப்பிட்டுள்ளார்.

இந்தச் சந்திப்பில் கருத்து வெளியிட்ட இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் குர்ஷித், தமிழர் பிரச்சினைக்கான அரசியல் தீர்வு விடயம் துரிதப்படுத்தப்படவேண்டுமென்பதே இந்தியாவின் எதிர்பார்ப்பு என்று தெரிவித்துள்ளார்.

இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் குர்ஷித்தை இலங்கைக்கு வந்து, அங்கு மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி செயற்பாடுகளை அவதானிக்குமாறு இந்தச் சந்திப்பின்போது அமைச்சர் பீரிஸ் அழைப்பு விடுத்தார். (ந-சி)

## ஷிராணியைக்..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...''

இரண்டு பிரதம நீதியரசர்கள் உள்ளனர். உலகில் வேறெந்த நாட்டிலாவது இந்த நடைமுறை இருக்கின்றதா?

ஷிராணி பண்டாரநாயக்கவின் பாதுகாப்பை அரசு விலக்கிவிட்டது. இது பல சந்தேகங்களை எழுப்புகிறது. அவரைக் கொலைசெய்யவோ அல்லது கடத்தவோ அரசு முயல்கிறது. அதேவேளை, சட்டத்தரணிகளுக்கும் கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. குற்றப்பிரேரணை விவகாரம் தொடர்பில் செயற்பட்ட எம்.ஏ. சுமந்திரனுக்கும் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. தமது கடமையை சுதந்திரமாகச் செய்யமுடியாத நிலை சட்டத்தரணிகளுக்கு ஏற்பட்டுள்ளது. நாட்டில் காட்டுச் சட்டமே நிலவுகின்றது.

நீதிவான்களின் வாகனங்கள் சோதிக்கப்படுகின்றன. தொலைபேசி அச்சுறுத்தல் விடுக்கப்படுகின்றது. பிரதம நீதியரசரை நீதிமன்றத்துக்கு அனுமதிக்காமை அடிப்படை உரிமை மீறலாகும் - என்றார். (ந-சி)

## சிறீதரன்..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...''

தகவலின் அடிப்படையிலேயே அலுவலகத்தை சோதனை இடுவதாகவும் கொழும்பிலிருந்து வந்த பயங்கரவாத் தடுப்புப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரனை தொடர்பு கொண்டு கேட்ட போது,

கிளிநொச்சியில் எனது அலுவலகம் சோதனையிடப்படுவது குறித்து எந்த அறிவிப்புக்களும் செய்யப்படவில்லை. இன்று (நேற்று) அலுவலகம் சோதனையிடப்படுவது குறித்து நாடாளுமன்றத்தில் இருந்து நான் அறிந்து கொண்டேன், அப்போது சோதனையிட வந்தவர்களுடன் கதைத்தேன். சரத்சந்திர எனத் தன்னை அறிமுகம் செய்த ஒருவர் என்னுடன் கதைத்தார்.

அவர், தாம் கொழும்பில் இருந்து வந்த ரி.ஐ.டி.யைச் சேர்ந்தவர் என்றும் மேலிடத்து உத்தரவுக்கு அமையவே தாம் சோதனை இடுவதாகவும் தெரிவித்தார்.

இந்த விடயங்கள் தொடர்பில் தலைவர் சம்பந்தனின் கவனத்துக்கு கொண்டு வந்துள்ளேன். தலைவர் சம்பந்தனும் உறுப்பினர் சுமந்திரனும் இன்று (நேற்று) சபாநாயகரின் கவனத்துக்கு கொண்டு வந்துள்ளனர். முரண்பட்ட தகவல்கள் அடிப்படையிலேயே எனது அலுவலகம் சோதனையிடப்படுகிறது-என்றார்.

கடந்த 12 ஆம் திகதி அலுவலகம் சோதனைக்கு உட்படுத்தப்பட்டு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் அ.வேழமாலிகிதன் கைது செய்யப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-6-426)

## இலங்கைக்கு..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...''

ஏற்கனவே ஆரம்பித்திருப்பதாகக் கூறப்படுகிறது.

இலங்கை தொடர்பில் அமெரிக்கா கூடுதல் கவனம் செலுத்திவருவதாகவும், மார்ச் மாத மாநாட்டில் அது தொடர்பில் பிரேரணையொன்று கொண்டுவரப்படும் சாத்தியம் தொடர்பிலும் ஜெனிவாவிலுள்ள அமெரிக்கத் தூதரகம், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு இராஜதந்திர மட்டத்தில் முன்னறிவித்தலை கொடுத்திருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கை தொடர்பில் இந்த முறை ஜெனிவா மாநாட்டில் மூன்று நாள்கள் தனித்தனி அமர்வுகள் இடம்பெறவுள்ளன. இறுதி நாள் விவாதம் மார்ச் 20ஆம் திகதி நடைபெறவுள்ளது. ஆகையால் மார்ச் 15ஆம் திகதியளவிலேயே அமெரிக்கா தனது பிரேரணையை முன்மொழியுமென எதிர்பார்க்கப்படுகிறது.

அதன்போது சமர்ப்பிக்கப்படவுள்ள அமெரிக்காவின் பிரேரணைக்கு தற்போது இறுதி வடிவம்கொடுக்கும் முயற்சிகள் முடிவடைந்து விட்டதாக அமெரிக்க இராஜதந்திர உயர்மட்ட வட்டாரங்கள் நேற்று 'உதயனி'டம் உறுதிப்படுத்தின. (ந-சி)

## காரைநகர்..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...''

ஊர்காவற்றுறை பொலிஸார் காரைநகர் பிரதேச சபையில் ,உள்ளூராட்சி சபைத் தேர்தலின் போது போட்டியிட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளர் தேவராசா சதானந்தநிதி மற்றும் அதே இடத்தைச் சேர்ந்தவர்களான பரமசிங்கம் கஜமுகன்,சுந்தரலிங்கம் ரவிசங்கர் ஆகியோர் கைது செய்யப்பட்டனர். 2011 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் ஆரம்பத்தில் இவர்கள் கைது செய்யப்பட்டனர் . ஊர்காவற்றுறை நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட அவர்களை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டது .

சில மாதங்களின் பின்னர் அவர்கள் சார்பில் யாழ். மேல் நீதிமன்றில் பிணை விண்ணப்பம் செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டனர். எனினும் அவர்களுக்கு எதிரான வழக்கு ஊர்காவற்றுறை நீதிமன்றில் தொடரப்பட்டது.

குறித்த சந்தேகநபர்களுக்கு எதிராக போதிய சாட்சியங்கள் கிடைக்கப்பெறவில்லை. ஆரம்ப விசாரணைகளின் பின்னர் அறிக்கை சட்டமா அதிபரின் ஆலோசனைக்காக அனுப்பி வைக்கப்பட்டது.

அதன் படி கடந்த 9ஆம் திகதி சட்டமா அதிபர் திணைக்களம் குறித்த சந்தேகநபர்களுக்கு எதிராக மேலும் சட்டவழி முறைகளின்படி செயலாற்றக் கருதவில்லை எனவும்,அவர்கள் விடுதலை செய்யப்படலாம் எனவும் கூறியிருந்தது.

அதன் பிரகாரம் ஊர்காவற்றுறை நீதிவான் ஆர்.எஸ்.மகேந்திரராஜாவின் கட்டளைப்படி நீதிமன்ற பதில் நீதிவான் இ.சபேசன் கடந்த வெள்ளிக்கிழமை மூன்று பேரையும் விடுதலை செய்தார். (ஐ-4)

## க.பொ.த...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...''

களுக்கும் பெறுபேறுகள் உத்தியோகபூர்வமாக தபால் மூலம் அனுப்பி வைக்கப்படுமெனவும் பரீட்சைகள் ஆணையாளர் கூறினார்.

2012 ஆம் ஆண்டுக்கான க. பொ. த. உயர்தரப் பரீட்சை கடந்த ஒகஸ்ட் மாதம் 6ஆம் திகதி முதல் 30 ஆம் திகதி வரை நடைபெற்றது. இந்தப்பரீட்சையில் இரண்டு இலட்சத்து 20 ஆயிரத்து 535 பாடசாலை பரீட்சார்த்திகளும் 15 ஆயிரத்து 239 தனிப்பட்ட பரீட்சார்த்திகளும் தோற்றியிருந்தனர்.

## கிளிநொச்சியில்..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...''

செய்யப்பட்டுள்ளார்.

இவர் எதற்காக கைதுசெய்யப்பட்டார், எங்கு கொண்டு செல்லப்பட்டார் என்பது குறித்து பொலிஸார் தகவல் தரவில்லை. கொழும்பில் இருந்து வந்த பயங்கரவாத தடுப்புப் பிரிவினரே கைதுசெய்து கொண்டு செல்வதாக தமக்கு தகவல் தரப்பட்டதாக பொலிஸார் உறுதிப்படுத்தினளர். (ஐ-6)

## சந்தேகநபர்கள்..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...''

ஐக்கிய தேசியக் கட்சி, தமிழத் தேசியக் கூட்டமைப்பு, ஜனநாயக தேசியக் கூட்டணி ஆகிய கட்சிகள் குறித்த சட்டமூலத்துக்கு எதிராக வாக்களித்தன.

அதேவேளை,இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் ஆறுமுகன் தொண்டமான், தேசிய காங்கிரஸின் தலைவர் அதாவுல்லா, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாத் பதியுதீன்ஆகிய சிறுபான்மையின அமைச்சர்கள் வாக்கெடுப்பின்போது சபையில் பிரசன்னமாகியிருக்கவில்லை.

**இதுவரை இருந்த நடைமுறை**

குறிப்பாக கைது செய்யப்படும் சந்தேகநபரொருவரை 24 மணித்தியாலங்கள் மட்டுமே பொலிஸ் நிலையங்களில் தடுத்து வைக்கமுடியும்.இக்கால இடைவெளிக்குள் குறித்த சந்தேகநபரை பொலிஸார் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தவேண்டும்.

விடுமுறை நாள்கள் என்றால் நீதிபதி ஒருவரின் இல்லத்தில் அவரை ஆஜர்படுத்தி அவரை தடுப்பில் வைப்பதற்கான உத்தரவைப் பெறவேண்டும். இதுதான் இதுவரை காலமும் நாட்டில் இருந்த நடைமுறையாகும்.

ஆனால், குற்றவியல் நடைமுறைக் கோவை சட்டமூலம் நிறைவேற்றப்பட்ட தன்மூலம் பொலிஸ் தடுப்பில் சந்தேகநபரை வைக்கும் காலம் இரட்டிப் பாக்கப்பட்டுள்ளது. அதாவது 48 மணித்தியாலங்கள் சந்தேகநபரை தடுப்பில் வைப்பதற்கு இது வழிவகுத்துள்ளது.

15 வகையான குற்றச் சாட்டுகளுக்கே, பிடியாணையின்றி பொலிஸாரால் கைது செய்யப்படும் சந்தேகநபர் ஒருவரை 48 மணித்தியாலங்கள் பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கலாம்.

★ கொலை.

★ கொலையாகாத குற்றமுடைய மரணம் (கைமோசக் கொலை).

★ கொலை முயற்சி.

★ கொலை புரிவதற்காக ஆள்கவர்தல் அல்லது ஆள்கடத்தல்.

★ தவறாக அடைத்துவைக்கும் நோக்கில் ஆளொருவரை ஆள்கடத்தல் அல்லது ஆள்கவர்தல்.

★ கடுங்காயத்துக்கு உட்படுத்தும் உளக் கருத்துடன் (நோக்கத்துடன்) ஆள்கடத்தல் அல்லது ஆள்கவர்தல்.

★ ஆளொருவரை மறைத்து வைத்தல் அல்லது அடைத்து வைத்தல்.

★ கற்பழிப்பு.

★ மரணத்தை ஏற்படுத்துவதற்கான ஏற்பாடுகளை செய்துவிட்டு புரியப்படும் திருட்டு.

★ மரணம் அல்லது கடுங்காயம் விளைவிக்கும் வகையில் கொள்ளை.

★ மரணம் விளைவிக்கக்கூடிய ஆயுதம் தாங்கிய படுகொலை.

★ மேற்கூறப்பட்ட எவையேனும் தவறுகளுக்கு புரியும் முயற்சி.

★ வெடிப்பொருள்களை, தீங்குவிளைவிக்கும் ஆயுதம் ஒன்றை அல்லது துப்பாக்கி ஒன்றைப் பயன்படுத்தி புரியப்படும் தவறு.

★ மேற்கூறப்பட்ட தவறொன்றுக்கு உடந்தையாக செயற்படல்.

★ மேற்கூறப்பட்ட தவறொன்றுக்கு உடந்தையளிப்பதற்கு அல்லது தவறைப்புரிவதற்கு சூழ்ச்சி செய்தல்.

என்பனவே குறித்த 15 வகையான குற்றச்சாட்டுகளுமாகும். (ந-சி)

## நெல்சிப்..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...''

பகுதிப் பிரதேச சபைகளினால் வழங்கப்பட்டு வந்தன. மேலும் மேற்படி 'நெல்சிப்' வேலைத்திட்டத்துக்குரிய நிதி பிரதேச சபைகளின் 'நெல்சிப்' வங்கிக்கணக்குகளிலேயே பேணப்பட்டு வந்தது.

2012 ஆம் ஆண்டுக்குரிய 'நெல்சிப்' வேலைத்திட்டங்களில், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் அனுமதி பெறப்பட்ட திட்டங்களில் நிறைவேற்றப்படாத திட்டங்கள் மாத்திரம் இந்த ஆண்டில் தொடர்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.

இனி வரும் காலங்களில் 'நெல்சிப்' வேலைத்திட்டங்கள் யாவும் உள்ளூராச்சி உதவி ஆணையாளர்களால் நேரடியாகத் தெரிவு செய்யப்படவுள்ளன.

அதற்காக பிரதேச சபைகளில் எஞ்சியிருக்கும் 'நெல்சிப்' திட்ட நிதி முழுவதையும், வடமாகாண உள்ளூராச்சி அமைச்சினால் குறிப்பிடப்படும் வங்கி கணக்குக்கு இலக்கத்துக்கு இந்த மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் மாற்றுமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. (ஐ-5)

## பல்கலை..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...''

செய்யப்பட்டுள்ளனர் - என்று துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

இதேவேளை, தடுப்பில் உள்ள ஏனைய இரண்டு மாணவர்களான யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியச் செயலாளர் ப.தர்ஷானந்த் (கலைப்பீடம்), கலைப்பீட மாணவர் ஒன்றியத் தலைவர் க.ஜெனமேஜெயந் ஆகியோர் அடுத்த மாதம் விடுதலை செய்யப்படுவார்கள் என்று பல்கலைக்கழக நிர்வாகத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த மாணவர்கள் இருவருக்கும் சுமார் ஒன்றரை மாதங்களாக வெலிக்கந்தை முகாமில் புனர்வாழ்வளிக்கப்பட்டு நேற்று விடுவிக்கப்பட்டனர். தற்போது அவர்கள் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் - என்று புனர்வாழ்வு ஆணையாளர் பிரிகேடியர் தர்ஷன ஹெட்டியாரச்சி தெரிவித்துள்ளார்.

கடந்த வருடம் நவம்பர் மாதம் 27 ஆம் திகதி மாவீரர் தினத்தைத் தொடர்ந்து இடம்பெற்ற சம்பவங்களை அடுத்து நவம்பர் மாதம் 30 ஆம் திகதி யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியச் செயலாளர் ப.தர்ஷானந்த் கைதுசெய்யப்பட்டார். இதன் பின்னர் பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் தொடர்ச்சியாகப் பல்கலைக்கழக மாணவர்கள் பலர் கைதுசெய்யப்பட்டனர்.

அவர்களில் சிலர் விடுவிக்கப்பட்டனர். ஆயினும், யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் வி.பவானந்தன், மாணவர் ஒன்றியச் செயலாளர் ப.தர்ஷானந்த், கலைப்பீட மாணவர் ஒன்றியத் தலைவர் க.ஜெனமேஜெயந், விஞ்ஞானபீட மாணவர் ஒன்றிய உறுப்பினர் எஸ்.சொலமன் ஆகிய நான்கு மாணவர்களும் வெலிக்கந்தை முகாமில் புனர்வாழ்வு என்ற பெயரில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

இவர்களை விடுவிக்கக்கோரி யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் தொடர்ச்சியாக வகுப்புப் புறக்கணிப்பில் ஈடுபட்டு வந்தனர்.

பின்னர் யாழ். பல்கலைக்கழகத்தில் துணைவேந்தர் தலைமையில் கலந்துரையாடல் இடம்பெற்றதை அடுத்து சக மாணவர்கள் விடுவிக்கப்படுவார்கள் என்ற நம்பிக்கையில் பல்கலைக்கழகத்தை மீள ஆரம்பிக்க மாணவர்கள் இணங்கினர்.

அதனையடுத்து கடந்த 8 ஆம் திகதி முதல் பல்கலைக்கழகம் மீள இயங்க ஆரம்பித்தது. எனினும், மாணவர் வரவு குறைவாகக் காணப்பட்டது. அதேவேளை, தைப் பொங்கலுக்கு முன்னர் மாணவர் எவரும் விடுவிக்கப்படவில்லை.

இந்நிலையில், முழுமையான புனர்வாழ்வுக்குப் பின்னரே பல்கலை மாணவர்கள் விடுவிக்கப்படுவர் எனவும், மாணவர் விடுதலை பற்றிய பேச்சுக்கு இப்போதைக்கு இடமில்லை எனவும் பாதுகாப்பு செயலர் கோத்தபாய தெரிவித்திருந்தார்.

அதனையடுத்து தடுப்பில் உள்ள சக மாணவர்கள் நால்வரும் விடுவிக்கப்படாத நிலையில் தம்மால் பரீட்சை எழுத முடியாது என்ற கோரிக்கையை பல்கலைக்கழக மாணவர்கள் நிர்வாகத்திடம் முன்வைத்தனர்.

இந்நிலையிலேயே, தடுப்பில் உள்ள மாணவர்கள் நால்வரில் வி.பவானந்தன் (முகாமைத்துவபீடம்), எஸ்.சொலமன் (விஞ்ஞானபீடம்) ஆகியோர் நேற்று விடுதலை செய்யப்பட்டுள்ளனர். (ந)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## தமிழ் மக்களது உரிமைப் பிரச்சினையில் இந்தியா இனி என்ன செய்யப்போகிறது...?

இலங்கை வாழ் தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள், அதாவது அரசியல் பிரச்சினைகள் குறித்து இந்தியாவிடம் தெளிவான நிலைப்பாடு, கருத்து இல்லை என்பது இப்போது வெளிப்படையாகி வருகிறது. குறிப்பாகக் கூறுவதானால் தனது புவிசார் நலன் கருதியே அதன் செயற்பாடுகள், ராஜதந்திரம் சுற்றிச்சுழல்கின்றன.

அதன் அடிப்படையிலேயே இலங்கை தொடர்பான தனது கொள்கையை இந்தியா மாற்றிக்கொள்ள வேண்டும் என்ற குரல் எழுந்துள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன், இந்திய செய்திச் சேவை ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் இதனைத் தொட்டுக் காட்டியுள்ளார்.

எதிர்வரும் மார்ச் மாதத்தில், ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 22ஆவது கூட்டத்தொடர் ஆரம்பமாவதற்கு இன்னமும் ஒன்றரை மாதங்களே உள்ளன. இந்த நிலையில், இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் மூன்றுநாள் உத்தியோகபூர்வ விஜயமாகப் புதுடில்லி சென்றுள்ளமை, அரசியல் வட்டாரங்களில் முக்கியத்துவம் பெறும் ஒரு சம்பவமாகக் கருதப்படுகிறது.

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிரான குற்றவியல் பிரேரணை, அரசமைப்புக்கான 13ஆவது திருத்தம் தொடர்பான சர்ச்சை, வடமாகாணசபைத் தேர்தல் நடத்தப்படாமை மற்றும் அரசமைப்புக்கான 19 ஆவது திருத்தம் உட்படப் பல்வேறு விடயங்கள் குறித்து அமைச்சர் பீரிஸ் இந்திய அரசுக்கு விளக்கமாக எடுத்துக்கூறுவார் என்ற எதிர்பார்ப்பு நிலவுகின்றது. ஆயினும், எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனிவாவில் இலங்கையின் மனித உரிமைகள் விவகாரம் ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தொடரில் விவாதிக்கப்படும்போது இந்தியாவின் ஆதரவை இலங்கைக்குப் பெற்றுக்கொள்வதே அவரது தற்போதைய இந்திய விஜயத்தின் பிரதான நோக்கம் என்பது சொல்லித் தெரிய வேண்டிய ஒன்றல்ல.

கடந்த 2012 மார்ச்சில், ஜெனிவாவில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா தீர்மானம் சமர்ப்பிக்க இருந்த சமயம், ஒரு நாட்டை பெயர் சொல்லிக் குறிப்பிட்டுக் கொண்டுவரப்படும் தீர்மானத்தை இந்தியா ஆதரிப்பதில்லை என்று சாட்டுப்போக்குக் கூறப்பட்டது. இருந்த போதிலும் தமிழ்நாட்டின் கடும் எதிர்ப்புக் காரணமாக இந்தியா கடைசி நேரத்தில் தனது நிலைப்பாட்டை மாற்றிக்கொண்டு இலங்கைக்கு எதிரான அமெரிக்காவின் தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களித்தது. அதன் பயனாக இலங்கை - இந்திய உறவில் பாதிப்பு ஏற்படும் என்றும் கூட எதிர்வுகூறல்கள் வெளிவந்தன. ஆனால் அத்தகைய நிலையேதும் ஏற்படவில்லை. மாறாக இலங்கை - இந்திய உறவு மேலும் நெருக்கம் அடைந்துள்ளது. தமிழ்நாட்டின் எதிர்ப்புக்கு மத்தியிலும் இலங்கை இராணுவத்துக்கு இந்தியா தற்போதும் பயிற்சி அளித்து வருகிறது. அதுமட்டுமன்றி இப்போது தெற்காசியாவில் இலங்கையின் நெருங்கிய வர்த்தகப் பங்காளியாக இந்தியா இருந்துவருகிறது. சர்வதேச அரங்கில் இலங்கைக்கு நெருக்கடியாக அமைந்த பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க விவகாரத்திலும் இந்தியா மௌனப் போக்கையே கடைக்கொண்டது. தமிழர் தரப்புடன் மீண்டும் அரசியல் பேச்சை ஆரம்பிக்குமாறு இலங்கைக்கு அழுத்தம் கொடுப்பதைக் கூட இந்தியா நிறுத்திக்கொண்டுள்ளதாகக் கருத இடமுண்டு. தனது புவிசார் அரசியலில் இலங்கையுடனான உறவு தனக்கு மிக முக்கியமானது என்று இந்தியா கருதுவது மிக வெளிப்படையாகப் புலப்படுகிறது.

ஆகவே எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனிவாவில் நடைபெறவுள்ள ஐ.நா.மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தில் இலங்கையின் மனித உரிமைகள் விவகாரம் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படும்போது இந்தியாவின் நிலைப்பாடு எப்படி இருக்கப்போகிறது என்பது இன்னும் கேள்விக்குறியாகவே தொடருகிறது.

கடந்த தடவை இலங்கைக்கு எதிரான அமெரிக்காவின் தீர்மானத்தை இந்தியா ஆதரித்தது. அதற்காக அத்தகைய ஒரு தீர்மானம் மீண்டும் முன்வைக்கப்படும்போது அதனையும் இந்தியா ஆதரிக்கும் என்பது சந்தேகத்துடனேயே பார்க்கப்படுகிறது.

இலங்கைத் தமிழர் பிரச்சினை தொடர்பான கொள்கை வகுப்பில் தற்போது இந்தியா தெளிவான ஒரு கருத்தை வெளிப்படையாகத் தெரிவிக்கும் நிலையில் இல்லை. அதாவது, இலங்கைத் தமிழர் பிரச்சினைத் தீர்வு விடயத்தில் கூட தனது புவிசார் கொள்கைக்குத்தான் இந்தியா முதலிடம் வழங்குகிறது; வழங்கும்.

ராஜீவ் காந்தியின் மரணத்துக்குப் பின்னர் இலங்கைத் தமிழர் பிரச்சினை தொடர்பான இந்தியாவின் நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்பட்டது. இந்தியா தனது கொள்கையை மாற்றிக்கொண்டு இலங்கைத் தமிழர் பிரச்சினையில் நீதியுடனும் நியாயத்துடனும் செயற்பட வேண்டும் என்பதே இலங்கைத் தமிழ் மக்களது நீண்டகால எதிர்பார்ப்பு. கடந்த ஆண்டு மார்ச் மாதம் இலங்கைக்கு எதிரான தீர்மானம் ஜெனிவாவில் நிறைவேற்றப்பட்டு பத்து மாதங்கள் கடந்த நிலையிலும், அத்தீர்மானத்தின் பரிந்துரைகளை செயற்படுத்துவதில் இலங்கை போதுமான ஆர்வம் காட்டாதது தெளிவான ஒன்றாகும். ஐ.நா. பாதுகாப்புச் சபையில் வீட்டோ அதிகாரம் கொண்ட ரஷ்யா, சீனாவுடன் இந்தியாவின் ஆதரவையும் தன்பக்கம் திருப்பிக் கொண்டால் எதிர்வரும் ஜெனிவாக் கூட்டத்தில் அமெரிக்காவைச் சமாளித்துவிடலாம் என்று இலங்கை கருதுவதாகத் தெரிகிறது.

தமிழ் மக்களுடன் அதிகாரத்தைப் பகிர்ந்துகொள்ளும் விருப்போ, மனஎண்ணமோ இலங்கை அரசுக்குக் கிடையாது. அரசமைப்புக்கான 13 ஆவது திருத்தத்தின் ஊடாக ஒன்றுபட்ட இலங்கைக்குள் அதிகாரப் பகிர்வு மூலம் இலங்கைத் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்பது இந்தியாவின் நிலைப்பாடு. அது தொடர்பில் இலங்கை மீது இந்தியா அழுத்தம் செலுத்த வேண்டியது அவசியமாகும். தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண ஜெனிவாக் கூட்டத்தில் மேற்கொள்ளப்படும் முயற்சிகளுக்கு இந்தியா முட்டுக்கட்டையாக இருந்துவிடக்கூடாது. இன்றைய நிலையில் இலங்கைத் தமிழர்களுக்கான ஆதரவை இந்தியா கைவிடுமானால், ராஜபக்ஷ அரசும் இலங்கைத் தமிழர்களை நட்டாற்றில் கைகழுவி விட்டுவிடும். எனவே இலங்கைத் தமிழர் பிரச்சினை தொடர்பாக இந்தியா இதுவரைகாலமும் கைக்கொண்டுவந்த நழுவல், வழுவல் போக்கை மாற்றிக்கொள்ள வேண்டும். சகல வழிகளிலும் இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுப்பதன் மூலம் இந்த நாட்டின் தமிழ் மக்களது பிரச்சினைக்கு நீதியும் நியாயமுமான தீர்வொன்றைப் பெற்றுத்தர இந்தியா முன்வரவேண்டும். இதுவே இலங்கையில் மட்டுமன்றி உலகெங்கும் பரந்து வாழும் தமிழ் மக்களது இன்றைய எதிர்பார்ப்பாகும். இந்தியாவின் கொள்கையில் மாற்றம் அவசியம் ஆகும்.

# குற்றவாளிகள் 5 இலட்சம் பேரின் பெயர்ப்பட்டியல் கணினி மயமாகிறது

கொழும்பு,ஜன.23

ஐந்து இலட்சங்களுக்கு மேற்பட்ட தரப்பினர் குற்றவாளிகளின் பட்டியலில் உள்ளடங்கியுள்ளனர். அத் துடன் இந்தக் குற்றவாளிகளது விவரங்களைக் கணினி மயப்படுத்தும் செயற்பாடு கள் தற்போது ஆரம்பமாகியுள்ளன என்று பொலிஸ் குற்றவியல் தகவல்கள் பிரிவு தெரிவிக்கிறது.

இதுவரையில் அளவில் 50 ஆயிரம் பேர் வரையிலான குற்றவாளிகளின் தகவல்கள் கணினி மயப்படுத்தப்பட்டுள்ளன என்று பொலிஸ் குற்றவியல் தகவல்கள் பிரிவின் பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சம்பிக்க சிறிவர்தன தெரிவித்துள்ளார்.

கொழும்பு பல்கலைக்கழகம் மற்றும் தேசிய தொழில்நுட்ப நிறுவனத்தின் ஒருங்கிணைப்புடன் குற்றவாளிகளின் தகவல்களைக் கணினிமயப்படுத்தும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இதேவேளை, இலங்கையின் பெயர்போன குற்றவாளிகளின் பட்டியலில் 45ஆயிரம் பேர் வரையில் உள்ளடங்கியுள்ளனர் என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர். (ம-22)

## இரவில் சைக்கிள் பயணம்; சட்டம் கடுமையாக்கப்படும்

### சிவப்புநிற ஒளித்தெறிப்பாக்கி கட்டாயம்

கொழும்பு,ஜன.23

இரவுவேளைகளில் சைக்கிளில் பயணம் செய்வது தொடர்பில் தற்போதுள்ள சட்டங்களைக் கடுமையாக்கப் பொலிஸ் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

இரவுவேளைகளில் சைக்கிளில் பயணிக்கும் போது, பின்னால் பொருத்தப்படும் சிவப்பு நிற ஒளித் தெறிப்பாக்கி தொடர்பில் புதிய வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதன்படி 1987.12.29 ஆம் திகதி வெளியாகிய அரச வர்த்தமானியின் பிரகாரமும், 1951ஆம் ஆண்டு 37 ஆவது மோட்டார் வாகன சட்டத்தின் 37 மற்றும் 38ஆம் பிரிவுகளின் பிரகாரமும், இது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாகப் பொலிஸார் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எதுஎவ்வாறாயினும் தற்போது இரவுவேளைகளில் இடம்பெறும் விபத்துக்களில் பெரும்பாலானவை சைக்கிள்கள் தொடர்பானவை எனப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இதற்குக் காரணம் இரவு வேளைகளில் சரியான பாதுகாப்பு முறைகளுடன் சைக்கிள்களைச் செலுத்தாமையே எனப் பொலிஸார் கூறியுள்ளனர்.

இதன்படி சைக்கிள்களின் பின்னால் சிவப்பு நிற ஒளித் தெறிப்பாக்கி பொருத்தப்பட்டிருப்பது அவசியம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறில்லாமல் சைக்கிள்களில் பயணம் செய்வோர் மீது எதிர்வரும் காலங்களில் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் எனப் பொலிஸார் சுட்டிக்காட்டியுள்ளனர். (த)

## ஈரானியக் கப்பலுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க உத்தரவு

கொழும்பு,ஜன.23

இலங்கை நீதிமன்றத்தின் கட்டளையை மீறி தப்பிச்சென்ற ஈரானியக் கப்பலுக்கு எதிராக மேல் நடவடிக்கை எடுக்குமாறு இலங்கைக் கடற்படையினரிடமும் வெளிவிவகார அமைச்சிடமும் கூறியுள்ளதாக 'மேச்சன்ற் சிப்பிங்' அமைப்பின் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

நாம் டிசெம்பர் மாதம் 14ஆம் திகதி இலங்கையில் கடல் எல்லைக்குள் ஈரானியக் கப்பலான ஏ.வி.அமினாவை நீதிமன்றக் கட்டளை பெற்றுத் தடுத்துவைத்தோம். அந்தக் கப்பல் முன்னர் ஒரு தடவையும் தப்பிச்செல்ல முயன்றுள்ளதென பணிப்பாளர் நாயகம் செனவிரத்ன கூறியுள்ளார்.

பெற்ற கடனைத் திருப்பிச் செலுத்தாததால் ஜேர்மனி நாட்டு டி.வி.பீ வங்கி இந்தக் கப்பலுக்கு எதிராக ஒரு நீதிமன்றக் கட்டளையைப் பெற்றதைத் தொடர்ந்தே இது தடுத்துவைக்கப்பட்டது.

இந்தக் கப்பல் எவ்வாறு தப்பிச் சென்றது என்பதை 'மேச்சன்ற் சிப்பிங்' கம்பனிப் பணிப்பாளர்களோ அல்லது கடற்படையினரோ விளக்கமுடியாதுள்ளனர். (த)

## கந்தப்பசேகரம் வீதியைத் திருத்த வர்த்தகர் சங்கத்தின் உதவி தேவை

### கோருகிறார் மாநகர முதல்வர்

யாழ்ப்பாணம்,ஜன.23

யாழ்ப்பாணம் கந்தப்பசேகரம் வீதியைத் திருத்தியமைக்க யாழ். வர்த்தகர் சங்கத்தின் உதவி தேவைப்படுவதாக யாழ்.மாநகர முதல்வர் தெரிவித்தார்.

கந்தப்பசேகரம் வீதியை, திருத்தித்தரும் பட்சத்தில் வர்த்தகர்களுக்கு உதவியாகவிருக்கும் என்று வர்த்தகர் சங்கத் தலைவர் என்.ஜெயசேகரம் தெரிவித்தார்.

யாழ்.மாநகர சபையில் வீதிப் போக்குவரத்துத் தொடர்பாக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கை குறித்து இடம்பெற்ற கலந்துரையாடலில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

அதற்குப் பதிலளித்த முதல்வர் இந்த வீதியைத் திருத்த நடவடிக்கை எடுக்கப்பட்ட போதும் சிலர் அதற்குத் தேவையான பகுதிகளை விட்டுக்கொடுக்க மறுத்து வருகின்றனர்.

வர்த்தகர் சங்கம் சம்பந்தப்பட்டவர்களுடன் பேசித் தேவையான இடத்தைப் பெற்றுத்தரும் பட்சத்தில் உடனடியாகவே மாநகரசபை வீதித்திருத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளும் எனவும் முதல்வர் தெரிவித்தார். (ம-7)

## ஞானச்சுடர் வெளியீடு

வடமராட்சி,ஜன.23

தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை மாதந் தோறும் வெளியிட்டு வரும் 'ஞானச்சுடர்' ஆன்மிக சஞ்சிகையின் தைமாத இதழ் வெளியீட்டு விழா எதிர்வரும் 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

பேரவை உறுப்பினர் கே.அருணகிரிநாதன் தலைமையில் நடைபெறும் இந்த விழாவில் வெளியீட்டுரையை தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத் தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகனும், மதிப்பீட்டுரையை வல்வெட்டித்துறை சிவகுரு வித்தியாலய அதிபர் ஆ.சிவநாதனும் நிகழ்த்துவர். (ம-8)

## வருடாந்த இடமாற்றப் பட்டியல்கள் வலயக் கல்வி அலுவலகங்களுக்கு

யாழ்ப்பாணம்,ஜன.23

வடமாகாண கல்வி அமைச்சின் நிறுவனங்களில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களுக்கான வருடாந்த இடமாற்றப் பட்டியல்கள் கல்வித் திணைக்களத்தால் வலயக் கல்வி அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

84 முகாமைத்துவ உதவியாளர்கள், 16 நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்கள், ஒரு தொழில்நுட்ப உத்தியோகத்தர், ஒரு சாரதி, 33 அலுவலகப் பணியாளர்கள் ஆகியோருக்கான இடமாற்றப் பட்டியல் அனுப்பப்பட்டுள்ளது.

இடமாற்றம் நேற்றுமுன்தினம் தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் 135 பேர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர் என்று கல்வி அமைச்சின் பிரதிச் செயலாளர் ப.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார்.

பட்டியல் பிரகாரம் தென்மராட்சி கல்வி வலயத்தில் 6 முகாமைத்துவ உதவியாளர்களும் 5 நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்களும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-9)

## புனர்வாழ்வு பெற்றவர்கள் நலன் கவனிக்க அலுவலகம்

யாழ்ப்பாணம்,ஜன.23

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க முன்னாள் போராளிகளில் புனர்வாழ்வு பெற்று வெளியேறியவர்களின் சமூக பொருளாதார மற்றும் நலன்புரி தொடர்பான விடயங்களை கண்காணிப்பதற்கான இணைப்பு அலுவலகம் இன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட செயலகத்தில் இன்று நண்பகல் 12 மணியளவில் இந்த அலுவலகம் திறந்து வைக்கப்படவுள்ளது என்று இணைப்பதிகாரி மேஜர் கே.சி.ஜகத்குமார தெரிவித்துள்ளார். (ம-5)

## கோடாவை வைத்திருந்தவருக்கு ஒரு லட்சம் ரூபா அபராதம்

தென்மராட்சி,ஜன.23

சட்டவிரோத கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்தும் கோடா வைத்திருந்த கொடிகாமம் வாசிக்கு சாவகச்சேரி நீதிமன்றில் ஒரு லட்சம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

கொடிகாமம் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. வழக்கை விசாரித்த நீதிவான் எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்து ஒரு லட்சம் ரூபா அபராதம் விதித்தார். அபராதத் தொகை செலுத்தத் தவறின் ஆறு மாதங்கள் சிறைத் தண்டனை அனுபவிக்குமாறும் உத்தரவிட்டார். (ம-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில்

## 22 அநாதைச் சிறுவர்களும் 500 விதவைப் பெண்களும்

கிளிநொச்சி, ஜன.23

கிளிநொச்சி மாவட்டம் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவில் தாய் தந்தையரை இழந்த 22 சிறுவர்களும், 500 இக்கும் மேற்பட்ட விதவைகளும் உள்ளனர் என்று தெரிய வந்துள்ளது.

கிளிநொச்சி பச்சிலைப் பள்ளி பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள 45 கிராமங்கள் உள்ளடக்கிய 18 கிராம அலுவலர் பிரிவுகளில் 3 ஆயிரத்து 500 குடும்பங்களைச் சேர்ந்த 10 ஆயிரத்து 200 பேர் மீள்குடியமர்ந்துள்ளனர்.

அவர்களுள் 22 சிறார்கள் தாய் தந்தையரை இழந்துள்ளனர். அத்துடன் 227 பேர் வரையில் ஊனமுற்ற நிலையில் உள்ளனர் என்றும் -

மேலும் 500 பெண்கள் கணவன்மாரை இழந்து விதவைகளாக உள்ளனா என்றும், அத்துடன் 545க்கும் மேற்பட்ட முதியவர்கள் இங்கு வசித்து வருகின்றனர் என்றும் தெரிவிக்கப் படுகிறது. (க-6)

### கடந்த ஆண்டு செய்து முடிக்கப்படாத

## வீதிகளைப் புனரமைக்கும் பணி வவுனியா நகரில் ஆரம்பம்

நெளுக்குளம்,ஜன.23

வவுனியா நகரசபைக்குரிய சேதமடைந்த வீதிகளைப் புனரமைக்கும் பணிகள் ஆரம்பித்துள்ளன.

கடந்த ஆண்டு புனரமைக்கப்படாது இழுபறியில் விடுபட்ட வீதிகளைப் புனரமைக்கும் பணிகளே ஆரம்பித்துள்ளன.

'கெயார்' நிறுவனத்தின் உதவியுடன் 318 மில்லியன் ரூபா செலவில் 21 வீதிகளைப் புனரமைப்பதற்கான வேலைத் திட்டத்தை வவுனியா நகரசபை ஆரம்பித்தது.


எனினும் இந்த வேலைத் திட்டம் முழுமையடையவில்லை. கல், மணல் என்பன பறிக்கப்பட்ட நிலையில் பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் சில வீதிகள் காணப்பட் டன.


ஆனால் கடுமையாகப் பெய்த மழை காரணமாக பல வீதிகளின் புனரமைப்பு வேலைகள் இடை நடுவில் கைவிடப்பட்டன.

தற்போது கந்தசாமி கோயில் வீதி, சூசைபிள்ளையார் கோயில் வீதி, வைத்தியசாலை சுற்றுவட்ட வீதி, குளவீதி, மில்வீதி உட்பட 21 வீதிகளின் புனரமைப்புப் பணிகள் இடம்பெற்று வருவதை அவதானிக்க முடிகின்றது. (க-402)

# நுளம்பு பெருகும் இடமாக வவுனியா நகர மைதானம்

### அச்சம் தெரிவிக்கின்றனர் விளையாட்டு வீரர்கள்





வவுனியா, ஜன.23

வவுனியா நகரசபைக்குரிய விளையாட்டு மைதானத்தில் நுளம்புகள் பெருகும் அபாய நிலை காணப்படுகின்றது.

விளையாட்டு மைதானத்துக்கு அருகில் காணப்படும் வாய்க்காலில் நீண்ட நாள்களாகவே நீர் தேங்கிக் காணப்படுவதால் நுளம்புகள் பெருகக் கூடிய நிலை தோன்றியுள்ளது.

இந்த வாய்க்கால் நீர் வழிந்து செல்ல முடியாதவாறு கழிவுப் பொருள்களாலும், புற்களாலும் அடைபட்டுக் காணப்படுகின்றது. தற்போது மழை முடிந்து ஒரு மாதம் கடந்த நிலையிலும் நீர் தேங்கியுள்ளமையை அவதானிக்க முடிகின்றது.

வவுனியாவில் டெங்கு நுளம்பின் தாக்கம் அதிகரித்துள்ள நிலையில் இந்த மைதானத்தைப் பயன்படுத்தும் வீரர்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர். தினமும் ஏராளமான பாடசாலை மாணவர்களும், விளையாட்டு வீரர்களும் இந்த மைதானத்தைப் பயன்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-400)

## பாலங்குளத்தை புனரமைத்தால் அதிக நெற்செய்கை சாத்தியம்

அக்கராயன், ஜன.23

அக்கராயன் பாலங்குளத்தை புனரமைப்பதன் மூலமாக 60 ஏக்கர் வரையான மேலதிக நிலப்பரப்பில் நெற்பயிர் செய்கையை மேற்கொள்ள முடியும் என இந்தக் குளத்தின் கீழான விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

போர் இடம்பெற்ற காலத்தில் காப்பரணாக இந்தக் குளத்தின் அணைக்கட்டு பயன்படுத்தப்பட்டமையால் அணைக்கட்டின் பல இடங்களில் சேதங்கள் ஏற்பட்டுள்ளன. அணைக்கட்டின் உயரத்தை அதிகரித்து கூடுதல் நீரைச் சேமிப்பதன் மூலமாக அதிகளவு நிலப்பரப்பில் நெற்செய்கையை மேற்கொள்ள முடியும் எனவும் விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

தற்போது 60 ஏக்கர் நிலப்பரப்பில் நெற் செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. 2,000 ஆம் ஆண்டு துணுகாய் பிரதேச செயலர் பிரிவில் இருந்து கரைச்சி பிரதேச செயலர் பிரிவுக்கு இந்தக் குளம் கையளிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-18)

## வவுனியா நகரசபையின் வரிகள் தொடர்பான விவரம் கணினிமயம்


நெளுக்குளம், ஜன.23


வவுனியா நகரசபைக்குச் செலுத்த வேண்டிய வரிகள் தொடர்பான விவரங்கள் கணினி மயப்படுத்தப்பட்டுள்ளதாக அதன் செயலர் தெரிவித்துள்ளார்.

இதன் மூலம் வரியிறுப்பாளர்கள் தாம் செலுத்த வேண்டிய வரி நிலுவைகள் தொடர்பான விவரங்களைத் தெரிந்து கொள்வதற்கும், இவற்றை இலகுவாகச் செலுத்துவதற்கும் வழி ஏற்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார்.

கணினி மயப்படுத்தல் மூலம் ஆதனவரி உட்பட பல்வேறு வகையான வரிகளை வரியிறுப்பாளர்கள் செலுத்துவதற்கான நடைமுறையைக் கடந்த 16 ஆம் திகதி வவுனியா நகரசபைத் தலைவர் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

இதன் மூலமாக நேர சிக்கனத்தைப் பேண முடியும் எனவும், நிலுவைகள் தொடர்பாக ஏற்படும் பிணக்குகளை உடனுக்குடன் தீர்க்க முடியுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார். (க-402)



கடந்த 30 வருட காலப் போரின் போது உயிரிழந்த அனைத்து மக்களுக்குமான நினைவு அஞ்சலி கியூடெக் கரித்தாஸ் நிறுவனத்தின் வன்னி அலுவலகம் அமைந்துள்ள கிளிநொச்சியில் நேற்று இடம்பெற்றபோது நிறுவனத்தின் இயக்குநரான யாவிஸ் அடிகளார் நினைவுச் சுடர் ஏற்றுகின்றார். உயிரிழந்தவர்களின் உறவுகள் சோகத்துடன் அமர்ந்திருக்கின்றனர். (க-6)

## கிராம அலுவலர்களுக்கு உள்ளக இடமாற்றம்

கிளிநொச்சி, ஜன.23

கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள கிராம அலுவலர்கள் உள்ளக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள 16 கிராம சேவகர் பிரிவுகளில் கடமையாற்றிய கிராம அலுவலர்கள் பலர் நீண்டகாலமாக குறித்த பிரிவுகளில் கடமையாற்றியதை அடுத்து கடந்த வாரம் முதல் உள்ளக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த இடமாற்றங்கள் கடந்த 15 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (க-6)

### கிளிநொச்சி மாவட்டத்தில்

## ஒரு லட்சத்துக்கு மேற்பட்ட தென்னை நாற்றுக்கள் விநியோகம்

### மரமுந்திரிகைச் செய்கைக்கும் ஊக்கம்

கிளிநொச்சி, ஜன.23

கிளிநொச்சி மாவட்டத்தில் தென்னைச் செய்கையை ஊக்குவிக்கும் வகையில் ஒரு இலட்சத்து 26 ஆயிரம் தென்னை நாற்றுக்கள் இதுவரை வழங்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தில் மீள்குடியமர்ந்த மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையிலும் தென்னை உற்பத்தியை ஊக்குவிக்கும் பொருட்டும் பல்வேறு திட்டங்களினூடாக தென்னை நாற்றுக்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

அந்த வகையில் இதுவரை சுமார் ஒரு இலட்சத்து 26 ஆயிரம் தென்னை நாற்றுக்கள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் கிளிநொச்சி மாவட்டத்தில் மரமுந்திரிகைச் செய்கையை ஊக்குவிக்கும் பொருட்டு இதுவரை 26 ஆயிரம் மர முந்திரிகைக் கன்றுகளும் வழங்கப்பட்டுள்ளன.

இலங்கையிலேயே அதிகளவில் முந்திரிகைச் செய்கைக்கு வித்திட்ட மாவட்டமாக கிளிநொச்சி மாவட்டம் காணப்படுவதாக அரச அதிபர் திருமதி றூபாவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-6)

# வவுனியாவில் முதியோர் சங்கங்கள் நிதி வசதியின்றி சிரமமுறும் நிலை

### அரசு, அரச சார்பற்ற நிறுவனங்கள் உதவ முன்வர வேண்டும் என்கிறார் சங்கத் தலைவர்

நெளுக்குளம், ஜன.23

போதிய நிதிவசதியில்லாமையால் வவுனியாவில் இயங்கி வரும் முதியோர் சங்கங்கள் அவஸ்தைப் படுவதாக முதியோர் சங்கத் தலைவர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இடம்பெயர்ந்த முதியவர்கள் உட்பட முதியவர்களின் நலன்களைப் பேணுவதற்குப் போதிய நிதி வசதியில்லாமையால் வவுனியாவில் உள்ள முதியோர் சங்கங்கள் அவஸ்தைப்படுவதாக வவுனியா முதியோர் சங்கத் தலைவர் தா.சலசலோஜன் தெரிவித்தார்.

முதியோருக்குரிய உடல் நலம் பேணல், மனநலம் பேணல் மற்றும் அவர்களுக்கான ஆடைகள் உட்பட அடிப்படை தேவைகளை பொருளாதார நெருக்கடியால் நிறைவேற்ற முடியாதுள்ளது. வவுனியாவில் 25 இற்கு மேற்பட்ட முதியோர் சங்கங்கள் இயங்கி வருகின்றன. இவற்றில் அங்கத்துவம் பெற்றுள்ள 850 பேரில் 40 இற்கும் மேற்பட்ட முதியவர்கள் வறியவர்களாகவும் 200 இற்கும் மேற்பட்டோர் மனநலம் குன்றியவர்களாகவும், 120 இக்கும் மேற்பட்ட [illegible] உடல் நலம் குன்றியவர்களாகவும் காணப்படுகின்றனர்.

மேலும் முதியவர்களின் நலன்களைப் பேணுவதற்காக தியான பயிற்சிகள் உட்பட பல்வேறு மன அழுத்தத்தைத் தவிர்க்கும் செயற்பாடுகளை முதியோர் சங்கம் முன்னெடுக்கிறது. சமய தினங்களில் கலை நிகழ்வு நடத்துதல், விசேட தினங்களில் முதியோர் கௌரவிப்புக்கள் உட்பட பல்வேறு செயற்பாடுகளை எமது முதியோர் சங்கம் மேற்கொள்கிறது. ஆனால் அரச உதவி அரிதாகவே உள்ளது.

அரச, அரச சார் பற்ற நிறுவனங்களின் உதவியும் எமக்கு கிடைப்பதில்லை. வவுனியாவில் உள்ள வர்த்தகர்களிடம் நாம் கையேந்தி நிற்க வேண்டிய நிலையே காணப்படுகின்றது. அதுவும் போதியதாக இல்லை. இந்த நிலை தொடராது இருக்க வேண்டுமாயின் முதியோர் சங்கங்களுக்கு அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் உதவ வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (க-402)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



திருமதி

**ஜெயரட்ணசிங்கம் வரதலட்சுமி (சந்திரா)**

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஜெயரட்ணசிங்கம் வரதலட்சுமி(சந்திரா)நேற்று(22.01.2013) செவ்வாய்க்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் ஜெயரட்ணசிங்கத்தின் (Retired Farm Manager of NLDB)அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான ராசையா(Milk bar--& Jaffna) தம்பதியரின் புதல்வியும், காலஞ்சென்றவர்களான எதிர்வீரசிங்கம் தம்பதியரின் அன்பு மருமகளும், Dr.சாருகாசினி, மதுரா(Engineer) ஆகியோ ரின் அன்பு தாயும், சிவப்பிரசாந்(Project Manager), பிரேமேகலன்(Engineer) ஆகியோரின் பாசமிகு மாமியும், பிரஷித்தின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(24.01.2013) வியாழக்கிழமை பி.ப.2.00மணிக்கு 250/34, ஹவலொக் வீதி, கிருலப்பனை, கொழும்பு-06 இல் அமைந்துள்ள இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பொறளை கனத்தை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினரர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

250/34, ஹவலொக் வீதி,
கிருலப்பனை, கொழும்பு 06

தகவல்:
ஜெயரட்ணம்.
(கணவர்)

# தீப்பற்றியது புடைவைக் கடை

அக்கராயன் பிரதேசத்திலுள்ள ஸ்கந்தபுரம் கிராமத்தில் புடவைக்கடையொன்று தீயில் எரிந்து நாசமாகியுள்ளது. நேற்று முன்தினம் நள்ளிரவு ஒரு மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக அறிய முடிகின்றது. வழக்கம் போலத் தமது ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்ட பொலிஸார் இதனைக் கண்ட போதிலும் தீயை அணைக்க முடியவில்லை. சுமார் 10 இலட்சம் ரூபா பெறுமதியான புடைவைகள் தீயில் எரிந்து நாசமாகியதாகத் தெரிய வருகின்றது. இதேவேளை ஸ்கந்தபுரம் முருகன் ஆலயத்தின் தேவஸ்தானத்தினுள் இருந்த முருகனின் சிலை அமைந்திருந்த பீடம் புரட்டப்பட்டு அங்கிருந்த பெறுமதியான உலோகங்கள் திருடப்பட்டுள்ளன. மேலும் அங்குள்ள நாகதம்பிரான் ஆலயத்திலும் திருட்டு முயற்சி நடைபெற்றுள்ளது. (க-18)

# துணுக்காயில் மணல் அகழ பிரதேச மக்கள் எதிர்ப்பு

அக்கராயன்,ஜன.23

துணுக்காய் ஆரோக்கியபுரம் கிராமத்திலிருந்து மணலை எடுத்துச் செல்வதற்கு கிராம மக்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். கிராம அபிவிருத்திச் சங்கம் வெளியாள்களுக்கு இங்கிருந்து மணல் எடுத்துச் செல்வதற்கு அனுமதியளித்ததையடுத்து கிராம மக்கள் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

இந்தக் கிராமத்தில் வீட்டுத் திட்ட வேலைகள் ஆரம்பிக்கவுள்ள நிலையில் இங்கிருந்து வெளியிடங்களுக்கு மணல் எடுத்துச் செல்லப்படுகின்றமை கிராம மக்களிடையே கொதிப்பை ஏற்படுத்தியுள்ளது. (க-18)

*31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்*

அன்னைமடியில்
03.03.1941

ஆண்டவன் அடியில்
24.12.2012



**அமரர் கதிர்காமு பாலகிருஸ்னன்(S.K)**

(இளைப்பாறிய களஞ்சியக்காப்பாளர், ப.நோ.கூ.சங்கம்)

கடந்த 24.12.2012 அன்று இறைபமடைந்த எமது குடும்பத்தலைவரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (23.01.2013) புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று மதியம் 12 மணியளவில் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நடைபெறும் இந்நிகழ்வில் கலந்து அன்னாரின் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்

தம்பசிட்டி வீதி,
அல்வாய்கிழக்கு
அல்வாய்.
(பெற்றாரின் இல்லம்)

தகவல்
குடும்பத்தினர்

கல்விச் சமூகத்தோடு ஒன்றிய நிறுவனம்
யாழில் Mகொழும்பு பிறிண்டேர்ஸ்
666, கே.கே.எஸ் வீதி, (யாழ் இந்துக்கல்லூரி மிக அருகாமை)
தொ.பே: 0771974875
கலர்பிறிண்ட் ஓவ்செற் பிறிண்டிங்
டிஜிற்றல் பிறின்ரிங் சகலவிதமான பிறின்டிங் வேலைகளையும்
நவீன உயர்தொழில் நுட்பத்தில் – துரிதகதியில் துள்ளியமான பதிப்பு

**வாடகைக்கு**
யாழ். நகரின் மையப்பகுதியில் ஆஸ்பத்திரி வீதியில் 1000 சதுர அடி கொண்ட மேல் மாடிக் கட்டடம் மிகக்குறைந்த வாடகைக்கு உண்டு. அலுவலகம், காட்சியறையாகப் பயன்படுத்த மிகப் பொருத்தமானது.
தொடர்பு- 0773126712

# நல்லூர் பிரதேச சபை, கொக்குவில்.

## 2013ஆம் ஆண்டுக்கான இறைச்சிக் கடைகள் குத்தகைக்கு வழங்குவதற்கான பகிரங்க ஏல அறிவித்தல்

நல்லூர் பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட கீழ்க்காணும் இறைச்சிக்கடைகள் 01.02.2013ஆம் திகதி தொடக்கம் 31.12.2013 ஆம் திகதி வரை குத்தகைக்கு நடாத்துவதற்கு பகிரங்க ஏலத்தில் விடப்படவுள்ளது.'

★ ஏலதாரர் பதிவு செய்யும் இறுதித் திகதி : 30.01.2013 புதன்கிழமை மு.ப. 11.00 மணிவரை
★ ஏலம் நடைபெறும் திகதி : 30.01.2013 புதன்கிழமை நண்பகல் 12.00 மணி
★ ஏலம் நடைபெறும் இடம் : தலைமை அலுவலகம், நல்லூர் பிரதேச சபை.

ஏலத்தில் பங்குபற்ற விரும்புவோர் அடையாள அட்டையையும் அதன் நிழற்பிரதியையும், தாம் வதியும் இடத்தின் வதிவிடச்சான்றிதழும் சமர்ப்பித்தல் வேண்டும்.

01. தவறுனராகக் கணிக்கப்பட்ட எவரும் ஏலத்தில் பங்குபற்ற முடியாது.
02. ஏலத்தில் பதிவுசெய்யப்பட்ட ஏலதாரர் மட்டுமே பங்குபற்ற முடியும்.
03. சித்திபெறும் ஏலதாரர் ஏலத்தொகையின் அரைப்பகுதியையும் உரிய வற், தே.க.எ.வரி என்பவற்றையும் உடன் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் செய்தல் வேண்டும். மேலதிக விவரங்களை தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**ஏல அட்டவணை**

| இல | இறைச்சிக்கடைகள் | மீளளிக்கப்படாத ஏலப் படிவக் கட்டணம் | மீளளிக்கப்படும் ஏல வைப்புப் பணம் | ஆகக் குறைந்த ஏலத் தொகை(வற் தவிர்ந்த) ரூபா |
|---|---|---|---|---|
| **நல்லூர் உப அலுவலகம்** | | | | |
| 01. | திருநெல்வேலிச் சந்தை ஆட்டிறைச்சிக் கடை | 500.00 | 5000.00 | 150,000.00 |
| **கொக்குவில் உப அலுவலகம்** | | | | |
| 01. | கொக்குவில் சந்தை கோழி இறைச்சிக்கடை | 500.00 | 5000.00 | 400,000.00 |
| 02. | கொக்குவில் ஆட்டிறைச்சிக் கடை | 500.00 | 5000.00 | 100,000.00 |

நல்லூர் பிரதேச சபை,
திருநெல்வேலி.

ப. வசந்தகுமார், தவிசாளர்,
நல்லூர் பிரதேச சபை

**வாகனம் விற்பனைக்கு**
LC xxxx இலக்கமுடைய ISUZU ELF 250 10½ அடி அலுமினிய Full Body வாகனம் விற்பனைக்குண்டு.
தொடர்பு:- 0778763508

ST. ANTONY'Sல் மலிவு விலையில்
3G Tablet PC (free skype) 1year warranty 16,500/=
3G PHONE (Free skype) 1year warranty 14000/=
வெளிநாட்டில் உள்ளவர்களுடன் முகம் பார்த்துக் கதைக்க முடியும்.
187, K.K.S ROAD JAFFNA.
021 222 4865, 0750698608
(14ஆவது வருட சேவையில்)

SKY இல் கணினி மலிவு விற்பனை
INTEL D/core 2.8 GHZ CPU
INTEL G41 DDR III M/B
KINGSTONE DDR III 1333
250GB HDD SATA
DVD WR 24X
K/B, Mouse + PAD
SPEAKER
19" LED HP MONITOR
3 Years WARRANTY
39,500/=
FREE- HEAD PHONE/ 8GB PEN/ WEBCAM
162, MAIN STREET, JAFFNA.
0212221417, 0777271645
(14 ஆவது வருட சேவையில்)

**நல்லூரில் காணி விற்பனைக்கு**
யாழ்ப்பாணம் நகர எல்லைக்குற்பட்ட, இல 18, 3ஆம் ஒழுங்கை, அரசடி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள 10 பேர்ச் வெற்றுக்காணி விற்பனைக்குண்டு. இது குடியிருப்பு மற்றும் வியாபார தேவைகளுக்கு உகந்தது. உங்களுடைய விலையை குறுஞ்செய்தி வடிவில் கீழுள்ள இலக்கத்திற்கு அனுப்பவும்
077 0456442

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## திருமதி. விமலாதேவி செல்வரட்ணம்

(ஜேர்மனி)



மாதகலை பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி . விமலாதேவி செல்வரட்ணம் நேற்று முன்தினம் (21.01.2013) திங்கட்கிழமை ஜேர்மனி ரவன்ஸ்பேக்கில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாதகல் இராசசிங்கம் சிவகாமிப்பிள்ளை தம்பதியரின் மகளும் காலஞ்சென்றவர்களான பன்னாலை அழகரத்தினம் - பொன்னுப்பிள்ளை தம்பதியரின் மருமகளும் செல்வரத்தினத்தின் (ஜேர்மனி) பாசமிகு மனைவியும் சாரங்கன், சரவண்ஜா (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயும் காலஞ்சென்றவர்களான கனக ராசா, விக்கினேஸ்வரன், கடம்பேஸ்வரி மற்றும் திலகவதி குணரட்ணம் (மாதகல்), புவனேஸ்வரி(டென்மார்க்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் காலஞ் சென்றவர்களான கதிர்காமத்தம்பி , சிவராசா, சுந்தரமூர்த்தி, குணரட்ணம், முருகையா மற்றும் பாலசுப்பிரமணியம், செல்வராசா, இராசலட்சுமி, தவமணி(பன்னாலை)ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்

அன்னாரின் துயர்பகிரும் நிகழ்வு மைத்துனி திருமதி . சண்முகலிங்கம் இராசலட்சுமியின் இல்லத்தில் நடைபெறுகின்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பங்கிளிட்டி, பன்னாலை,
தெல்லிப்பழை.
(0776510096)

தகவல்:
குடும்பத்தினர்.

(28521)(4.6)

## சுப்பிரமணியம் பாலராசா



திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் கற்பகப்பிள்ளையார் கோவிலடி உடுவில் கிழக்கினை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் பாலராசா நேற்று (22.01.2013) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்- சின்னத் தங்கம் ஆகியோரின் மகனும் காலஞ் சென்றவர்களான சுப்பிரமணியம் -சின்னத் தங்கச்சி ஆகியோரின் மருமகனும் நாகேஸ்வரியின் அன்புக் கணவரும் சர்மிளா, சபிதா, அனுசன், சங்கீதா ஆகியோரின் தந்தையும் ராகுலன், கேதீஸ்வரன் ஆகியோரின் பாசமிகு மாமனும் தேனுஜன், சந்தோஸ், சங்கவி ஆகியோ ரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (23.01.2013) புதன்கிழமை பி.ப 02.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கற்பகபிள்ளையார்
கோயிலடி,
உடுவில் கிழக்கு,
சுன்னாகம்.

தகவல்:
குடும்பத்தினர்.

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையில் ஆசிரியராகக் கடமையாற்றும்
திருமதி அஜந்தா ரஜீவன்
அவர்களின் அன்புத்தந்தை
**வேலாயுதம் தர்மஞானசிங்கம்**
அவர்கள் நேற்றுமுன்தினம் (21.01.2013) திங்கட்கிழமை இறைபதமடைந்தார். அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

நலன்புரிக்கழகம்
யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை

(28517)(6.7.11)

# VACANCY

## POST OF IT EXECUTIVE.

WE ARE ONE OF THE LEADING PHARMACEUTICAL DISTRIBUTORS IN JAFFNA AND LOOKING FOR AN EXPERIENCED PERSON IN ALL COMPUTERISED PACKAGES(HARDWARE SOFTWARE& NET WORKING). THE IDEAL CANDIATE SHOULD CARRY ADEQUATE EXPERIENCE TO ORGANISE AND SUPERVISE OUR COMPUTER COUNTER AND SHOULD BE ABLE TO PERFORM INDEPENDANTLY

SPECIAL PREFERENCE WILL BE GIVEN TO THOSE WHO COULD CONVERSE IN ENGLISH & SINHALA.

**SALARY SHALL BE NOT LESS THAN Rs.25,000 and OTHER fringe benefits**

The applications with full bio-data along with to non related referees should reach us within 10 days of this advertisement.

Retired persons from reputed private institutions may also apply.

**Vanikaa Medicals**
**203,Hospital Road,Jaffna.**
**T.P.: 021 222 6291, 011 221 9700 Fax: 021 2222445**
**Email: vanikaa@sltnet.lk**

(28510)(5.6.7)

## VACANCY ANNOUNCEMENT
**Issued on: 23 January 2013**

| | |
|---|---|
| ORGANIZATION: | Embassy of Switzerland |
| DUTY STATION: | Jaffna |
| FUNCTIONAL TITLE: | Governance Program Officer |
| DURATION: | 1 year |
| CLOSING DATE: | 5 February 2013 |
| TIME OF EMPLOYMENT: | 50-70% |

The Embassy of Switzerland is seeking applications from qualified and deserving candidates for the job/vacancy of "Governance Program Officer".

**Background**

With the end of hostilities in 2009, the government of Switzerland is actively promoting an inclusive peace building process as well as the rehabilitation and sustainable development in the North of Sri Lanka. Through the Swiss Agency for Development and Cooperation (SDC), Switzerland implements the reconstruction of war-damaged areas, enhancing rehabilitation of economic means for vulnerable groups, while through the Swiss Human Security Division (HSD) it promotes good governance and capacity building of local government structures, strengthening civil society organizations and supporting their participation in political processes.

**Essential job functions**


•Advise on good governance and institutional capacity building activities to develop responsive government structures and participatory governance mechanisms in Northern and Eastern Provinces.
•Oversee all programs ensuring that the implementing partners are following work plans, that activities are on schedule, and that project deliverables are completed as planned.
•Ensure effective and transparent use of financial resources in compliance with the Swiss government policies and relevant Sri Lankan legislation, providing regular reports on program activities.
•Liaise with local and provincial government officials, local NGOs and civil society organizations, local religious leaders and other interlocutors to ensure support for and acceptance of the projects.
Linking with regional and national networks of community based organizations, identifying critical priorities and issues that need support, networking with civil society groups on collaborative projects where possible.
•Maintain close working relationships with other humanitarian and development organizations, and local partners, including representing the Swiss government at local coordination meetings as required.

**Knowledge and Experience required**

•University Degree in Law, Political Science, Public Policy, or other related field.
•At least 3 years' experience focused on governance and civil society programs at community and/or national levels.
•Experience in managing international organizations' programs and budget preferred.
•Excellent negotiation and representation skills, ability to work comfortably with local authorities and civil society organizations.
•Effective verbal and written communication, organizational, and prioritization skills.
•Mother Tongue Tamil, good Sinhala language skills essential. Reporting language English.
•Availability to travel frequently in the Northern and Eastern Provinces.

Please apply directly at: col.vertretung@eda.admin.ch

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வறுமையற்றதோர் இலங்கை தேசத்திற்காக ஒருநாள் கருத்தரங்கு கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் கரணவாய் மூத்த விநாயகர் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. இதன் போது மங்கள விளக்கேற்றப்படுகிறது. யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின், கரவெட்டி பிரதேச செயலர் ச.சிவஸ்ரீ ஆகியோரும் இதில் கலந்து கொண்டனர். (ம-8)

# பச்சிலைப்பள்ளி அபிவிருத்திப் பேரவைக்கு நிரந்தரக் கட்டடம் அமைக்க நடவடிக்கை

### லண்டனிலுள்ள உறவுகள் காணி, பொருள் உதவி

பளை, ஜன.23

பளை முல்லையடியில் தனியார் வீட்டில் இயங்கி வரும் பச்சிலைப்பள்ளி அபிவிருத்திப் பேரவைக்கு நிரந்தரக் கட்டடம் அமைக்க லண்டனில் இயங்கும் தாய்ச் சங்கமான பச்சிலைப்பள்ளி அபிவிருத்திச் சங்கத்தினர் ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அண்மையில் கனடாவில் இருந்து வருகை தந்துள்ள ஒரு குடும்பத் தினர், பேரவையினர் பளைப் பிரதேசத்தில் மீளக் குடியமர்ந்துள்ள மக்களுக்கு வழங்கி வரும் வாழ்வாதார உதவிகளை அறிந்து பளையில் உள்ள தமது காணியை நியாயமான முறையில் பேரவைக்கு வழங்க முன் வந்துள்ளனர் என்று தலைவர் கு.ந.பாலச்சந்திரன் தெரிவித்தார்.

லண்டனில் உள்ள பச்சிலைப்பள்ளி அபிவிருத் திச் சங்கத்தினர் அங்குள்ள புலம்பெயர் உறவுகளின் பங்களிப்புடன் பேரவைக்கு நிரந்தர அலுவலகக் கட்டடம் நிர்மாணிப்பதுடன் தொழிற் பயிற்சிக் கூடம் மற்றும் முதியோர் பராமரிப்பு நிலையம் அமைக்கவும் திட்டமிட்டுள்ளனர் எனவும் தெரிவித்தார்.

லண்டனில் இயங்கும் பச்சிலைப்பள்ளி அபி விருத்திச் சங்கத்தின் நிதி உதவியின் மூலம் பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் மீளக்குடியமர்ந்து வரும் வறிய குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தல், மாணவர்களின் கல்வியை மேம்படுத்தல், பல்வேறு உதவிகள் செயற்படுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-9)

# மதுபோதையில் கலகம் விளைவித்தவருக்கு சிறை

யாழ்ப்பாணம்,ஜன.23

மதுபோதையில் பொது இடத்தில் கலகம் விளைவித்தவருக்கு நீதிமன்றம் 20 ஆயிரம் ரூபா அபராதம் விதித்ததோடு 3 மாதச் சிறைத் தண்டனையும் விதித்தது.

ஊர்காவற்றுறை நீதிமன்றில் நீதிவான் ஆர்.எஸ். மகேந்திரராஜா முன்னிலையில் இவ்வழக்கு விசாரணைக்கு வந்தது.

ஊர்காவற்றுறையைச் சேர்ந்த பிரஸ்தாப நபர் போதை தலைக்கேறிய நிலையில் பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படும் வகையில் கலகம் விளை வித்துள்ளார்.

**போதை தலைக்கேறிய நிலையில் பொதுமக்களுக்கு இடையூறு**

அவரைப் பொலிஸார் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்தினர். மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து சிறையும், அபராதமும் விதிக்கப்பட்டன. (ம-4)

# வடபகுதி மீனவர் பிரச்சினையைத் தீர்க்க அரசியல்வாதிகள் முன்வருவதில்லை

### யாழ்.பல்கலை பேராசிரியர் சூசை ஆனந்தன் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஜன.23

வடபகுதி மீனவர்களது பிரச்சினைகள் தொடர்பில் தீர்வு காண்பதற்கு இங்குள்ள அரசியல் வாதிகள் முன் வருவதில்லை. தமது நலன் கருதியதாகவே இந்தப் பிரச்சினையைப் பார்க்கிறார் கள் என்று யாழ்.பல்கலைக் கழக பேராசிரியர் எஸ்.சூசை ஆனந்தன் தெரிவித்தார்.

யாழ்.பல்கலைக்கழகத்தில் 'இந்திய இழுவைப் படகுகளால் வடபகுதி கடற்றொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினை' தொடர்பான கலந்துரையாடல் நடைபெற்றது. அதன் பின்னர் நடந்த செய்தியாளர் சந்திப்பிலேயே பேராசிரியர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இங்குள்ள அரசியல் வாதிகள் தமது நலன் கருதியே செயற்படுகிறார்கள் என்பதனை வடபகுதி மீனவர்களது பிரச்சினைகளில் அவர்களது வகிபாகத்தை வைத்து அறிய முடிகிறது. தமது இலாபத்தைக் கருத்தில் கொண்டே செயற்படுகிறார்கள்.

குறிப்பாக வடபகுதி மீனவர்களில் குறிப்பிட்ட எண்ணிக்கையானோர் இன்று வரை சுமார் 200 இழுவைப் படகுகளைப் பயன்படுத்தி வருகிறார்கள். கடல்வளம் அழிவது பற்றி இவர்கள் கவலை கொள்வதில்லை. இந்திய மீனவர்கள் இழுவைப் படகுகளைக் கைவிட்டால்தான் தாமும் கைவிடுவோம் என்கின்றனர்.

அரசியல்வாதிகளது ஆதரவுடன் சில மீனவர்கள் வடக்கில் தொழில் செய்கிறார்கள். மீன்பிடி அமைச்சர் வந்து போகிறார். இழுவைப் படகு மீன்பிடியைத் தடை செய்ய வேண்டும் என்கிறார். ஆனால் அவர் கூறுவது நடைமுறைப்படுத்தப்படுவதில்லை. இழுவைப்படகுப் பாவனை இன்றும் தொடர்கிறது. - என்றார்.

இதே வேளை, செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்ட வடமாகாண கடற்றொழிலாளர் சங்க சம்மேளனத் தலைவர் எஸ்.தவரட்ணம் தெரிவிக்கையில்:-

தமது அரசியல் நலனுக்காக இங்குள்ள அரசியல் வாதிகள் இலங்கை, இந்திய மீனவரது பிரச்சினையைப் பயன்படுத்தியுள்ளனரே தவிர அதைத் தீர்ப்பதற்கு எந்த முயற்சியும் எடுக்கவில்லை.

இந்தப் பிரச்சினையைத் தீர்க்காது தொடந்தும் இழுபறி நிலையில் வைத்திருந்து, தமது அரசியலைக் கொண்டு நடத்தவே சிலர் முற்படுகிறார்கள்.

இந்தப் பிரச்சினையைத் தீர்க்க அரசியல் வாதிகள் இதில் தலையிடுவதை நாம் தடுக்கவில்லை.

9 வருடகாலமாக பேச்சுக்கள் நடைபெறுகின்றன. இது வரை எந்தத் தீர்வும் எட்டப்படவில்லை. மன சுத்தியுடன் அனைவரும் இணைந்து இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண முன் வரவேண்டும்.

இந்தக் கலந்துரையாடலில் யாழ்.பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம், றுகுணு பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் சுசிரித் மெண்டிஸ், நெதர்லாந்து அம்ஸ்டெடேம் பல்கலைக் கழக விரிவுரையாளர், தென்னிந்திய மீனவ அமைப்பு ஒன்றிய ஆலோசகர் எஸ்.விவேகானந்தன் ஆகியோர் உரையாற்றினர். (ஐ-4)

# பாடசாலை மாணவருக்கு செஞ்சிலுவைச் சங்கம் உதவி

### 37 ஆயிரம் ரூபா பெறுமதியான கற்றல் உபகரணம் வழங்கியது

யாழ்ப்பாணம், ஜன.23

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தால் வேலணை மற்றும் தெல்லிப்பழை பிரதேசங்களைச் சேர்ந்த 150 பாடசாலை மாணவர்களுக்கு 37 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான பாடசாலை உபகரணங்கள் வழங்கப்பட் டன.

வறுமைக் கோட்டின் கீழ் உள்ள குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு ஒருவருக்கு 2 ஆயிரத்து 500 ரூபா பெறு மதியான பாடசாலை உப கரணங்கள் வழங்கப்பட்டன.

தெல்லிப்பழை வீமன்காமம் பிரதேசத்தைச் சேர்ந்த 105 மாணவர்களுக் கும் வேலணைப் பிரதேசத் தைச் சேர்ந்த 45 மாணவர்களுக்கும் பாடசாலை உபகரணங்கள் வழங்கப்பட்டன.

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத் தலைவர் ஜகத் அபேசிங்க அந்தந்தப் பாடசாலைகளைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களுக்கு உபகரணங்களை அதிபர்கள், ஆசிரியர்கள் ஊடாக வழங்கி வைத்தார். (ம-14)

# சோளச் செய்கையில் ஆர்வமில்லை

யாழ்.குடாநாட்டு விவசாயிகள் சோளன் செய் கையில் தற்போது அதிக ஆர்வம் காட்டுவதில்லை என்று விவசாயிகள் தெரிவித்தனர்.

இந்தச் சோளன் உற்பத்தி விவசாயிகளுக்கு அதிக வருமானத்தை ஈட்டிக் கொடுக்காத காரணத்தால்தான் விவசாயிகள் இந்த உற்பத்தியில் நாட்டம் கொள்வதில்லை. தற்போது தென்பகுதியில் இருந்து அதிகளவிலான சோளன் பொத்திகள் தினமும் குடாநாட்டுக்கு எடுத்து வரப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.(ம-17)

# வடக்கு மீனவர் பிரச்சினையில் உரிய தீர்வு காணப்பட வேண்டும்

### யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன.23

மோதலின் பின்னர்தான் பல பிரச்சினைகள் உருவாகியிருக்கின்றன. இந்திய, தென்னிலங்கை மீனவர்களால் வடக்கு மீனவர்கள் நசுக்கப்படுகிறார்கள். இவற்றிலிருந்து விடுபட ஏற்ற தீர்வைக் காணவேண்டும்.

யாழ். பல்கலைக்கழகத் துணை வேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் இவ்வாறு தெரிவித்தார்.

பாக்கு விரிகுடாவில் இந்திய இழுவைப் படகுகளால் வடபகுதி கடற்றொழிலாளர்கள் பிரச்சினைகள் தொடர்பாக நேற்றுமுன்தினம் யாழ். பல்கலைக்கழகத்தில் கலந்துரையாடல் இடம்பெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

தினமும் மீனவர்கள் தொடர்பான பிரச்சினைகள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன. மோதலின் பின்னர்தான் பல பிரச்சினைகள் உருவாகியிருக்கின்றன. இந்திய, தென்னிலங்கை மீனவர்களால் வடக்கு மீனவர்கள் நசுக்கப்படுகிறார்கள். இவற்றிலிருந்து நாம் விடுபட எமது சமுதாயம் எனும் அடிப்படையில் தீர்வை நடைமுறைப் படுத்த வேண்டும்.

**அரசியல்வாதிகள் ஒன்றுபட வேண்டும். ஒரே மேசையில் கலந்துரையாட வேண்டும்**

அரசியல்வாதிகள் ஒன்றுபட வேண்டும். ஒரே மேசையில் கலந்துரையாட வேண்டும் அப்போதுதான் தீர்வை விரைவுபடுத்தலாம்.

கல்வியாளர்களாகிய நாம் மட்டும் கலந்துரையாடுவ தால் தீர்வு வரப்போவதில்லை. இராஜதந்திர ரீதியான செயற்பாடு தேவைப்படுகிறது - என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-4)

# யாழ்.பொலிஸ் பிரிவின் நடமாடும் சேவைகள்

யாழ்ப்பாணம், ஜன.23

யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவினர் கடந்த வாரம் வட்டுக்கோட்டை, சாவ கச்சேரி, வல்வெட்டித்துறை ஆகிய இடங்களில் நடமாடும் சேவைகளை நடத்தியுள்ளனர்.

வட்டுக்கோட்டைப் பிரதேசத்தில் நடத்தப்பட்ட இலவச மருத்துவ சிகிச்சை முகாமில் வட்டுக்கோட்டைப் பிரதேச மக்களும், சாவகச்சேரியில் நடத்தப்பட்ட நடமாடும் சேவை மருத்துவ முகாமில் மீசாலை கிழக்கு கிராம சேவகர் பிரிவைச் சேர்ந்த மக்களும் பயன்பெற்றனர். வல்வெட்டித்துறையில் நடத்தப்பட்ட நடமாடும் சேவையில் தாமோதரம் முன்பள்ளி மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டன. (ம-14)

### வடமராட்சியில் வெங்காயச் செய்கை பாதிப்பு

# அரச வங்கிகளில் கடன் பெற்றவர்களுக்கு மத்திய வங்கியின் யாழ். கிளை சலுகை

வடமராட்சி, ஜன.23

புலோலி மேற்கு, புலோலி மத்தி கிராம சேவையாளர் பிரிவுகளில் அண்மையில் பெய்த பெருமழையால் வெங்காயப் பயிர் அழிவடைந்ததால் அரச வங்கிகளில் கடன் பெற்ற விவசாயிகளுக்கு சலுகைகளை வழங்க இலங்கை மத்திய வங்கியின் யாழ்ப்பாணக் கிளை முன்வந்துள்ளது.

பல நூற்றுக் கணக்கான ஏக்கர் நிலத்தில் வருடந்தோறும் வெங்காயத்தைப் பயிரிட்டு, சந்தைப்படுத்தி அதன் வருமானத்தில் வாழ்ந்து வரும் நூற்றுக் கணக்கான விவசாயிகளின் வெங்காயப் பயிர் அண்மையில் பெய்த பெருமழையால் வெள்ளத்தில் மூழ்கி நாசமடைந்தது.

இந்த விவசாயிகள் இலங்கை வங்கி, மக்கள் வங்கிக் கிளைகளில் விவ சாயக் கடன்களைப் பெற்றே வெங்காயப் பயிர்ச் செய்கையை மேற்கொண்டிருந்தனர்.

பயிர் அழிவுற்றதால் பெற்ற கடனை உரியகாலத்தில் திருப்பிச் செலுத்த முடியாத நிலை உருவாகியுள்ளது.

இதுதொடர்பாக இந்தப் பிரிவுகளைச் சேர்ந்த விவசாய அமைப்புக்களின் பிரதிநிதிகள் இலங்கை மத்திய வங்கியின் யாழ்.கிளை எஸ்.கௌரிசங்கர், சிரேஷ்ட முகாமையாளர் பா.சிவதீபன் ஆகியோரிடம் நிலைமைகளைத் தெளிவு படுத்தி அதிகாரிகளை நேரில் அழைத்து வந்து அழிவுகளைக் காட்டினார்கள்.

அழிவுகளைப் பார்வையிட்டு நிலைமைகளை உணர்ந்து கொண்ட மத்திய வங்கியின் யாழ். கிளை அதிகாரிகள் பயிர் அழிவால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் பெற்ற கடனைத் திருப்பிச் செலுத்த, உரிய காலத்தைத் தளர்த்தி, ஓரளவுக்குப் போதுமான கால அவகாசத்தை வழங்க முன்வந்துள்ளனர்.

பெற்ற கடனைத் திருப்பிச் செலுத்த கால அவகாச சலுகையை வழங்க முன்வந்தமைக்கு இலங்கை மத்திய வங்கி, யாழ். கிளைக்கும் அதிகாரிகளுக்கும் இந்தப் பிரிவுகளைச் சேர்ந்த கமக்காரர் அமைப்புக்கள் நன்றி தெரிவித்துள்ளனர். (ம-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத்துவ மாணவி மீதான வன்புணர்வு வழக்கு விசாரணை டில்லி நீதிமன்றில்

## நேற்றுமுன்தினம் ஆரம்பம்

டில்லி, ஜன.23

மருத்துவ மாணவி மீதான வன்புணர்வு கொலை வழக்கின் இரகசிய விசாரணை டில்லி விரைவு நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் ஆரம்பமாகியது.

டில்லியில், கடந்த மாதம் 16 ஆம் திகதி பஸ்ஸில் சென்ற 23 வயது மருத்துவ மாணவி 6 பேர் கொண்ட கும்பலால் வன்புணர்வுக்குட் படுத்தப்பட்டார். அதன்பின் டில்லி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக சிங்கப்பூர் மருத்துவமனையில் சேர்க் கப்பட்டார். அங்கு சிகிச்சை பயனளிக்காமையால் மாணவி உயிரிழந்



தார். சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட ஐவ ருக்கு எதிராக கொலைக்குற்றச் சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.

ஆறாவது சந்தேகநபர் 17 வயதுக்குட்பட்டவர் என கூறப்படும் நிலையில், அவர் சிறுவர் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படுவார் என எதிர்பார்க்கப்படுகின் றது.

இதேவேளை டில்லியில் இருந்து மேற்படி வழக்கை வேறு இடத்துக்கு மாற்றுமாறு உச்ச நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்யவுள்ளதாக பிரதிவாதிகள் சார்பாக முன்னிலையாகிய சட்டத்தரணி தெரிவித்துள்ளார்.

டில்லியில் குறித்த வழக்கு விசாரணைகள் மேற்கொள்ளப்படும் பட்சத்தில் தமது கட்சிக்காரர்களுக்கு நீதி கிடைக்காதென அவர் குறிப் பிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.



டில்லி ராஷ்டிரபதி பவனில் ஜனாதிபதி பிரணாப் முகர்ஜியை சந்தித்து பேசுகிறார் துர்மேனிஸ்தான் துணை பிரதமர் ரஷித் மெர்தூவ்.

# அணு சக்தி ஒப்பந்தம் குறித்து ஆஸியுடன் மார்ச்சில் பேச்சு

## மத்திய அரசு தெரிவிப்பு

டில்லி, ஜன.23


ஆஸ்திரேலியாவுடன் அணு சக்தி ஒப்பந்தம் குறித்த முதற்கட்ட பேச்சு எதிர்வரும் மார்ச் மாதம் ஆரம்பமாகும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இந்தியா வந்துள்ள ஆஸ்திரேலிய வெளியுறவு அமைச்சர் பாப் கார், மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சல்மான் குர் ஷித்தை டில்லியில் நேற்று முன்தினம் சந்தித்துப் பேசினார்.

அதன் பின்னர் இது குறித்து குர்ஷித் கூறியதாவது:-

இந்தியா - ஆஸ்திரேலியா இடையிலான அணு சக்தி ஒத்துழைப்பு ஒப்பந்தம் குறித்த முதற்கட்ட பேச்சு எதிர்வரும் மார்ச் மாதம் டில்லியில் ஆரம்பமாகும். இது இருநாடுகளைச் சேர்ந்த வெளியுறவு அமைச்சர்கள் நிலையில் நடைபெறும்.

ஏற்கெனவே பல நாடுகளுடன் இதுபோன்ற ஒப்பந்



தங்களை மேற்கொண்டுள்ளோம். அதை அடிப்படையாகக் கொண்டு இந்தப் பேச்சு நடைபெறும்.

இராணுவம் மற்றும் பாதுகாப்பு தொடர்பான உறவைப் பலப்படுத்துவது குறித்தும் ஆலோசிக்கப் பட்டது. இதுதொடர்பாக, மத்திய பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே. அந்தோனி எதிர்வரும் மார்ச் மாதம் ஆஸ்திரேலியாவுக்கு பயணம் செய்வது எனவும் முடிவு எடுக்கப்பட்டது. இந்திய பாதுகாப்பு அமைச்சர் ஒருவர் ஆஸ்திரேலியா செல்வது இதுவே முதன் முறை.

இதுகுறித்து ஆஸ்திரேலிய அமைச்சர் பாப் கார் கூறுகையில், 'அணு உலைகளில் எரிபொருளாக பயன்படும் யுரேனியம், ஆஸ்திரேலியாவிலிருந்து இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்வது குறித்து ஒப்பந்தம் மேற்கொள்ளப்படும். இதுகுறித்த பேச்சு எதிர்வரும் மார்ச் மாதம் ஆரம்பமாகும் '' - என்றார்.

கடந்த ஆண்டு ஒக்ரோபரில் இந்தியா வந்திருந்த ஆஸ்திரேலிய பிரதமர் ஜூலியா கில்லார்ட், இந்தியாவுடன் அணு சக்தி ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொள்ளத் தயார் எனக் கூறியிருந்தார். இதன் தொடர்ச்சியாக, இந்தியாவுக்கு யுரேனியம் ஏற்றுமதி செய்வதற்கு விதிக்கப்பட்டிருந்த தடையைக் கடந்த டிசெம்பர் மாதம் ஆஸ்திரேலியா விலக்கிக் கொண் டது.

முன்னதாக, சர்வதேச அணு ஆயுத பரவல் தடை ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்திடாமையால், யுரேனியம் ஏற்றுமதிக்கு தடை விதித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (வ)

# இந்திய விமானப்படைத் தளபதி இஸ்ரேலுக்கு சுற்றுப்பயணம்

டில்லி, ஜன.23

இந்திய விமானப்படைத் தளபதி என்.ஏ.கே. பிரௌன், 4 நாள் சுற்றுப் பயணமாக நேற்று முன்தினம் இஸ்ரேலுக்குச் சென்றுள்ளார்.

இந்தியாவுக்கும், இஸ்ரேலுக்கும் இடையில் நீண்ட காலமாக நட்புறவு தொடர்ந்து வருகிறது. இஸ்ரேலிய ஆயுதங்கள் மற்றும் சாதனங்களை அதிகளவில் வாங்கும் நாடாக இந்தியா மாறியுள்ளது.

1997 ஆம் ஆண்டிலிருந்து இஸ்ரேல் சுமார் ரூ.48 ஆயிரம் கோடி மதிப்பிலான ஆயுதங்களை எம் நாட்டுக்கு ஏற்றுமதி செய்துள்ளது. பால்கன் உளவு விமானம் உட்பட பல்வேறு இராணுவத் தளபாடங்களை இஸ்ரேல் வழங்கியுள்ளது. தற்போது இரு நாடுகளுக்கு இடையிலான முக்கிய இராணுவத் திட்டங்



களாக இந்திய முப்படைகளிலும் உள்ள ஆளில்லா விமானங்களைத் தரம் உயர்த்துதல், தரையில் இருந்து வானில் சென்று தாக்கும் நடுத்தர வகை ஏவுகணைகளை மேம்படுத்தல் ஆகியவை உள்ளன.

இந்தநிலையில், இரு நாடுகளுக்கிடையிலான உறவு களை மேம்படுத்தும் நோக் கில் இந்திய விமானப் படைத் தளபதி என்.ஏ.கே. பிரௌன், இஸ்ரேலுக்கு 4 நாள்கள் சுற்றுப் பயணம் மேற் கொண்டுள்ளார். (வ)

# ஜெயலலிதா மீதான சொத்து குவிப்பு வழக்கு விசாரணை பெப். 4 இல்



பெங்களூர், ஜன.22

ஜெயலலிதா மீதான சொத்து குவிப்பு வழக்கில் சிறப்பு அரசு சட்டத்தரணி ஆச்சார்யாவின் ராஜினாமா கடிதம் ஏற்கப்பட்டது. புதிய சட்டத்தரணி நியமனத்துக்கு வசதியாக வழக்கு எதிர்வரும் 4 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

ஜெயலலிதா சொத்து குவிப்பு வழக்கு விசாரணை பெங்களூர் தனி நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் நீதிபதி பாலகிருஷ்ணா முன்னிலையில் விசாரணைக்கு வந்தது. வழக்கில் குற்றவாளிகளாக சேர்க்கப்பட்டுள்ள ஜெயலலிதா, சசிகலா, சுதாகரன், இளவரசி ஆகியோர் நேரில் முன்னிலையாகாமல் இருக்க விலக்கு அளிக்கக்கோரி அவர்களது சட்டத்தரணிகள் மனு தாக்கல் செய்தனர். அதை நீதிபதி ஏற்றுக் கொண் டார்.

ஜெயலலிதா சார்பில் அவரது சட்டத்தரணிகள் குமார் சிறப்பு மனு ஒன்றை தாக்கல் செய்தார். அதில் தனது கட்சிக்காரர் கடந்த 1994,1995 ஆம் ஆண்டுகளில் தாக்கல் செய்த வருமான வரி கணக்கு விவர நகலைக் கொடுக்க வேண்டும். மேலும் அப்போது வருமான வரித்துறை இணை ஆணையராக இருந்த பிரேம் ராஜுவிடம் விசாரணை நடத்த வசதியாக நீதிமன்றத்தில் நேரில் முன்னிலையாக உத்தரவிட வேண்டும் என்று கூறியிருந்தார். (வ)

# அரியானா முன்னாள் முதலமைச்சர் சவுதாலாவுக்கு 10 ஆண்டு சிறை



அரியானா, ஜன.23

அரியானா முன்னாள் முதலமைச்சர் சவுதாலாவுக்கு 10 ஆண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர் நியமன ஊழல் வழக்கில் டில்லி சி.பி.ஐ. நீதிமன்றம் தண்டனை அறிவித்துள்ளது. சவுதாலாவின் மகன் அஜய்க்கும் சி.பி.ஐ. நீதி மன்றம் 10 ஆண்டு சிறைத் தண்டனை விதித்துள்ளது. அரியானா முதல்வராக சவுதாலா பதவி வகித்தபோது ஆசிரியர் நியமனத்தில் ஊழல் இடம் பெற்றதாக வழக்குப் பதிவு செய்யப்பட்டிருந்தது. (வ)

# புதிய ஐ.என்.எஸ். சரயு கப்பல் கடற்படையில் ரோந்து சேவைக்கு

## தீவிரவாதிகளின் ஊடுருவலைத் தடுக்க

பனாஜி, ஜன.23

அந்தமான் - நிக்கோபார் தீவு பகுதியில் ரோந்து பணி மேற்கொள்வதற்காக ஐ.என்.எஸ் சரயு ரோந்துக் கப்பல் இந்திய கடற்படையில் நேற்று முன்தினம் இணைக்கப்பட்டது.

மும்பை கடல் வழியாக தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியதை அடுத்து, இந்திய கடல் பகுதியில் தீவிர ரோந்து பணியை மேற் கொள்ள கடற்படை முடிவு செய்தது. இதற்காக கோவா கப்பல் கட்டும் தளத்தில் நான்கு மிகப் பெரிய ரோந்துக் கப்பல்கள்




கட்ட முற்பதிவு கொடுக்கப் பட்டது. அங்கு தயாரான முதலாவது ரோந்துக் கப்பலுக்கு ஐ.என்.எஸ். சரயு என பெயரிடப்பட்டது. அந்தக் கப்பலை கடற் படையில் இணைக்கும் நிகழ்ச்சி கோவாவின் வாஸ்கோ நகரில் நேற்று முன்தினம் நடைபெற்றது. அந்தமான் நிக்கோபார் பகுதி தளபதி ஏர் மார்ஷல் பி.கே. ராய் முன்னிலையில் ஐ.என்.எஸ் சரயு போர்க்கப்பல் கடற்படையில் சேர்க்கப்பட்டது. (வ)

# முஜாஹிதீன் அமைப்பு தீவிரவாதி யாசின் கைது

டில்லி, ஜன.23

இந்தியன் முஜாஹிதீன் அமைப்பைச் சேர்ந்த யாசின் பத்கல் என்பவர் பீகாரில் நேற்று முன்தினம் மாலை கைது செய்யப்பட்டார் என்று தேசிய புலனாய்வு அமைப்பு தெரிவித்துள்ளது.

பீகாரில் உள்ள தர்பங்கா தேசிய புலனாய்வு அமைப்பு, இந்தியன் முஜாஹிதீன் அமைப்போடு தொடர்புடைய மற்றொரு அமைப்பின் தலைவராக யாசின் பத்கல் விளங்குகின்றார். அவர் தீவிரவாத அமைப்புக்கு உதவியதாக தேடப்பட்டு வந்தவர் என்றும் பாகிஸ்தானில் பதுங்கி இருந்த நிலையில் நேற்று முன் தினம் மாலை கைது செய்யப்பட்டார் என்றும் தேசிய புலனாய்வு அமைப்பு தெரிவித்துள்ளது. (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aayanaham.org

# இந்திய மீனவர்கள் 27 பேர் பாகிஸ்தானில் கைது

இந்திய மீனவர்கள் 27 பேர் பாகிஸ்தானில் கைது செய்யப்பட்டுள்ளனர். பாகிஸ்தான் எல்லைக்குள் நுழைந்தார்கள் என்ற குற்றச்சாட்டின்பேரிலேயே அவர்கள் கைது செய்யப்பட்டதாக பாகிஸ்தான் குறிப்பிட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர்கள் கராச்சி துறைமுக பொலிஸாரிடம் ஒப்படைக் கப்பட்டுள்ளதாக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்தநிலையில், பாகிஸ்தான் சிறையில் 2 ஆயிரம் இந்திய மீனவர்களும், இந்தியச் சிறைகளில் 125 பாகிஸ்தான் மீனவர்களும் தற்போது தடுத்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(வ)

## காபூலில் குண்டுத் தாக்குதல்

காபூல், ஜன.23

ஆப்கன் தலைநகர் காபூலில் தற்கொலைக் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. மேற்கு ஆப்கனில் அமைந்துள்ள பொலிஸ் தலைமையகம் மீதே தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

சிலதற்கொலைக் குண்டுதாரிகளும், ஆயுததாரிகளும் கூட்டாக இணைந்து இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளனர். குறித்த பகுதியில் தொடர்ச்சியாக தாக்குதல் நடத்தப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் உயிரிழந்த மற்றும் காயமடைந்தவர்களின் விவரங்கள் வெளியிடப்படவில்லை. இந்தத் தாக்குதலுக்கு தலிபான்கள் உரிமை கோரியுள்ளனர்.



## இந்தோனேஷியாவில் தொடர்கிறது கடும் மழை இதுவரை 26பேர் சாவு

ஜகார்த்தா, ஜன.23

இந்தோனேஷியாவில் கடும் மழைகாரணமாக இதுவரை 26 பேர் உயிரிழந்துள்ளனர்.

கடந்த ஒரு வாரமாக இந்தோனேஷியாவின் பல பகுதிகளிலும் பலத்த மழை பெய்து வருகின்றது.

தலைநகர் ஜகார்த்தாவின் மத்திய பகுதியில் உள்ள வெள்ளத் தடுப்பு மதில்சுவர் கடந்த வியாழக்கிழமை மழை காரணமாகச் சரிந்து விழுந்தது.

அதனால், ஜகர்த்தா நகருக்குள் வெள்ள நீர் பெருக்கெடுத்து புகுந்தது. ஜனாதிபதி மாளிகை உள்ளிட்ட பல தாழ்வான பகுதிகளை வெள்ளம் சூழ்ந்தது.

6.5 அடிக்கும் மேற்பட்ட உயரத்தில் பாய்ந்தோடும் வெள்ள நீரில் மூழ்கியும், நீரில் மின்சாரம் பாய்ந்ததாலும் நேற்று வரை 26 பேர் உயிரிழந்துள்ளனர் என்று ஜகார்த்தா பொலிஸார் தெரிவித்தனர்.

ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் வெளியேற்றப்பட்டுபாதுகாப்பானஇடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## இந்தோனோஷிய நிலநடுக்கம்: 8 வயதுச் சிறுமி சாவு



ஜகார்த்தா, ஜன.23

இந்தோனேஷியாவின் ஏஸ் மாகாணத்தில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் 8 வயது சிறுமி உயிரிழந்தார். 7 பேர் காயமடைந்தனர்.

நிலநடுக்கம் ரிச்டர் அளவு கோலில் 5.9 ஆகப் பதிவானது.

காயமடைந்தவர்களில் 4 பேர் கவலைக்கிடமாக உள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. சேதவிவரங்கள் குறித்த மேலதிக தகவல்கள் கிடைக்கப்பெறவில்லை.

# மாலியைக் கைப்பற்றுவதே பிரான்ஸ் படையின் இலக்கு

## அந்நாட்டு பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு

பாரிஸ், ஜன.23

இன்னும் சில வாரங்களில் மாலி முழுவதையும் கைப்பற்றி கட்டுப்பாட்டில் கொண்டுவருவதே தமது நோக்கம் என்று பிரான்ஸ் தெரிவித்துள்ளது.

மாலியில் நடைபெற்று வரும் போர் தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கும் போதே பிரான்ஸ் பாதுகாப்பு அமைச்சர் ஜீன் யேவ்ஸ் லீ டிரியான் இவ்வாறு தெரிவித்தார்.

வடக்கு மாலியில் உள்ள தீவிரவாதிகளை ஒழிக்கும் நடவடிக்கையில் இறங்கியுள்ள பிரான்ஸ் படைகள், இன்னும் சில வாரங்களில் மாலி முழுவதையும் தமது கட்டுப்பாட்டில் கொண்டு வரும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, மாலியில் தாக்குதல்களை நெறிப்படுத்தும் பிரான்ஸ் தளபதி பிரட்ரெக் தெரிவிக்கையில்-

''நீண்ட போருக்கான திட்டமிடுதலில் ஈடுபட்டுள்ளோம். இன்னும் பல தகவல்கள் தேவைப்படுகின்றன. அவற்றுக்காகக் காத்திருக்கின்றோம். இது வரை நடைபெற்ற தாக்குதல்களில் பொதுமக்களுக்கு எந்த இழப்புகளும் ஏற்படவில்லை. பிரான்ஸ் படைகள் தற்போது நியோனோ நகரத்தில் புதிய இராணுவத் தளத்தை அமைத்துள்ளன. நேற்று அவர்கள் எந்தத் தாக்குதலிலும் ஈடுபடவில்லை.'' என்றார்.

எனினும் ''பொதுமக்கடன் தீவிரவாதிகள் கலந்திருப்பதால் அவர்களைத் தனித்து இனங்காண்பது கடினமாக உள்ளது. அல்ஜீரிய, லிபியா நாடுகளைச் சேர்ந்த துவாரெக் இனத்தவரே பெரும்பாலும் கொரில்லா தாக்குதலில் ஈடுபடுகின்றனர். இவர்கள் அனைவரும் முகத்தை மூடியிருப்பதால் அவர்களின் மொழி வழக்கை வைத்து தான் அவர்களை இனம்பிரித்தறிய வேண்டியுள்ளது'' என்று மாலி படைகளைச் சேர்ந்த தளபதி செய்யது சொகோபா கூறினார்.

## சிரியாவில் தற்கொலை தாக்குதல்

### 30 பேர் சாவு

டமஸ்கஸ், ஜன.23

சிரியாவில் இடம்பெற்ற தற்கொலைக் கார் குண்டுத் தாக்குதலில் சுமார் 30 பேர் கொல்லப்பட்டுள்ளனர். பலர் படுகாயமடைந்துள்ளனர்.


சிரியாவிலுள்ள உள்ளூராட்சிமன்றத்தின் அனுமதி பெற்ற ஆயுதக்குழுவின் தலைமையகத்துக்கு வெளியிலேயே நேற்றுமுன்தினம் இந்தத் தற்கொலை கார் குண்டுத் தாக்குதல் இடம் பெற்றுள்ளது.

அதில் ஜனாதிபதி பஷால் அல் அசாத்துக்கு ஆதரவான 30 பேர் உயிரிழந்தனர் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனினும் காயமடைந்தவர்களில் பலரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது என்றும், அதனால் இறந்தவர்களின் எண்ணிக்கை 50க்கும் மேலாக உயர்வடையக் கூடும் எனவும் தெரிவிக் கப்படுகின்றது. இந்தத் தாக்குதலுக்கு எந்த அமைப்பும் பொறுப்பேற்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

# பயணம் இன்னும் முடியவில்லை

## பதவியேற்பு நிகழ்வின்போது ஒபாமா



நியூயோர்க், ஜன.23

எமது பயணம் இன்னமும்முடியவில்லை.அமெரிக்காவில் இதுநாள் வரை பல்வேறு நெருக்கடி நிலைகள் தோன்றி எம்மை சீண்டிப் பார்த்தன. எமக்கிருந்த தீர்வுகளை திருடிக்கொண்டன. எனினும் இப்போதுஅமெரிக்காவின் எதிர்காலம் எல்லைகளற்று விரிந்துள்ளது - என்று தெரிவித்துள்ளார் ஜனாதிபதி பராக் ஒபாமா.

பராக் ஒபாமா நேற்று முன்தினம் வொஷிங்டனில் பொதுமக்கள் முன்னிலையில் இரண்டாவது முறையாக அமெரிக்க ஜனாதிபதியாக உத்தியோகபூர்வமாக பதவியேற்றுக்கொண்டார். அதன்போது உரையாற்றிய போதே ஒபாமா இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் உரையாற்றும்போது-

''நாங்கள் ஏனைய நாடுகளுடன் ஒன்றிணைந்து செயற்பட்டு பிரச்சினைகளைக் களைய முற்பட வேண்டும். சந்தேகங்கள், பயங்கள் என்பவற்றை நிரந்தரமாக அகற்றுவதற்கு இம்முறையே உதவும். எமது பயணம் இன்னமும் முடியவில்லை. அமெரிக்காவில் இதுநாள் வரை பல்வேறு நெருக்கடி நிலைகள் தோன்றி எம்மை சீண்டிப்பார்த்தன. எமக்கிருந்த தீர்வுகளை திரு டிக்கொண்டன.

எனினும் இப்போது அமெரிக்காவின் எதிர்காலம் எல்லைகளற்று விரிந்துள்ளது. தசாப்தகாலமாக தொடர்ந்த அச்சுறுத்தல் முடிவுக்கு வந்துள்ளது. வர்த்தக ரீதியில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. இதை சரியாக தக்கவைத்துக்கொள்ள வேண்டும். அமெரிக்காவில் குடியேறுபவர்கள், இந்நாடு வாய்ப்புக்களை வழங்கும் நாடு என உணர வேண்டும். இளம் மாணவர்கள், பொறியியலாளர்கள் வெளிநாடுகளுக்கு செல்லாது எமது நாட்டிலேயே பணிபுரிய வேண்டும். அமெரிக்காவின் கடன் மற்றும் பற்றாக்குறை பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு மக்கள் கடுமையான தெரிவுகளை பின்பற்ற வேண்டும். எமது பிள்ளைகள், பாதுகாப்பாக தெருக்களில் நடந்து செல்லக்கூடிய நிலைதோன்ற வேண்டும். உயிர் அச்சுறுத்தல்களிலிருந்து அவர்கள் விடுவிக்கப்பட வேண்டும்'' என்று தெரிவித்தார்.

ஒபாமாவின் பதவியேற்பின்போது கடும் குளிரையும் பொருட்படுத் தாது சுமார் 6 இலட்சத்துக்கும் அதிகமான [illegible] தனர்.

# வழிப்பறியில் ஈடுபட்ட இருவருக்கு தூக்கு

## மக்கள் முன்னிலையில் நிறைவேற்றம்

தெஹ்ரான், ஜன.23

ஈரானில் வழிப்பறியில் ஈடுபட்ட இருவர் பொது மக்கள் முன்னிலையில் தூக்கிலிடப்பட்டனர்.

ஈரான் தலைநகர் தெஹ்ரானில் உள்ள கடைத்தெரு ஒன்றில் ஒரு நபரை 4 பேர் கொண்ட கும்பல் கத்தியால் தாக்கி வழிப்பறி செய்யும் காட்சிகள் கடந்த டிசெம்பர் மாதம் யூ டியூப் இணையத் தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டிருந்தது. அதே காட்சியை செய்தியாக ஈரான் தொலைக்காட்சியும் ஒளிபரப்பியது.

அதையடுத்து இந்த வழிப்பறியில் ஈடுபட்ட 4 பேரையும் கைது செய்ய ஈரான் அரசு உத்தரவிட்டது. அவர்கள் மீது விரைவு விசாரணை நடத்தப்பட்டது.

விசாரணைகளின் முடிவில் வழிப்பறியில் ஈடுபட்ட 2 பேருக்கு மரண தண்டனையும், மற்றைய இருவருக்கும் தலா 74 சவுக்கடியும், 10 ஆண்டு சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டன.

மரண தண்டனை விதிக்கப்பட்ட 24 வயதுடைய 2 இளைஞர்களும், பொது இடத்தில் தூக்கிலிடப்பட்டனர் என்று ஈரான் வானொலி செய்தி வெளியிட்டுள்ளது. சுமார் 300 பேர் முன்னிலையில் இந்த தண்டனை நிறைவேற்றப்பட்டதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இந்திய தபால் தலை லண்டனில் ஏலம்

லண்டன், ஜன.23

விக்டோரியா மகாராணியின் உருவம் தலைகீழாக அச்சிடப்பட்ட, 159 ஆண்டுகளுக்கு முற்பட்ட இந்திய அஞ்சல் தலை லண்டனில் இன்று ஏலம் விடப்படவுள்ளது.

1854ஆம் ஆண்டு கொல்கத்தாவில் நான்கு அணா மதிப்பில் ராணி விக்டோரியாவின் உருவத்துடன் கூடிய வண்ண அஞ்சல் தலைகள் அச்சிடப்பட்டன.

அப்போது 20 அல்லது 30 அஞ்சல் தலைகளில் தவறுதலாக ராணியின் முகம் தலைகீழாக அச்சிடப்பட்டு, விற்பனைக்கு வந்தது.

அதில், ஒரு அஞ்சல் தலை அமெரிக்காவைச் சேர்ந்த பிரபல அஞ்சல் தலை சேகரிப்பாளர் ரொபேர்ட் கன்லிப்பிடம் இருந்தது. அது தற்போது ஏலம் விடப்படவுள்ளது.

உலகில் இது போன்ற அஞ்சல் தலைகள் மிகச் சொற்ப அளவிலேயே உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நாடு திரும்பினார் இளவரசர் ஹரி

லண்டன், ஜன.23

ஆப்கனில் 20 வார காலம் சேவையாற்றிய பின்னர் நாடு திரும்பினார் இளவரசர் ஹரி.

ஆப்கனில் 20 மாதமாக அபாச்சி ஹெலிகொப்டரில் விமானியாக பணிபுரிந்தார் இளவரசர் ஹரி.

ஆப்கனில் பணிபுரியும் [illegible] நடந்து [illegible] சற்று சிரமமாகவே இருந்தது என்றாலும், இப்பயணம் தனக்கு புத்துணர்ச்சியை அளித்ததாகவும் தெரிவித்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவை தீவிரவாத நாடாக அறிவிக்க வேண்டும்

## உலக நாடுகளிடம் ஹபீஸ் கோரிக்கை

இஸ்லாமபாத், ஜன.23

பாரதிய ஜனதா கட்சியும், ஆர்.எஸ்.எஸ் அமைப்பும் இந்து தீவிரவாதத்தை பரப்புவதாக இந்திய உள்துறை அமைச்சர் சுஷில் குமார் ஷிண்டே ஒப்புக் கொண்டுள்ளார். அதனால் இந்தியாவை தீவிரவாத நாடாக அறிவிக்க வேண்டும்.

இவ்வாறுதெரிவித்துள்ளார் ஜமாத்-உத்- தவா தீவிரவாத அமைப்பின் தலைவரான ஹபீஸ் சையத். டுவிட்டர் மூலம் கருத் துத் தெரிவிக்கையிலேயே ஹபீஸ் இவ்வாறு தெரிவித் துள்ளார்.

டுவிட்டரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

''பாகிஸ்தானில் நடைபெறும் குண்டுவெடிப்பு தாக்குதலுக்கு இந்தியா தான் காரணம். மும்பைத் தாக்குதலில் தங்களைத் தொடர்பு படுத்தி இந்தியா பிரசாரம் செய்கிறது. எனினும் மும்பை தாக்குதலில் எம்மைக் குற்றவாளிகள் என சுட்டிக்காட்டிய இந்தியாவால் 5 ஆண்டுகளாகியும் அதை நிரூபிக்க முடியவில்லை.

பாரதிய ஜனதா கட்சியும், ஆர்.எஸ்.எஸ் அமைப்பும் இந்து தீவிரவாதத்தை பரப்புவதாக இந்திய உள்துறை அமைச்சர் சுஷில் குமார் ஷிண்டே ஒப்புக் கொண்டுள்ளார். எனவே இந்தியாவை உலக நாடுகள் தீவிரவாத நாடாக அறிவிக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

பாகிஸ்தானில் செயல்படும் ஹபீஸ் சையத் மும்பை குண்டுவெடிப்பில் தேடப்படும் முக்கிய நபராவார்.

இதேவேளை, ஹபீஸ் சையத்தின் தலைக்கு ரூ.110 கோடி பரிசு தருவதாக அமெரிக்கா அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வங்கி விவரங்களை வழங்க சுவிஸ் அரசு இணக்கம்

எதிர்வரும் பெப்ரவரி மாதம் முதல், முறையான விளக்கங்களுடன் கோரப்படும் வங்கி வாடிக்கையாளர் குறித்த கணக்கு விவரங்களை வழங்குவதற்கு சுவிற்ஸர்லாந்து அரசு ஒப்புக் கொண்டுள்ளது.

இது தொடர்பாக உலக பொருளாதார பேரவை ஆண்டுக் கூட்டத்தில் பங்கேற்க வந்த, சுவிற்ஸர்லாந்து நாட்டின் உயரதிகாரி ஒருவர் தெரிவிக்கையில்-

வரி நிர்வாக உதவிச் சட்டம் புதிதாக நிறைவேற்றப் பட்டுள்ளது. எதிர்வரும் பெப்ரவரி மாதம் முதல், பல்வேறு தனி நபர்கள் அடங்கிய குழுவின், வங்கிக் கணக்கு மற்றும் இதர விவரங்களை அந்தந்த நாடுகளுக்கு வழங்க முடிவு செய்யப் பட்டுள்ளது - என்று கூறினார்.

### ஊழல் வழக்கை விசாரித்த அதிகாரியின் சாவு குறித்து

# நீதியான விசாரணை கோரி பாகிஸ்தானில் போராட்டம்

இஸ்லாமாபாத், ஜன.23

பாகிஸ்தான் பிரதமர் ராஜா பர்வேஸ் அஷ்ரப் மீதான ஊழல் குற்றச்சாட்டை விசாரித்த அதிகாரி மர்மமான முறையில் இறந்ததை அடுத்து, அரசுக்கு எதிராக ஊழலுக்கு எதிரான விசாரணை அமைப்பான தேசிய பொறுப்புடைமை அமைப்பு (என்.ஏ.பி.) அதிகாரிகள் போராட்டத்தில் இறங்கியுள்ளனர்.

பாகிஸ்தான் பிரதமர் ராஜா பர்வேஸ் அஷ்ரப், மத்திய மின்துறை அமைச்சராக இருந்த போது, மின்சாரத் திட்டங்களில் முறைகேடு செய்ததாகக் குற்றம்சாட்டப்பட்டது. இது குறித்து பிரதமர் அஷ்ரப் மற்றும் குற்றம்சாட்டப்பட்ட 20 பேர் மீது விசாரித்து அறிக்கை தாக்கல் செய்யும்படி என்.ஏ.பி.க்கு பாகிஸ்தான் உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது.

அதையடுத்து என்.ஏ.பி. உதவி இயக்குநர் கம்ரான் பைசல் தலைமையிலான குழு, விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பித்திருந்தது.

இந்தநிலையில், பைசல் கடந்த வெள்ளிக்கிழமை அரசு விடுதியில் தூக்குப் போட்ட நிலையில் மீட்கப் பட்டார். அவர் தற்கொலை செய்து கொண்டதாக பொலிஸார் வழக்குப் பதிவு செய்தனர். ஆனால், பைசல் உடலில் ஏராளமான காயங்கள் இருந்ததால் அவரது சாவில் சந்தேகம் நிலவுகிறது.

கம்ரான் பைசலின் சாவு குறித்து வெளிப்படையான விசாரணை நடத்த வேண்டும் எனக் கோரி, என்.ஏ.பி. அதிகாரிகள் போராட்டத்தில் குதித்துள்ளனர்.

# ஆப்கன் சிறைகளில் துஷ்பிரயோகங்கள்

## ஐக்கிய நாடுகள் சபை குற்றச்சாட்டு

ஜெனிவா, ஜன.23

ஆப்கன் சிறைச்சாலைகளில் பரந்தளவில் துஷ்பிரயோகங்கள் இடம்பெற்றுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

2011ஆம் ஆண்டிலும் இவ்வாறான அறிக்கைகள் தொடர்பாகப் பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டுள்ளபோதும், துஷ்பிரயோங்கள் தொடர்வதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சிறைச்சாலைகளில்தடுத்து வைக்கப்பட்டிருந்த முன்னூறுக்கும் அதிகமானவர்களை ஐக்கிய நாடுகள் சபையின் விசாரணையாளர்கள் நேர் காணல் செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தாம் தவறான முறையில் அல்லது துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்டதாக அவர்கள் கூறியுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை குறிப்பிட்டுள்ளது.

எனினும் இந்தக் குற்றச்சாட்டு மிகைப்படுத்தப்பட்ட ஒன்றென ஆப்கன் அரசு குறிப்பிட்டுள்ளது.

பாலியல் வன்முறை, தாக்குதல்கள் உள்ளிட்ட பதினான்கு வகையான சித்திரவதைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## பிரிட்டனில் கடும் பனி: 260 விமான சேவைகள் இரத்து

லண்டன், ஜன.23

பிரிட்டனில் கடுமையான பனிமூட்டம் காரணமாக 260 விமான சேவைகள் இரத்துச்செய்யப்பட்டுள்ளன.

பிரிட்டனில் கடந்த மூன்று நாள்களாக கடும் பனிப்பொழிவு காணப்படுகிறது. இரவு நேர வெப்பநிலை பூஜ்யம் டிகிரிக்கு குறைவாக உள்ளது.

அதன் காரணமாகப் போக்குவரத்துக் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. விமானங்கள் தரையிறங்குவதிலும் சிரமம் ஏற்பட்டுள்ளது. லண்டனில் ஹீத்ரு விமான நிலையத்தில் நேற்று 260 விமான சேவைகள் இரத்து செய்யப்பட்டன.

இதனால் உரிய இடங்களுக்கு செல்ல முடியாமல் ஆயிரக்கணக்கான பயணிகள் விமான நிலையத்தில் காத்திருக்கின்றனர்.

அதேபோல ஜேர்மனியிலும் பனிப்பொழிவு அதிகரித்துள்ளது. நேற்று முன்தினம் பிராங்பர்ட் விமான நிலையத்திலிருந்து புறப்பட வேண்டிய 292 விமான சேவைகள் இரத்துச் செய்யப்பட்டன.

எதிர்வரும் வாரங்களில் பனிப் பொழிவு அதிகரிக்கும் என்று வானிலை மையங்கள் தெரிவித்துள்ளன. அதனால் விமானசேவைகளைக் குறைக்க ஹீத்ரு விமான நிலைய அதிகாரிகள் திட்டமிட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

Singapore இல் வேலை வாய்ப்புடன் கூடிய Hotel Management பயிற்சி

Spot Admission

ஒரே வேலை நாளில் Offer Letter தரப்படும்.
28 நாட்களில் Student Pass Visa கிடைக்கும்.

Certificate Levelக்கு - ஒரு வருட வீசா.
Diploma Levelக்கு - 1 1/4 வருட வீசா.
HND Levalக்கு - 2 வருட வீசா.

HND Level முடித்தவர்களுக்கு Skill Pass உடன் நிரந்தர வேலை வாய்ப்பு செய்யும் வசதி.
Skill Pass கிடைத்த பின்பு PR கிடைக்கும் வாய்ப்பு.

Application Closing Date :- 31/01/2013

BRISTOL BUSINESS SCHOOL
5001 Beach Road
#04-03 Golden Mile Complex
Singapore 199588

Regional Manager
No :01, 2nd Lane,
Power House Road,
Jaffna.
T.P - 0212219787

தொடர்புகளுகு :- 0777751382 / 0773448706 / 0772521070

(C/5629) (6.7.2)

உதயன் விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com
0215671111

ஈஸ்வரன் போக்குவரத்து சேவை

இதுவரை காலமும் வெள்ளவத்தை வரை சேவையை நடத்திய எமது பயணிகள் போக்குவரத்து சேவை அனேக வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கு இணங்க தற்போது வெள்ளவத்தை, தெஹிவளை, கல்கிசை வரை சேவையை விஸ்தரித்துள்ளது என்பதனை வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

ஆசனப்பதிவுகளுக்கு

| யாழ்ப்பாணத்தில்....... | கொழும்பில்....... |
|---|---|
| ஈஸ்வரன் ரேடர்ஸ்<br>162, ஆஸ்பத்திரி வீதி,<br>யாழ்ப்பாணம்.<br>0212219331 | ஈஸ்வரன் ரேடிங் கோ<br>201. B. டாம் வீதி,<br>கொழும்பு - 12<br>0112433889, 0776136911 |
| 115, கஸ்தூரியார் வீதி,<br>யாழ்ப்பாணம்.<br>0212222813, 0773865439 | சென் திரேசா [illegible]<br>நிலையம்,<br>457, காலி வீதி, கொழும்பு-6 |

(C/5783) (6.7.2)

# மரண அறிவித்தல்

## வேலாயுதம் தர்மஞானசிங்கம்

(சிங்கர் ரயர்கடை உரிமையாளர்)



இணுவிலைப் பிறப்பிடமாகவும், முல்லை வீதி, பரந்தனை வதிவிடமாகவும் கொண்ட வேலாயுதம் தர்மஞானசிங்கம் நேற்றுமுன்தினம் (21.01.2013) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் பூபதியின் அன்புக் கணவரும் முரளிதரன் (கனடா), ஜீவாகரன் (லண்டன்), பிறேமலதா (கனடா), தர்சினி (ஆசிரியை, நீர் கொழும்பு விஜயரட்ணம் இந்து மகாவித்தியாலயம்), குலசீலன் (சுவையருவி- மல்லாகம்), அஜந்தா (ஆசிரியை, யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), பரந்தாமன்(ரயர்கடை), இராஜகுமார் (தமிழினி பந்தல் சேவை),சாந்தி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.01.2013) புதன்கிழமை பரந்தனில் உள்ள அவரது இல்லத்தில் நண்பகல் 12 மணியளவில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

5ஆம் ஒழுங்கை,
முல்லை வீதி, பரந்தன்.

தகவல்:
குடும்பத்தினர்.

(26303)(5-6-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர் மனிதனை உருவாக்கும் குணங்கள்

(03)

மகிழ்வு, நிறைவு, நிம்மதி, நகைச்சுவை, விளையாட்டு, நிறைவு தரும் உணர்வுகளின் உச்சநிலை இவை பற்றி நாம் அறிந்து கொள்ள வேண்டும். இன்று இதை நாம் புறக்கணிக்கிறோம். மனிதனிடம் காணும் அன்பு, நட்பு, தாராளமனப்பான்மை, தியாகம் போன்ற குணங்கள் மனிதனை மாமனிதனாக உயர்த்துகின்றன.

"நாம் சித்த பேதம் கொண்டவர்களையும், திருடர்களையும், விரக்தியாளர்களையும் மட்டும் ஆராய்வோமானால், மனித வளர்ச்சிக்குப் பதில் மனித சமுதாயத்தைத் தேக்கத்திற்கு அழைத்துச் சென்றவர்களாவோம். எமது மனவியல் ஒரு முடக்கப்பட்ட மனத்தின் விளைவுகளை விளக்குவதாக அமையுமே தவிர, ஓர் உயர்தரமான சர்வ வல்லமை படைத்த ஆரோக்கியமான மனத்தை விளக்கி, மனித சமுதாயத்துக்கு உதவுவதாகாது" என்று கூறினார்.

இப்படி மனவியல் சிந்தனைகளில் மீண்டும் ஒரு திருப்பு முனையை அவர் உருவாக்கினார்.

மனிதனது நடை, உடை, பாவனைகளைப் பற்றிப் படித்து ஆராயும் மனவியல் பேராசிரியர்கள், சாதாரண மனிதர்களையே எடுத்துக் கொண்டார்கள். அதாவது மனித சமுதாயத்தின் சராசரி மனிதர்களை பிராய்டின் வழிவந்தவர்கள் மனிதனது குறைகள், பயம், துக்கம், விரக்தி, வியாகுலம் போன்ற உணர்வுகளில் கவனம் செலுத்தினார்கள். வாட்சனின் வழி வந்தவர்கள் சராசரி மனிதனின் சராசரி குணங்களை ஆராய்ந்தார்கள். புகழ்பெற்ற கின்சேயின் உடலுறவுகளைப் பற்றிய 'சர்வே'யும் இதை ஒட்டி வெளிவந்த ஆராய்ச்சிதான். "இதுதான் மனிதனது சராசரி வயது; இதுதான் மனிதனது சராசரி குணம்" என்று கண்டுபிடித்து அதற்கு ஏற்ப மனிதன் நடந்துகொண்டால் போதும் என்ற நிறைவை ஏற்படுத்தினார்கள்.

மாஸ்லோவோ, மனிதன் எப்படி இருக்கிறான் என்று பார்க்காமல், மனிதன் எப்படி எல்லாம் இருக்க முடியும் என்பதை மாமனிதர்களை ஆராய்ந்து, கண்டறிந்தார்.

நடை, உடை, பாவனைகளை ஆராயும் வாட்சன் வழி வந்தவர்கள் மிருகங்களைப் பொதுவாகத் தங்கள் ஆராய்ச்சிக்கு எடுத்துக்கொண்டார்கள். மிருகங்களிடையே நிகழும் போட்டியும், அடிதடியும், ஒன்றை ஒன்று கொல்லும் நிகழ்ச்சிகளும் அவர்களது ஆராய்ச்சிக்கு அடிப்படையாக இருந்தன. ஏனெனில் டார்வின் சித்தாந்தப்படி, "எது தகுதி உள்ளதோ, அது தான் இவ்வுலகில் ஜீவிக்கிறது". இந்தக் கொள்கையின் படி, மிருகங்களின் போட்டி மனப்பான்மைதான் அவற்றின் வெற்றிக்குக் காரணமாக இருக்கிறதேயொழிய அவற்றிடையே நிலவிய அன்போ ஒத்துழைப்போ அல்ல.

விஸ்கான்சினில் மாஸ்லோ குரங்குகளை வைத்து நடத்திய ஆராய்ச்சிகளில், குரங்குகளிடம் நிலவிய சுய நலம், ஆக்கிரமிப்பு போன்ற குணங்களைவிட அவற்றினிடையே அன்பை அதிகம் கண்டார். ஒத்துழைப்பையும் கண்டார்.

பின்னர் மாஸ்லோ மனிதர்களையும் தமது ஆராய்ச்சிக்கு எடுத்துக்கொண்டார். அதிலும் உன்னதமான இயல்புகளைக் கொண்ட மாமனிதர்களை ஆராய்ச்சிக்கு எடுத்துக்கொண்டார். சராசரி மனிதர்களுக்குப் பதில், மனித இனத்தின் மேல்மட்ட உயர் மக்களின் அற்புத குணங்களை ஆராய்ந்தார். மனிதனால் எவ்வளவு முடியும், மனித சக்தி எவ்வளவு தூரம் செயற்படும், எவ்வளவு தூரம் செல்ல அது அவனைத் தூண்டுகிறது. ஏன் அவன் அதற்காகத் தன் உயிரைக்கூடப் பணயம் வைக்கிறான், என்றெல்லாம் ஆராய்ந்து மூலகாரணங்களைக் கண்டறிந்தார்.

அவைதாம் இன்று மனவியல் பாடங்களிலும், தொழில் நிர்வாகம் போதிக்குமிடங்களிலும், சுயவளர்ச்சியில் ஆர்வமுள்ள எல்லா மக்களிடையேயும் பேசப்படும் 'மனிதத் தேவைகள்' என்ற மாஸ்லோவின் விளக்கம்.

எப்படி மனித தேவைகள் படிப்படியாக உயர்கின்றன என்பதை வெகு அழகாக, துல்லியமாக விளக்குகிறார். அவை ஐந்து வகைப்படும்.

முதலாவதாக மனிதன் அடிப்படைத் தேவைகளில் கவனம் செலுத்துகிறான். உணவு, உடை, குடியிருக்க இடம் என உயிர் வாழ்வதற்குத் தேவையான அடிப்படைகள்.

இரண்டாவதாக மனிதன் பாதுகாப்பை நாடுகிறான். மிருகங்களிடமிருந்து பாதுகாப்பு, எதிரிகளிடமிருந்து பாதுகாப்பு, இடி, மின்னல், மழை போன்றவற்றிலிருந்தும் பயங்களிலிருந்தும் பாதுகாப்பை நாடுகிறான்.

மூன்றாவதாக மனிதன் சமுதாயத்தின் ஒரு பகுதியாகப் பிறரால் தான் ஏற்றுக்கொள்ளப்படுவதை பிறரால் அங்கீகரிக்கப்படுவதை விரும்புகிறான். பத்திரிகையாளன் நான், நாடாளுமன்ற உறுப்பினன் நான், என்று சமுதாயத்தின் ஒரு பகுதியாகத் திகழ்வதில் நிறைவு காண்கிறான். மனிதன் முயற்சி எடுத்துச் சங்கங்கள் அமைப்பதற்கெல்லாம் இதுதான் காரணம்.

நான்காவதாக, தனது திறமைகளுக்காகச் சமுதாயத்தால் தான் ஏற்றுக்கொள்ளப்படுவதை, பாராட்டப்படுவதை அவன் மனம் அவாவுகிறது. அதற்காக ஏங்கவே செய்கிறது. மனித மனத்தின் அடிப்படை இயல்பாக இது இருக்கிறது.

ஐந்தாவதாக மனிதன் தன் முழுத் திறமைகளையும் அறிவையும் வெளிக்கொணர்ந்து, தான் மேற்கொண்ட இலட்சியத்தை அடைந்து அதில் நிறைவு காண்கிறான். ஒரு ஜீவனின் பூரணத்துவம் எதுவோ, எவ்வளவு தூரம் அதை அடைய முடியுமோ அவ்வளவையும் அடைந்து நிறைவு காணும் மனம் அடிப்படையிலே இருந்து, மனிதனை இயக்குகிறது.

இவை மாஸ்லோவின் ஆராய்ச்சி முடிவுகள். சிந்தித்துப் பார்க்க இங்கே நிறைய விடயங்கள் இருக்கின்றன. இவைதாம் கடைசி உண்மைகள் என்று நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டியதில்லை. ஆனால் ஒவ்வொன்றையும் எடுத்துக்கொண்டு, உங்கள் வாழ்க்கை அனுபவங்களுடன் ஒப்புநோக்கி ஆழ்ந்து சிந்தித்துப் பாருங்கள். ஆராய்ந்து பாருங்கள்.

**எம்.எஸ்.உதயமூர்த்தி** (தொடரும்)

# பௌர்ணமி தினம் இந்துக்களுக்கு மட்டுமல்ல பௌத்தர்களுக்கும் முக்கியத்துவம் மிக்கது

## இந்நாளில் பெற்றோர்களை நினைவு கூருவது சிறப்பானது

வலி.வடக்கு, ஜன.23

பௌர்ணமி தினத்தில் இந்து மக்கள் மட்டுமன்றி பௌத்த மக்களும் கூட முக்கியத்துவம் கொடுத்து சமய வழிபாடுகளில் ஈடுபடுகின்றார்கள்.

இந்து மக்களைப் பொறுத்த வரையில் பௌர்ணமி தினத்தில் பெற்றோர்களை நினைவு கூருவதுடன் கலாசார நிகழ்வுகளிலும் ஈடுபடுவதும் முக்கியமானது.

இவ்வாறு வடமாகாண கல்வி அமைச்சின் பிரதிச் செயலாளர் ப.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

வடமாகாண கல்வித் திணைக்களத்தால் மாதாந்தம் மேற்கொள்ளப்படும் நிறை திங்கள் நிறை நிலா பெருவிழா மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் அண்மையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே விக்னேஸ்வரன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

மத கலாசாரம் மிக்க இந்த நாளில் கலை நிகழ்வுகளும் முக்கியம் பெறுகின்றன. 1995 ஆம் ஆண்டுக்கு முன்னர் கலை நிகழ்வுகள் மிகவும் எழுச்சிகரமாக கல்வித் திணைக்களத்தினால் கொண்டாடப்பட்டன.

இடைக் காலத்தில் இந்த நிகழ்வுகள் தடைப்பட்ட போதிலும், தற்போது மீண்டும் கலாசார நிகழ்வுகள் புத்துயிர் பெற்றுள்ளன.


வடமாகாணத்திற்கு உட்பட்ட 12 கல்வி வலயங்களிலும் சுழற்சி முறையில் பௌர்ணமி தின நிகழ்வுகள், பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்களின் கலை நிகழ்வுகளுடன் இடம்பெறுகின்றன.

இந்த வேளையில் பல கலை நிகழ்வுகளும் மேடையேற்றப்பட வேண்டும், கலைஞர்களின் ஆற்றல்கள், திறன்களுக்கு உரிய சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும்.

இளைய தலைமுறையினர் கலைத்துறையில் உரிய இடத்தைப் பெற்று, கலைத்துறையை வளர்க்கக் கூடிய சந்தர்ப்பமாக அமைகின்றது.

கலை நிகழ்வுகளை வலய மட்டத்தில் நடத்துவதுடன் மட்டும் நின்றுவிடாது பாடசாலை, கோட்ட மட்டங்களிலும் கூட நடத்த முன்வரவேண்டும்.

பாடசாலை மட்டத்தில் கலைத்துறையை மேம்படுத்தும் முகமாக பல கலைத்துறை ஆசிரியர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள். இந்த ஆசிரியர்கள் மாணவர்கள் மத்தியில் கலைத்துறையை முழுமையாக வளர்த்தெடுக்க வேண்டிய பொறுப்பும், கடமையும் உடையவர்களாவர்.- என்றார். (எ-86)



புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த யாழ்.மத்திய கல்லூரியின் மாணவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு கல்லூரி அதிபர் எஸ். கே.எழில்வேந்தன் தலைமையில் கல்லூரியின் தம்பர் மண்டபத்தில் நடைபெற்றது. இதன்போது கௌரவிக்கப்பட்ட மாணவர்களுடன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா மற்றும் ஆசிரியர்களும் காணப்படுகின்றனர். (ம)

# அபிவிருத்திச் சபையின் நிர்வாகிகள் தெரிவு

காரைநகர்,ஜன.23

காரைநகர் அபிவிருத்திச் சபையின் புதிய தலைவராக தி.மகேசன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

காரைநகர் சுப்பிரமணிய வித்தியாசாலை மண்டபத்தில் இடம்பெற்ற சபையின் பொதுக் கூட்டத்தில் புதிய நிர்வாகசபை தெரிவு செய்யப்பட்டுள்ளது.

சபையின் செயலாளராக சி.திருப்புகழூர் சிங்கமும் உப தலைவராக வே.முருகமூர்த்தியும் உப செயலாளராக வே.சபாலிங்கமும் பொருளாளராக ந.பாரதியும் தெரிவு செய்யப்பட்டனர்.

மருத்துவர் சு.நடராசா, க.நேத்திரானந்தன், சிவஸ்ரீ தெ.சோமசுந்தரக்குருக்கள், நா. பாலகிருஷ்ணன், இ.சண்முகராசா, சி.ஜெயராமன், வி.வைகுந்தவாசன், கை.நாகராசா, யோ.கேதீஸ்வரன், ச.சிவரூபன் ஆகிய பத்து பேரும் நிர்வாக சபை உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (ம-250)

# கூட்டுறவு சங்கத்தின் வளர்ச்சிக்கு மூலவேராக திகழ்பவர்கள் கிளைகளின் முகாமையாளர்களே

## யாழ் மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் தெரிவிப்பு

தென்மராட்சி,ஜன.23

ஒரு மரத்தின் வளர்ச்சிக்கு மூலவேர் எவ்வகையில் செயற்படுகிறதோ அதே போன்று கூட்டுறவுச் சங்கத்தின் வளர்ச்சிக்கு மூலவேராக திகழ்பவர்கள் சங்க கிளைகளின் முகாமையாளர்களே.

முகாமையாளர்களின் அர்ப்பணிப்பான சேவையினால் மக்கள் பயன் பெறுவதுடன் சங்கமும் திறம்பட இயங்குமென்பதில் ஐயமில்லை. கிளை முகாமையாளர்களின் விடாமுயற்சி அர்ப்பணிப்பான இந்தச் சேவை ஆலயங்களின் கருவறையில் இருக்கும் விக்கிரகங்களின் செயற்பாட்டுக்கு ஒப்பானது. இவ்வாறு தெரிவித்தார் யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வீ.கே. அருந்தவநாதன்.

சாவகச்சேரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களின் ஒன்றுகூடல் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் உரையாற்றும்போதே அருந்தவநாதன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

முன்னைய காலங்களில் கப்பலில் வரும் பொருள்களை நம்பி மக்கள் கூட்டுறவுச் சங்கங்களை நாடினார்கள். இன்றைய கால கட்டம் அப்படி அல்ல. கொழும்பிலிருந்து கொண்டு வரப்படும் பொருள்கள் வாகனங்கள் மூலம் வீடு வீடாகச் கொண்டு சென்று விற்பனை செய்து வருவதைக் காண்கின்றோம்.

இவ்வாறான நடமாடும் வியாபாரங்களிடையே கிளைக்கு வழங்கப்பட்ட நுகர்ச்சிப் பொருள்களை மக்களின் தேவைக்கேற்ப வழங்கி அவர்களின் நன்மதிப்பைப் பெற்று தொய்வு ஏற்படாதபடி வியாபாரத்தை மேம்படுத்த வேண்டும்.

கடந்த காலங்களில் ஏற்பட்ட இடப்பெயர்வுகள், இழப்புகளால் பல சங்கங்கள் நெருக்கடிகளுக்கு உள்ளாகின. அந்த இழப்புகளின் மத்தியிலும் சங்கங்களின் கிளை முகாமையாளர்களின் அயராத பணியினால் பல சங்கங்கள் பெரு வளர்ச்சி கண்டுள்ளன. அந்த வகையில் பின்தங்கிய நிலையில் காணப்பட்ட சாவகச்சேரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் தனது கடந்த வருடச் செயற்பாட்டால் கூட்டுறவு திணைக்களத்துக்கு நம்பிக்கையூட்டும் ஸ்திரமான ஓர் இடத்தைப் பெற்றது. இந்த நிலைக்கு இங்கு கடமையாற்றும் ஒவ்வொரு பணியாளர்களின் பொறுப்பான செயற்பாடே காரணமாகும்.

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களால் நடத்தப்படும் எரிபொருள் நிலையங்களில் சாவகச்சேரி எரிபொருள் நிலையம் முதலிடத்தில் காணப்படுகிறது. அங்கு பணியாற்றும் சகல பணியாளர்களும் அர்ப்பணிப்புடன் சேவை செய்வது புலனாகிறது.

இதேபோன்று சங்கத்தின் 19 ஆவது கிளைகளிலும் பணியாற்றுவோர் அர்ப்பணிப்புடன் இயங்கினால் மிக குறுகிய காலத்தில் முதல் மூன்று இடங்களுக்குள் சாவகச்சேரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் வந்து விடும். வர்த்தக நிலையங்களைப் பொறுத்தவரையில் இலாப நட்டம் சகஜம். அதிலும் தொடர்ச்சியாக நட்டம் ஏற்படுவது ஏற்றுக்கொள்ள முடியாது. சங்கத்தை இலாபகரமாக இயக்க கிளை முகாமையாளர்களின் அர்ப்பணிப்பான பங்களிப்பு அவசியம்.- என்றார். (எ-9)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நாட்டைக் காட்டிக் கொடுப்பவர்களல்லர் நாங்கள். நாட்டின் தென் பகுதியில் பிறந்தோர் நாட்டுக்காக உயிரையும் கொடுக்கத் தக்கவர்கள். ஆதலால் அரசின் மனித உரிமை மீறல்கள் குறித்து வெளிநாடுகளுக்கு மட்டுமல்ல உலகின் எந்தவொரு மூலைக்கும் எடுத்துச் செல்ல நாம் தயங்க மாட்டோம்.

# 2013 மார்ச் மாதத்துக் கண்டத்திலிருந்து தப்பிப் பிழைக்குமா நாடு?

மூலம்: மவ்பிம-உப்புல்யோசேப் பெர்னான்டோ.
■ தமிழில்: வீ.எஸ்.ரி.

**ஜே.ஏ.ஈ.அமரதுங்க :-** மேற்குலக நாடுகள் தரப்புக்கு நாட்டைத் தாரை வார்த்துக் கொடுப்பதற்கே நீங்கள் ஒளிந்து மறைந்து ஜெனிவாவுக்குச் செல்கிறீர்கள்.

**மஹிந்த ராஜபக்ஷ:-** ஒளிந்து மறைந்தல்ல, பகிரங்கமாகவே நாம் செல்கிறோம். கௌரவ பிரதிச் சபாநாயகரவர்களே ! எமது நாட்டுப் பிரச்சினைகளை வெளிநாடுகளுக்கு எடுத்துச் செல்வதாக இவர்கள் குற்றம் சாட்டுகின்றனர். இவர்கள் வெளிநாடுகளிடம் உதவி கோரிச் செல்வது, வெளிநாடுகளிடம்கையேந்துவதெல்லாம் இவர்களைப் பொறுத்தவரை நியாயமானது. வெளிநாடுகளின் விருப்புக்கு ஏற்ற விதத்தில் நாட்டு மக்களுக்கான நிவாரண உதவிகளை நிறுத்திக் கொண்டுள்ளார்கள். உலக வங்கியின் ஆலோசனைக்கு அமைய மக்கள் துறைகளை தனியார் மயப்படுத்தியுள்ளனர். சகல பொதுமக்கள் துறைகளை, கூட்டுத்தாபனங்களை தனியார் மயப்படுத்துவதாக உறுதியளித்துள்ளார்கள். கசினோ சூதாட்டத்தை அனுமதிக்க முடிவு செய்தால் கூட அரச தரப்பு உறுப்பினர்கள் அதற்கும் கூட ஆதரவு தெரிவிப்பார்கள். இத்தகைய செயற்பாடுகளை நிறுத்துமாறு அரசுக்கு அழுத்தம் கொடுக்க அரச தரப்பு உறுப்பினர்களால் இயலுமா? நாட்டு மக்களது மனித உரிமைகளை முறைப்படி பேணுமாறு அரசைக் கோருங்கள் என்று தான் நாம் உலக நாடுகளைக் கேட்கிறோம். அத்தகைய உதவிகளை வழங்கும் போது இப்படியான நிபந்தனையொன்றை இலங்கை அரசுக்கு விதிக்குமாறு தான் நாம் கோருகிறோம்.

**ஜே.ஏ.ஈ.அமரதுங்க :-** அது நாட்டைக் காட்டிக் கொடுப்பதாக அமையுமல்லவா?

**மஹிந்த ராஜபக்ஷ:-** உங்களைப் போன்று நாட்டைக் காட்டிக் கொடுப்பவர்களல்ல நாங்கள். நாட்டின் தென் பகுதியில் பிறந்தோர் நாட்டுக்காக உயிரையும் கொடுக்கத் தக்கவர்கள். ஆதலால் அரசின் மனித உரிமை மீறல்கள் குறித்து வெளிநாடுகளுக்கு மட்டுமல்ல உலகின் எந்தவொரு மூலைக்கும் எடுத்துச் செல்ல நாம் தயங்க மாட்டோம். அதற்கான உரிமை எமக்குண்டு. இன்று மட்டுமல்ல எதிர்காலத்திலும் கூட நாம் அவ்விதம் செயற்படப் பின்னிற்க மாட்டோம் என்பதை அரசும் அமைச்சர்களும் மனதில் கொள்ளுங்கள்.

### அன்று மனிதஉரிமை மீறல்களை எதிர்த்துக் குரல் கொடுத்த மஹிந்தர்.

1991 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 25 ஆம் திகதியன்று நாடாளுமன்றத்தில் வைத்து இன்றைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மேற்கண்ட கருத்தை வெளியிட்டதாக நாடாளுமன்றப் பதிவேடான ஹன்சாட்டில் பதிவாகியுள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நாடாளுமன்றத்தின் எதிர்க்கட்சி உறுப்பினராக இருந்த அந்த வேளையில், ஜனாதிபதி பிரேமதாஸ தலைமையிலான அரசின் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக ஐ.நா.மனித உரிமைகள் பேரவைக்கும், சர்வதேச நாணய நிதியத்துக்கும் முறையிடத் தாம் முயல்வதை நியாயப்படுத்தி ஆற்றிய உரையின் ஒரு பகுதியே இதுவாகும்.

மஹிந்த ராஜபக்ஷ மட்டுமென்றல்லாது இலங்கை வரலாற்றில் இந்த நாட்டை ஆண்ட அரசர்களது நீதி நியாயமற்ற அரசாட்சியில் பாதிப்புக்கு உள்ளானவர்கள் கூட அரசர்களது நியாயமற்ற செயற்பாடுகளை மேற்கு நாடுகளின் ஆட்சியாளர்களுக்கு எடுத்துக்கூறி உதவி கோருவதைத் தவறாக எண்ணியதில்லை.

இதற்கு ஸ்ரீவிக்கிரம ராஜசிங்க மன்னனது ஆட்சிக் காலத்தில் அவன் கீழ் பணியாற்றிய எகலபொல என்பவனது கதை பொருத்தமானதொரு உதாரணமாகும்.

மஹிந்தராஜபக்ஷவோ, பிரேமதாஸ அரசின் நியாயமற்ற செயற்பாடுகளால் மனித உரிமைகள் பாதிக்கப்பட்ட இந்த நாட்டு மக்களுக்கு நியாயம் பெற்றுத் தருமாறு வெளிநாடுகளிடம் கோரிக்கை முன் வைத்தார். இலங்கைக்கு உதவி வழங்கும் வேளை , நாட்டில் மனித உரிமைகள் முறைப்படி பேணப்பட வேண்டுமென்ற நிபந்தனை விதிக்குமாறு உலக நாடுகளிடம் கேட்டுக் கொள்வதே மஹிந்தவின் முயற்சியாக அமைந்தது. ஆனால் ஸ்ரீ விக்கிரம ராஜசிங்க மன்னனின் கொடுமைக்கு ஆளான எகலபொல அன்றைய 'உடரட்டை' இராச்சியத்தைக் கைப்பற்ற ஆங்கிலேயர்களுடன் இணைந்து அவர்களுக்கு உதவிச் செயற்பட்டதாக சிங்கள வரலாற்று நூலான மகாவம்சத்தில் பதிவாகியுள்ளது.

### உடரட்ட ஒப்பந்தத்திற்கு வழிவகுத்த ராஜசிங்க மன்னன்

இலங்கையை ஆட்சி செய்த சிங்கள மன்னர்கள் வரிசையில் கடைசி அரசனான ஸ்ரீவிக்கிரம ராஜசிங்கனது ஆட்சிக்காலத்தில் எகலபொல என்பவன் பிரதம அதிகாரியாகவும் , மொல்லிகொட என்பவன் இரண்டாவது அதிகாரியாகவும் செயற்பட்ட போதிலும் இவ்விருவரும் ஒருவருக்கொருவர் எதிராகவே செயற்பட்டனர். மன்னனைப் பதவியிலிருந்து அகற்றி ஆட்சியை சிங்கள மக்கள் வசம் கையளிக்கும் நோக்குடன் செயற்பட்ட எகலபொல, தன்னை ஆட்சியிலிருந்து கவிழ்க்க சிங்கள மக்களைத் தூண்டி வருவதாகத் தெரிந்து கொண்ட ராஜசிங்க மன்னன், எகலபொலவிடம் அது குறித்து விசாரணை செய்து அவனது நோக்கத்தை உறுதிப்படுத்திக் கொண்டாலும், உடனடியாக எகலபொலவைத் தண்டிக்காது தனக்கு ஆதரவான பொதுமக்கள் வாழும் பகுதிகளுக்கும் எகலபொலவுக்கு ஆதரவான பொது மக்கள் வாழும் பகுதிகளுக்கும் அவன் செல்வதைத் தடை செய்தமை உட்பட பல கட்டுப்பாடுகளை விதித்தான். தமது இரண்டாவது திருமணத்தின் போது எகலபொல நடந்து கொண்ட விதத்தால் அதிருப்தியுற்ற ராஜசிங்க மன்னன், எகலபொலவை சப்ரகமுவ பகுதிக்கு இடமாற்றம் செய்தான். அங்கு சென்றும் தமக்கு எதிராக ராஜத்துரோக நடவடிக்கைகளில் எகலபொல ஈடுபடுவதாகக் கேள்வியுற்ற இராஜசிங்க மன்னன் அவனைத் தன்னை வந்து சந்திக்குமாறு உத்தரவிட்ட போதிலும் எகலபொல , ராஜசிங்க மன்னனின் உத்தரவைப் புறக்கணித்து மன்னனைச் சென்று சந்தித்தானில்லை. இதனால் ஆத்திரமடைந்த ராஜசிங்க மன்னன் மொல்லிகொடவை பிரதம அதிகாரியாக்கி , சப்ரகமுவ பிரதேசத்து அரச பிரதானியாகவும் நியமித்து, எகலபொலவைக் கைது செய்து வருமாறு மொல்லிகொடவுக்கு உத்தரவிட்டான். மொல்லிகொட தன்னைக் கைது செய்யப் படையுடன் வருவதை அறிந்த எகலபொல ஒப்புக்கு அரசனின் படையினருக்கு எதிர்ப்புக்காட்டிவிட்டு , பின்னர் தனது ஆதரவாளர்கள் சிலருடன் கொழும்புக்குத் தப்பிச் சென்றுவிட்டான். 1814 ஆம் ஆண்டின் [illegible] இது.

தனக்கெதிரான கிளர்ச்சியை அடக்கி ஒடுக்கியதற்காக மொல்லிகொடவுக்கு பல பரிசில்களை வழங்கிய ராஜசிங்க மன்னன் , கைது செய்யப்பட்ட கிளர்ச்சியாளர்களை விசாரணை செய்து தண்டனை வழங்கவென மொல்லிகொட தலைமையிலான மூவரடங்கிய குழுவொன்றையும் நியமித்தான். எகலபொலவுடன் இணைந்து அரசனுக்கு எதிராகக் கிளர்ச்சியில் ஈடுபட்ட கேரள நாட்டவர்கள் உட்பட்ட பெருந்தொகையான சிங்களவர்களும் குற்றவாளிகளாகக் காணப்பட்டு ராஜசிங்க மன்னனால் மரண தண்டனைக்கு உட்படுத்தப்பட்டனர்.

இதனையடுத்து ராஜசிங்க மன்னன் கொடுங்கோலனாக மாறினான். தனக்கு எதிராகச் செயற்படுவதாகத் தான் சந்தேகிக்கும் அனைவரையும் கைது செய்து படுகொலை செய்ய ஆரம்பித்தான்.

தப்பிச் சென்றுவிட்ட எகலபொலவின் உறவினர்கள் அனைவரையும் ராஜசிங்க மன்னன் பணயக் கைதிகளாக்கிக் கொண்டான். குற்றமிழைத்த ஒருவன் தப்பிச் சென்றுவிட்டால், அவனது குடும்பத்தினரையும் உறவினர்களையும் பணயக் கைதிகளாகப் பிடித்து வைத்து அவர்களுக்குத் தண்டனை வழங்குவது அந்தக் காலத்து வழக்கமொன்றாக இருந்து வந்தது. தனது குற்றத்துக்கு எதிரான விசாரணைக்குத் தோற்றி விளக்கமளிப்பதற்கு எகலபொலவுக்குச் சந்தர்ப்பம் வழங்குவதற்காக தம்மால் பணயக் கைதிகளாகப் பிடிக்கப்பட்ட எகலபொலவின் குடும்பத்தவர் மற்றும் உறவினர்களுக்குத் தண்டனை வழங்குவதை ராஜசிங்க மன்னன் பிற்போட்டு வந்தான். ஆனால் எகலபொலவோ தனக்கெதிரான விசாரணைக்கு சமுகமளிப்பதற்குப் பதிலாக ஆங்கிலேயர்களுடன் இணைந்து தனக்கெதிராகப் போர் தொடுக்கத் தயாராகி வருவதாக அறிந்து கொண்ட ராஜசிங்க மன்னன், கடைசியில் தான் பணயக் கைதிகளாகப் பிடித்து வைத்திருந்த எகலபொலவின் குடும்பத்தவர் மற்றும் உறவினர்களுக்குத் தண்டனை வழங்கத் தீர்மானித்தான். அவனது ஆணைப்படி எகலபொலவின் மனைவி மற்றும் பிள்ளைகளும் எகலபொலவுக்கு மிக நெருக்கமான உறவினர்களும் ராஜசிங்க மன்னன் முன்னிலையில் நிறுத்தப்பட்டனர். அவர்களில் ஆண்களது தலைகளை வெட்டி மரண தண்டனையை நிறைவேற்றுமாறும், பெண்களை நீரில் அமிழ்த்திச் சாகடிக்குமாறும் ராஜசிங்க மன்னன் தனது படையினருக்கு ஆணை பிறப்பித்தான்.

கொலையாளிகள் தன்னை நோக்கி வருவதைக் கண்ட பதினொரு வயதேயான எகலபொலவின் மூத்த மகன் அச்சமுற்று தாயைக் கட்டிப்பிடித்துக்கொண்டான்.

வீர மங்கையான எகலபொலவின் மனைவியோ தமது பிள்ளைகளைப் பார்த்து "பிள்ளைகளே பயப்படாதீர்கள். நாம் மரண தண்டனைக்கு உள்ளாகியுள்ளோம். நாம் மன்னனின் இரத்த தாகத்தைத் தணிப்பதனால் உங்களது தந்தைக்கு நன்மை விளையட்டும் எனப் பிரார்த்தித்துக் கொள்ளுங்கள்" எனத் தனது பிள்ளைளுக்கு மனத் தைரியமூட்டினாள். அது மட்டுமன்றி மன்னனை நோக்கி ' தவறொன்றைத் தெரிந்து கொள்ள நேரும் போது, தவறிழைத்தோரைக் கொன்றொழிக்காமல் , அவர்களை உங்கள் வசப்படுத்தி நாட்டை அரசாள உங்களால் இயலாது போகுமானால், நாட்டை மூன்று ஐரோப்பிய இனத்தவர்களில் ஒரு இனத்தவர்களுக்குத் தாரை வார்த்துக் கொடுக்கக் கடவீர்கள்.' என ஆவேசத்துடன் கூறினாள். இதைக் கேட்ட ராஜசிங்க மன்னன் கோபாவேசத்துடன் எகலப்பொலவின் குடும்பத்தவர்களது மரண தண்டனையை உடனடியாக நிறைவேற்ற உத்தரவிட்டான். மன்னனின் கட்டளைக்கிணங்க எகலபொலவின் ஆண் பிள்ளைகளை வாளால் வெட்டிக் கொலை செய்த வீரர்கள் எகலபொலவின் மனைவியான குமாரிஹாமி உட்பட அந்தக் குடும்பத்துப் பெண்களை போகம்பரை வாவியில் நீரில் அமிழ்த்திக் கொலை செய்தனர்.

நேரில் கண்டவர்களை மட்டுமன்றி, இந்த மனிதப் படுகொலைகள் குறித்துக் கேள்விப்பட்டவர்களையும் ஒரு கணம் நடுக்கமுற வைத்த இந்த மனிதாபிமானமற்ற படுகொலைகளால் கண்டிப்பிரதேசம் முழுவதுமே அவ்வேளை சோகத்தில் ஆழ்ந்தது.







(13 ஆம் பக்கம் பார்க்க )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழிந்து அழிந்து மீண்டு வரும் பூமி



■ வ.அற்புதன்

இந்த உலகம் உருவாகி சுமார் 454 கோடி ஆண்டுகள் ஆகின்றன. சூரியனுக்கும் இதே வயதுதான். இந்தக் கோளில் மட்டும்தான் உயிர்கள் வாழ்வதற்கான சூழல் உள்ளது. இங்கே ஒட்சிஜன் சுவாசிக்காத உயிரினங்களும் உண்டு. அதே போல் கொதிக்கும் நீரிலும், கரிக்கும் உப்பிலும், உறையும் பனியிலும் வாழும் உயிரினங்களும் இருக்கின்றன. நமது மனித இனம் வாழ்வதற்காகத்தான் இந்த உலகம் உருவானதா..? இல்லவே இல்லை. நாம் இந்த பூமியில் வழிப் போக்கர்கள் தான். ஆனாலும் கூட, நாம்தான் இந்த புவியின் இயற்கையை ஆட்டிப் படைக்கிறோம்.

**புவியின் வெள்ளைத் தொப்பி!**

பூமியின் இரு துருவங்களும் ஒரு பனிக் குல்லாவை மாட்டிக் கொண்டு திரிகின்றன. ஆனால் இதன் உள்ளே, மையப் பகுதி இரும்பு நிக்கல் கலந்த குழம்பினால் கொதித்துக் கொண்டு இருக்கிறது. அதனால் பூமிக்கு காந்தப்புலனும் உள்ளது. பூமியின் வட துருவம் ஆர்க்டிக் என்றும், தென் துருவம் அண்டார்டிக் என்றும் அழைக்கப்படுகிறது. இதன் ஏராளமான தாது வளங்களும், அதன் விளைவாய் உருவான உயிரினங்களும், மனித சமுதாயத்துக்குப் பெரிதும் உதவுகின்றன.

**முதல் உயிரி பிராண வாயு பரிணாமம்.!**

பூமியின் ஆற்றல் மிகுந்த வேதியல் பரிணாமத்தால், சுமார் 400 கோடி ஆண்டுகளுக்கு முன், தானாகவே இரட்டிப்பான ஒரு மூலக்கூறின் மூலம் உலகின் பொது மூதாதையரான ஓர் உயிரி உருவானது. அதன் பின், உயிரினங்களின் தொடக்ககால பரிணாமம், முதல் ஒளிச் சேர்க்கை உயிரி வந்த பின்னரே தொடங்கியது. ஒளிச் சேர்க்கையின் வயது 350 கோடி ஆண்டுகள். அதற்கு முன் வாழ்ந்த உயிரிகள் எல்லாம் ஹைட்ரஜன்/ ஹைட்ரஜன் சல்பைடைப் பயன்படுத்தி உயிர் வாழ்ந்தன. சுமார் 30 கோடி ஆண்டுகளுக்கு முன் வந்த சயனோபாக்டீரியா என்ற நீலப் பச்சைப் பாசிதான், இந்த உலகை ஆக்சிஜன் நிறைந்த உலகாக, ஆக்சிஜன் உள்ள வளி மண்டலமாக என உலகின் முகவமைப்பையே மாற்றிய து. நாம் சுவாசிக்க ஒட்சிஜனை உருவாக்கிய பெருமை இந்த நீலப் பச்சைப் பாசிக்கு உண்டு. அதற்குப் பின் உயிரின பரிணாமம் பெரும் வீச்சுடன் நடைபெற்றது. அது போல, 350 கோடி ஆண்டுகளுக்கு முன்புதான் பூமியின் காந்தப் புலன்/பரப்பு உருவாயிற்று. அதன் ஈர்ப்பு விசையால்தான் வளிமண்டலம் ஓடிப்போகாமல் காப்பாற்றப் பட்டுள்ளது.

**அழிந்து.. அழிந்து... மீண்டு வரும் பூமி.!**

உலகம் உருவானதிலிருந்து ஏராளமான பேரழிவுகள் ஏற்பட்டுள்ளன. அவை மூலம் ஒட்டு மொத்த உயிரின அழிவு நேரிட்டுள்ளன. இதுவரை உருவான உயிரினங்களில் சுமார் 987 உயிரினங்கள் இந்தப் பேரழிவுகளால் உலகத்தின் முகத்திலிருந்து துடைத்து எறியப்பட்டன. அதுவும் பெர்மியன்(பேர்மியன்) காலத்தில் நிகழ்ந்த அழிவுகளும் தான் பெரும் சாவு நிறைந்த பேரழிவு என்று சொல்லப்படுகிறது. இந்த மகா அழிவு சுமார் 250 கோடி ஆண்டுகளுக்கு முன் நிகழ்ந்தது. அதில் 967 கடல் வாழ் உயிரிகளும் மற்றும் 707 நில ஜீவன்களும் ஒட்டு மொத்தமாய் இந்த உலகை விட்டு சென்றுவிட்டன. பூச்சிகளையும் இந்த அழிவுகள் விட்டு வைக்கவில்லை. அழிந்து போனவைகளில் முக்கியமானவை, பாலூட்டிகள் போலிருந்த ஊர்வன. இந்த அழிவுக்குப் பின் சுமார் 30 கோடி ஆண்டுகளுக்குப் பின்தான் முதுகெலும்பிகள்அவைகளின் இடத்தை ஆக்கிரமிப்பு செய்தன.

**இன்றைய உயிரிகள்...!**

இன்று உலகில்; லைக்கன்ஸ், காளான்கள், பாக்டீரியா என அனைத்துத் தாவர, விலங்கினங்களையும் உள்ளாக்கி சுமார் 1.13 கோடி உயிரின வகைகள் இந்தப் புவியில் வாழ்ந்து கொண்டிருக்கின்றன. இவற்றில் பூச்சிகள் மட்டுமே சுமார் 50,000,000 இனங்கள் உள்ளன். முதுகெலும்பில்லாதவை: 6,755,830 இனங்கள். முதுகெலும்பிகள்: 80,500 வகைகள், மொத்த தாவரங்கள்:390,700 வகைகள் என்றால் நம்புவீர்களா? ★

> “ பூமியின் ஆற்றல் மிகுந்த வேதியல் பரிணாமத்தால், சுமார் 400 கோடி ஆண்டுகளுக்கு முன், தானாகவே இரட்டிப்பான ஒரு மூலக்கூறின் மூலம் உலகின் பொது மூதாதையரான ஓர் உயிரி உருவானது. அதன் பின், உயிரினங்களின் தொடக்ககால பரிணாமம், முதல் ஒளிச் சேர்க்கை உயிரி வந்த பின்னரே தொடங்கியது. ஒளிச் சேர்க்கையின் வயது 350 கோடி ஆண்டுகள்.

# 2013 மார்ச் மாதத்துக் கண்டத்திலிருந்து....

(12 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மரணவீடுகளில்துக்கம் அனுஷ்டிப்பது போன்று அந்தப் பிரதேச மக்கள் இரு நாள்களாக உணவு கூட அருந்தாமல் சோகம் காத்தனர்.

கண்டிப்பிரதேசத்தில் இடம் பெற்ற இந்தப் பயங்கர நிகழ்வுகள் குறித்துத் தெரிந்து கொண்ட கொழும்பிலிருந்த ஆங்கிலேய தேசாதிபதி பிரவுண்டிக், அது வரை காலமும் ஆங்கிலேயர்களால் கைப்பற்ற இயலாது போய்விட்ட உடரட்ட என்ற கண்டி இராச்சியத்தைத்தாம் கைப்பற்றும் வாய்ப்பு கனிந்து வருவதாக எண்ணி மகிழ்வுற்றான்.

இதனிடையே எகலபொல கொழும்புக்குத் தப்பியோடிச் சென்று அந்தப் பகுதியில் வாழ்ந்து வந்த நாள்களில் ஆங்கிலேய தேசாதிபதி அவனை நேரில் வரவழைத்து கண்டி இராச்சியத்தைக் கைப்பற்றுவதற்காக அவனது உதவியைக் கோரினான்.

கண்டி இராச்சியத்தைக் கைப்பற்றுவதற்கான போரை ஆரம்பிக்கத் தகுந்த தருணத்தை எதிர்பார்த்துக் காத்திருந்த ஆங்கிலேய தேசாதிபதிக்கு அதற்கானதொரு பொருத்தமான சந்தர்ப்பமும் சில நாள்களின் பின் தானாகவே அமைந்தது.

1814 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் ஆங்கிலேயரின் நிர்வாகத்துக்கு உட்பட்ட பிரதேசத்திலிருந்து உடரட்ட பிரதேசத்துக்குள் சென்ற சிலர் ஆங்கிலேய உளவாளிகள் எனச் சந்தேகிக்கப்பட்டுக் கைது செய்யப்பட்டு ராஜசிங்க மன்னன் முன் நிறுத்தப்பட்டனர். அவர்களது உடல் அவயவங்களை வெட்டியெறிந்து துரத்திவிடும்படி மன்னன் உத்தரவிட்டான். அவர்களில் எட்டுப் பேர் உடல் அவயங்களை இழந்ததால் மரணமடைய மூன்று பேர் மட்டும் காயங்களுடன் தப்பிச் சென்று ஆங்கிலேய தேசாதிபதியிடம் தமக்கு நேர்ந்த நிலைமையை எடுத்துக் கூறினர். ஆங்கிலேயர்களை இதன் மூலம் ராஜசிங்க [illegible] மன்னனுக்கு எதிராகப் போரைப் பிரகடனம் செய்தான் ஆங்கிலேய தேசாதிபதி பிறவுண்டிக்.

> “ பல சர்வதேச நாடுகள் உட்பட சர்வதேச மனித உரிமைகள் அமைப்புக்கள் பலவும் வெளியிட்டு வரும் கண்டனங்களை நோக்கும் போது இலங்கையில் சர்வதேச தலையீட்டுக்கான வாய்ப்பு நெருங்கி வருவதாகத் தோன்றுகிறது. ”

உடரட்டை ராஜதானியின் தலைவிதியை நிர்ணயிக்கும் ஆண்டாக 1815 ஆம் ஆண்டு அமைந்தது. ஜனவரி மாத ஆரம்பத்தில் ஹங்வல்லையில் நிலைகொண்டிருந்த ஆங்கிலேயப்படைகள் கண்டியை நோக்கி முன்னேறத் தயாராகின. அவர்களுக்கு ஆதரவாக எகலபொலவும் அவர்களுடன் இணைந்து கொண்டான். இது மகாவம்ச நூலின் மூலம் தெரிந்துகொள்ளக் கூடியதாகவுள்ள கண்டி இராச்சியத்தின் வீழ்ச்சி குறித்த செய்திகளாகும்.

இன்று பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவைப் பதவியிலிருந்து அகற்ற இலங்கை அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளைக் கண்டித்து அமெரிக்கா, பிரிட்டன், கனடா, ஐரோப்பிய ஒன்றியம் உட்பட சர்வதேச மனித உரிமைகள் அமைப்புக்கள் பலவும் வெளியிட்டிருக்கும் கண்டனங்களை நோக்கும் போது இலங்கையில் சர்வதேச தலையீட்டுக்கான வாய்ப்பு நெருங்கி வருவதாகத் தோன்றுகிறது.

தனது அதிகாரத்தை நிலைநிறுத்த முயன்று 1815 ஆம் ஆண்டில் உடரட்டை ஒப்பந்தத்திற்கு வழிவகுத்தான் இராஜசிங்க மன்னன்.

நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஜனாதிபதியாகத் தன்னை உருவாக்கியதுடன் இந்தியாவுடனான உறவை முறித்துக் கொள்ளாதிருப்பதற்காக 1987 ஆம் ஆண்டில் இந்திய- இலங்கை ஒப்பந்தத்திற்கு வழிவகுத்தார் முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.

பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றவியல் பிரேரணை மூலம் தமக்கும் தமது அரசுக்கும் எதிரான கருத்து வெளிப்படுத்தும் எவரையும் புறம் ஒதுக்கும் தமது போக்கால், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எதிர்வரும் மார்ச் மாதத்து ஐ.நா.மனித உரிமைகள் மாநாட்டில் இலங்கையை நலிவுபடுத்தத்தக்க ஒப்பந்தமொன்றுக்கு வழிவகுக்கக் கூடுமா என்பது குறித்து தற்போது எதிர்வு கூறலெதனையும் தெரிவிக்க இயலாதுள்ளது. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருச்சுனனின் கர்வம்

வில் விஜயன் என்று உலகத்தவரால் போற்றப்படுபவன் அருச்சுனன். குருஷேத்திர போரில் இவனுடைய வில்லாற்றலால்தான் கௌரவர் சேனைகளின் பெரும் பகுதி அழிந்தன. இவன் சிறந்த வில்வீரன். சிறந்த அறிவாளி, இறைபக்தி நிறைந்தவன். நேர்மையான சிந்தனையுடையவன். அநீதியை அழிக்க வீறு கொண்டவன்.

தன் அண்ணன் தருமபுத்திரனை உயிராக மதித்துப் போற்றியவன். பகவான் கிருஷ்ணரின் அருமைத் தோழன். இவ்வளவு பெருமைகளைக் கொண்ட இந்த அருச்சுனனிடமும் ஒரு சிறு குறையிருந்தது. இவன் சிறந்த வில்லாளி என்பதில் எவருக்கும் கருத்து வேறுபாடு இல்லை. இருந்தாலும் இந்த விடயத்தில் இவன் கர்வம் கொண்டிருந்தான். தானே சிறந்த வில்லாளி என்பதால் மற்ற வில்லாளிகளை இவன் அவமதித்தான். இந்த துர்க்குணம் காரணமாகத்தான் இவன் இறுதியில் இமயமலைச் சாரலிலிருந்து கீழே விழுந்தான் என்று தருமபுத்திரரே கூறினார்.

அருச்சுனனின் பேரன் பரீசித்துவுக்குப் பட்டம் கட்டிவிட்டுப் பாண்டவர்களும், திரௌபதியும் இமயமலைச் சாரலில் ஏறியபோது ஒவ்வொருவரும் கீழே விழுந்து மாண்டார்கள். ஒவ்வொருவரும் விழும்போது பீமன் தருமபுத்திரனைப் பார்த்து, ''இவர்கள் ஏன் விழுகிறார்கள்?'' என்று கேட்டான்.

தருமபுத்திரன் அதற்குப் பொருத்தமான காரணங்களைக் கூறினான். அருச்சுனன் விழும் போது பீமன் கேட்கிறான்....''அண்ணலே அருச்சுனனும் விழுந்து விட்டான். இவன் ஏன் விழுந்தான்?'' என்று கேட்டான்.

''தன்னை விட வில்லாளி எவனும் இல்லை என்ற கர்வம் இவனிடம் இருந்தது. அதனால் மற்ற வில்லாளி களை இவன் அவமதித்தான். அதனால் இவன் விழுந்தான்'' என்று தருமபுத்திரன் கூறினார்.

ஒருவருக்குத் திறமைகள் இருக்கலாம். அதன் காரணமாக கர்வம் இருக்க கூடாது. அப்படி ஏற்பட்டால் ஏதேனும் ஒரு விதத்தில் அவர்கள் வீழ்ச்சியை அடைவார்கள். தருமபுத்திரன் உயிரோடு சுவர்க்கம் செல்லும் வாய்ப்பினைப் பெற்றான். அருச்சுனனுக்கு அந்த வாய்ப்பு கிடைக்கவில்லை. இதற்கு அவன் கொண்டிருந்த இந்தக் கர்வமே காரணமாகும்.

இவனுடைய கர்வத்திற்கு மற்றொரு சான்றினையும் காட்ட முடியும். குருஷேத்திர யுத்தமெல்லாம் முடிந்த பிறகு ஸ்ரீகிருஷ்ணனும், அருச்சுனனும் உரையாடினார்கள். அப்போது அருச்சுனன் சொன்னான். ''கிருஷ்ணா இப்போது நடந்து முடிந்த யுத்தத்தில் அதிக காயம் அடையாதவன் நான் ஒருவன்தான்'' என்றான். அவனுடைய அந்த வார்த்தையில் கர்வம் கலந்திருப்பதை ஸ்ரீகிஷ்ணர் அறிந்து கொண்டார்.

அவர் தன் மார்பு அணிகளையெல்லாம் நீக்கித் தன் மார்பை அவனுக்குக் காட்டினார். அவர் மார்பில் கணக்கற்ற காயத் தழும்புகள் இருப்பதை அவன் கண்டான். ''அருச்சுனா...! உன்னை நோக்கி வந்த இலட்சக்கணக்கான அம்புகளை நான் தாங்கிக் கொண்டேன். அதனால் தான் அதிக காயமின்றி நீ தப்பித்தாய்'' என்று அவர் கூறினார்.

அதன் பிறகுதான் அவனுடைய கர்வம் நீங்கியது? நம்முடைய வெற்றிகளுக்கு முழுக்க முழுக்க நாமே காரணம் என்று ஒரு போதும் நினைக்கக் கூடாது. நம் பெற்றோர்.... ஆசியர் மற்றும் சான்றோர்களின் ஆசிர்வாதங்களால்தான் நாம் வெற்றிகளைப் பெறுகிறோம்.


சிலசமயங்களில் சிலரின் தியாகங்கள் காரணமாகத் தான் நமக்கு வெற்றிகள் கிட்டுகின்றன. இவைகளை மனதில் கொள்ளாமல் எல்லா வெற்றிகளும் என்னால் தான் ஏற்பட்டன என்று ஒருவன் நினைத்தால் அவன் அறியாமை நிறைந்தவன் என்றுதான் அர்த்தம்.

எல்லா ஆற்றல்களும் ஒருங்கே பெற்றிருந்த அருச்சுனன் கர்வம் என்ற துர்க்குணம் காரணமாகச் சில சமயங்களில் தலை கவிழவேண்டிய நிலை வந்தது. ஆகவே, கர்வம் என்ற துர்குணம் எந்த நிலையிலும் நமக்கு வராதபடி நாம் பார்த்துக் கொள்ள வேண்டும்.



பரமஹம்ஸ ஸ்ரீமத் பரத்வாஜ் ஸ்வாமிகள்

# 191 ஆண்டு நிறைவைக் கொண்டாடிய பருத்தித்துறை மெதடிஸ்த திருச்சபை



யாழ்ப்பாணத்தின் மூளையாகக் கருதப்படுகின்ற பருத்தித்துறையை மையமாகக் கொண்ட வடமராட்சிப் பிரதேச மக்களின் கல்வி மேம்பாட்டுக்கு பல பாடசாலைகளை மெதடிஸ்த திருச்சபை நிறுவியது. அதன் மூலம் கல்வி அறிவு ஊட்டி அந்த பிரதேசமக்களை வாழ்க்கையில் மாத்திரமன்றி இந்த நாட்டிலும், சர்வதேசத்திலும் உயர வைத்த உயர்ந்து நிற்க வித்திட்டு பெரும் பங்கு ஆற்றிய பெருமை பெறச் செய்த திருச்சபை 191 ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடி உயர்ந்து நிற்கின்றது.

இலங்கைகையை ஆட்சி செய்த போர்த்துக்கீசருக்குப் பின்னர், ஒல்லாந்தரின் ஆட்சிக்காலத்தில் வடமராட்சிப் பிரதேசம் மூன்று கோயில் பற்றுக்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. பருத்தித்துறை, கட்டைவேலி, உடுப்பிட்டி ஆகிய கோயில் பற்றுக்களே இவையாகும். இந்த மூன்று கோயில் பற்றுக்களிலும் தலா ஒவ்வொரு தேவாலயங்கள் இருந்து வந்தன. 1796 ஆம் ஆண்டு இலங்கையைப் பிரித்தானியர் கைப்பற்றியதுடன் இந்த தேவாலயங்கள் கைவிடப்பட்டன.

18 ஆம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் உள்ள புரட்டஸ்தாந்து சபைகளில் வெளிநாட்டுத் தூதுப்பணிகள் பிரபலம் அடைந்த காலம் அந்தக்காலங்களில் இருந்த மெதடிஸ்த தலைவர்கள் '' கண்ட தரிசனங்களை'' உலகத்தில் உள்ள சகல பாகங்களிலும் எடுத்துச் செல்ல முடியும் என நம்பிக்கை கொண்டு கலாநிதி தோமஸ் கோக் என்பவர் மெதடிஸ்த தூதுப் பணியினை ஆரம்பிப்பதிலும் ஆர்வம் கொண்டார். இலங்கைக்கும் இறைதூதுப் பணியை எடுத்துச் செல்லவேண்டும் என்பதில் மிக விருப்புக் கொண்டார். உலகெங்கும் மெதடிஸ்த திருச்சபையின் இறை பணியை எடுத்துச்சென்ற வேளை அங்கெல்லாம் மெதடிஸ்த திருச்சபை இறைவழிபாட்டையும் சங்க வளர்ச்சியையும் மேம்படைய வைத்தது. இதனால் மெதடிஸ்த திருச்சபையானது நல்ல வளர்ச்சியைக் கண்டது. இதனடிப்படையில் இயேசுபிரானின் அளப்பரிய அருள் ஆற்றலை நிலைநாட்டு முகமாகவும் அந்த ஆற்றலை மக்களுடன் பகிர்ந்து கொள்ளு முகமாகவும் செயற்படத் தொடங்கினார். அந்த வகையில் கலாநிதி தோமஸ் கோக் தலைமையிலான மெதடிஸ்த திருத்தொண்டர்கள் பிரித்தானியாவில் உள்ள போட்டன் மவுத் என்னும் இடத்திலிருந்து 1813 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 30 ஆம் திகதி அதாவது 200 ஆண்டுகளுக்கு முன்னர் புறப்பட்டனர்.

ஆறு மிஷனறிமார்களுடன் புறப்பட்ட இந்த குழுவினரில் ஒரு பகுதியினர் பம்பாயிலும் மற்றொரு பகுதியினர் இலங்கையின் காலியில் உள்ள வெல்லாகமவிலும் வந்து கரை இறங்கினார்கள். இலங்கையில் வந்து இறங்கியது அவர்களுக்கு பெருமகிழ்ச்சியைக் கொடுத்தது. அந்த குழுவினரில் யாழ்ப்பாணத்திற்கு ஜேம்ஸ் வின்ஞ், தோமஸ் குவான்ஸ் ஆகியோரும் மட்டக்களப்புக்கு

■ கர்ணன்

வில்லியம் ஒல்ட், காலிக்கு பென்ஜமின் கிளப், மாத்தறைக்கு ஜோர்ஜ் ஒர்க்கின்ஸ் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டார்கள். இந்த தூதுப்பணியாளர்கள் காலியில் இருந்து கொழும்புக்கு வந்து சேர்ந்தார்கள். 1814 ஆண்டு ஆவணிமாதம் முதலாம் திகதி கொழும்பிலிருந்து கால் நடையாகப் புறப்பட்ட மெதடிஸ்த தூதுப்பணியாளர்களாக ஜேம்ஸ் லின்ஞ் தோமஸ் குவான்ஸ் ஆகியோர் அதே ஆண்டு ஆவணி மாதம் யாழ்ப்பாணத்தை வந்தடைந்தார். யாழ்ப்பாணத்தில் உள்ள கோட்டையில் இருந்த ஒல்லாந்தர் தேவாலயத்தில் தங்கியிருந்து அங்கு இரண்டு வருடங்கள் வழிபாடு நடத்தினார்கள். இந்த இரு மிஷனறிமார்களின் திருப்பணிகளினால் யாழ். குடாநாட்டில் பல இடங்களிலும் மெதடிஸ்த தேவாலயங்கள் ஆரம்பிக்கப்பட்டு கல்வி அறிவு ஊட்டல்கள் மூலமாக திருச்சபையின் திருப் பணிகள் விரிவடைந்து சென்றன.

1814 ஆண்டு ஆவணி மாதம் முதலாம் திகதி கொழும்பிலிருந்து கால் நடையாகப் புறப்பட்ட மெதடிஸ்த தூதுப்பணியாளர்களாக ஜேம்ஸ் லின்ஞ் தோமஸ் குவான்ஸ் ஆகியோர் அதே ஆண்டு ஆவணி மாதம் யாழ்ப் பாணத்தை வந்தடைந்தார். யாழ்ப்பாணத்தில் உள்ள கோட்டையில் இருந்த ஒல்லாந்தர் தேவாலயத்தில் தங்கியிருந்து அங்கு இரண்டு வருடங்கள் வழிபாடு நடத்தினார்கள்.

யாழ். மாவட்டத்தின் பெரும் பிரிவுகளில் ஒன்று வடமராட்சிப் பிரதேசம். இதில் கட்டைவேலி, பருத்தித்துறை, உடுப்பிட்டி ஆகிய மூன்று கோயில் பற்றுக்கள் இருந்தன. இதில் இரண்டாவது கோயில் பற்று பருத்தித்துறையாகும். மெதடிஸ்த திருச்சபைத் தூதுப்பணியாளர்கள் 1814 ஆம் ஆண்டு ஆனி மாதம் 29 ஆம் திகதி இலங்கைத் தீவில் காலடி வைத்த போதிலும், 1817 ஆம் ஆண்டு முதன்முதலாக அருட்திரு றெபேட் காலஸ் என்பவர் ஒல்லாந்தரால் கைவிடப்பட்ட பருத்தித்துறை தேவாலயத்தில் வைத்து முதன்முதலாக கிறிஸ்துநாதர் வழிபாட்டு ஆராதனையை நடத்தினார். அந்தக் காலத்தில் தான் பருத்தித்துறை மெதடிஸ்த திருச்சபை எனப் பெயர் சூட்டப்பட்டது.

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப்பாடசாலை தற்போது இயங்கி வரும் இடத்திலேயே அந்த தேவாலயம் இருந்தது. தேவாலயத்தில் ஆராதனை வழிபாடுகளை அருட்திரு றெபேட்காலஸ் நடத்தி வந்ததைத்தொடர்ந்து அருட்திரு ஜோசப் பொட் மெதடிஸ்த திருச்சபை சுவிஷேசப் பணிகளை பருத்தித்துறையில் மேற்கொண்டு வந்தார். 1823 ஆம் ஆண்டு அருட்திரு தோமஸ் குவான்ஸ் தேவாலயத்துக்கு அருகில் எ.ஆ.கு (Girls BilinGualSchool) என்றபெயரில் பெண்களுக்கான இரு மொழிப் பாடசாலை ஒன்றை ஆரம்பித்தார்.

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மிகிந்தலை ரஜமகா விகாரையில் அம்பஸ்தல சைத்திய ராஜருக்கு சூட்டுவதற்காக மியன்மாரிலிருந்து கொண்டுவரப்பட்ட 'ஷுடா மாணிக்கம்' நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை கொழும்பு கங்காராம விகாரைக்கு கொண்டுவரப்பட்டது. அதனை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்தன ஆகியோர் வணங்குகின்றனர்.

## செயற்குழு கூட்டத்தில் கலந்து கொள்ள சஜித்துக்கு அனுமதியில்லை

கொழும்பு,ஜன.23

ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு கூட்டம் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நடைபெற்றபோது அதில் பங்குகொள்ள பிரதித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கு அனுமதி அளிக்கப்படவில்லை.

அதனாலேயே புதிய பிரதித் தலைவர் தெரிவு பிற்போடப்பட்டுள்ளது என்று தெரியவந்துள்ளது.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற செயற்குழு கூட்டத்தில் கட்சியின் உப தலைவராக ஜோசப் மைக்கல் பெரேராவும், தேசிய அமைப்பாளராக தயா கமகேவும் தெரிவுசெய்யப்பட்டனர். (ச)

## கடந்த ஆண்டு 74,000 கிலோ போதைப் பொருள்கள் மீட்பு

### சந்தேகத்தில் 41,922 பேர் கைது

கொழும்பு,ஜன.23

நாடு முழுவதும் கடந்த வருடம் நடத்தப்பட்ட சுற்றிவளைப்புத் தேடுதல்களின் மூலம் சுமார் 74,000 கிலோ போதைப் பொருள்களை பொலிஸார் மற்றும் பாதுகாப்புப் படையினர் கைப்பற்றியுள்ளனர்.

இந்தச் சுற்றிவளைப்பு தேடுதல்களின்போது அவற்றோடு தொடர்புடைய சந்தேகநபர்கள் 41,922 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரிஷாந்த ஜயகொடி தெரிவித்தார்.

விமான நிலைய, சுங்கத் திணைக்கள அதிகாரிகள், சிறைச்சாலைகள் பொலிஸ் போதைப்பொருள் பிரிவு, பொலிஸ் விசேட அதிரடிப் படையினர், முப்படையினர் ஆகியோரால் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு விதமான நடவடிக்கையின்போதே இந்தப் போதைப்பொருள்கள் கைப்பற்றப்பட்டன.

ஒப்பீட்டளவில் கடந்த வருடம் போதைப் பொருள்கள் கைப்பற்றப்பட்ட வீதம் அதிகரித்துள்ளது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் கூறினார். (ச)

## தேசிய சுதந்திர தினத்தை முன்னிட்டு தேசியக்கொடிகளை பறக்க விடவும்

### பொது நிர்வாக உள் நாட்டலுவல்கள் அமைச்சு வேண்டுகோள்

கொழும்பு,ஜன.23

சுதந்திரதினம் கொண்டாடப்படுவதையொட்டி, எதிர்வரும் 3 ஆம், 4 ஆம் திகதிகளில் அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் அரச நிறுவனங்களில் தேசியக் கொடிகளைப் பறக்க விடுமாறு பொது நிர்வாக உள் நாட்டலுவல்கள் அமைச்சு வேண்டுகோள் விடுத்துள்ளது.

அரச நிறுவனங்கள் மற்றும் பாடசாலைகளில் மின் குமிழ் அலங்காரங்களை மேற்கொள்ள வேண்டும் என்று பொது நிர்வாக அமைச்சின் செயலர் பி.பி.அபேகோன் தெரிவித்தார்.

இதுதொடர்பான சுற்றறிக்கையை பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு வெளியிட்டுள்ளது. இந்த சுற்றறிக்கை மூலம் சகல அமைச்சுக்களின் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் ஆகியோருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## களனி அமைப்பாளர் பதவியை பஸிலுக்கு வழங்க வேண்டும்

### - உறுப்பினர்கள் கோரிக்கை

கொழும்பு,ஜன.23

களனி தேர்தல் தொகுதியின் அமைப்பாளர் பதவி பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவுக்கு வழங்கப்பட வேண்டும்.

இவ்வாறு களனி பிரதேச சபைத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தேர்தல் தொகுதியின் அமைப்பாளர் பதவியிலிருந்து மேர்வின் சில்வா நீக்கப்பட்டமை வரவேற்கப்பட வேண்டியது என்று அவர்கள் கூறினர்.

களனி பிரதேச சபையின் தலைவர் மற்றும் உறுப்பினர்களினால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு மதத் தலைவர்களும் ஆதரவளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.(ச)

## ஹெரோயின் வைத்திருந்தவர் பொலிஸாரிடம் மாட்டினார்

கொழும்பு,ஜன.23

கொழும்பு, கிரான்ட்பாஸ், ஸ்டெட்டிபுர சந்தியில் வைத்து ஹெரோயின் போதைப்பொருளுடன் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இரவு கொழும்பு துறைமுக பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரிடம் இருந்து 1 கிராம் 200 மில்லிக் கிராம் ஹெரோயின் மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் கொழும்புத் துறைமுக பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

# வெள்ளையர் ஆட்சியில் கூட எமக்கு எந்த வரியும் இல்லை

## திருமணப் பதிவுக் கட்டணம் வேண்டாம் என்கிறார் ஆதிவாசிகளின் தலைவர்

கொழும்பு,ஜன.22

வெள்ளையர்கள் நாட்டை ஆட்சி செய்த காலத்திலும் கூட ஆதிவாசிகள் மீது எந்த வித வரியும் விதிக்கப்படவில்லை.

இவ்வாறு ஆதிவாசிகளின் தலைவர் ஊருவரிகே வன்னியலே எத்தோ தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

திருமணப் பதிவுக்கென புதிதாக அறவிடப்படும் பணத்தை ஆதிவாசிகளிடம் இருந்து அறவிடக்கூடாது.

**திருமணப் பதிவுக்காக புதிதாக 5000 ரூபா அறவிடப்படுகின்றமை காட்டில் விவசாயத்தை நம்பி வாழும் ஆதிவாசிகளால் தாங்கிக் கொள்ளமுடியாதது.**



திருமணப் பதிவுக்காக புதிதாக 5,000 ரூபா அறவிடப்படுகின்றமை காட்டில் விவசாயத்தை நம்பி வாழும் ஆதிவாசிகளால் தாங்கிக் கொள்ளமுடியாதது.

ஆதிவாசிகளின் சம்பிரதாயத்துக்கு அமைய வரலாற்றில் திருமணப்பதிவு இடம்பெறவில்லை.

தற்போதைய சந்ததியினருக்கு பிறப்புச் சான்றிதழ் பெற்றுக்கொள்வது, பாடசாலையில் சேர்ப்பது போன்றவற்றில் ஏற்படும் பிரச்சினையால் திருமணப்பதிவு செய்து கொள்ளப்படுகிறது. .-என்றார். (ச)

## நவீன தொழில்நுட்பத்தின் மூலம் இனிமேல் மின் உற்பத்தியை மேற்கொள்ள வேண்டும்

### சிரேஷ்ட அமைச்சர் சரத் அமுனுகம சொல்கிறார்

கொழும்பு,ஜன.23

எரிபொருளை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படும் மின்உற்பத்தி முறை மாற்றப்பட்டு, நவீன தொழில்நுட்பத்தின் மூலம் மின் உற்பத்தியை மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

இவ்வாறு சர்வதேச பொருளாதார ஊக்குவிப்பு சிரேஷ்ட அமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்தார்.

மின்பாவனையாளர்களிடமிருந்து முறைப்பாடுகளைப் பெறுவதற்கு பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு புதிய இணையத்தளத்தை நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை ஆரம்பித்துள்ளது.

கொழும்பு பண்டார நாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மின் உற்பத்தியுடன் தொடர்புடைய மின்சாரசபை உள்ளிட்ட முக்கிய அரச நிறுவனங்களின் செயற்பாடுகளை ஆராய்ந்து அவற்றுக்கு ஆலோசனை வழங்கும் ஓர் அமைப்பாக பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு செயற்படுகிறது. அதன் செயற்பாடுகள் நாட்டின் அபிவிருத்திக்கு மேலும் பலம் சேர்க்கும் வகையில் அமைந்துள்ளன.

நாட்டின் பொருளாதாரத்தில் முக்கியமான பங்காளியாகக் காணப்படும் மின்சார உற்பத்தி புதிய மார்க்கங்களுக்குச் செல்ல வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

இலங்கையில் மின் உற்பத்தியானது ஏகபோகத் தன்மையுடன் [illegible] ளது. அதனை மாற்ற வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

மின்உற்பத்தியை வேறு மார்க்கங்கள் மூலம் மேற்கொள்வதற்கு தனியாருக்கும் இடமளிக்கப்பட வேண்டும்.

மின்உற்பத்தியில் அரச நிறுவனங்கள் போட்டித் தன்மைக்குத் தயாராகவேண்டும்.

ஏகபோகத் தன்மையை இல்லாமல் செய்வதன் ஊடாக மின்சாரத்தை நுகரும் வாடிக்கையாளர்களுக்கு நன்மை ஏற்படும். இவ்வாறான மாற்றங்கள் மூலமே நாட்டு மக்களின் பணம் வீண் விரயமாவதைத் தடுக்க முடியும்.-என்றார். (ச)

## யானைகளுக்கு சரணாலயங்கள்

கொழும்பு,ஜன.23

இலங்கையில் யானைகள் பாதுகாப்பு சரணாலயங்கள் நான்கு நிறுவப்படும்.

இவ்வாறு வனவாழ்வு சமநல சேவைகள் பிரதி அமைச்சர் எஸ்.எம். சந்திரசேன தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஹொரவப்பொத்தானையில் அமைக்கப்படும் யானைகள் பாதுகாப்பு நிலையம் எதிர்வரும் ஏப்ரல் மாதம் ஜனாதிபதியால் திறந்து வைக்கப்படும். அதற்கு 300 மில்லியன் ரூபாவை அரசு செலவிட்டுள்ளது.

இந்த நிலையம் வாவிகள், குளங்களைச் சுற்றி 3500 ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கப்படும்.

லுனுகம்வெஹர, குருநாகல், மாதுருஓயா ஆகிய இடங்களிலும் யானைகள் பாதுகாப்பு நிலையங்கள் அமைக்கப்படும். 2500 கிலோ மீற்றர் நீளமான மின் வேலியின் பணிகள் பூர்த்தியாகும் நிலையில் உள்ளன.

**வருட இறுதிக்குள் 450 கிலோமீற்றர் தூரத்துக்கு வேலி அமைக்கப்படும்.**

இதுவரை 2000 கிலோ மீற்றர் தூரத்துக்கு மின்வேலி அமைக்கப்பட்டுவிட்டது.

வருட இறுதிக்குள் 450 கிலோமீற்றர் தூரத்துக்கு வேலி அமைக்கப்படும்.

மின்வேலி அமைப்புக்கான தாமதம் ஊழியர் பற்றாக்குறையே ஆகும்.-என்றார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது
வித்தியா

# இன்றைய நாள்
## உங்களுக்கு எப்படி?


**மேடம்:** புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். நல்ல நண்பர்களைச் சந்திப்பீர்கள். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். கொடுக்கல், வாங்கலில் சுமுகமான நிலை காணப்படும். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள். மாணவர்கள் பரபரப்புடன் காணப்படுவார்கள்.


**இடபம்:** பல வேலைகள் தடைப்பட்டு முடிவடையும். வாக்குறுதியை நிறைவேற்றப் போராட வேண்டி வரும். உதவி செய்வதாக வாக்குக் கொடுத்தவர்கள் சிலர் இழுத்தடிப்பார்கள். திடீர் பயணங்கள், செலவுகளால் திணறுவீர்கள். உத்தியோகத்தில் அலுவலக இரகசியங்களை வெளியிட வேண்டாம்.


**மிதுனம்:** அலைச்சலும், சிறுசிறு ஏமாற்றமும் வந்து நீங்கும். வெளிவட்டாரத்தில் விமர்சனங்களைத் தவிருங்கள். வரவுக்கு மிஞ்சிய செலவுகள் இருக்கும். வியாபாரத்தில் புதியவர்களை நம்பி எந்த முதலீடும் செய்ய வேண்டாம். உத்தியோகத்தில் மறைமுக எதிர்ப்புகள் வந்து செல்லும்.


**கடகம்:** எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்திகள் வந்து சேரும். ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும். வியாபாரத்தில் மறைமுகப் போட்டிகளை வெல்வீர்கள். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள். பெண்களின் எண்ணங்கள் பூர்த்தியாகும்.


**சிங்கம்:** விடாப்பிடியான செயல்களில் வெற்றியுண்டு. பணவரவு திருப்தி தரும். வெளிவட்டாரத் தொடர்பு அதிகரிக்கும். வெளியூர் பயணங்களால் மகிழ்ச்சி கிடைக்கும். வியாபாரத்தில் வேலையாள்கள் ஒத்துழைப்பார்கள்.


**கன்னி:** பேச்சில் கம்பீரம் பிறக்கும். முன்கோபம், வீண் அலைச்சல் விலகி நிம்மதி கிடைக்கும். தந்தை வழி உறவினர்களால் ஆதாயம் உண்டு. பிரபலங்களின் சந்திப்பு நிகழும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.

**நாளை**

தை -11 வியாழக்கிழமை 24.01.2013
திதி: திரயோதசி முழுவதும்
நட்சத்திரம்: மிருகசீரிடம் மு.ப. 11.08 வரை
சுபநேரம்: 08.06- 09.36 வரை
ராகுகாலம்: 02.06- 03.36 வரை


**துலாம்:** எவ்வளவு பணம் வந்தாலும் எடுத்து வைக்க முடியவில்லையே என்று ஆதங்கப்படுவீர்கள். உறவினர், நண்பர்களை பகைத்துக் கொள்ளாதீர்கள். சந்தேகப் புத்தியால் நல்லவர்களை இழக்க வேண்டி வரும். உத்தியோகத்தில் விட்டுக்கொடுத்துப் போவது நல்லது.


**விருச்சிகம்:** குடும்பத்தினரின் எண்ணங்களை பூர்த்தி செய்ய வேண்டும் என்று நினைப்பீர்கள். பிராத்தனைகள் நிறைவேறும். பணப்புழக்கம் அதிகரிக்கும். வியாபார ரீதியாக முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். உத்தியோகத்தில் மேலதிகாரி பாராட்டுவார்.


**தனுசு:** நீண்ட நாளாக மனதிலிருந்து வந்த குழப்பங்களுக்கு நல்ல தீர்வு கிடைக்கும். பிள்ளைகளின் எண்ணங்களை நிறை வேற் றுவீர்கள். கூட்டுத் தொழிலில் பங்குதாரர்கள் அனுசரித்துப் போவார்கள். அயல் வீட்டாரின் ஆதரவு அதிகரிக்கும்.


**மகரம்:** காரியங்களை முடிப்பதிலிருந்த தடுமாற்ற நிலை மாறும். குடும்பத்தில் மகிழ்ச்சி தங்கும். சோம்பல், உடல் அசதி, நீங்கும். ஆடம்பரச் செலவுகளை குறைப்பீர்கள். வியாபாரத்தில் வேலையாள்களின் ஆதரவு கிட்டும். கோபம் தணியும். உத்தியோகத்தில் மேலதிகாரி உதவுவார்.


**கும்பம்:** ஆடம்பரச் செலவுகளைத் தவிர்த்து எளிமையாக வாழ விரும்புவீர்கள். உடன் பிறந்தவர்களுடன் இருந்து வந்த மனக்கசப்புகள் நீங்கும். வெளிவட்டாரத்தில் அந்தஸ்து அதிகரிக்கும். அரசால் அனுகூலம் உண்டு. வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் வருகை அதிகரிக்கும்.


**மீனம்:** பணம் தேவையான அளவு இருக்கும். கடன் பிரச்சினைகள் தீரும். தந்தையாரின் உடல் நலம் சீராகும். நண்பர்களின் ஒத்துழைப்பால் சில காரியங்களை முடிப்பீர்கள். எதிர்பார்த்த உதவிகள் தக்க சமயத்தில் கிடைக்கும்.

# சுடோக்கு
## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 2 | | 1 | | | |
| | | | | 7 | | | | |
| | 5 | | | 4 | | | | |
| 9 | | | 7 | | | 5 | 8 | 3 |
| 2 | | 8 | 3 | | 9 | 6 | | 1 |
| 3 | 1 | 5 | | | | | | 9 |
| | 8 | 2 | | 3 | | | 6 | |
| 6 | 3 | | | 2 | | | | |
| | | | 1 | | 4 | | | |

## சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 7 | 6 | 9 | 5 | 3 | 1 | 8 | 2 |
| 5 | 2 | 3 | 1 | 8 | 7 | 6 | 4 | 9 |
| 9 | 8 | 1 | 6 | 4 | 2 | 5 | 7 | 3 |
| 1 | 4 | 8 | 5 | 3 | 9 | 7 | 2 | 6 |
| 2 | 6 | 5 | 8 | 7 | 4 | 9 | 3 | 1 |
| 3 | 9 | 7 | 2 | 1 | 6 | 8 | 5 | 4 |
| 6 | 5 | 4 | 7 | 2 | 1 | 3 | 9 | 8 |
| 7 | 3 | 9 | 4 | 6 | 8 | 2 | 1 | 5 |
| 8 | 1 | 2 | 3 | 9 | 5 | 4 | 6 | 7 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3 ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

**VACANCIES**
**UNIVERSITY OF JAFFNA, SRI LANKA**

University of Jaffna will entertain applications from suitably qualified persons for the under mentioned posts up to 22nd February 2013.

**FACULTY OF ARTS**

**Senior Lecturer Grade I/Senior Lecturer Grade II/Lecturer (Probationary)** in Dance (Drama & Theatre)/Art & Design

**SALARY AND OTHER BENEFITS Salary Scale**

| Post | | |
|---|---|---|
| Senior Lecturer Grade I | Rs.45545-7x1050-52895 | p.m. |
| Senior Lecturer Grade II | Rs.39755-11x790-48445 | p.m. |
| Lecturer (Probationary) | Rs.27775-10x645-34225 | p.m. |

**Note:**
In addition to the above salary the following allowances will also be paid.
(i) Academic Allowance

| | |
|---|---|
| Senior Lecturer Grade I & Senior Lecturer Grade II | -72% of the basic salary from 01.07.2013 – 80% of the basic salary |
| Lecturer (Probationary) | - 49.875% of the basic salary from 01.07.2013 – 60 % of the basic salary |

(ii) Special Allowance - 15% of the basic salary
(iii) Cost of living allowance – Rs.6, 600/-
(iv) Research allowance – 35% of the basic salary based on the research activity,

**Statutory benefits**
i. Sabbatical leave entitlement for the post of Senior Lecturer Grade II and above.
ii. Membership in Universities Provident Fund and Pension Scheme in the University System.
iii. Gratuity payments
iv. Employees' Trust Fund benefits
v. Free medical Services

Application forms and other details may be obtained from the office of the Senior Assistant Registrar/ Academic Establishments, University of Jaffna, Sri Lanka, either in person or by post on a payment of Rs.100/- per application form at the People's Bank, University Branch or at the Shroff's counter of the University of Jaffna.
Those who wish to obtain application forms by post are requested to send a Money Order/ Postal Order for Rs.100/- per application form drawn in favour of the **Bursar, University of Jaffna** together with a **self –addressed stamped envelope** 23x10 c.m. in size.
Application forms and other details will also be available in the University website www.jfn.ac.lk.
Those who wish to send the application forms downloaded from the University website should attach a Money Order/ Postal Order for Rs.100/- per application form drawn in favour of the **Bursar, University of Jaffna.**
Those who wish to apply for **more than one post** should make **separate applications**.
Applicants from the University System/ Government Departments/ Corporations and Statutory Board should channel their applications through the Heads of respective Institutions. Illegible, incomplete and late applications will be rejected without intimation. Only short listed applicants will be called for an interview.

**Registrar**
University of Jaffna
Sri Lanka
2013-01-21

(C/5784)

ஸ்ரீ கைலாசபிள்ளையார் துணை
சிற்சபேசாய மங்களம்

**இன்று நடைபெறும் விவாஹ சுபமுகூர்த்த அழைப்பு**

ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் மங்களகரமான
நந்தன வருஷம் தைத் திங்கள் 10 ஆம் நாள்
இன்று (23.01.2013) புதன்கிழமை மிருகசீரிஷ நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய சுபயோக சுபதினத்தில் காலை 08.34 இக்கு மேல் 11.15 இக்குள் வரும் மீன லக்கின சுபமுகூர்த்தத்தில் (காலை 09.00 மணிக்குமேல் 10.00 மணிக்குள்)

கௌசிக கோத்திரம்
இலங்கை, யாழ்ப்பாணம், நல்லூர், 343, நாவலர் வீதி,
ஸ்வர்கீய கு.நசாமி ஐயர்
அவர்களின் பௌத்திரியும் ஸ்வர்கீய K. குமாரசாமி சர்மாவின் கனிஷ்ட புத்திரியுமான சௌபாக்கியவதி
**K. லலிதாதேவியை**
(B.Com)



மௌகல்யா கோத்திரம்
கடலூர் மாவட்டம், சிதம்பரம் டவுண் 36/43, கீழப்புதுத்தெரு,
ஸ்வர்கீய T.S. முத்துசுப்பிரமணிய ஐயர்
அவர்களின் புத்திரனும்
M. நாராயணன் ஐயர் அவர்களின் சகோதரனுமாகிய சிரஞ்சீவி
**M. நடராஜன் சர்மாவிற்கு**
(B.Sc.Maths)

கன்னிகாதான திருமாங்கல்யதாரண பாணிக்கிரஹணம் செய்துகொடுப்பதாய் ஸ்ரீ கைலாசநாதர், தில்லை நடராஜர், ஸ்ரீ ஆதிபராசக்தி, காசி விசாலாட்சி அன்னபூரணியோடு கூடிய விஸ்வநாதரின் கிருபையோடும், ஸ்ரீ காஞ்சி காமகோடி ஜகத்குரு பரமாச்சாரியாரின் பரிபூரண அனுக்கிரஹத்துடனும் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு மேற்படி சுபமுகூர்த்தம்
சிதம்பரம், நெ. 23, விளங்கியம்மன் கோயில் தெரு ஓம் சிவ சக்தி திருமண மாளிகையில்
நடைபெற இருப்பதால் தாங்கள் தங்கள் இஷ்டமித்திர பந்துகளுடன் முன்னதாகவே வந்திருந்து சுபமுகூர்த்தை நடத்தித் தந்து தம்பதியரை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.
நிச்சயதார்த்தம் 22.01.2013 செவ்வாய்க்கிழமை காலை மேற்படி மண்டபத்தில் நடைபெறும்
**தங்கள் நல்வரவை இனிதே விரும்பும்**
சுபம்

ஸ்ரீமதி சாவித்திரி குமாரசாமி சர்மா,
ஸ்ரீமான் கு. மணிக்குருக்கள்,
ஸ்ரீமான் ஸ்ரீமதி கோபாலன் சர்மா லஷ்மிதேவி தம்பதிகள்
ஸ்ரீமான் ஸ்ரீமதி ஆனந்தன் சர்மா ஜீவஹர்ஷினி தம்பதிகள்.
343, நாவலர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம், இலங்கை,
தொலைபேசி : 021 222 2656/021 490 0189,
kailasanathar@gmail.co.m

ஆ. நாராயணன் ஐயர்,
சாவித்திரி நாராயணன் (சிதம்பரம்)
ஆ. சங்கர்ராமன் ஐயர்,
36/43, கீழப்புதுத்தெரு, சிதம்பரம்
செல்: 94876 51781, 93459 79940

(இரு வீட்டார் அழைப்பு)

(சி/5665)(45.6.7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கில் புராதன இடங்களை பதிவு செய்யும் செயற்றிட்டம்

## அம்பாறையில் ஆரம்பக் கட்டப் பணிகள்

மட்டக்களப்பு,ஜன.23

கிழக்கு மாகாணத்திலுள்ள அனைத்து புராதன இடங்களையும் பதிவுசெய்யும் செயற்றிட்டத்தை தொல்பொருள் திணைக்களம் ஆரம்பித்துள்ளது.

அதனூடாக மாகாணத்திலுள்ள புராதன பகுதிகளை பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று திணைக்களத்தின் பணிப்பாளர் செனரத் திஸாநாயக்க தெரிவித்தார்.

**இந்த ஆய்வு நடவடிக்கைகளில் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள், விசேட அதிரடிப் படையினர் மற்றும் பிரதேசவாசிகளைக் கொண்ட ஐந்து குழுவினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.**

இறுதியாக 1970 ஆம் ஆண்டு முன்னெடுக்கப்பட்ட ஆய்வுகளின் தரவுகளுக்கு அமைய, கிழக்கு மாகாணத்தில் 800 இக்கும் அதிகமான புராதன இடங்கள் காணப்படுகின்றமை தெரியவந்துள்ளது என்று அவர் கூறினார்.

அதன் ஆரம்பக் கட்டப் பணிகள் அம்பாறை மாவட்டத்தில் தொடக்கி வைக்கப்பட்டுள்ளன என்று அவர் சுட்டிக் காட்டினார்.

இந்த ஆய்வு நடவடிக்கைகளில் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள், விஷேட அதிரடிப் படையினர் மற்றும் பிரதேச வாசிகளைக் கொண்ட ஐந்து குழுவினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்று அவர் கூறினார்.

இந்த நடவடிக்கை வருட இறுதிக்குள் நிறைவுசெய்யப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# சிங்கள மக்களின் சனத்தொகை நுவரெலியா மாவட்டத்தில் வீழ்ச்சி

நுவரெலியா,ஜன.23

நுவரெலியா மாவட்டத்தில் சிங்கள மக்களின் சனத்தொகையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது என்று சிங்கள பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த ஐந்து ஆண்டுகளில் சிங்கள மக்கள் சனத் தொகையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

இலங்கை குடிசன மதிப்பீட்டுத் திணைக்களத்தால் கடந்த ஆண்டு மேற்கொள்ளப்பட்ட சனத்தொகை மதிப்பீட்டின் மூலம் இந்தத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

நுவரெலியா மாவட்டத்தின் சிங்கள மக்களின் சனத்தொகை 39.59 வீதமாக காணப்படுகிறது. தமிழ் மக்களின் சனத்தொகை 57.69 வீதமாகக் காணப்படுகிறது.

2007 ஆம் ஆண்டில் சிங்கள மக்களின் சனத்தொகை 46.2 வீதமாகவும், தமிழ் மக்களின் சனத்தொகை 46.6 வீதமாகவும் காணப்பட்டது.

காணிப் பிரச்சினை, தொழில் பிரச்சினை போன்ற காரணிகளினால் நுவரெலியா மாவட்ட சிங்கள மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர் என்று சிங்களப் பத்திரிகையில் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

இதேவேளை, கடந்த ஐந்து ஆண்டு காலப்பகுதியில் நுவரெலியா மாவட்டத்தின் தமிழ் மக்களின் சனத்தொகை 11 வீதத்தால் உயர்வடைந்துள்ளதாக அந்த செய்தியில் கூறப்பட்டுள்ளது. (ச)

# பாதுகாப்புக் குழு நிறுவப்பட்டதால் குறைவடைந்தன குற்றச்செயல்கள்

### அக்கரைப்பற்று பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி கூறுகிறார்



மட்டக்களப்பு,ஜன.23

நாட்டின் சகல பிரதேசங்களிலும் சிவில் பாதுகாப்புக் குழுக்கள் நிறுவப்பட்டுள்ளதால் குற்றச்செயல்கள் குறைவடைந்துள்ளன.

இவ்வாறு அக்கரைப்பற்று பொலிஸ் நிலையத்தின் பதில் பொறுப்பதிகாரி டீ.சீ.டீ.தென்னக்கோன் தெரிவித்தார்.

ஆலையடி வேம்பு பிரதேச செயலக சிவில் பாதுகாப்புக் குழுக்கூட்டம் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தநிகழ்வில் பிரதேச செயலரால்ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டன. அத்துடன் கிராமத்தின் தேவைகள் மற்றும் குறைபாடுகள் தொடர்பாகவும் ஆராயப்பட்டன.

இந்தக் கூட்டத்தில் ஆலையடி வேம்பு பிரதேச செயலர் வீ.ஜெகதீசன், சிவில் பாதுகாப்புப் பிரிவு பொறுப்பதிகாரி அப்துல்லாஹ், நிர்வாக உத்தியோகத்தர் ஈ.குலசேகரம், கிராம உத்தியோகத்தர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர். (ச)



போரால் பாதிக்கப்பட்ட குச்சவெளி, இரணைக்கேணி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை திருகோணமலை நகரசபைத் தலைவர் க. செல்வராஜா வழங்குகிறார். (40)

# கைக்குண்டுடன் சென்றவர் கைதானார்

**இரும்புப் பொருளென நினைத்து கைக்குண்டை எடுத்தவர் கைது**

அக்கரைப்பற்று,ஜன.23

அக்கரைப்பற்று, முதலாம் குடியிருப்பு பகுதியில் கைக்குண்டுடன் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறிப்பிட்ட நபர் நேற்று செவ் வாய்க்கிழமை காலை கைது செய்யப்பட்டுள்ளார் என்று அக்கரைப்பற்று பொலிஸார் தெரிவித்தனர்.

அக்கரைப்பற்று முதலாம் பிரிவு வீதியில் உள்ள குப்பை மேடு ஒன்றிலிருந்து இரும்புப் பொருள் ஒன்று மீட்கப்பட்டுள்ளது.


இந்த இரும்புப் பொருளை எடுத்த நபர் அதனை விற்க கடைக்கு எடுத்துச் சென்றிருந்தார்.

அப்போது இரும்புப் பொருளைக்கண்ட கடை உரிமையாளர் அதனைக் குண்டு என்று அடையாளம் காட்டி, உடனே பொலிஸாரிடம் ஒப்படைக்குமாறு கூறியுள்ளார்.

அதற்கமைய குறித்த இரும்புப் பொருளை பொலிஸாரிடம் ஒப்படைக்கச் சென்ற நபரை பொலிஸார் இடைநடுவில் கைது செய்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளை அக்கரைப்பற்றுப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச)

# சேதமடைந்த நிலையில் வெருகல் பிரதேச வீதி



ஏறாவூர்,ஜன.23

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட வெருகல் பிரதேச செயலகத்துக்குச் செல்லும் வீதி சேதமடைந்த நிலையிலேயே காணப்படுகிறது.

இந்த வீதியை வெருகல் பிரதேச செயலக நிர்வாகத்தின் கீழ் வரும் ஈச்சிலம்பற்று, உடப்புக்கேணி, சின்னக்குளம், கறுக்காமுனை, விநாயகபுரம், மதுரங்குளி, இலங்கைத்துறை, புன்னையடி, கல்லடி போன்ற கிராமங்களில் வாழும் மக்கள் போக்குவரத்துக்காகப் பயன்படுத்தி வருகின்றனர்.

அதேவேளை இங்குள்ள கிராமங்களுக்கு ஒரு பஸ் சேவையே இடம்பெறுகின்றது. ஏனைய நேரங்களில் மக்கள் கால் நடையாகவே பயணிக்க வேண்டிய பரிதாப நிலையுள்ளது.

இதுகுறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ச)

# சொகுசு பஸ்ஸில் அதிக கட்டணம் அறவிட்ட நடத்துநருக்கு 2000 ரூபா அபராதம்

மாத்தளை,ஜன.23

கொழும்பில் இருந்து மாத்தளைக்கு பயணித்த தனியார் சொகுசு பஸ்ஸில் பயணிகளிடம் கூடுதல் கட்டணம் அறவிட்ட நடத்துநருக்கு 2,000 ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

குறித்த பஸ்ஸை சேவையில் இருந்து இரண்டு நாள்களுக்கு இடைநிறுத்துவதற்கும் மத்திய மாகாண தனியார் போக்குவரத்து அதிகார சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

கொழும்பிலிருந்து மாத்தளைக்கான கட்டணம் 295 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

ஆனால் குறிப்பிட்ட தனியார் சொகுசு பஸ் நடத்துநர் பயணிகளிடம் 355 ரூபா கட்டணத்தை அறவிட்டுள்ளதாக மத்திய மாகாண தனியார் போக்கு வரத்து அதிகார சபையிடம் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதனையடுத்து சம்பந்தப்பட்ட பஸ் நடத்துநரையும், உரிமையாளரையும் மத்திய மாகாண தனியார் போக்குவரத்து அதிகார சபையின் தலைவர் ஏ.ஜீ. ரணசிங்க விசாரணைக்கு உட்படுத்தியுள்ளார்.

அதனையடுத்தே பஸ் நடத்துநருக்கு அபராதமும் குறித்த பஸ்ஸுக்கு இரண்டு நாள் போக்குவரத்துத் தடையும் விதிக்கப்பட்டுள்ளன. (ச)

### தரிசு நிலங்கள் வெளியார்களுக்கு பகிர்ந்தளிப்பு

# ஜனாதிபதியின் கூற்றுக்கு சபையில் ஆரவாரித்த மலையக தலைமைகள் இப்போது மௌனம் ஏன்?

### பிரேரணை கொண்டுவர வேண்டும் என வலியுறுத்து

நுவரெலியா,ஜன.23

மலையக பெருந்தோட்ட தரிசு நிலங்களை வெளியாருக்கு தாரை வார்க்காமல் எமது இளைஞர்களுக்கு பகிர்ந்தளிக்க நாடாளுமன்றில் பிரேரணை கொண்டுவர மலையகத் தமிழ்த் தலைமைகள் முன்வரவேண்டும்.

-இவ்வாறு மத்திய மாகாண சபை உறுப்பினர் முரளி ரகுநாதன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர்மேலும் தெரிவித்ததாவது:-

2013 ஆம் ஆண்டு வரவு - செலவுத்திட்ட உரையில் ஜனாதிபதி, மலையக பெருந்தோட்ட தரிசு நிலங்கள் சுமார் இரண்டு ஏக்கர் வீதம் வேலையில்லா மலையக பெருந்தோட்ட இளைஞர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படும் என்று தெரிவித்திருந்தார்.

அதன்போது சபையில் கைதட்டல், ஆரவாரத்தை அரச மலையகத் தமிழ்த் தலைமைகள் ஜனாதிபதிக்கு தெரிவித்தன. அத்துடன் நின்றுவிடாமல் நாடாளுமன்றில் பிரேரணை மூலம் சட்டவாக்கம் செய்யப்பட வேண்டும். சந்தர்ப்பத்தை சரியாகப் பயன்படுத்தவேண்டும்.

அனைத்து பெருந் தோட்ட தரிசு நிலங்களின் விவரங்களும் அந்தந்தப் பகுதி அரச பிரதேச செயலகங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

ஜனாதிபதியின் கூற்றுக்கு இணங்க பிரதேச செயலகங்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்படவில்லை. அதனால் அபிவிருத்தி என்ற பதத்தில் இந்தக் காணிகள் தெரிவாக்கம் செய்யப்பட்டுள்ளன.-என்றார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 06.04.1950 மறைவு 06.02.2009

அமரர்

**தியாகராஜா தேவகுருநாதன்**

திதி:பூர்வபக்க துவாதசி

ஆண்டுகள் நான்கு கடந்தாலும்
உங்கள் நினைவு கதைகள்
இன்று போல் இருக்கின்றது
ஆயிரம் ஆண்டுகள் சென்றாலும்
உங்கள் நினைவுடன் இருப்போம்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தற்காலிக முகவரி:
மீசாலை கிழக்கு.
மீசாலை.

தே.அரியதேவி (மனைவி)
குடும்பத்தினர்.
அல்லிப்பளை,பளை.

(27703)(5.6.7)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்

**கந்தையா சுந்தரலிங்கம்**

மலர்வு 09.08.1938

உதிர்வு 24.12.2012

எமது அன்புத் தெய்வம் சிவபதமடைந்த செய்தி கேட்டு உடன் வந்து ஆறுதல் கூறி எமது துயரத்தில் பங்கு கொண்டு உடன் கருமங்கள் ஆற்றியும், தொலைபேசியூடாக அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் பல வழிகளில் உதவிபுரிந்த உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவருக்கும் எமது இதய பூர்வமான நன்றிகளைத் தெரிவிப்பதுடன் இன்று (23.01.2013) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

மஞ்சத்தடி,
இணுவில்.

குடும்பத்தினர்.

(28593)(6.7.2)

## துர்க்கா திருமண சேவை

1967 ஆம் ஆண்டு ரோகிணி 1இல் செவ்வாய் 35 பாவம் கனடா P.R வந்துள்ள மண மகனிற்கு 75 ஆம் ஆண்டு மணமகள் தேவை.

துர்க்கா திருமண சேவை.
021 321 1814,0778 185978.

(28509) (6.7.4))

## சமயக்கிரியைகளுக்கான அறிவிப்பு

மரணக்கிரியைகள், அந்தியேட்டிக்கிரியைகள் செய்து கொடுக்கப்படும்.

தொடர்புகளுக்கு: கிருஷ்ணமூர்த்தி குருக்கள், கச்சன் வீதி, வட்டுக்கச்சி.
077 5094548, 0757264504.

(28304) (6.7.4)

## வீடும் காணியும் விற்பனைக்கு

சாவகச்சேரி, கற்குளி லேனில் Ladies College முன்பாக ஐந்து பரப்புக் காணியும் வீடும் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:முருகன் நகை மாளிகை , கண்டிவீதி, சாவகச்சேரி.T.P: 0775369798.

(28019) (6.7.4)

## ஒக்ட பாட் விற்பனைக்கு PAD

நல்ல நிலையில் உள்ள ROLAND SPD 20 ஒக்டபாட் விற்பனைக்குள்ளது. (ஒரிஜினல் யப்பான்) உடன் தொடர்பு கொள்ளவும்.

T.P:0776980573.

(28593) (6.7.4)

## இலவச இசை வகுப்புக்கள்

தெல்லிப்பழை பாலர் ஞானோதய சபையால் 27.01.2013 பி.ப 4 மணிக்கு காசி விநாயகர் ஆலயத்தில் இசை வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படும்.

சங்கீதம், மிருதங்கம், நடனம், பண்ணிசை, வயலின்.

சபைத்தலைவர்,
சு.வரதராஜசர்மா.

(A/5788) (6.7.4)

## பேச்சு ஆங்கில வகுப்புக்களுக்கான புதிய பிரிவுகள் ஆரம்பம்

வவுனியாவில் அனுபவம் மிக்க ஆசிரியர் S.N. Prara (Bsc) அவர்களால் 25.01.2012 காலை,மாலை வகுப்புக்கள் ஆரம்பம்.

வவுனியாவில் ஆரம்பம்

(27624)(6.7.4) Sun British College T.P: 0773466946,0778008956

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



Best Wishes

எமது பாடசாலை அதிபரும் வாதரவத்தை,புத்தூரைச் சேர்ந்தவருமான சி.பத்மதாசன் நீதி அமைச்சினால் அகில இலங்கை சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் மேலும் பல உயர் பதவிகளைப் பெற்று சமூகத்திற்கும், எமது மாணவர்களுக்கும் சிறந்த சேவைகளை வழங்க வாழ்த்தி நிற்கின்றோம்.

ஆசிரியர்கள், மாணவர்கள்
மன்/ தேவன்பிட்டி R.C.T.M.S
வெள்ளாங்குளம்.

# 16 ஆம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு 08.08.1927

இறப்பு 11.01.2013

அமரர் **சுப்பிரமணியம் கனகமணி**

எமது கரைச்சிக் கோட்டக் கிளி/ அழகா புரி வித்தியாலய அதிபர் சு.நடராசா அவர்களின் அன்புத்தாயாரின் நினைவு அஞ்சலியில் நாமும் கலந்து கொள்கின்றோம்.

தகவல்: கோட்டக்கல்விப் பணிப்பாளரும், அதிபர்களும், கரைச்சிக் கோட்டம், கிளிநொச்சி.

(28535)(6.7.4)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பெரும்பாலும் மேகக் கூட்டத்துடன் கூடிய காலநிலை நிலவும்.

# சட்டவிரோதமாக கல் அகழ்வு; தடுத்து நிறுத்தக் கோரிக்கை

**சரசாலை வடக்கு அரச காணியில்**

தென்மராட்சி, ஜன.23

சரசாலை வடக்குப் பகுதியில் அரச காணியில் சட்ட விரோதமாக கல் அகழ்வு நடைபெற்று வருகிறது. அதனால் அந்தப் பகுதியில் பொதுமக்களால் அமைக்கப்பட்ட வீதியும் கல் அகழ்வோரால் சேதப் படுத்தப்படும் நிலை காணப் படுகிறது. கல் அகழ்வோரைத் தடுக்கச் செல்லும் பொது மக்கள் அச்சுறுத்தப்படுகின்றனர் என்று பிரதேசத்தவர்கள் தெரிவிக்கின்றனர்.

சரசாலை நுணாவில் பிள்ளையார் கோயிலுக்கு அருகில் உள்ள அரச காணியிலேயே சட்ட விரோத கல் அகழ்வு இடம்பெறுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தக் காணியின் அருகே சரசாலை வடக்கு மயானத்துக்குச் செல்லும் வீதி குன்றும் குழியுமாகக் காணப்பட்டது. நாடாளு மன்ற உறுப்பினர் வழங்கிய நிதியுடனும் பிரதேச மக்களின் நிதிப் பங்களிப்புடனும் வீதி புனரமைக்கப் பட்டது. ஆனால் கல் அகழ்வோர் தற்போது வீதியோரத்தில் கற்களை அகழ்ந்தெடுத்து வருகின்றனர். இதனால் புனரமைக்கப்பட்ட வீதியும் பாதிக்கப்படும் நிலையில் உள்ளது.

உரிய அதிகாரிகள் இவ் விடயத்தில் கவனமெடுத்து கல் அகழ்வைத்தடுத்து நிறுத்துமாறு அந்தப் பகுதி மக் கள் கேட்டுள்ளனர். (3-9)

# வல்வை நகரத்தின் ஒழுங்கைகள் வீதிகளுக்குப் பெயர்ப் பலகைகள்




வல்வெட்டித்துறை நகர எல்லைக்குள் உள்ள வீதிகள் மற்றும் ஒழுங்கைகளுக்கு பெயர்ப்பலகைகள் நடப்பட்டு வருகின்றன. பெயர்ப்பலகைகள் நடப்படும் முயற்சி முதல் தடவையாக இந்த நகரப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இதன் மூலம் வல்வெட்டித்துறை நகருக்குப் புதிதாக வருபவர்கள் மட்டுமல்லாது, நகர எல்லைக்குள் வாழ்பவர்களும் கூட வீதிகளின் பெயர்களை எளிதில் அறிந்து கொள்ளக் கூடியதாக உள்ளது.

இதுவரை 33 வீதிகளுக்கான பெயர்ப்பலகைகள் நடப்பட்டுள்ளன எனத் தெரிவித்த வல்வெட்டித்துறை நகர சபைத் தலைவர் ந.அனந்தராஜ் மேலும் 80 வீதிகளுக் கான பெயர்ப்பலகைகள் நடப்படவுள்ளன எனவும் தெரிவித்துள்ளார். (10-8)

# கடல் கொந்தளிப்பால் அகதிகள் வரவு குறைவு

**எனினும் 65 பேர் கிறிஸ்மஸ் தீவு சென்றடைந்தனர்**

கடந்த ஞாயிற்றுக்கிழமையன்று 65 அகதிகளை ஏற்றிய இரண்டு படகுகள் ஆஸ்திரேலியா அதிகாரிகளால் வழிமறிக்கப் பட்டன.

அவர்கள் கிறிஸ்மஸ் தீவுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

ஆஸ்திரேலியா கடற்பகுதியில் காணப்படும் கொந்தளிப்புக் காரணமாகக் கடந்த சில நாள்களாக நாட்டுக்குள் வரும் சட்ட விரோத அகதிகளின் எண்ணிக்கை குறைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜனவரி மாதத்தில் 300 அகதிகள் ஆஸ்திரேலியாவுக்கு வந்துள்ளனர்.

கடந்த ஆண்டில் மாத்திரம் மொத்தமாக 17,202 அகதிகள் ஆஸ்திரேலியாவுக்குள் சட்டவிரோதமாக வந்தனர்.

எனினும் 2013 ஜனவரியில் 188 அகதிகளே படகுகள் மூலம் வந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (3)

# 'புதிர் எடுத்தல்' விஷேட பூசை இன்று

வடமராட்சி, ஜன.23

கரவெட்டி அருள்மிகு வெல்லன் விநாயகர் கோயிலில் புதிர் எடுத்தல், புதிர் உண்ணல் விஷேட பூசை இன்று புதன்கிழமை காலை நடை பெறும்.

கோயிலைச் சூழவுள்ள விவசாயிகள் கடந்த வியாழக்கிழமை நெல் வயல்களில் இருந்து புதிர் எடுத்து இந்தக் கோயிலில் கையளித்ததைத் தொடர்ந்து புதிர் எடுத்தலுக்கான விஷேட பூசை நடைபெற்றது.

அந்தப் புதிரைச் சமைத்து இன்று புதன் கிழமை கோயிலில் படைத்து விஷேட பூசை நடைபெற்று புதிரிலிருந்து சமைத்த அமுது வழங்கப்படும்.

வடமராட்சி அருள்மிகு ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் கோயிலில் இன்று புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு புதிர் எடுத்தல் விஷேட பூசை நடைபெறவுள்ளது. நெல் அறுவடையை நோக்கியுள்ள விவசாயிகள் அறுவடைக்கு முன்னதாக எடுக்கும் புதிரை வல்லிபுரக் கோயிலில் கையளித்து விஷேட பூசைக்கு வைத்துள்ளார்கள்.

இந்தப் புதிரிலிருந்து பெறப்பட்ட புத்தரிசியில், எதிர்வரும் தைப்பூசத் தினத்தன்று(27 ஆம் திகதி ஞாயிறு) கறி சோறாக்கி விஷேட பூசையின் பின்னர் பக்தர்களுக்கு வழங்கப்படும். (3-8)

★ ★ ★


# மரண அறிவித்தல்

## திருமதி செல்லப்பா சம்பூரணம்

சண்டிலிப்பாய் மத்தியைப் பிறப்பிடமாகவும், லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லப்பா சம்பூரணம் 19-01-2013 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக்கம் - சின்னாச்சி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற செல்லப்பாவின் அன்பு மனைவியும், நாகரஞ்சினி, ஜெயரஞ்சினி, ஜெகதீசன், திலகதீசன், யசோறஞ்சினி, மனோதீசன், பிறேமரஞ்சினி ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்ற குமாரசாமி மற்றும் சகுந்தலா ஆகியோரின் அருமைச் சகோதரியும், இராசேந்திரம், தியாகராஜா, சிவஞானதாஸ், சுந்தரராஜன், சந்தியா, சந்திரகலா, ஜெனிதா ஆகியோரின் பாசமிகு மாமியும், காலஞ்சென்றவர்களான மீனாட்சி, ஐயாத்துரை மற்றும் பரமேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும், காலஞ்சென்ற இராசேந்திரம் மற்றும் சுந்தரமூர்த்தி ஆகியோரின் உடன்பிறவா சகோதரியும், தனூஜன், அனூஜன், நிரோஜன், துளசி, லாவண்யா, நிசாந், டொனிக்சன், மிறோசன், டினாத், துசாரா, சிந்துஜன், மோனிஷா, றஜீத், சயித், பிறீத்திகா, பிரவீன், சுஜீனா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.



அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24-01-2013) வியாழக்கிழமை காலை 9.00 மணி முதல் 11.45 வரை நடைபெற்று, பின்னர் ST.MARYLE CREMATORIUM, EAST END ROAD, LONDON, NZ0RZ என்னும் முகவரியில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சண்டிலிப்பாய் மத்தி, சண்டிலிப்பாய். தொடர்புகளுக்கு:
செ.மனோதீசன் - தொலைபேசி:
00442089084841, 07985521155,
07940232242,07404359877

தகவல்
குடும்பத்தினர்

(28599) (6.7.2)



# ஓராண்டு நினைவஞ்சலி

"உயிர்ப்பும் உயிரும் நானே
என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பிலும் வாழ்வான்"



அன்னை மடியில்
05.05.1937

ஆண்டவர் அடியில்
23.01.2012

## திருமதி கரல்ட் ராணி றெஜினா

இதயம் இத்துயர் சுமந்து ஓராண்டு ஆனாலும்
நித்தம் உமை நினைத்தே நிம்மதி இழக்கின்றோம்
குடும்பத்தின் ஒளி விளக்காய் துணையாய் எம்முடன் இருந்தீர் - இன்று
ஆயிரம் உறவுகள் இருந்தாலும் அம்மா, அம்மம்மா என்றழைத்து மகிழ
உறவில்லையே! மீண்டும் எம் குடும்பத்தில் வந்து பிறக்க
இறைவனை வேண்டுகின்றோம்

120/3, சொலமன் லேன்,
கொய்யாத்தோட்டம்,
யாழ்ப்பாணம்.

பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்,
மருமக்கள், பேரன்.

(28557)(6.7.2)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0212267111

## ஜனா கொம்பியூட்டர்

பின்வரும் பொருள்கள் விற்பனைக்கு உண்டு. 10,000/= ரூபாவில் இருந்து கொம்பியூட்டர்களும், 6000/= ரூபாவில் இருந்து ரி.விகளும் மற்றும் கொம்பியூட்டர் உதிரிப் பாகங்களும், கொம்பியூட்டர் கேம்ஸ், சொவ்ற்வெயர் என்பனவும் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 0777508908. (26306) (6.7.2))
இல.295, ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோவில் வீதி, உதயநகர் மேற்கு.

# அகலிப்புப் பணிக்காக வீதிகள்மூடல்

யாழ்ப்பாணம்,ஜன.23

வீதி அகலிப்பு பணி காரணமாக இன்று புதன் கிழமை முதல் 27 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை வரை மானிப்பாய்- இணுவில்- அன்னங்கை வீதியில் இணுவில் சந்தியில் இருந்து சிவகாமி அம்மன் கோவில் வீதி சந்திவரையான பகுதி இன்று தொடக்கம் எதிர்வரும் 26 ஆம் திகதி சனிக்கிழமை வரையும், கோண்டாவில் இருபாலை வீதியில் உள்ள கோண்டாவில் சந்தியில்இருந்து இராச வீதிச் சந்தி வரையான பகுதி 24 ஆம் திகதி முதல் 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை மூடப்பட்டிருக்கும் என்று மாகாண வீதிகள் செயல் திட்டமிடல் பணிப்பாளர் எந்திரி சி.பூ.சிவநேசன் தெரிவித்துள்ளார்.

வீதி மூடப்பட்டிருக்கும் காலப் பகுதியில் மானிப்பாய்-இணுவில்-அன்னங்கை வீதியி பயணிப்போர் இணுவில் மத்திய கல்லூரிக்கு முன்பாக சிவகாமி அம்மன் கோவில் வீதியையும், கோண்டாவில் இருபாலை வீதியில் பாயணிப்போர் திருநெல்வேலி பாற்பண்ணை வீதியையும் போக்குவரத்துக்காக பயன்படுத்துமாறு தெரிவித்துள்ளார்.

(ம-13)

## மக்கள் வங்கி அறிவித்தல்

மக்கள் வங்கியின் பின்வரும் கிளைகளிலும் சேவை நிலையங்களிலும் 31.12.2011 வரையும் அடகு வைத்து (மீட்புக்காலம் ஒரு வருடத்திற் கானது) மீட்கப்படாத நகைகளும்,30.06.2012 வரையும் அடகு வைத்து (மீட்புக் காலம் ஆறு மாதத்திற்கானது) மீட்கப்படாத நகைகளும்- 16.03.2013, 17.03.2013 ஆகிய தினங்களில் காலை 8.30 மணிக்கு மக்கள் வங்கி, யாழ்.ஸ்ரான்லி வீதிக் கிளையில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| கிளைகள் | சேவை நிலையம் |
|---|---|
| யாழ். ஸ்ரான்லி வீதி | நாவலர் வீதி |
| | மானிப்பாய் |
| காங்கேசன்துறை | மல்லாகம் |
| யாழ்.பிரதான வீதி | உரும்பிராய் |
| ஊர்காவற்றுறை | -- |
| நெல்லியடி | -- |
| அச்சுவேலி | புத்தூர் |
| சங்கானை | பண்டத்தரிப்பு |
| சுன்னாகம் | கோப்பாய் |
| | அளவெட்டி |
| சாவகச்சேரி | கொடிகாமம் |
| வல்வெட்டித்துறை | உடுப்பிட்டி |
| யாழ்.பல்கலைக்கழகம் | திருநெல்வேலி |
| | கல்வியங்காடு |
| யாழ்.கன்னாதிட்டி | இணுவில் |
| பருத்தித்துறை | புலோலி |

அறிவித்தலின்றி திகதியை ஒத்திப் போடுவதற்கும் ஏலம் விடப்படும் இடத்தினை மாற்றுவதற்கும் உரிமை வங்கிக்கு உள்ளது.

பிராந்திய முகாமையாளர்,
மக்கள் வங்கி, பிரதேச காரியாலயம்,
கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.

(சி/5768)(5-6-7)

## மரண அறிவித்தல்

# கனகசுந்தரம் சிவராசா

(மினிபஸ் உரிமையாளர், கொடிகாமம்- யாழ்ப்பாணம்)



கொயிலாமனை, கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கனகசுந்தரம் சிவராசா (19.01.2013) சனிக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற வை.கனகசுந்தரம் மற்றும் நல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும் ஆறுமுகம் - தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் கமலாதேவியின் அன்புக்கணவரும் சிவரஞ்சன் (கனடா), சிவரஞ்சினி (ஆசிரியை- கொடிகாமம் அரசினர் வித்தியாலயம்), சிவப்பிரியா ஆகியோரின் அன்புத் தந்தையும் கலைவாணி(கனடா), சுபாஸ்கரன் ஆசிரியர் (கண்டி/அஷார் கல்லூரி) ஜீவநேசன் (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனும் சிவரூபவதி, சிவநேசவதி (வவுனியா) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், யோகலிங்கம், அமிர்தலிங்கம் (வவுனியா) ஆகியோரின் அன்பு மைத்துனரும், கம்சிகா (கனடா), ஷியாநிஷா (கனடா), கபிநாஷ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.01.2013) வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு தகனக்கிரியைக்காக கொடிகாமம் சோனப்பு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

கொயிலாமனை,கொடிகாமம்.
T.P:0773669620, 0779181449. (28505) (6.7.2)

## பொது மக்களுக்கான அறிவித்தல்

### பொதுமக்களிடமிருந்து வைப்புக்களை ஏற்றுக் கொள்வதற்கு இலங்கை மத்திய வங்கியினால் உரிமமளிக்கப்பட்ட நிறுவனங்கள்

(31.12.2012 இல் உள்ளவாறு, அகரவரிசைப்படி)

### உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள்

1. அக்சிஸ் பாங்க் லிமிடெட்
2. அட்டன் நசனல் பாங்க் பிஎல்சி
3. அமானா பாங்க் லிமிடெட்
4. இந்தியன் ஓவசீஸ் பாங்க்
5. இந்தியன் பாங்க்
6. இலங்கை வங்கி
7. எம்சிபி பாங்க் லிமிடெட்
8. ஐசிஐசிஐ பாங்க் லிமிடெட்
9. ஹபிப் பாங்க் லிமிடெட்
10. கொமர்ஷல் பாங்க் ஒவ் சிலோன் பிஎல்சி
11. சம்பத் பாங்க் பிஎல்சி
12. சிற்றி பாங்க் என்ஏ
13. செலான் பாங்க் பிஎல்சி
14. டீஎவ்சீசீ வர்தன பாங்க் பிஎல்சி
15. டொயிச் பாங்க் ஏஜீ
16. த ஹொங்கொங் அன்ட் சங்காய் பாங்கிங் கோப்பிரேசன் லிமிடெட்
17. நெசனல் டிவலொப்மன்ட் பாங்க் பிஎல்சி
18. நேசன்ஸ் ரஸ்ட் பாங்க் பிஎல்சி
19. பப்ளிக் பாங்க் பெர்காட்
20. பான் ஏசியா பாங்கிங் கோப்பிரேசன் பிஎல்சி
21. மக்கள் வங்கி
22. யூனியன் பாங்க் ஒவ் கொழும்பு பிஎல்சி
23. ஸ்ரான்டட் சார்ட்டட் பாங்க்
24. ஸ்ரேற் பாங்க் ஒவ் இந்தியா

### உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள்

1. அரச ஈட்டு முதலீட்டு வங்கி
2. இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி
3. எம்பீஎஸ்எல் சேவிங்ஸ் பாங்க் லிமிடெட்
4. சணச டிவலொப்மன்ட் பாங்க் பிஎல்சி
5. சிறிலங்கா சேவிங்ஸ் பாங்க் லிமிடெட்
6. டிஎவ்சீசீ பாங்க்
7. தேசிய சேமிப்பு வங்கி
8. பிரதேசிய சங்வர்த்தன பாங்க்
9. லங்காபுத்திர டிவலொப்மன்ட் பாங்க் லிமிடெட்

### உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள்

1. அபான்ஸ் பினான்ஸ் பிஎல்சி
2. அலயன்ஸ் பினான்ஸ் கம்பனி பிஎல்சி
3. அசோசியேட்டட் மோட்டார் பினான்ஸ் கம்பனி பிஎல்சி
4. ஆர்பிகோ பினான்ஸ் கம்பனி பிஎல்சி
5. ஈ.ரி.ஐ பினான்ஸ் லிமிடெட்
6. எம்சிஎஸ்எல் பினான்ஷியல் ஸர்விஸஸ் லிமிடெட்
7. எல் பீ பினான்ஸ் பிஎல்சி
8. ஏசியன் பினான்ஸ் லிமிடெட்
9. ஏஎம்டபிள்யூ கபிட்டல் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
10. ஏசியா அசெற் பினான்ஸ் பிஎல்சி
11. ஐடியல் பினான்ஸ் லிமிடெட்
12. ஓரியன்ட் பினான்ஸ் பிஎல்சி
13. கன்றிச் பினான்ஸ் லிமிடெட்
14. கப்பிட்டல் எலையன்ஸ் பினான்ஸ் பிஎல்சி
15. கொமர்ஷல் கிறடிட் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
16. கொமர்ஷல் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
17. சிங்கர் பினான்ஸ் (லங்கா) பிஎல்சி
18. சிலோவ் பினான்ஸ் பிஎல்சி
19. சிங்கபுத்ர பினான்ஸ் பிஎல்சி
20. சிட்டி பினான்ஸ் கோப்பிரேசன் லிமிடெட்
21. சிற்றிசன்ஸ் டிவலொப்மென்ட் பிசினஸ் பினான்ஸ் பிஎல்சி
22. சென்றல் இன்வெஸ்ட்மன்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
23. சென்றல் பினான்ஸ் கம்பனி பிஎல்சி
24. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி
25. சொவ்ற்லொஜிக் பினான்ஸ் பிஎல்சி
26. ட்ரேட் பினான்ஸ் அன்ட் இன்வெஸ்ட்மன்ட்ஸ் பிஎல்சி
27. த பினான்ஸ் கம்பனி பிஎல்சி
28. த ஸ்ரான்டட் கிறடிற் பினான்ஸ் லிமிடெட்
29. தேசோதய டெவலப்மென்ட் பினான்ஸ் கம்பனி லிமிடெட்
30. நந்தா இன்வெஸ்ட்மன்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
31. நேஷன் லங்கா பினான்ஸ் பிஎல்சி
32. பார்ட்லீட் பினான்ஸ் பிஎல்சி
33. பிம்புத் பினான்ஸ் பிஎல்சி
34. பிரைம் கிராமின் மைக்ரோ பினான்ஸ் லிமிடெட்
35. பீப்பிள்ஸ் பினான்ஸ் பிஎல்சி
36. பீப்பிள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
37. பீப்பிள்ஸ் மர்ச்சன்ட் பினான்ஸ் பிஎல்சி
38. மல்ரி பினான்ஸ் பிஎல்சி
39. மர்க்கன்டைல் இன்வெஸ்ட்மன்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
40. மெல்ஸ்டா ரீகல் பினான்ஸ் லிமிடெட்
41. யூ பீ பினான்ஸ் கம்பனி லிமிடெட்
42. ரிகேஎஸ் பினான்ஸ் லிமிடெட்
43. ரிச்சர்ட் பீரிஸ் ஆர்பிகோ பினான்ஸ் லிமிடெட்
44. லங்கா ஓறிக்ஸ் பினான்ஸ் பிஎல்சி
45. வெலிபல பினான்ஸ் பிஎல்சி
46. ஸ்வர்ணமகால் பினான்ஷியல் ஸர்விஸஸ் பிஎல்சி
47. ஜோர்ஜ் ஸ்டுவர்ட் பினான்ஸ் பிஎல்சி

### நினைவில் வைத்துக்கொள்ள வேண்டிய விடயங்கள்

- மேற்கூறப்பட்ட நிறுவனங்கள் அவற்றின் வர்த்தக நடவடிக்கைகளை மதிநுட்பமாக நடாத்துவதை ஊக்குவிப்பதன் மூலம் பொதுமக்களின் வைப்புக்களைப் பாதுகாப்பதற்காக மத்திய வங்கிக்கு அவற்றை ஒழுங்குபடுத்தி மேற்பார்வை செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனினும், வைப்புக்களுக்கு உத்தரவாதம் அளிக்கவோ அல்லது இதில் ஏதாவதொரு நிறுவனம் ஒருபோதும் முறிவடையாது என்று உறுதிப்படுத்தவோ சட்டரீதியான அதிகாரம் மத்திய வங்கியிடம் கிடையாது. மத்திய வங்கி, அதனால் மேற்பார்வை செய்யப்படும் ஒரு வங்கி அல்லது ஒரு நிதிக் கம்பனி முறிவடையுமிடத்து வைப்பாளர் ஒருவருக்கு அவரின் மொத்த வைப்புக்களின் தொகையில் உயர்ந்த பட்சம் ரூபா 200,000 கொண்ட தொகையினை 2012 சனவரி 01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும்வகையில் மீள்கொடுப்பனவு செய்யப்படுவதற்கு உத்தரவாதம் அளிப்பதற்காக வைப்புக் காப்புறுதி திட்டமொன்றை அறிமுகப்படுத்தியுள்ளது.
- மேலுள்ள ஏதாவதொரு நிறுவனமொன்றில் பணத்தை வைப்பிலிடும்போது தயவுசெய்து உங்கள் வைப்புக்களின் பாதுகாப்பு தொடர்பாக அதிக கவனம் செலுத்தல் வேண்டும்.

## இலங்கை மத்திய வங்கி

வங்கிகள் - தொ.பேசி.: 2477100, 2477105, 2477120, 2477129 தொநகல்: 2477711, மின்னஞ்சல்: banksup@cbsl.lk
நிதிக் கம்பனிகள் - தொ.பேசி.: 2477500, 2477504 தொநகல்: 2477738, மின்னஞ்சல்: secdsnbfi@cbsl.lk

(சி/5936) (6.7.2)

# அறுபதாவது அகவை நிறைவில் - பிறந்தநாள் வாழ்த்து

## யா/வயாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தின் அதிபராக இருந்து இக்கல்லூரியில்

## 12 வருட சேவை நிறைவில் ஓய்வு பெறும்

## திருவாளர் கந்தையா கனகராசா அவர்களின்

# சேவை நலன் பாராட்டுவிழா - 23.01.2013




### அர்ப்பணிப்பான சேவையுடையவர்

மாணவச் செல்வங்களை கலங்கரை விளக்கமாக வழிகாட்டிஏணி ஏற்றிய அதிபர் க.கனகராசா இன்று ஓய்வெடுக்கும் திருநாள். கல்லூரியின் முதல்வர் மதிப்புக்குரிய க. கனகராசா அவர்கள் யா/வ.ம.ம. வித்தியாலயத்தில்13 வருடங்களாக அளப்பரிய சேவையாற்றி 23.01.2013 இல் ஓய்வு பெறும் கனகராசா அதிபர் அவர்களை உளமார வாழ்த்துவதோடு, அவருக்கு இறைவன் நல்ல உடல் ஆரோக்கியத்தையும் மகிழ்வான வாழ்க்கையையும் தொடர்ந்தும் வழங்க வேண்டும் என்று பிரார்த்திக்கின்றேன்.மேலும் இப்பாடசாலை தனது சொந்த இடத்திற்கு தடம் பதித்தது. அதனை உச்ச நிலை வரை வளர்க்க பெரும் பாடுபட்டவர் தான் எங்களுடைய அதிபர் கனகராஜா. இவ்வாறு பற்பல வளர்ச்சிக் கட்டங்களுக்கு செல்ல உறுதுணையாக இருந்த கல்லூரி முதல்வர் அவர்களை மீண்டும் மீண்டும் நான் பாராட்டுகின்றேன்.

"கல்வி என்ற கடலைக் கடக்க கனிவுடன்வந்த
கருணை மகான்
துடுப்பாய் வாழ்வில் நமக்காய் வந்து தூரம்
வரையில் கொண்டு சேர்த்து உலகம் விளங்க
விளைச்சல் பெருக்கி ஊரார் புகழ உத்த
மனாக்கி கைம்மாறு ஏதும் எதிர்பாரா கலியுக
கடவுளாகிய நம் ஆசானுக்கு
எனது ஆசிகளை வழங்குகின்றேன்.

சிவப்பிரம்ம ஸ்ரீ கிருஷ்ணசாமிக்குருக்கள்
(புன்னாலைக் கட்டுவன்)

### நேர்த்தியான ஆளுமை உடையவர்

சேவைகளுக்குள் ஆசிரியர், அதிபர்,குரு சேவைகள் மிகவும் உன்னதமானதும் புனிதமானதும் 'ஆகும்.எண்ணிற் கடங்காத பிள்ளைகளை உருவாக்குவதிலே மிகவும் பாராட்டுக்குரிய சேவையாக மதிக்கப்படுகின்றது.இந்த வரிசையில் எமது அதிபர் உயர் திரு க.கனகராசா அவர்கள் மிகவும் உன்னதமானவர், உயர்ந்தவர் என்று சொன்னால் மிகையாகாது. பல்வேறு இடப்பெயர்வுகள், வசதியீனங்கள், துன்பங்கள்,சவால்கள்,பின்னடைவுகள், தோல்விகள் வந்த போதிலும் பாடசாலையைஉயர்த்துவதிலேயே முழுமூச்சாக இருந்தார்.சிறந்த ஒரு நிர்வாகி,பரந்த மனப்பான்மை கொண்டவர். தான் எடுத்துக் கொண்ட பணியினை செய்வதில் ஏற்பட்ட சவால்கள், துன்பங்களை எல்லாம் களைந்து தனது பாதையில் வெற்றிநடை போட்டவர்.நேர்த்தியான ஆளுமையுடைய இவர் தனது பணியில் ஓய்வு பெற்றாலும் அவர் வாழ்வில் தொடர்ந்தும் பல நலன்களையும் பெற்றுவாழவும் இன்று 60 ஆவது பிறந்த தினத்தை கொண்டாடும் அவரை நீடூழி காலம் வாழவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

அருட்பணி யூட்நிக்சன்,
தூயமிக்கேல் ஆலயம், உரும்பிராய்.

### பீனிக்ஸ் பறவையாக உருவாக்கியவர்

வயாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தின் அதிபர் உயர் திரு.க.கனகராசா அவர்கள் ஓய்வுபெறுவதையிட்டு அவரை பாராட்டும் முகமாக இவ் வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

ஒரு பாடசாலையின் அதிபர் எவ்வாறெல்லாம் இருக்க வேண்டும் என்ற எல்லோரதும் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப சகல விழுமியங்களும் தன்னகத்தே கொண்ட அதிபராக கனகராசா அவர்கள் விளங்கினார் என்று கூறுவது சாலப்பொருத்தமாகும்.

வயாவிளான் மத்திய மகாவித்தியாலயம் யுத்தத்தின் சகல வடுக்களையும் சுமந்த பாடசாலையாகும் நீண்ட இடப்பெயர்வினால் மனிதவளம், பௌதீக வளம், செயல்பாட்டுப் பிரதேசவளம் என அனைத்தையும் இழந்து அகதியாக நின்ற பாடசாலையாகும். இருந்த போதும் பீனிக்ஸ் பறவையாய் மீண்டும் அதே அழகுடன் அதே இடத்தில் மிடுக்குடன் நிமிர்ந்து நிற்கின்றதை காணும் போது கல்விச் சமூகத்திற்கு மட்டுமல்லாமல் அனைவருக்கும் மனமகிழ்ச்சியை ஏற்படுத்துகின்றது. இந்த மகிழ்ச்சியின் மூலகர்த்தாவாக செயல்பட்டவர் அதிபர் கனகராசா அவர்கள். இடம் பெயர்ந்த கல்லூரியை உரும்பிராயில் பல சிரமங்கள், வசதியீனங்கள் மத்தியில் இயக்கி தனக்கான மட்டுப்படுத்தப்பட்டளவிலேனும் வளங்களை உருவாக்கி சொந்தப் பிரதேசத்துக்கு செல்லக் கூடிய நிலை உருவாகியதும் எவ்வித தயக்கமும் இன்றி அங்கு சென்று தேவையான பௌதீக வளங்களையும், மனிதவளங்களையும் பெற்றுச் சிறப்பாக செயற்படுகின்றது. அதிபரின் சிறப்பான சேவையை நன்றி உணர்வுடன் பாராட்டுவதில் நானும் இணைந்து கொள்வதையிட்டு பெருமையடைகின்றேன் இவரின் ஓய்வு காலம் மகிழ்ச்சியாக அமைய வாழ்த்துகின்றேன்.

இ.இளங்கோவன்
ஆளுநரின் செயலாளர், வட மாகாணம்.

### கடமை, கண்ணியம், கட்டுப்பாடு உடையவர்

வசாவிளான் மகாவித்தியாலயத்தின் வளர்ச்சிக்கு அயராது உழைத்து மணிவிழா காணும் அதிபர் க.கனகராசா அவர்களுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

ஆசிரியராகக் கல்விப்புலத்திலே தடம்பதித்துத்தளராத சேவையினால் அதிபராக பதவியுயர்வு பெற்றுச் சேவைக்கென்றே தன்னை அர்ப்பணித்தவர் க.கனகராசா அவர்களின் பன்னிரு வருட அதிபர் பணியில் வசாவிளான் மத்திய மகவித்தியாலயம் இடம் பெயர்ந்த நிலையிலும் தலை நிமிர்ந்து கல்விப்பணிபுரிந்தது. இப்பாடசாலை இடம்பெயர்ந்து உரும்பிராயில் இயங்கிய காலத்தில் அக்கிராமத்தில் சகல வளங்களையும் கொண்டு சொந்த இடத்தில் இயங்கிய பாடசாலைகளுக்குச் சவாலாக விளங்கியது. அக்கிராமத்தைச் சொந்த இடமாகக் கொண்ட மாணவர்களே இப்பாடசாலையை நாடி வந்தனர். இதற்குக் காரணமாக இருந்தவர்களில் க.கனகராசாவும் ஒருவர். இப்பாடசாலை சொந்த இடத்திற்கு மீண்டபோதும் எவ்வித தளர்வுமின்றிப் பாடசாலையை இயங்க வைத்தபெருமை இவரையே சாரும். அவரது அயராத முயற்சியினால் இம் மகாவித்தியாலயம் புதுப்பொலிவுபெற்று அழகாகக் காட்சியளிக்கிறது. இப்பாடசாலையின் வரலாற்றில் க.கனகராசா நிச்சயம் இடம் பெறுவர். மணி விழாக் காணும் அதிபர் கனகராசா பல்லாண்டு காலம் வாழ வாழ்த்து கிறேன்.

வ.செல்வராசா
மாகாணக் கல்விப்பணிப்பாளர்-வடமாகாணம்.

★அதிபரின் மணிவிழா நிகழ்வுகள் பாடசாலை மண்டபத்தில் 31.01.2013 வியாழக்கிழமை அன்று நடைபெறும் என்பதை பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

| | |
|---|---|
| முழுப்பெயர் - | கந்தையா கனகராசா- (B.A HONS P.G.D.E. M.E.D SLPS-1) |
| பிறந்த திகதி - | 1953.01.23 |
| ஆரம்பக் கல்வி- | இணுவில் இந்துக் கல்லூரி |
| இடைநிலைக் கல்வி- | யா/ஏழாலை ம.வி.1960-1969 |
| | யா/யூனியன் கல்லூரி 1969-1971 |
| | யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி-1971-1973 |
| உயர் கல்வி- | யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்-1975-1979 |

**சேவை விபரம்**

| | |
|---|---|
| தொழில்- | 01. ஆசிரியர்- திரியாய் மகா வித்தியாலயம் திருகோணமலை (1982-1984) |
| | 02. திரி/சாம்பல் தீவு மகா வித்தியாலயம் திருகோணமலை (1984-1986) |
| | 03. கிளி/கயவெட்டித் திடல் நாகேஸ்வரி வித்தியாலயம் (1986 -1990) |
| | 04. அதிபர்-கிளி/வேம்பொடுகேணி சி.சி.த.க பாடசாலை 1990 மே முதல் 1997 டிசெம்பர். |
| | 05. யா/ இணுவில் இந்துக் கல்லூரி 1998 ஜனவரி முதல் 2001 யூலை |
| | 06. யா/வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம் 2001 ஓகஸ்ட் -2013 ஜனவரி |
| கல்வித் தகைமை- | B.A(Hons) PGD.in.Ed, M- Ed, SLPS-1. |

### அமைதியான சாதனையுடையவர்

அதிபர் க. கனகராசா அவர்கள் 12 ஆண்டுகள் எவ்வித தளர்ச்சியுமின்றி பாடசாலை செயற்பாடுகளை முன்னகர்த்திச் சென்றார் என்பது சாதாரண விடயமல்ல. பாடசாலை இலக்கை நோக்கிய பயணத்தில் தான் வகுத்துக் கொண்ட தனிவழியிலே பாடசாலை சமூகத்தவர் அனைவரையும் அழைத்துச் சென்று வெற்றிவாகை சூடியிருப்பது அதனைவிட முக்கியமான விடயம். அட்டகாசம், ஆரவாரம் இன்றி அமைதியான முறையிலே அந்த சாதனையைப் படைத்திருப்பது எல்லாவற்றிற்கும் மேலான விடயம். நெருக்கீட்டு முகாமைத்துவ செயற்பாட்டினும் தலைநிமிர்ந்து நின்றவர். கௌரவ ஜனாதிபதி அவர்களிடம் இருந்து வடமாகாணத்தின் சிறந்த அதிபர் என்ற அதிஉயர் விருதினையும் பெற்றார்.

ஒரு பாடசாலையின் வெற்றி என்பது ஒன்றுபட்ட ஆசிரியர்களின் அன்பான அர்ப்புணிப்புடனான சேவை, ஒழுக்கமும் கட்டுப்பாடும் கொண்ட மாணவர் கல்வி மற்றும் இணைப்பாட விதானத்தில் காட்டும் ஊக்கம், பெற்றோர் பழையமாணவர்கள் மற்றும் நலன் விரும்பிகளின் ஒத்துழைப்பு இன்றி சாத்தியமே இல்லை - என்பதனை உணர்ந்து செயற்பட்டவர் தான் அதிபர் க. கனகராசா அவர்கள்.

வெற்றித்திருமகனான மேன் மக்களில் ஒருவராக போற்றப்படவேண்டிய அதிபர் க. கனகராசா அவர்கள் அருட்பேராற்றலின் கருணையினால் உடல் நலம், உளநலம், ஆன்மீக நலம், சமூக நலம், நீளாயுள், நிறைசெல்வம், உயர் புகழ், மெய்ஞானம் பெற்று பெருவாழ்வு வாழ வாழ்த்துவதில் பேரானந்தமும், பேரமைதியும் அடைவோமாக.

T.V. கிருஸ்ணசாமி, செயலாளர், பழைய மாணவர் சங்கம்.

### கடமை வீரன்

யா/வயாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தில் கடந்த 12 வருடகால சேவையாற்றி ஓய்வு பெறும் அதிபர் க.கனகராஜா அவர்களைப் பாராட்டுவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். இடம்பெயர்ந்து உரும்பிராயில் இயங்கிய போது அதிபராகப் பொறுப் பேற்று பல்வேறு வழிகளிலும் உயர்ச்சி பெற வைத்த பெருமை அவரையே சாரும். ஏறத்தாழ 20 வருடங்களின் பின் மீளத் திறக்கப்பட்ட பாடசாலை மீண்டும் புதுப் பொலிவுடன் வீறு நடை போடுவதற்கு காரணமாக உழைத்தஅதிபர் எல்லோரதும் பாராட்டுக்களைப் பெற்றவர்.ஜனாதிபதி அவர்களால் வழங்கப்பட்ட குருபிரதீபா பட்டம் இவருக்குக் கிடைத்தது. மேலும் அதிபரின் சேவையை மேலோங்கச் செய்தது. இவரின் ஓய்வுக்காலம் சிறப்புற அமைய வாழ்த்துகின்றேன்.

சு.சண்முககுல குமரன் M.ED.
கோட்டக் கல்விப் பணிப்பாளர், தெல்லிப்பழை.

### சிறந்த சேவகன்

கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டைத் தனது அணிகலனாக மட்டுமன்றி வயாவிளான் மத்திய மகாவித்தியாலயத்திற்கும் அவ்வணிகலனைப் பூண்டு செயலாற்றிய உத்தமன் செயல் வீரனது அறுபதாம் ஆண்டு அகவையில் அவரை வாழ்த்துவதில் மட்டற்ற மகிழ்வடைகின்றேன். வலிகாமம் வலயத்தில் மட்டுமன்றி வடக்கு மாகாணத்திலேயே சிறந்த அதிபராக மிளிர்ந்தவர் எனப்பெருமையுடன் கூறுகின்றேன். தனது கல்லூரியின் உயர்வில் அர்ப்பணிப்புடன் செயலாற்றியவர். ஓய்வுபெறும் இந்நாளில் வாழ்வில் நிறைந்த செல்வங்களும் பெற்று நூறாண்டு வாழ வாழ்த்துகின்றேன்.

ப.விக்னேஸ்வரன்
பிரதிச் செயலாளர், மாகாணக் கல்வி அமைச்சு, யாழ்ப்பாணம்.

### செயல்வீரன்

வயாவிளான் மத்திய மகா வித்தியாலய அதிபர் கனகராசா அவர்களின்பாராட்டு விழாவை முன்னிட்டு வெளியிடப்படும் மணிவிழா மலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

**"தோன்றிற் புகழோடு தோன்றுக அதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று"**

என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாக்கிற்கமைய க.கனகராசா அவர்கள் ஆசிரியராக அதிபராக இருந்து கல்வித்துறைக்கு அளப்பரிய சேவையாற்றியவர் என்பது பெருமைக்குரிய விடயமாகும்.

இப் பாடசாலை தனது சொந்த இடத்தை விட்டு இடம்பெயர்ந்து உரும்பிராயில் 1500 மாணவர்களுடன் செயற்பட்டு வந்தகாலப்பகுதியிலும் கூட தனது கல்விப்பணியை சளைக் காது செயற்பட ஆசிரியர்களுக்கும் மாணவர் களுக்கும் வழிகாட்டியாக நின்றுஅவர்களை வழிநடத்திச் சென்றவர் என்பது பாராட்டத்தக்க அம்சமாகும். இப் பாடசாலையின் மாணவர்கள் கல்வி அறிவுடையவர்களாகவும் கற்றல் ஆளுமை மனிதநேயம் கொண்டவர்களாகவும் சமூக விழுமியங்களையும் மதித்து ஒழுக்கமும் நற்பண்புகளும் கொண்ட உயர்ந்த சமூக உருவாக்கத்தின் அடித்தளங்களாக உருவாக வழிகாட்டியவர் என்பது யாவரும் அறிந்ததே.2011 ஆம் ஆண்டுவடமாகாணத்தின் சிறந்த அதிபர் என்ற பிரதீபா பிரபா என்னும் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டமையானது இவரது உயர்ந்த பணியினால் இவருக்கு கிடைத்த வெற்றியே ஆகும்.

இவர் இப் பாடாலையில் பதினொரு வருடங்கள் சேவையாற்றி வெளிநாட்டிலுள்ள பழைய மாணவனிடமிருந்தும் மற்றும் அரச நிதியைப் பயன்படுத்தியும் இப்பாடசாலைக்கு தனது காலத்தில் நிறைந்த பௌதீக வள விருத்தியினை பெற்றுக் கொடுத்தமையானது இவரது சேவைக்காலம் பாடசாலைக்கு ஒரு பொற்காலம் என்றே கூற வேண்டும்.

தனது பணியை மன நிறைவுடன் நிறைவேற்றித் தனது பேருழைப்பினால் பெற்ற மகிழ்ச்சியுடன் ஓய்வு நிலைக்குச் செல்கிறார். இவரது ஓய்வு காலம் சிறப்புடனும் உடல் உள ஆரோக்கியத்துடனும் அமைய வேண்டும் என எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

சி.சத்தியசீலன், செயலாளர்,
கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு -வடமாகாணம்.

### சாதனைவீரன்

வலிகாமம் கல்வி வலயத்தில் தனக்கெனத்தனியிடம் பதித்து நிற்கும் வயாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தின் அதிபர் க. கனகராஜா அவர்களுக்கு வாழ்த்துரை வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். அவரது ஆளுமை, கடமை உணர்வு, கட்டுப்பாடு, ஒழுக்கம் என்பவற்றைத் தான் கடைப்பிடிப்பதோடு, தனது மாணவர்களையும் கடைப்பிடிக்க வைக்கும் பெருந்தகை. கல்விச் செயற்பாட்டிலும், இணைப்பாட விதானத்திலும் பல சாதனைகளைத் தொடர்ச்சி யாக இவரது பாடசாலை சாதிக்கின்றது. இவ்வாறான செயல் வீரன் தனது சேவையை நிறைவு செய்யும் இந் நாளில் அவர் உடல் நல ஆரோக்கியத்துடன் நீடூழி வாழ வாழ்த்துகின்றேன்.

பொ.ரவிச்சந்திரன், பிரதிக் கல்விப் பணிப்பாளர்,
(நிர்வாகம்) வலிகாமம் கல்வி வலயம், மருதனார் மடம்.

### முயற்சி உடையவர்

நினைத்துப் பார்க்கிறேன் வயவன் அன்னையை. யா/இணுவில் இந்துவில் கடமையாற்றிய நான் எதிர்பாராத விதமாக இடமாற்றலாகி 03.06.2009 இல் வயாவிளானுக்கு சென்றபோது இன்முகத்துடன் வரவேற்று உரிய பொறுப்பிணைத் தந்து பக்க பலமாக பல உபதேசங்கள் தந்து நடந்து வந்த பாதையினையும் முன்செல்ல வேண்டிய வழிமுறைகளையும் எந்த நேரமும் எடுத்துரைத்து தம்மை நம்பி வந்த ஆயிரத்துக்கு மேற்பட்ட மாணவச் செல்வங்களின் உயர்வே தன் வாழ்வில் இலட்சியமெனக்கொண்டு எந்த சவால்கள் வந்துள்ள போதும் தளம்பாத மனநிலையில் எதையும் எதிர்கொள்ளும் ஆற்றல் மிக்க நெஞ்சுறுதி கொண்ட எம் அதிபர் அன்னையை சொந்த இடத்தில் இருத்தி அவள் வாழ்வு மிளிரச் செய்வதே தன் இலட்சியம் எனக் கொண்டு செயற்பட்டதிறன் எம்மவர்க்கே விளங்கும். இது புரியாத பச்சோந்திகளின் வீண் வார்த்தைகள் கண்டு மனம் கலங்காது செயற்பட்ட தர்ம வீரன். இறையருளால் அவர் சிந்தனை நிறைவேறி குறித்த காலத்தில் இன்று யாரும் எதிர்பாராத விதமாக கம்பீரமாக காட்சியளிக்கும் அன்னையின் தோற்றம் யாவரையும் மெய்சிலிர்க்க வைக்கும் என்பதில் ஐயமே இல்லை. பன்னிரண்டு ஆண்டுகளாக ஆட்சி புரிந்து அதன் பிரதிபலனாக 12 வயவன் அன்னை சஞ்சிகைகள், வெளியிட்டு அதன் ஊடாக பாடசாலையின் சாதனைகள், பெறு பேற்றுத் திறன்கள், தோற்றப்பொலிவுகளை எல்லாம் படம் பிடித்து காட்டுவதற்கு காரணமான எம் அதிபர் தமது ஓய்வு காலத்தில் என்றும் இளைஞனாக மன உறுதி படைத்தவராக நோய் நொடிகள் இன்றி நீண்ட காலமாக வாழ எல்லாம் வல்ல ஆண்டவன் அருள் புரிவதுடன் வயவன் அன்னையும் அருள்பாலித்து நிற்க வேண்டு மென வாழ்த்துவதில் பெருமை அடைகின்றேன்.

பிரதி அதிபர், சி.சோதிலிங்கர்
யா/வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம்.

### சேவையின் செல்வன்

யாழ்ப்பாணத்தில் சீரும்சிறப்பும் மிக்க வாழ்வு நில வியதற்கு அடிப்படைக் காரணமாய் அமைந்தது கல்வியின் வளர்ச்சி ஆகும். இந்தக் கல்வி வளர்ச்சிப் பணியில் பல ஆண்டுகள் ஆசிரியராகவும், அதிபராகவும் கடமையாற்றி ஓய்வுபெறும் அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய திரு கந்தையா கனகராஜா அவர்களின் சேவையினைப் பாராட்டி மலர் வெளியிடுவதையிட்டு மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். இவர் பண்பான பழக்கமும் எதையும் நேருக்குநேர் பேசும் சுபாவமும் அவரின் வெற்றிக்கு வழிவகுத்தவை. ஆசிரியர்களைத் தனது கடமையுணர்வின் மூலம் கடின உழைப் பிற்குப் பழக்கப்படுத்தியவர்.இந்தப் பாடசாலை சொந்த இடத்துக்கு 16.01.2011 இல் காலடி வைத்துப் புதுப்பொலிவுடன் காட்சியளிப்பதற்கு அதிபரின் விடாமுயற்சியே காரணமாகும். மேலும் மேலும் பல வேலைத் திட்டங்களை செயற்படுத்துவதற்கு இன்றுவரை அயராது உழைத்தவர் என்றால் மிகை ஆகாது. மணிவிழா காணும் நாயகனை வாழ்த்துவதில் பெருமிதம் அடைகின்றேன். மனமகிழ்வடைகின்றேன். அவர் என்றென்றும் சிறப்பாக நலமாக வாழ வாழ்த்துவதில் பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர் என்ற வகையில் பெருமையடைகின்றேன்.

"வாழி வாழி வாழி நீ பல்லாண்டு"

வவுணத்தம்மை வீதி,குரும்பசிட்டி,தெல்லிப்பழை.
துரைச்சாமி கலியுகவரதன், சமூகஜோதி,சமாதான நீதிவான்,
யா/வ.ம.ம.வி. பாடசாலை அ.சங்க செயலாளர்.

மலரமைப்பு:
**பாடசாலைச் சமூகம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாபெரும் இசைத்தேர்வு

**மணிவதனன், ஜெயச்சித்ரா சோதரர்களின் 18 ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு**

**மாபெரும் கலைப் போட்டிகள்**

முகூர்த்தப் பட்டாடைகளின் சமுத்திரம்

**ராசி கலெக்சன்**

ஆதரவில் சிறந்த பாடகர் பாடகிகளை தெரிவு செய்யும்

**சுப்பர் சிங்கர் (தேனிசை மழை)**

இப் போட்டி ஆண்- பெண் இருபாலாருக்கும் தனித்தனிப் போட்டியாகவும் 9 வயது முதல் 15 வயதுக்குட்பட்ட சிறுவர், சிறுமிகளுக்குத் தனிப் போட்டியாகவும் நடைபெறும். அத்துடன் பாட்டுக்குப் பாட்டு, அறிவிப்பாளர் தெரிவுப் போட்டியும் நடைபெறும். வெற்றி பெறுபவர்களுக்குச் சிறந்த பரிசில்கள் காத்திருக்கின்றன. நீங்கள் செய்ய வேண்டியது கடிதத்தில் உங்கள் பெயர், வயது, நீங்கள் பங்குபற்றும் நிகழ்ச்சி, தொலைபேசி இலக்கம், முகவரி ஆகியவற்றைத் தெளிவாக எழுதிக் கீழ் வரும் முகவரியில் ஏதாவது ஒன்றுக்கு அனுப்பி வையுங்கள்.

**விண்ணப்ப முடிவு திகதி 01.02.2013**

**ராசி கலெக்சன்,**
199, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம். 021 222 5571

**V.S.சற்குணன்,**
25, பொன்னப்பா லேன்,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.021 222 7535

(5791)(2.6.7)


## சமுர்த்தி திட்டத்தில் பொது மக்களுக்கு உதவிகள்

தென்மராட்சி ஜன.23

தென்மராட்சி பிரதேசசெயலக சமுர்த்தி சமூக அபிவிருத்தித் தால் கடந்த வருட செயற்றிட்டங்களின் கீழ் ஆயிரத்து 58 பேருக்கு உதவிகள் வழங்கப்படவுள்ளன.

ஐந்து குடும்பங்களுக்கு தையல் இயந்திரங்களும் 23 பேருக்கு சைக்கிள்களும் க.பொ.த உயர்தர வகுப்பில் கற்கும் 123 மாணவர்களுக்கு எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் வரை கல்வி உதவி நிதியும், ஏனைய 907 மாணவர்களுக்கு கற்றலுக்கான உதவிப் பணமும் வழங்கப்படவுள்ளன.

சமுர்த்தி சமூக அபிவிருத்தி மன்ற நிதியின் ஊடாக இந்த உதவிப் பொருட்கள் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

தென்மராட்சி பிரதேச சமுர்த்தி சமூக அபிவிருத்தி மன்ற நிதியின் ஊடாக வருடா வருடம் சமுர்த்திப் பயனாளிகளுக்கு உதவிகள் வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (16-9)


**பாலர் பாடசாலை ஆசிரியர் வெற்றிடம்**

எமது தென்னிந்திய திருச்சபையின் வட்டுக்கோட்டை Cathedral Nursery School க்கு பயிற்றப்பட்ட அனுபவம் மிக்க பெண் ஆசிரியர் ஒருவர் தேவைப்படுகின்றார். 08.02.2013 க்கு முன்னர், உங்கள் சான்றிதழ்களுடன் பாலர் பாடசாலைக்கு வருகை தந்து நேரடியாக விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கவும்.

வட்டுக்கோட்டை. ஆசிரியர், பாலர் பாடசாலை.

(28516)(6.7.11)

**ஸ்ரீசாயி துர்க்காதேவிஆலயம், கொக்குவில்**
**கணக்காய்வு**

மேற்படி ஆலயத்தின் 2012 ஆம் நிதியாண்டின் (01.01.2012 தொடக்கம் 31.12.2012 வரையிலான) வரவு-செலவு கணக்கினைப் பரிசோதிப்பதற்கு, பதிவு செய்யப்பட்ட கணக்காய்வு நிறுவனங்களிடமிருந்து 30.01.2013 வரை கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும். மேலதிக விவரங்களை ஆலயப் பணிமனையில் ஆலயம் திறந்திருக்கும் நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

கோணாவளை ஒழுங்கை, கொக்குவில். செயலாளர்.

(28505)(5-6-7)

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



எமது பாடசாலையின் அதிபராக இருந்து இலங்கை கல்வி நிர்வாக சேவை பரீட்சையில் சித்தி பெற்று நேற்று (22.01.2013) கிளிநொச்சி கல்வி வலயத்தில் உதவிக் கல்விப்பணிப்பாளராக (வர்த்தகம்) பதவியேற்கும்

**திரு.சு.ஸ்ரீகுமரன்**
(B.A.Dip.in.Ed. Spl. Trd.M.Ed)

அவர்களை மென்மேலும் பதவி உயர்வுகள் பெற்று சிறப்புடைய வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் கழகம்
யா/கீரிமலை நகுலேஸ்வர மகாவித்தியாலயம்.

(C/5780)(6.7.11)


# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தாயின் மடியில்
**11.05.1944**

இறைவன் அடியில்
**24.12.2012**

சரசாலை தெற்கைப் பிறப்பிடமாகவும், புலோலி வட கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட

## அமரர் பொன்னையா மகேஸ்வரன்

**(ஓய்வுபெற்ற பிரதம இலிகிதர் - இ.போ.ச.வவுனியா)**

கடந்த 24.12.2012 திங்கள் சிவபதமடைந்த எங்கள் குடும்பத்தலைவரின் இறுதிக்கிரியைகளில் நேரடியாக கலந்து கொண்டவர்களுக்கும், தொலைபேசி வாயிலாக அனுதாபம் தெரிவித்தோருக்கும், 21.01.2013 அன்று கீரிமலைத் தீர்த்தக் கரையில் நடைபெற்ற அந்தியேட்டிக் கிரியைகளிலும் பங்கேற்ற அனைவருக்கும் நன்றியைத் தெரிவிப்பதோடு, இன்று (23.01.2013) புதன் கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அனைவரையும் அழைக்கின்றோம்.

புலோலி வட கிழக்கு,
புலோலி.

(C/5789)(6.7.2)

**குடும்பத்தினர்.**

# சாவகச்சேரி நகராட்சிமன்றம்

**வழங்குநர்களையும் ஒப்பந்தக்காரர்களையும் பதிவு செய்தல் - 2013**

சாவகச்சேரி நகராட்சிமன்றமானது 2013 ஆம் ஆண்டுக்கான கீழ்க் குறிப்பிடப்பட்ட பொருள்கள், சேவைகளை வழங்கு வதற்கு தம்மை பதிவு செய்துகொள்ள விரும்பும் வழங்குநர்கள், உற்பத்தியாளர்கள், ஒப்பந்தக்காரர்கள், அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள், வியாபார நிறுவனங்கள் மற்றும் சேவையாளர்கள் ஆகியோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப் படிவங்கள் எமது அலுவலகத்தில் 1000 ரூபாவை செலுத்திப் பெற்றுக்கொள்ள முடியும். விண்ணப்பங்கள் யாவும் 15.02.2013 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

**தொகுதிகள்**

தொகுதி "A" - பொருள்கள் வழங்குதல் (பொது)

தொகுதி "B" - சேவைகள்/ வேலை

தொகுதி "C" - வாகன திருத்தமும் சேவிஸ் செய்தலும்

| தொகுதி இல | பொருள்கள் வழங்குதல் [பொது] |
|---|---|
| A - 01 | காகிதாதிகள், எழுது பொருள்கள், உபகரணங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய பொருள்கள் |
| A - 02 | தளபாடங்களும், அலுவலக உபகரணங்களும் (மரம்/ உருக்கு/ ஏனையவை) |
| A - 03 | கணினிகள், கணினியுடன் தொடர்புடைய ஏனைய உபகரணங்கள், தொலைநகல் இயந்திரம் இவற்றுடன் தொடர்புடைய ரோனர்கள், றிபன்கள் மற்றும் ஏனைய அலுவலக மின் உபகரணங்கள் |
| A - 04 | பன்னல் திரைச் சீலைகள், சீருடைகள் மற்றும் துணிவகைகள் |
| A - 05 | குளியலறைப் பொருத்திகள், மாபிள்க்கல் வகைகள், நீர் வழங்கலுக்கான பொருள்கள் மற்றும் அதனோடிணைந்த பொருள்கள் |
| A - 06 | கட்டட இரும்புப் பொருள்கள், பெயின்ற், வானிஸ் மற்றும் சகல ஹாட்வெயர் பொருள்கள், மணல், கல், தீராந்தி, சலாகை உட்பட |
| A - 07 | மின்சாரப் பொருள்கள், அதன் உதிரிப்பாகங்கள், மின், இணைப்புக்கான பொருள்கள், மின் மோட்டார்கள் மின்சாரப் பல்புகள், மின் விசிறிகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய பொருள்கள் |
| A - 08 | தும்புத்தடி, விளக்குமாறு, கால் துடைப்பம், மொப்பர் மற்றும் ஏனையவை |
| A - 09 | அழுக்கு நீக்கும் பவுடர்கள், விம் ஹார்பிக் மற்றும் கிருமி நாசினிகள், ஏனையவை |
| A - 10 | மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள், ரயர், ரியூப் மற்றும் ஏனையவை |
| A - 11 | தோல் உற்பத்திப் பொருள்கள், கம், சப்பாத்துக்கள் |
| A - 12 | இறப்பர் முத்திரை வகைகள் |
| A - 13 | நூலகங்களுக்கான நூல்கள் |
| தொகுதி இல | சேவைகள் விவரம் |
| B - 01 | உருக்கு, மரத் தளபாடங்கள் திருத்தம் செய்தல் |
| B - 02 | மின் உபகரணங்கள் திருத்தம் செய்தல் (காற்றுக் குளிராக்கி, தொலைநகல், நிழல்ப்பட பிரதி இயந்திரம், கணினி) |
| B - 03 | மின் மோட்டார்கள், நீர் இறைக்கும் இயந்திரங்கள், மின்விசிறிகள், ஜெனரேட்டர்கள் திருத்துதலும் மீள முறுக்குதலும் |
| B - 04 | பதிப்பக வேலை - சகல வித படிவங்கள், ஏனையவை |
| B - 05 | கட்டட திருத்த வேலை, உள்ளக தொலைபேசி பராமரித்தல் |
| B - 06 | வாகனங்களுக்கு ரியூப் ஒட்டுதல், உலோக வேலைகள் |
| தொகுதி இல | வாகனத் திருத்தமும் சேவிஸ் செய்தலும் |
| C - 01 | சகல விதமான வாகனத்திருத்தமும், மின்சார வேலை, வாகன உட்பக்கம், சீற் என்பவற்றுக்கான குசன் வேலை |
| C - 02 | சகல விதமான வாகனமும் சுத்திகரிப்பு |


நிபந்தனைகள் :

1. வழங்கல்கள்/ சேவைகள் 2013 ஆம் ஆண்டிற்கு மட்டும் செல்லுபடியானதாகும்.
2. திருப்திகரமற்ற வழங்கல்கள் / சேவைகள் நிராகரிக்கும் உரிமை தவிசாளருக்கு உண்டு
3. பதிவிற்கான பெறப்பட்ட விண்ணப்பங்களை எவ்வித காரணங்களும் தெரிவிக்காமல் நிராகரிக்கும் உரிமை தவிசாளருக்கு உண்டு
4. மேலதிக விவரங்களை அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**இறப்பியேல் தேவசகாயம்பிள்ளை**
தவிசாளர், நகராட்சிமன்றம், சாவகச்சேரி.


(C 2888)(2.6.7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இணுவில், மருதனார்மடம் அருள்வளர் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் கோயில்

# மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம் - 2013



## ஆசியுரை



அலைபாடும் ஆழி சூழ்ந்து முகிலேறும் மலைகள் மேவி தவழ் தென்றல் முல்லை யோடு கதிர் பொலிவும் மருதம் பாடி கலை பண்பாடும் கவின் பெறு வனப்பும் கொண்டு விலையில்லா அன்பு சுரக்கும் தவ ஞான புண்ணிய பூமியாம் ஈழ மண்டலத்தில் இணையற்ற இதயத் துடிப்பான வற்றாத வளமும் வடிவான தமிழும் நற்சான்றாய் என்றும் நவிலும் இறைவழி பக்தியும் கொண்ட அடியார்கள் பொலிவுறும் வடபாக யாழ்ப்பாணத்து தாய் மடியில் இணுவையம் பதியாம் மருதனார்மடத்தில் கோயில் கொண்டு எழுந்தருளி அருள் பாலிக்கும் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேய சுவாமியின் மஷா கும்பாபிஷேக நாளில் வழிபட்டு திருவருளை பெறும் அடியார்கள் அனைவருக்கும் நல்லாசிகளைத் தெரிவிப்பதோடு, ஸ்ரீ சுந்தர வீர விஷ்வ ரூபா ஆஞ்சநேய சுவாமியின் அருள் கிடைத்ததோடு, இந்த விஷ்வரூப ஆஞ்சநேய சிலையை உருவாக்கித் தந்த இந்தியா தமிழ்நாடு சீர்காழி விஸ்வ பிரம்மஸ்ரீ கலியப் பெருமாள் புருஷோத்தமன் குழுவினர்க்கு எமது நன்றி நிறைந்த நல்ஆசிகளை தெரிவித்துக் கொள்கின்றோம். இப் பெரும் திருப்பணிக்கு நிதியுதவி செய்தவர்கள், நல் வார்த்தை சொல்லி வாழ்த்தியவர்கள், சரீர உதவி செய்தவர்கள், வேண்டிய தேவைகளுக்கு பொருள்களை எல்லாம் விநியோகித்தவர்கள் அனைவருக்கும் பெருமானின் திருவருள் கிடைக்கப் பெற்று வாழ்வில் மேலுற வேண்டும் வண்ணம் எமது நல் ஆசிகளை கூறி மகிழ்கிறோம். ''லோக சுகி னோபவந்து''

சிவஸ்ரீ.இ.சுந்தரேஸ்வரக்குருக்கள்,
ஆதீன கர்த்தாவும் பிரதம குருவும்,
ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் கோயில் , மருதனார்மடம்- இணுவில்,

## மன முருகி வழிபடுவோம்

சகல செல்வங்களும் நிறைந்த ஈழ மணித் திருநாட்டிலே சைவமும், தமிழும் போற்றப்படுவதும் அறம் வளர்க்கும் சான்றோர்கள், பெருமக்கள், தருமவான்கள், நல்லோர்கள் என அனைவரும் ஒருமித்து வாழ்ந்து வரும் இணுவையம்பதியிலே மருதனார் மடத்தில் கோயில் கொண்டு அருள் பாலித்துக் கொண்டிருக்கும் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் ஆலய மகா கும்பாபிஷேகப் பெருவிழா மிகவும் சிறப்பாக நடைபெறவுள்ளது. இன்றைய நாளில் பெருமானை மனமுருகி, உள்ளன்புடன் வழிபட்டு இஷ்ட சித்திகள் பெற்று மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வோமாகா.

இணுவையூர்
முருகையா புவீஸ்வரன்

## ஆலய மஹா கும்பாபிஷேகம்

ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் மங்கலம் மிகு ஸ்ரீ நந்தன வருடம் உத்தராயணம்,ஹேமந்தருது, தைத்திங்கள் 10 ஆம் நாள் 23.01.2013 புதன்கிழமை சுக்லபக்ஷ துவாதசி திகதியும், ரோகிணி நக்ஷத்திரமும்,சித்தயோகமும் கூடிய சுபதினத்தில் காலை8.06 மணி முதல் 8.32 மணிக்குள் அமைந்தகும் பலக்ன சுபமுகூர்த்த வேளையில் இராஜகோபுர கலசங்க ளுக்கும்,சுந்தர விமான கலசங்களுக்கும், அதிகம்பீர மஹாவீர ஆஞ்சநேய சுவாமிக்கும் (60அடி)மற்றும் மூலவர்,பரிவார மூர்த்திகளுக் கும் மஹாகும்பாவிஷேகம் நடைபெற சீதாராம சுவாமியின் திருவருள் கூடியிருப்பதால் பக்தப் பெரு மக்கள் இப் பெரு விழாவைத் தரிசித்து, இயன்ற தொண்டுகளாற்றி, இராம நாமம் செப்பி, இராமபக்த ஹனுமன் திருவருளால் அனைத்து சௌபாக்கியங்களும் பெற்று சீதாராம சம்பன்ன ராக வாழ்வீர்களாக. இன்று (23.01.2013 ) புதன்கிழமை காலை 6.00 மணிக்கு மஹாகணபதி பூஜை, யாக பூஜை, ஹனுமத் அஷ் டோத்தரசதநாம ஹோமம், உபசாரஹோமம், மஹாபூர்ணாகுதி, உபசார பூஜை,சமர்ப்பணம், தானாதிகள்,சர்வமங்கல ஹோச சகித கும்பங்கள் திருவீதி வலம், காலை 8 மணி விமானக்கலச அபி ஷேகம், அதிகம்பீர மஹாவீர ஆஞ்சநேய அபிஷேகம். காலை 8.15 மணி மஹாகும்பாபிஷேகம், தசமங்கல தரிசனம்,விஷேட உபசார பூஜை, அர்ச்சனை வழிபாடுகள், ஆசியுரை, அருளுரை, ஆன்மிக உரைகள் நண்பகல்12.00 மணி அன்னதானம்.மாலை4.30 மணி அபிஷேகம், 5.30மணி சீதாராம கல்யாண வைபோகம்,மணவாளக்கோல உற்சவம் வேத,ஸ்தோத்திர, திருவாய் மொழி பாராயணம்.

ஈழ மணித் திருநாட்டில் முதன் முதலாக 60 அடி அதிகம்பீர ஆஞ்சநேய சுவாமி நிர் மாணம் இந்தியா, இலங்கை,சிங்கப்பூர்,மலேசியா புகழ்பிரபல ஸ்தபதி ''சிற்பகலாசுரபி'' விஸ்வ பிரம்ஸ்ரீ கலியப் பெருமாள் புருஷோத்தமன், கொள்ளிடம், சீர்காழி, தமிழ்நாடு, இந்தியா.

*''மாருதி பெருமையை ராமனும் புகழ்ந்தான்*
*ஹனுமனைப் பணிந்திட ராமனும் அருள்வான்!''*

ஆதீனகர்த்தா சிவஸ்ரீ.இ.சுந்தரேஸ்வரக்குருக்கள்.
சுன்னாகம், இலங்கை.
T.P:021 2241548,075 9324662

★★★★★★★★★★★★★★★★★ விளம்பர அனுசரணை ★★★★★★★★★★★★★★★★★★

| | | | | |
|---|---|---|---|---|
| பிரபா பல் பொருள் வாணிபம் சந்தை உட்புறம் , மருதனார்மடம், இணுவில். | குமரன் ஸ்ரோர்ஸ் கே.கே.எஸ். றோட், மருதனார் மடம், இணுவில். | லேடீஸ் கோனர் கே.கே.எஸ். றோட், மருதனார்மடம், இணுவில். | அம்பாள் சேவீஸ் நிலையம் கே.கே.எஸ். றோட், மருதனார்மடம், இணுவில் | கணேசா ஹாட் வெயர் Stores No. 342 A, கே.கே.எஸ். றோட், மருதனார்மடம், இணுவில். |
| றோயல் சேவீஸ் நிலையம் கே.கே.எஸ். றோட், றொட்டியாலடி மருதனார்மடம். | சக்திவேல் ஹாட் வெயார்ஸ் கே.கே.எஸ்.றோட், கோண்டாவில் மேற்கு, இணுவில். | பானு ரேகன் விவசாய மாளிகை கே.கே.எஸ்.றோட், மருதனார்மடம், இணுவில். | பெஷன் ஹவுஸ் இல. 65 (203) கே.கே.எஸ்.றோட், யாழ்ப்பாணம். | கஜமுகன் பான்சி ஹவுஸ் இல.30, கஸ்தூரியார் றோட், யாழ்ப்பாணம். (C/5798) (2.6.7) |
| ஈஸ்வரன் ரேடர்ஸ், 69 - 115, கஸ்தூரியார் றோட், யாழ்ப்பாணம். | வெங்கடேஸ்வரா 125 - A, கஸ்தூரியார் றோட், யாழ்ப்பாணம். | ஹரிஸ் பொட் மருதனார்மடம் சந்தி, மருதனார்மடம் இணுவில். | வேணி களஞ்சியம் கே.கே.எஸ். றோட், யாழ்ப்பாணம். | E.S.P. நாகரத்தினம் அன் நிறுவனம் கஸ்தூரியார் றோட், யாழ்ப்பாணம். |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராமேஸ்வரம் மீனவர்கள் மீது மீண்டும் கடற்படை தாக்குதல்

கச்சதீவு அருகே மீன்பிடித்துக் கொண்டிருந்த இராமேஸ்வரம் மீனவர்கள் மீது, இலங்கை கடற்படையினர் நேற்று அதிகாலை தாக்குதல் நடத்தியுள்ளதாக இந்திய ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இராமேஸ்வரத்தில் இருந்து சுமார் 650 விசைப் படகுகளில் நேற்றுமுன் தினம் காலை கடலுக்குப் புறப்பட்ட மீனவர்கள், கச்சதீவுக்கு அருகே மீன்பிடிக்க முயன்றனர்.

எனினும், நேற்று முன் தினம் இரவு வரை இலங்கை கடற்படையினர் கச்சதீவுப் பகுதிக்கு அவர்களை அனுமதிக்கவில்லை. பின்னர் இரவு 9 மணிக்கு மேல் மீன்பிடி பணியில் ஈடுபட்ட தமிழக மீனவர்கள், நேற்று அதிகாலை அங்கிருந்து கரை திரும்பிக் கொண்டிருந்தனர். கச்ச தீவு - தனுஷ் கோடிக்கு இடைப்பட்ட பகுதியில் இராமேஸ்வரம் மீனவர்கள் மீது இலங்கை கடற்படையினர் தாக்குதல் நடத்தினர்.

சுமார் 20 படகுகளையும், அதிலிருந்த வலைகளையும் சேதப்படுத்திய அவர்கள், மீன்களையும் பறித்துச் சென்றதாக மீனவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

படகில் இருந்த சில மீனவர்களை கடலில் குதிக்கச் சொல்லி இலங்கை கடற்படையினர் சித்திரவதை செய்ததாகவும் கூறப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட மீன வர்கள் நேற்றுக் மு.ப. 10 மணியளவில் இராமேஸ் வரம் திரும்பினர் என்று மேற்படி ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (வ)

## இலங்கையரை தாக்கிய மூவர் கைது

சூரிச், ஜன.23

சுவிற்ஸர்லாந்தில் உள்ள இலங்கையரான உணவு விடுதி உரிமையாளரொருவரை தாக்கிய மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற இந்த தாக்குதலில் இவர் சிறுகாயங்களுக்கு இலக் கானார் என்று அவரது சட்டத்தரணி தெரிவித்துள்ளார். பாதிக்கப்பட்ட இலங்கையர் 34வய தானஇப்ராஹிம் என்று அந்த நாட்டு ஊடக தகவல்கள் தெரிவிக்கின்றன. (வ)


**கார் விற்பனை**

14 ஸ்ரீ XXXX MMC லான்சர் வெள்ளை நிறம் உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு- 0772963262

(28513)(6.711)

**Dialog & Abans**

**அங்கீகாரம் பெற்ற முகவர்கள்**

(ஆண் மற்றும் பெண்)

நீங்கள் திறமையான சுறுசுறுப்பான இளைஞரா? வாடிக்கையாளர் சேவைகளை முன்னின்று விருப்புடன் செயலாற்ற நாட்டம் கொண்டவரா? அப்படியாயின் இதோ! டயலொக்/அபான்ஸ் அங்கீகாரம் பெற்ற முகவர் நிலையத்தில் பணிபுரியும் வாய்ப்பு

கடமைகள்

- டயலொக் டெலிகொம் வழங்கும் வாடிக்கையாளர் சேவைகளை விடகூடுதலாக செயலாற்றக்கூடியதாயிருத்தல்
- VAS மற்றும் கடமைப்பட்டியல்கள் தொடர்பாக வாடிக்கையாளர்களுக்கு மேலதிக தகவல்களை வழங்கக்கூடியதாயிருத்தல்
- டயலொக் GSM/ DTV/ CDMA போஸ்ட்பெய்ட் விற்பனைசெய்யக்கூடியதாயிருத்தல்
- மேலதிக கடமைகளை பொறுப்பேற்று நிறைவேற்றக்கூடிய ஆற்றல்

தகுதிகள்

- 18-30 வரையான வயதெல்லையை கொண்டிருத்தல்
- க.பொ.த சாதாரண தரம் மற்றும் உயர்தரத்தில் சித்தி
- சிறந்த தொடர்பாடல் தகுதியை கொண்டிருத்தல்
- பாடசாலை விடுகைபெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம்.
- அந்தந்த துறையில் உள்ள அனுபவம் மேலதிக தகைமையாகக்கொள்ளப்படும்.
- ஆங்கில அறிவு அவசியம்.

காரியாலய தலைமை நிர்வாகி

நெல்லியடி மற்றும் முல்லைத்தீவு ஆகிய பிரதேசங்களுக்கும்

வாடிக்கையாளர் சேவை உத்தியோகத்தர்

யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா ஆகிய பிரதேசங்களுக்கும் தேவைப்படுகின்றார்கள்

நேர்முகப்பரீட்சைகள் எதிர்வரும் ஜனவரி மாதம் 24 ஆம் திகதி காலை 9.30 மணியிலிருந்து பி.ப.1.00 மணிவரை கீழுள்ள முகவரியில் நடைபெறும்

HR Division

Abans Office Automation (Pvt) Limited

No.422, Galle Road, Colombo-03

தொலைபேசி: 011 4899060

தொலைநகல்: 011 4741518

hrd@abans.lk

Abans

**நிரந்தர வேலை வாய்ப்பு**

CeyLabs Solutions (Pvt) Ltd இன் திணைக்களமான Department of Engineering Solutions இல் பின்வரும் பதவிவெற்றிடங்களிற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. Electrical Technician (மின்னியல் தொழில்நுட்பவியலாளர்)-2
2. Air Conditioning Technician (வளி-பதனி தொழில்நுட்பவியலாளர்)-2
3. Multi Technician (பல்துறை தொழில்நுட்பவியலாளர்)-1

குறிப்பு:-உழைப்பிற்குரிய ஊதியமும் தூரப்பிரதேசத்தில் இருந்து வருபவர்களுக்கு தங்குமிட வசதியும் வழங்கப்படும்.

தகுதியும் அனுபவமும் உள்ளவர்கள் தொலைபேசி மூலமாகவோ அல்லது நேரடியாக எமது நிறுவனத்திலோ தொடர்பு கொள்ளலாம்.

தொலைபேசிஇல-021 222 1807,0772276840

204, பிறவுன் வீதி, யாழ்ப்பாணம்.

**வீடும் காணியும் விற்பனைக்கு**

சாவகச்சேரி, கச்சாய்வீதியில், ஆலடியில், வீடும், கிணறும், தென்னைகளும் அடங்கிய 10 பரப்புக்காணி உடன்விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 077 9080518, 021 3735278.

(18020) (6.7.4)


## கண்ணீர் அஞ்சலி

எமது அலுவலகத்தில் முகாமைத்துவ உதவியாளராகக் கடமையாற்றும் **திருமதி நாகேஸ்வரி ஜெயரட்ணம்** அவர்களின் அன்புக் கணவர் **துரைச்சாமி ஜெயரட்ணம்** அவர்கள் கடந்த (21.01.2013) திங்கட்கிழமை இறைபாதம் அடைந்தமையையிட்டு துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தவிசாளர், உறுப்பினர்கள், செயலாளர், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்

வலிதெற்கு பிரதேச சபை, சுன்னாகம்.

# சாவகச்சேரி நகராட்சிமன்றம் பொது அறிவித்தல் – 2013

**1. வியாபார/ தொழில் உரிமம் - 2013**

சாவகச்சேரி நகராட்சிமன்ற எல்லைக்குள் தொழில்/ வியாபாரம் செய்வோர் மற்றும் எமது பிரதேசத்திற்குப் பொருள்களை விநியோகிப்போர் 2013 ஆம் ஆண்டிற்கான உரிமம் பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பப் படிவத்தினை நகராட்சிமன்ற அலுவலகத்தில் பெற்று பூர்த்தி செய்து சமர்ப்பித்து உரிய கட்டணத்தைச் செலுத்தி உரிமத்தினை 31.03.2013 ஆம் திகதிக்கு முன் பெற்று வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். அத்துடன் உரிமம் காட்சிப்படுத்தப்படவேண்டும். 31.03.2013 ஆம் திகதிக்கு முன்னர் வியாபார அனுமதிப் பத்திரத்தை பெற்றுக் கொள்ளாதவர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**2. துவிச்சக்கர வண்டி, வளர்ப்பு நாய்களுக்கான உரிமம் - 2013**

சாவகச்சேரி நகராட்சிமன்ற எல்லைக்குட்பட்டோர் தமது துவிச்சக்கரவண்டிகளுக்கும், வளர்ப்பு நாய்களுக்கும் 2013 ஆம் ஆண்டுக்குரிய உரிமத்தை 31.03.2013 ஆம் திகதிக்கு முன்னர் இவ்வலுவலகத்தில் உரிய கட்டணங்களைச் செலுத்தி பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**3. சுற்றுச்சூழல் பாதுகாப்பு உரிமம் - 2013**

மத்திய சூழல் அதிகார சபைத் தலைவர் 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சூழல் பாதுகாப்புச் சட்டத்தின் 26 ஆம் பிரிவின் கீழ் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு எனக்கு வழங்கப்பட்ட குறிக்கப்பட்ட அதிகாரங்களின் கீழ் சாவகச்சேரி நகராட்சிமன்றத்தின் நிர்வாகப் பாதுகாப்பு பிரதேசத்தில் 1533/16 ஆம் இலக்க 2008.01.25 ஆம் திகதிய மற்றும் 1534/18 ஆம் இலக்க 2008.02.01 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகையில் விதந்துரைக்கப்பட்ட தொழில் நடவடிக்கைகளுக்கு அமைவாக மேற்குறிப்பிட்ட அறிவித்தலுக்கு இணங்க வியாபாரத்தை/ தொழிலை நடத்துகின்ற உரிமையாளருக்கு சூழல் பாதுகாப்பு உரிமம் வழங்க வேண்டிய பொறுப்பு எனக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆகவே சம்பந்தப்பட்டவர்கள் 31.01.2013 ஆம் திகதிக்கு முன் சாவகச்சேரி நகராட்சிமன்றத்துடன் தொடர்பு கொண்டு சூழல் பாதுகாப்பு உரிமத்தை பெற உரிய நடவடிக்கை எடுக்கவும். இவ்வாறு உரிமம் பெறாத எவரும் 2013 ஆம் ஆண்டு மேற்குறிப்பிடப்பட்ட தொழில்களை நடத்த அனுமதிக்கப்படமாட்டார்கள் என்பதையும் இத்தால் அறியத்தருகின்றேன். விதந்துரைக்கப்பட்ட தொழில் முயற்சிகள் பற்றிய விவரங்கள் அடங்கிய வர்த்தமானிஅறிவித்தலை நகராட்சிமன்ற அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பார்வையிடலாம்.

**4. விளம்பரங்களை அமைத்தல்/ காட்சிப்படுத்தல்.**

நகராட்சிமன்ற எல்லைக்குட்பட்ட பிரதேசத்திற்குள் எந்தவொரு நிறுவனத்தினதும் விளம்பரங்கள் காட்சிப்படுத்துவதாயினும் நகராட்சிமன்றத்தின் அனுமதி பெற்றுக்கொண்டதன் பின்பே காட்சிப்படுத்தப்பட முடியும். எமது நகராட்சிமன்றத்தின் எல்லைக்குட்பட்ட பொது வீதிகளின் இருமருங்கிலும் மற்றும் ஏனைய இடங்களிலும் காட்சிப்படுத்தப்படும் விளம்பரங்களுக்கான கட்டணங்களை நகராட்சிமன்றத்தில் செலுத்தி அதற்கான அனுமதியினை 15.02.2013 ஆம் திகதிக்கு முன் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

நகராட்சிமன்ற எல்லைக்குட்பட்ட வர்த்தக நிலையங்களின் முகப்புகளில் அந் நிறுவனத்திற்குரிய ஒரு விளம்பரம் மட்டும் கட்டணமின்றி நகராட்சிமன்ற அனுமதியுடன் பொருத்தப்படமுடியும். மேலதிகமாக காட்சிப்படுத்தப்படும் விளம்பரங்கள் ஒவ்வொன்றுக்கும் அதற்குரிய கட்டணத்தினைச் செலுத்தி நகராட்சி மன்றத்தின் அனுமதியை 15.02.2013ஆம் திகதிக்கு முன் பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.அவ்வாறு அனுமதி பெறப்படாத முகவர்கள் / வர்த்தக நிலைய உரிமையாளர்கள் / நிறுவனங்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு சகல விளம்பரங்களும் 16.02.2013ஆம் திகதிக்குப் பின்னர் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் அறியத்தருகின்றேன்.

**5. பொதுச்சந்தைகள், இறைச்சிக்கடைகளுக்கு அண்மித்த பகுதியில் கடலுணவுகள், மரக்கறிகள், இறைச்சி வகைகள், உயிர்க் கோழிகள் விற்பனையை தடைசெய்தல்.**

சாவகச்சேரி நகராட்சி மன்றத்தின் பொதுச் சந்தை, இறைச்சிக் கடைகள் அமைந்துள்ள பகுதிகளில் 1 கி.மீற்றர் வரையான சுற்றாடலில் மரக்கறிகள், கடலுணவுகள், இறைச்சி வகைகள், உயிர்க் கோழிகள் என்பன வர்த்தக நிலையங்களிலோ வீதியோரங்களிலோ விற்பனை செய்தல் முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது. இதனை மீறுபவர்கள் மீது நகராட்சி மன்றத்தினால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை அறியத்தருகின்றேன்.

**6. பட வரைஞராக / நில அளவையாளராகப் பதிவு செய்தல்.**

2013ஆம் ஆண்டு பட வரைஞராகப் பதிவு செய்வதற்கு விரும்புவோரும், நில அளவையாளராகப் பதிவு செய்ய விரும்புவோரும் ஏற்கனவே எமது நகராட்சிமன்றத்தில் பதிவு செய்துள்ளவர்களும் 2013ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 15 ஆம் திகதிக்கு முன்பாகத் தமது பதிவுகளைச் செய்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். மேலதிக விவரங்களை அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**7. கட்டடநிர்மாண ஒப்பந்தகாரராக பதிவு செய்தல்.**

2013 ஆம் ஆண்டு கட்டடநிர்மாண ஒப்பந்தகாரராக பதிவு செய்ய விரும்புவோரும் ஏற்கனவே எமது நகராட்சிமன்றத்தில் பதிவு செய்துள்ளவர்களும் 2013ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 15 ஆம் திகதிக்கு முன்பாகத் தமது பதிவுகளைச் செய்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**8. 1978 ஆம் வருட நகர அபிவிருத்தி கட்டளைச்சட்டத்தின் பிரிவு இல.41 திருத்திய 1982 ஆம் வருட இல.4ஆம் 8x(2) பிரிவின் பிரகாரமான அறிவித்தல்.**

எந்த ஒரு கட்டுமான வேலைகள் அல்லது புனரமைப்பு வேலைகள் மேற்கொள்வதாயினும் வீடுகள், கிணறுகள், மலசல கூடங்கள், மதில்கள், கடைகள், அரச, தனியார் கட்டடங்கள், பாடசாலைகள், கோவில்கள், ஆலயங்கள், தொலைத்தொடர்பு கோபுரங்கள், குழாய்க் கிணறுகள் போன்றவை நகராட்சிமன்றத்தில் கட்டட விண்ணப்பத்தை பெற்று பூரணப்படுத்தி காணி அளவிடைப்படம் (Survey Plan), கட்டடவரைபடம், காணி உறுதி என்பவற்றுடன் சமர்ப்பித்து நகராட்சிமன்ற திட்டமிடல் குழுவின் அனுமதியினைப் பெற்ற பின்னரே அவ் வேலைகளை மேற்கொள்ளல் வேண்டும். அனுமதியின்றி மேற்படி வேலைகள் செய்தல் சட்டத்தின்படி தண்டனைக்குரிய குற்றமென்பதை அறியத்தருகின்றேன்.

கட்டடங்கள் அமைப்பதற்கு முன்பாக நகராட்சிமன்ற முன் அனுமதி பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும். முன்னங்கீகாரம் பெறப்படாது கட்டப்படும் மேற்படி கட்டடங்கள் யாவும் எதுவித நட்டஈடும் வழங்கப்படாது இந் நகராட்சிமன்றத்தினால் அகற்றப்படும்.

நகராட்சிமன்றத்தினால் அங்கீகாரம் வழங்கப்பட்ட உரிய காலத்திற்குள் கட்டட வேலைகள் பூர்த்தி செய்யத்தவறும் பட்சத்தில் கட்டட அனுமதி கால நீடிப்பினை நகராட்சிமன்றத்தில் பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.

கட்டட வேலைகள் பூர்த்தியானதும் நகராட்சிமன்றத்தில் அமைவுச் சான்றிதழ் பெற்ற பின்னரே கட்டடம் பயன்படுத்தல் வேண்டும். இவ்வாறு சான்றிதழ் பெற்றுக்கொள்ளாத புதிய கட்டடம் ஒன்றினைப் பயன்படுத்துவது குற்றமாகும். அத்துடன் புதிதாக அமைக்கப்படும் கட்டடங்கள், வீடுகள் விலைமதிப்பீட்டுத்திணைக்களத்தினால் விலைமதிப்பீடு செய்வதற்கு அமைவுச்சான்றிதழ் அவசியமாகும்.

சட்டவிரோதமான முறையில் அமைக்கப்படும் கட்டட நிர்மாணங்கள், குடியிருப்பு மனைகள், எல்லைச் சுவர்கள், கிணறுகள், மலசல கூடங்கள் தொடர்பான முறைப்பாடுகளை உரிய தருணத்தில் நகராட்சிமன்றத்துக்கு தெரியப்படுத்தி நகர அபிவிருத்திக்கு ஒத்துழைப்பு வழங்குவதுடன் நகராட்சிமன்றத்தின் வெற்றிகரமான செயற்பாட்டிற்கு பங்காளிகளாகவும் செயற்பட்டு எதிர்காலத்தில் ஒரு திட்டமிட்ட நகரத்தை உருவாக்க உதவிடுவீர்களாக..

**9. காணி உபபிரிவிடுதல்.**

ஆதனம் பல துண்டுகளாகப் பிரிக்கப்பட்டு அதில் ஒரு துண்டினைக் கொள்வனவு செய்வதாயின் பிரிவிடல் (அனுமதி வழங்கப்பட்ட) நில அளவைப் படத்திற்கு அமைவாக எழுதப்பட்ட உறுதி பெயர் மாற்ற நடவடிக்கைக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். நகர அபிவிருத்தி அதிகார சபை சட்ட விதிமுறைகளுக்கமைவாக காணி பிரிவிடல் செய்யப்படுதல் வேண்டும். இவ்விடயம் தொடர்பான மேலதிக விவரங்களுக்கு அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அறியத்தருகின்றேன்.

**10. வீதி ஒழுங்கைப் பேணுதல்.**

சாவகச்சேரி நகரின் மையப் பகுதியில் தற்போது அதிகரித்துள்ள வாகன போக்குவரத்து காரணமாக நெரிசல்கள் அதிகரித்துள்ளது. எனவே விபத்துக்களைத் தவிர்க்கும் நோக்கமாக வாகனத் தரிப்பிடங்கள் நிறுவப்பட்டுள்ளன. அவற்றை அனுசரித்து நடக்கும்படி பொதுமக்கள், சாரதிகள் அனைவரையும் தயவுடன் கேட்டுக்கொள்கின்றேன். மீறுவோர் மீது பொலிசாரால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

**11. பொது இடங்களில் கழிவுகள் போடுதல் தொடர்பான அறிவுறுத்தல்.**

சாவகச்சேரி நகராட்சிமன்ற எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் கழிவுப் பொருள்களை அனுமதியின்றிக் கொண்டு செல்லல், கொட்டுதல் ஆகியன பொதுச் சுகாதாரத்தைக் கருத்திற்கொண்டு தடைசெய்யப்பட்டுள்ளது. ஆங்காங்கே வைக்கப்பட்டுள்ள கழிவுக் கொள்கலன்களில் கழிவுகளை போடுமாறு பொதுமக்களும், வர்த்தக நிலைய உரிமையாளர்களும் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். அதிகளவிலான திண்மக் கழிவுகள் அகற்றப்பட வேண்டுமாயின் உரிய கட்டணம் செலுத்தி உழவு இயந்திர சேவையையும் பெற்றுக் கொள்ளலாம் என்பதையும் அறியத்தருகின்றேன்.

**12. கட்டாக்காலி கால்நடைகள்**

சாவகச்சேரி நகராட்சிமன்ற நிர்வாக பிரதேசத்துள் வதியும் மக்கள் தமது வளர்ப்பு மிருகங்கள், கால்நடைகள் என்பவற்றை கட்டி வளர்க்குமாறு கேட்டுக்கொள்வதுடன், கட்டி வளர்க்கப்படாது கட்டாக்கலியாகத் திரியும் கால்நடைகள் நகராட்சிமன்றத்தால் பிடிக்கப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

**13. நடைபாதை வியாபாரம்**

சாவகச்சேரி நகராட்சிமன்ற எல்லைக்குட்பட்ட வீதியோரங்களில் நகராட்சிமன்ற அனுமதியின்றி நடைபாதை வியாபாரம் செய்வோரின் பொருள்கள் நகராட்சிமன்றத்தினால் கைப்பற்றப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

நகராட்சிமன்றம், சாவகச்சேரி. இறப்பியேல் தேவசகாயம்பிள்ளை, தவிசாளர், சாவகச்சேரி.

(C72887) (6.7.2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை மீனவர்களிடம் சென்னையில் மாவட்ட ஆட்சியாளர் விசாரணை

இலங்கை மீனவர்கள் விவகாரம் தொடர்பாக, சென்னை மாவட்ட ஆட்சியாளர் அலுவலகத்தில், விசாரணை இடம்பெற்றுள்ளது.

அண்மையில், ஆந்திர கடலோரப் பகுதியான, கிருஷ்ணாம்பட்டினம் அருகே, இந்திய கடல் எல்லையில், அத்துமீறி நுழைந்து, மீன் பிடித்த, 21 இலங்கை மீனவர்களை, கடலோர காவல் படையினர் கைது செய்தனர்.

மேற்படி விவகாரம் குறித்து, நேற்று முன்தினம் சென்னை மாவட்ட ஆட்சியாளர் (பொறுப்பு) சீதாலட்சுமி, இலங்கை தூதரகம், கியூ பிரிவுப் பொலிஸார் கடலோர காவல் படை, உள்ளிட்ட முக்கிய பல அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினர்.

சென்னை மாவட்ட ஆட்சியாளர் அலுவலகத்தில் நடைபெற்ற இந்த கூட்டத்தில், இலங்கை மீனவர்கள் 21 பேரிடம், விசாரணை நடைபெற்றது. இதில், மீனவர்கள் தாங்கள் அப்பாவிகள் என, நிரூபிக்க முயன்றதாகக் கூறப்படுகிறது. (வ)



மருதனார்மடம் ஆஞ்சநேயர் ஆலய முகப்பில் 60 அடி உயர அதி கம்பீர ஆஞ்சநேயர் அமைக்கப்பட்டு மஹா கும்பாபிஷேகம் இன்று புதன்கிழமை காலை 8.15 மணியளவில் நடைபெறவுள்ளது. சுமார் ஒன்றரைக் கோடி ரூபா செலவில் இந்தியக் கலைஞர்களால் இந்தச் சிலை அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (மரி)

### சாவகச்சேரி நகர சபை எல்லைக்குள்

# பொதுச்சந்தை தவிர்ந்த வெளியிடங்களில் நடைபாதை வியாபாரம் முற்றாகத் தடை

## சபைத் தலைவர் அறிவிப்பு

தென்மராட்சி,ஜன 23

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில், பொதுச்சந்தை தவிர்ந்த ஏனைய இடங்களில் வீதியோர நடைபாதை வியாபாரம் முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளதாக நகரசபைத் தலைவர் இ.தேவசகாயம் பிள்ளை அறிவித்துள்ளார்.

இதனைமீறி வீதியோரங்களில் நடைபாதை வியாபாரம் செய்தால் அனைத்துப் பொருட்களும் பறிமுதல் செய்யப்படுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

சாவகச்சேரி பொதுச் சந்தை மற்றும் இறைச்சிக் கடைகள் ஆகியவை அமைந்துள்ள ஏழு கிலோமீற்றர் சுற்றாடலில் மரக்கறி வகைகள், கடலுணவுகள், இறைச்சி வகைகள், உயிர்க் கோழி ஆகியவை வர்த்தக நிலையங்களிலோ அல்லது வீதியோரங்களிலோ விற்பனை செய்வது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளதாகவும், இதனை மீறுபவர்கள் மீது நகர சபையினரால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

அத்துடன் நகர சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கட்டாக்காலியாகத் திரியும் கால்நடைகள் நகராட்சி மன்றத்தினால் பிடிக்கப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அவர் அறிவித்துள்ளார். (ஐ-9)

# ஈழ அகதிகள் மூவர் விபத்தில் உயிரிழப்பு

தமிழ்நாடு - புதுவை அனுக்சை குப்பம் அருகே இடம்பெற்ற வாகன விபத்தில் ஈழ அகதி முகாமைச் சேர்ந்த மூவர் உயிரிழந்துள்ளனர் என்று இந்திய செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:-

புதுவை அருகே உள்ள கோட்டக்குப்பத்தை அடுத்துள்ளது அனுக்சை குப்பம். தமிழகப் பகுதியான இங்கு ஈழ அகதிகள் முகாம் அமைக்கப்பட்டுள்ளது.

இங்கு அஜன் (வயது-21), சாருஷாஜன் (வயது-20) ஆகியோர் தங்கியிருந்தனர். இந்த ஊருக்கு அருகே உள்ள நம்பிக்கை நல்லூரைச் சேர்ந்தவர் சதீஷ் (வயது-24). அவர்கள் மூவரும் கட்டடத் தொழிலில் ஈடுபட்டு வந்தனர்.

அவர்கள் தினமும் புதுவைக்கு வந்து கட்டடத் தொழில் செய்து விட்டு மாலையில் வீடு திரும்புவார்கள். நேற்று அதேபோல் பணி முடிந்து மாலையில் ஒரே மோட்டார் சைக்கிளில் மூவரும் திரும்பினார்கள்.

அனுக்சை குப்பம் அருகே சென்றபோது எதிரே சென்னையில் இருந்து இரசாயன பொருள்களுடன் லொறி ஒன்று வந்தது. அந்த லொறி அவர்கள் சென்ற மோட்டார் சைக்கிள் மீது மோதியது. இதில் மூவரும் படுகாயம் அடைந்தனர். அஜன், சாருஷாஜன் 2 பேரும் கனக செட்டிக்குளத்தில் உள்ள தனியார் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

சதீஷ் ஜிப்மர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். 3 பேருமே சிகிச்சை பயனின்றி உயிரிழந்தனர். இது தொடர்பாக கோட்டக்குப்பம் பொலிஸார் வழக்கை பதிவு செய்து விசாரணைகளை நடத்தி வருகிறார்கள். (3)

# தெல்லிப்பழையில் கண் சிகிச்சை நிலையம் திறப்பு

யாழ்ப்பாணம்,ஜன.23

சர்வதேச லயன்ஸ் கழக 306 பி1 மாவட்ட லயன் சீமாட்டிகளின் குழுவினால் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் அமைக்கப்பட்ட கண் சிகிச்சை நிலையம் திறந்து வைக்கப்படவுள்ளது. நிலையத் திறப்பு விழா எதிர்வரும் பெப்ரவரி மாதம் மூன்றாம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறும்.

லயன் சீமாட்டி சர்வா சண்முகநாதன் தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக சர்வதேச லயன்ஸ்கழக 306 பி1 மாவட்ட ஆளுநர் லயன் எஸ்.எஸ்.தங்கராஜாவும், சிறப்பு விருந்தினராக யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரனும் கலந்து கொள்வர்.

புதிய கண் சிகிச்சை நிலையத்துக்கு சர்வதேச லயன்ஸ் கழக 306 பி1 மாவட்டத்தினால் 13 இலட்சம் ரூபா பெறுமதியான வைத்திய உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (3-9)

# மாநகர முதல்வருக்கு புதிய இருக்கை



யாழ்ப்பாணம், ஜன.23

யாழ். மாநகர முதல்வர் அமர்வதற்கென புதிய இருக்கை யாழ்.மாநகர சபை மாநாட்டு மண்டபத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

மண்டபத்தில் கிழக்குப் பகுதியில் இதற்கென புதிய மேடை ஒன்று அமைக்கப்பட்டு அதன் மேல் மேசையுடன் கூடியதான இந்த ஆசனம் வைக்கப்பட்டு மாநகர சபையின் மகர யாழ். சின்னம் பொறிக்கப்பட்டுள்ளது.

புதிய ஆண்டின் முதலாவது சபை உறுப்பினர்களுக்கான கூட்டம் எதிர் வரும் 31 ஆம்திகதி வியாழக் கிழமை இடம்பெறும்.

இதன் போது முதல்வர் இந்த ஆசனத்தைப் பயன்படுத்த ஆரம்பிப்பார் என்று கூறப்பட்டது. (ம-7)

# மஹா கும்பாபிஷேகம் காணும் நயினாதீவு ஸ்ரீ காளி அம்மன்

■ நயினை நாக.குமாரசூரியர்

(நயினாதீவு ஆறாம் வட்டாரத்தில் கோயில் கொண்டெழுந்தருளியுள்ள ஸ்ரீ காமாட்சி அம்மன் ஆலய மகா கும்பாபிஷேகம் இன்று இடம்பெறுகிறது.)

அமைதியும், சமாதானமும் நிறைந்த புண்ணிய பூமியான நயினாதீவு, வரலாற்றுச் சிறப்பும், ஆன்மிகச் சிறப்பும் கொண்டது. ''மணிபல்லவம்'' என்று குறிப்பிடப்பட்ட இலக்கியச் சிறப்பும் இதற்கு உண்டு. அலைகடல் நடுவே வீற்றிருந்து அன்னை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆன்மாக்களுக்கு அருள் பாலித்துக் கொண்டு இருக்கின்ற இடமும் நயினாதீவே.

நயினாதீவின் ஐந்தாம் வட்டாரத்தில் ''பிரண்டையம்பதி'' என்றழைக்கப்படும் நன்னீரூற்றுப் பதியில் கோயில் கொண்டெழுந்தருளி அடியார்களின் குறைகள் தீர்க்கும் வீர சக்தியாக விளங்குகின்றாள் ஸ்ரீ காளி அம்மன். காளி அம்மனின் அருளால் இந்தப் பகுதியில் நன்னீரூற்று அமையப்பெற்றுள்ளது. நாள்தோறும் காலையும், மாலையும் நயினை மக்கள் பிரண்டையம்பதிக்கு வந்து நன்னீர் எடுத்துச் செல்கின்றனர். அதேவேளை மக்கள் அனைவரும் ஸ்ரீ காளி அம்மனை வழிபடவும் தவறுவதில்லை. காலஞ்சென்ற அமரர் வைத்திய கலாநிதி தம்பையா சோமசேகரம் அவர்களால் ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய வீதியில் அமைக்கப்பட்டிருக்கும் தண்ணீர்ப் பந்தலுக்கு நன்னீர் பெற்றுக் கொள்ளும்நோக்கில் பல நன்னீர்க் கிணறுகள் நன்னீரூற்றுப் பதியில் அமைக்கப்பட்டுள்ளன. நன்னீர் குறைந்த நயினாதீவில் இந்த நன்னீர்க் கிணறுகள் ஓர் அற்புதமான வளமாகும்.

நயினை மக்களின் நன்னீர்த் தேவையை நிறைவு செய்யவென வெளிநாடுகளில் வாழும் நயினை அன்பர்களின் நிதியுதவியுடன் பல நன்னீர்க் கிணறுகள் இந்தப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ளன.

ஸ்ரீகாளி அம்மன் ஆலயத்தில் பல்வேறுபட்ட திருப்பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. பல சிரமங்களின் மத்தியிலும் அன்னையின் திருப்பணி சிறப்புற நடைபெற வேண்டுமென்ற நன்னோக்குடன் செயற்பட்டு, அடியார்களது பொருளுதவி, நிதியுதவியுடன் அன்னையின் ஆலயத்தை அழகுற வடிவமைத்துள்ளார்கள் ஆலய பரிபாலன சபையினர்.

அன்னை ஸ்ரீகாளி அம்மனின் திருவருள் உசாத்துணையாக நின்று இந்தத் திருப்பணிகள் இனிதே முடிவுற வழி காட்டியுள்ளது.

பிறந்திருக்கின்ற ஆங்கிலப் புத்தாண்டு (2013) எமது திருக்கோயில்களுக்கு அணி செய்யும் ஆண்டாக மலரவேண்டும் என்பதே எல்லோரது விருப்பமாகும். அந்த வகையில் ஸ்ரீகாளி அம்மனின் மஹா கும்பாபிஷேகம் அதற்கு வழி செய்வதாக அமைந்துள்ளது.

இன்று புதன்கிழமை ஸ்ரீகாளி அம்மனின் மஹா கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது. பாலஸ்தாபனம் செய்யப்பட்டு குறுகிய காலத்தில் மஹா கும்பாபிஷேகம் நடைபெறுவது அன்னை காளியின் அருட்கடாட்சமாகும்.

# அரசியல் கைதிகளை விடுவிக்காத அமைச்சர் பதவி விலகவேண்டும்

## சுமந்திரன் கோரிக்கை

கொழும்பு, ஜன.23

தமிழ் அரசியல் கைதிகளை விரைவில் விடுவிக்க ஆவன செய்வேன் என்ற வாக்குறுதியை நிறைவேற்ற முடியாத நீதி அமைச்சர், தனது கையாலாகாத்தனத்தை ஒப்புக்கொண்டு கௌரவமான முறையில் தனது அமைச்சுப் பதவியிலிருந்து விலக வேண்டும்.

இவ்வாறு பகிரங்கக் கோரிக்கை விடுத்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன்.

நாடாளுமன்றத்தில் குற்றவியல் நடைமுறைகள் சட்டக்கோவை திருத்தச்சட்டம் தொடர்பான விவாதத்தில் நேற்று உரையாற்றும்போதே அவர் இந்தக் கோரிக்கையை முன்வைத்தார்.

அதன்போது அவர் தெரிவித்ததாவது:-

பெரும் எண்ணிக்கையான தமிழ் அரசியல் கைதிகள் 15 வருடங்களுக்கு மேலாக சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டு, பல்வேறு சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டு வருகின்றனர். நீதி அமைச்சர் ஹக்கீம் முன்பு எதிரணியில் இருந்த போது தமிழ்க் கைதிகளின் விடுதலைக்காகக் குரல் கொடுத்தவர்.

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாகக் கூடிய விரைவில் பரிசீலனை செய்யப்படும். அவர்களை விடுதலை செய்வதற்கான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனப் பல தடவைகள் உத்தரவாதமும் வாக்குறுதியும் அளித்தவர். ஆனால் இன்றுவரை அவரால் எதுவும் செய்யமுடியவில்லை. தொடர்ந்தும் எவ்வளவு காலத்திற்கு மக்களை இவ்வாறு நீதி அமைச்சர் ஏமாற்றப்போகின்றார்? கொடுத்த வாக்குறுதிகளை நடைமுறைப்படுத்த முடியாத கையாலாகாத்தனத்தை ஒப்புக்கொண்டு அவர் தமது அமைச்சுப் பதவியை விட்டு கௌரவமாக விலக வேண்டும்.

24 மணி நேரம் வரை பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் போதே இவ்வளவு சித்திரவதைகள் என்றால் 48 மணி நேரம் தடுத்துவைப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டால் இந்தச் சித்திரவதைகள் மேலும் பன்மடங்கு அதிகரிக்க இடமுண்டு.

அரசு கூறுவது போல் 48 மணி நேரத்துக்குள் பொலிஸாரால் தமது விசாரணைகளைப் பூர்த்தி செய்ய முடியாது. அது நடைமுறைச் சாத்தியமும் அல்ல. 48 மணி நேரம் பொலிஸ் நிலையங்களில் தடுத்துவைக்கும் உரிமை வழங்கப்பட்டால் அது விபரீதமான பின்விளைவுகளை ஏற்படுத்தும். - என்றார். (ங-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவட்ட மேசைப்பந்தில் நல்லூர் அணி சம்பியன்

நல்லூர் பிரதேச செயலக அணி



யாழ். பிரதேச செயலக அணி



வலி. வடக்கு, ஜன. 23

யாழ். மாவட்ட செயலக விளையாட்டுப் பிரிவு, வட மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் ஆதரவுடன் யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையே நடத்திய மேசைப் பந்தாட்டப் போட்டியில் ஆண்கள் பிரிவில் நல்லூர் பிரதேச செயலக அணி வெற்றி பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி உள்ளக விளையாட்டு மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்ற இந்த இறுதிப்போட்டியில் நல்லூர் பிரதேச செயலக அணியும் யாழ்ப்பாணம் பிரதேச செயலக அணியும் மோதிக்கொண்டன.

இரு அணிகளும் சமபலம் வாய்ந்த அணிகளாகக் காணப்பட்டமையால் இறுதிவரை வெற்றியை எந்த அணி பெற்றுக் கொள்ளும் என்று கணிக்க முடியாத அளவுக்கு இரு அணிகளும் கடுமையாக மோதிக் கொண்டன.

ஐந்து சுற்றுக்களைக் கொண்ட இந்தப் போட்டியில் முதல் மூன்று சுற்றுக்களையும் நல்லூர் பிரதேச செயலக அணி வெற்றி கொண்டு, யாழ். மாவட்ட சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

முதல் ஒற்றையர் சுற்றில் நல்லூர் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த எஸ்.மோகனும் யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த எஸ்.சாமுவேலும் மோதிக்கொண்டார்கள்.

இதில் நல்லூர் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த மோகன் முதலாம் சுற்றை 11,: 08 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றினார். எனினும் யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த சாமுவேல் இரண்டாம் சுற்றை 11 :07 புள்ளிகள் என்ற அடிப்படையில் வெற்றி கொள்ள போட்டியில் இறுக்கம் அதிகரித்தது. பின்னர் அபாரமாக ஆடிய மோகன் மூன்றாம், நான்காம் சுற்றுக்களை முறையே 12: 10, 11 : 07 என்ற புள்ளிகள் அடிப்படையில் சுவீகரித்து வெற்றியைத் தனதாக்கினார்.

இரண்டாவது ஒற்றையர் சுற்றில் நல்லூர் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த எல். விஜிதனும், யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த எஸ்.ஸ்ரெலோஸூம் மோதிக் கொண்டார்கள்.

இதில் நல்லூர் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த விஜிதன் முதலாம், இரண்டாம் சுற்றுக்களை முறையே 11: 07, 11 :08 புள்ளிகள் என்ற ரீதியில் கைப்பற்றினார். ஆயினும் பதிலடியாக மூன்றாம், நான்காம் சுற்றுகளில் எழுச்சி பெற்ற யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த ஸ்ரெலோஸ் அந்தச் சுற்றுகளை 17:15, 13:11 என்ற புள்ளிகள் அடிப்படையில் தனதாக்கினார். வெற்றியாளரை நிர்ணயிக்கும் ஐந்தாவது சுற்றில் அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய விஜிதன் 12:10 புள்ளிகள் என்ற ரீதியில் முன்னிலை பெற்று வெற்றியீட்டினார்.

மூன்றாவது ஒற்றையர் சுற்றில் நல்லூர் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த ப.அஜந்தும் யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த கே.யதுசனும் மோதிக்கொண்டார்கள்.

இதில் நல்லூர் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த அஜந் முதல் மூன்று நேர் சுற்றுக்களையும் முறையே 12 : 10, 11: 04 , 11: 6 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி கொண்டார்.

இதன் மூலம் ஆண்கள் பிரிவில் மாவட்ட சம்பியனாக நல்லூர் பிரதேச செயலக அணி தெரிவு செய்யப்பட்டது.

இந்தப் போட்டிகளுக்கான ஏற்பாடுகளை யாழ்.மாவட்ட பதில் விளையாட்டு அலுவலர் ஆர்.மோகனதாஸ் மேற்கொண்டிருந்தார்.

(ங-86)

## இன்றைய ஆட்டங்கள்



யாழ்ப்பாணம்,ஜன.23

வடமராட்சி கல்வி வலய பாடசாலைகளைச் சேர்ந்த 19 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையிலான 11 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி இன்று புதன்கிழமை இமையாணன் மத்திய விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

இதில் பங்குபற்றவுள்ள அணிகளின் விபரங்கள் வருமாறு:-

**காலை 8 மணி**

★ பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி எதிர் கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரி.

**காலை 9 மணி**

★ தேவரையாளி இந்துக் கல்லூரி எதிர் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி.

**பிற்பகல் 2 மணி**

★மணற்காடு றோ.க.த. பாடசாலை எதிர் இமையாணன் அ.த.க.பாடசாலை.

**பிற்பகல் 3 மணி**

★வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரி எதிர் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்.

★ ★ ★

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் வதிரி பொமர்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் 7 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று புதன்கிழமை இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றவுள்ள அணிகளின் விபரங்கள் வருமாறு:-

**பிற்பகல் 3.30 மணி**

★ உடுப்பிட்டி யூத் விளையாட்டுக் கழகம் எதிர் ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக் கழகம்.

**பிற்பகல் 4.30 மணி**

★ ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகம் எதிர் கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக்கழகம்.

★ ★ ★

வவுனியா யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகத்தின் 18 ஆவது ஆண்டு நிறைவையொட்டியும் முன்னாள் கழக வீரர்களான சாந்தன், யூட்கசன் ஆகியோரின் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்குமான 11 பேர் பங்கு பற்றும் லீக் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடர் வவுனியா வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றது.

இதில் இன்று புதன்கிழமை இடம்பெறவுள்ள ஆட்டத்தில் பங்குபற்றவுள்ள அணிகளின் விபரம் வருமாறு:-

**மாலை 6 மணி**

★ லயன் விளையாட்டுக்கழகம் எதிர் வை.பி.சி. விளையாட்டுக்கழகம். (ங-23)

# வேலணைப் பிரதேச கரப்பந்து: பெண்களில் ஐயனார், ஆண்களில் மகேஸ்வரி சம்பியன்

மகேஸ்வரி வி.க.



ஐயனார் வி.க.



யாழ்ப்பாணம்,ஜன.23

வேலணை பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான ஆண், பெண் இரு பாலாருக்குமான கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் ஆண்கள் பிரிவில் வேலணை மகேஸ்வரி விளையாட்டுக்கழகமும், பெண்கள் பிரிவில் வேலணை துறையூர் ஐயனார் விளையாட்டுக் கழக அணியும் வெற்றி பெற்று சம்பியனாகின.

இந்த இறுதியாட்டங்கள் கடந்த சனிக்கிழமை வேலணை துறையூர் ஐயனார் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்றன.

முதலில் இடம்பெற்ற ஆட்டங்களுக்கான இறுதியாட்டத்தில் நயினாதீவு அன்னை விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வேலணை மகேஸ்வரி விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

5 செற்களைக் கொண்ட இந்த ஆட்டத்தில் வேலணை மகேஸ்வரி விளையாட்டுக் கழக அணி 12:25 , 25:09, 25:23 என்ற செற்கணக்கில் வெற்றியீட்டி சம்பியனானது.

தொடர்ந்து இடம்பெற்ற பெண்களுக்கான இறுதியாட்டத்தில் வேலணை ஐயனார் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து புங்குடு தீவு இறுப்பிட்டி விளையாட்டுக்கழக அணி களமிறங்கியது.


3 செற்களைக் கொண்ட இந்த ஆட்டத்தில் புங்குடு தீவு ஐயனார் விளையாட்டுக் கழக அணி 25:11 , 25:12 என்ற நேர் செற்கணக்கில் வெற்றியீட்டி சம்பியனை சுவீகரித்தது. (ங-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆஸி. பகிரங்க ரென்னிஸில்

## அஷரன்கா, பெடரர் அசத்தல்





ஆஸ்திரேலிய பகிரங்க ரென்னிஸ் தொடரின் காலிறுதிக்கு பெடரர், செரினா வில்லியம்ஸ் உள்ளிட்ட முன்னணி நட்சத்திரங்கள் முன்னேறினர்.

ஆஸ்திரேலிய பகிரங்க கிராண்ட்ஸ்லாம் ரென்னிஸ் தொடர் மெல் பேர்ணில் நடைபெற்று வருகிறது.

நேற்று முன்தினம் நடந்த மகளிர் ஒற்றையர் பிரிவு நான்காவது சுற்றில் உலகின் முதல்நிலை வீராங்கனை, பெலாரசின் விக்டோரியா அஷரன்கா, ரஷ்யாவின் எலினா வெஸ்னினாவை சந்தித்தார்.

இதில் ஆரம்பத்திலிருந்தே அசத்திய அஷரன்கா, 6:1, 6:1 என்ற நேர் செற்களில் வெற்றி பெற்று காலிறுதிக்கு தகுதி பெற்றார்.

மற்றொரு ஆட்டத்தில் அமெரிக்காவின் செரினா வில்லியம்ஸ், ரஷ்யாவின் மரியா கிரிலென்கோவை சந்தித்தார்.

இதில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய செரினா 6:2, 6:0 என்ற நேர் செற்களில் வெற்றி பெற்று காலிறு திக்கு முன்னேறினார்.


ஆடவர் ஒற்றையர் பிரிவு நான்காவது சுற்றில் சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரர், கனடாவின் மிலோஸ் ராவோனிச்சை சந்தித்தார். அபாரமாக ஆடிய பெடரர் 6:4, 7:6, 6:2 என்ற நேர் செற்கணக்கில் வெற்றி பெற்று காலிறுதிக்கு முன்னேறினார்.

மற்ற போட்டிகளில் இங்கிலாந்தின் அண்டி முர்ரே, பிரான்சின் ஜோ-வில்பிரிட் சோங்கா, பிரான்சின் ஜெர்மி சார்டி ஆகியோர் காலிறுதிப் போட்டியில் விளையாடத் தகுதி பெற்றுள்ளனர்.

ஆடவர் இரட்டையர் பிரிவின் மூன்றாவது சுற்றில் இந்தியாவின் மகேஷ் பூபதி, கனடாவின் டேனியல் நெஸ்டர் ஜோடி, இத்தாலியின் பாபியோ பாக்நினி, சைமன் பூலிலி ஜோடியிடம் 3:6, 6:4, 3:6 என்ற செற்களில் தோல்வியடைந்து வெளியேறியது.

கலப்பு இரட்டையர் பிரிவு 2ஆவது சுற்றில் இந்தியாவின் சானியா மிர்சா, அமெரிக்காவின் பாப் பிரையன் இணை, அமெரிக்காவின் அபிகால் ஸ்பியர்ஸ், ஸ்காட் லிப்ஸ்கி இணையை 4:6, 6:1, 10:4 என்ற செற்களில் வீழ்த்திக் காலிறுதிக்குத் தகுதி பெற்றது. (ந)

# 20/20 தொடருக்கு இளம் ஆஸி.அணி



ஆஸ்திரேலியாவுக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணிக்கும், ஆஸ்திரேலிய அணிக்குமிடையிலான 20/20 சுற்றுத் தொடருக்கான ஆஸ்திரேலிய அணி அறிவிக்கப் பட்டுள்ளது.

எதிர்வரும் 26ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ள 2 போட்டிகள் கொண்ட 20/20 தொடரில் ஆஸ்திரேலியாவின் தலைவராக ஜோர்ஜ் பெய்லி தொடர்ந்தும் நீடிக்கவுள்ளார்.

அண்மையில் காயமடைந்த ஆஸ்திரேலியாவின் உப தலைவர் ஷேன் வொட்சன் 20/20 அணியில் இடம்பெறவில்லை. அத்துடன் சிரேஷ்ட வீரரான டேவிட் ஹசியும் நீக்கப்பட்டுள்ளார்.

இளைய வீரர்களை அதிகமாகக் கொண்டு அறிவிக்கப்பட்டுள்ள ஆஸ்திரேலிய அணியில் , நடந்து முடிந்த பிக்பாஷ் லீக் தொடரில் சிறப்பான பெறுபேறுகளை வெளிப்படுத்திய வீரர்களே அதிகமாக இடம்பிடித்துள்ளனர்.

பிக்பாஷ் லீக் தொடரில் அதிகமான ஓட்டங்களைக் குவித்த ஷோன் மார்ஷ், அந்தத் தொடரின் தொடர் நாயகன் ஆரொன் ஃபின்ச், அதிக இலக்குகளைக் கைப்பற்றிய பென் லாஃப்ளின், அதிக இலக்குகளைக் கைப்பற்றியவர்கள் வரிசையில் இரண்டாம் இடம் பிடித்த பென் கட்டிங் ஆகியோருக்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

அறிவிக்கப்பட்டுள்ள ஆஸ்திரேலிய 20/20 அணி விவரம்:

ஜோர்ஜ் பெய்லி, பென் கட்டிங், ஷேவியர் டொகேர்ட்டி, ஜேம்ஸ் ஃபோள்க்னர், ஆரோன் ஃபின்ச், பென் லாஃப்ளின், ஷோன் மார்ஷ், கிளென் மக்ஸ்வெல், மிற்சல் ஸ்ரார்க், அடம் வோகஸ், மத்தியூ வேட், டேவிட் வோணர். [ந]



# மும்பை இந்தியன்ஸுக்கு

## வழிகாட்டி அனில் கும்ப்ளே

இந்திய அணியின் முன்னாள் தலைவரும், ரோயல் சலஞ்சர்ஸ் அணியின் வழிகாட்டியாகச் செயற்பட்டு வந்தவரும் சுழற்பந்து வீச்சாளருமான அனில் கும்ப்ளே, மும்பை இந்தியன்ஸ் அணியின் வழிகாட்டியாக பதவியேற்றுள்ளார்.

இந்த வருடம் நடைபெறவுள்ள ஐ.பி.எல்.தொடருக்கான ஏலம் பெப்ரவரி 3 ஆம் திகதி இடம்பெறவுள்ள நிலையிலேயே அனில் கும்ப்ளே மும்பை இந்தியன்ஸ் அணியில் இணைந்துள்ளார்.

மும்பை இந்தியன்ஸ் அணியின் வழிகாட்டியாக அனில் கும்ப்ளே செயற்படவுள்ளதாக உத்தியோகபூர்வமாகவும் அறிவிக்கப் பட்டுள்ளது.

அனில் கும்ப்ளேயின் தனிப்பட்ட நிறுவனமொன்றுடன் மும்பை இந்தியன்ஸ் அணி நிர்வாகம் மேற்கொண்ட ஒப்பந்தத்தினையடுத்தே அவர் மும்பை இந்தியன்ஸ் அணியுடன் இணைந்துள்ளார். இதன்படி மும்பை இந்தியன்ஸ் அணியின் வீரர்களை முகாமை செய்யும் பணியில் கும்ப்ளேயின் நிறுவனம் ஈடுபடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

2008, 2009, 2010 ஆம் ஆண்டுகளில் ரோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணியில் பங்குபற்றியிருந்த அனில் கும்ப்ளே, 2011 ஆம், 2012 ஆம் ஆண்டுகளில் ரோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணியின் வழிகாட்டியாகச் செயற்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ந)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுன்னாகத்தில் பிரம்மாண்டமாக ஜெயகிருஷ்ணா நிறுவன அதிபரின் அனுசரணையுடன்..

தரம் 6 முதல் O/Lற்கு

யாழ் நகரின் No1

# எழுசன் அக்கடமி

தமிழ்மொழி மூல வகுப்புகள்
தரம் 6 முதல் O/L

English Medium வகுப்புகள்
தரம் 6, 7, 8

**27-01-2013**
காலை 6 மணிக்கு ஆரம்பமாகின்றது

ஜெயகிருஷ்ணா வளாகம்,
செல்லாச்சி அம்மையார் வீதி,
( மாஸ்ரரின் பெற்றோல் ஷெட் எதிர் வீதி ),
சுன்னாகம் சந்தி அருகில், சுன்னாகம்.

## புதிய விசா ஆலோசனைகள்

அரிய சந்தர்ப்பம்
நியுசிலாந்து குடும்ப விசா
10 குடும்பங்களுக்கு மட்டுமே ஆலோசனை
திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம். 0212219016
எல்லா நாள்களும் காலை 8 - இரவு 7 வரை
(28601)(6.711)

## இயந்திரம் மூலம் நெல் அறுவடை

தென்மராட்சிப் பிரதேசத்தில் நெல்வயல்கள் இயந்திரம் மூலமாக (Combine Harvester) அறுவடை செய்து கொடுக்கப்படும் (தண்ணீர் உள்ள வயல்களும்).
தொடர்பு: அமேசின் என்ரபிறைஸஸ்
T.P- 0777742436 (சுஜீவன்)

## SPOKEN ENGLISH

யாருக்காக ?

- அரச,தனியார் அலுவலர்கள்
- பல்கலை,உயர்கல்வி மாணவர்கள்
- இளைஞர்,யுவதிகள்
- வெளிநாடு செல்வோர்
- ஆசிரியர்கள்
- வைத்தியர்கள், பொறியியலாளர்கள்
- 12வயதிற்கு மேல் ஆங்கிலம் பேசவிரும்பும் அனைவரும்

3 மாத சனி ,ஞாயிறு பயிற்சி நெறி-26.01.2013
1) காலை 8.00-10.00 2) மு.ப 10.00-12.00
3) பி.ப 1.00-3.00 4) மாலை 3.00-5.00

குறிப்பு: எமது பயிற்சியில் இணைந்து எவராவது 3 மாதமுடிவில் ஆங்கிலத்தில் ஏனையவர்களுடன் சரளமாகப் பேச முடியாதிருந்தால் முழுப்பணமும் திருப்பி வழங்குவதற்கான உத்தரவாதம்.

அனுமதி, புத்தகம், சான்றிதழ் இலவசம்

**SAAMSON** 279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர். TEL.0776214567

## தொழிற்பயிற்சிகள்

*ELECTRONICS
சகல இலத்திரனியல் பொருள்கள் (T.V, DVD, Receivar ,Mobile Phone) திருத்தும் முறை பயிற்சியளிக்கப்படும்.
காலம் :10மாதம்

*Mobile Phone Repairing
சகல Phone களும் திருத்தும்முறை பயிற்சியளிக்கப்படும்
காலம்: 3 மாதம்

*Air Conditioning
சகல குளிர் சாதனங்கள் திருத்தம் செய்யும் முறை பயிற்சியளிக்கப்படும்.
காலம்:6 மாதம்

பயிற்சிகள் ஆரம்பம்: 27.01.2013 -9 மணி
விபரங்களுக்கு
JAFFNA TECHNICAL INSTITUTE

இல.23, பலாலி வீதி, யாழ்ப்பாணம். T.P:0718561654, 0778249949.

NEW ASIAN CENTER 56/15 B, Stanley Road, Jaffna. 077 9254078.
(சி/5790)(6.7.4)

குறிப்பு: பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படுவதுடன் நிறுவனங்களில் வேலை வாய்ப்பு பெற்றுக்கொடுக்கப்படும்.

## உதயன்

விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## FRENCH LANGUAGE CENTRE

சர்வதேச தரத்திலான FRENCH வகுப்புக்களை வழங்கும் ஒரே ஒரு நிறுவனம்.

### FRENCH CLASSES

ஆசிரியர்: Mr.V.Jegan
(Teaching Training in France-2007)
FOR BETTER FRENCH- 0779789456
பதிவுகளை இன்றிலிருந்து மேற்கொள்ளலாம்..

| | |
|---|---|
| ஆரம்பம்: 29.01.13 Tue 11am No.23, Palaly Road, Jaffna. (அம்பிகை வைத்தியசாலைக்கு முன்பாக) ஆரியகுளம். | ஆரம்பம்: 01.02.13 Fri 11am No.26, Station Road, Vavuniya. |

German (Deutsch) வகுப்புகளும் நடைபெறுகின்றன.

## பதவி வெற்றிடம்

எமது நிறுவனத்துக்கு பில்கிளாக் விற்பனையாளர் தேவை.
விவரங்கள், சம்பளம் நேரில்
வெங்கடேஸ்வரா
கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்
(c5796)

## முகாமைத்துவ உதவியாளர் திறந்த போட்டிப்பரீட்சை விசேட இறுதிக் கருத்தரங்கு

| வவுனியா | மன்னார் |
|---|---|
| அம்பாள் கல்வி நிலையம் (குருமன்காடு) வியாழன் -7.30மணி சனி -9.00மணி தொடர்பு 0770742649 | N.L.H கல்வி நிலையம் (ஆஸ்பத்திரியடி) வியாழன் -1.00 மணி வெள்ளி -11.00 மணி தொடர்பு 0752484274 |

(c5786)

## HONDA CD 200 விற்பனைக்கு

81 ஸ்ரீ...தொடர் இலக்கமுடைய CD 200 HONDA JAPAN (சிவப்பு) விற்பனைக்கு உண்டு.
தொடர்பு-0718486198, 0776365862
(28508)(6.711)

## வான் விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள 59-XXXX தொடர் இலக்கத்தை உடைய GL HIACE வான் (அயஸ்றமன் சீற், டுவல் A/C, எலோய் வீல்) விற்பனைக்கு உண்டு.
தொடர்பு- 0771871592
(26307)(6.711)

## கால்களை பராமரியுங்கள்

லாவா வைத்தியசாலை
Tel :021-2224333
கிரமமான சோதனை இன்மையால் நாட்பட்ட நோய்களின் விளைவாக கால்களை இழக்கவேண்டி வரலாம்!
கால்களின் நரம்புப்பாதிப்பினை அறிந்து கொள்ள கணினி மயப்படுத்தப்பட்ட பரிசோதனையும் வைத்திய ஆலோசனையும்.
Foot Care Centre
**Lava Hospitals**
LH Your Health, Our Priority.
No 75,temple road.Jaffna

## Vinoth Curtains

இப்பொழுது யாழ். மண்ணில்......
கேட்டின்ஸ் துறையில் நிபுணத்துவம் பெற்ற எம்மால் கேட்டின்ஸ், மெத்தைவிரிப்பு, றெயிலிங், போல்ஸ், குசன் கவர், வேற்றிக்கல் லைன்ஸ், வெனிசன் பிறீங், புளோ காபற் வேலைகள் செய்து கொடுக்கப்படுகிறது.
இல-50/1, நாவலர் வீதி,
(மனோகரா தியேட்டர் அருகில்) யாழ்ப்பாணம்.
தொடர்பு- மைக்கல் 0774906323 / 0777797532, 0719050145

SPECIAL OFFER

## INTERNATIONAL COURSES.



# IELTS

ACADEMIC & GENERAL
Duration: 48 hrs Course Fee : 12,000/-

### SPOKEN ENGLISH WITH GRAMMAR

Duration: 20 hrs Course Fee : 6,000/-

City & Guilds
**A1, A2, B1, B2**
City & Guilds International English for Speakers of Other Languages (ESOL) Diploma
Duration: 48 hrs Course Fee: 12,000/-

UK VISA பெறுவதற்கான பாடநெறி
100% SUCCESS!
Full Time & Part Time

LONDON METROPOLITAN COLLEGE
197, Arasady Road, Jaffna
0212227230 | 0217538395

SPECIAL OFFER

## COMPUTER COURSES



| | |
|---|---|
| Certifcate in MS Office 2013 | 2500 |
| Certifcate in JAVA,VB.Net, C#, ASP | 3500 |
| Internet & Email | 1500 |
| Diploma in Graphic Designing | 4500 |
| Diploma in Computer Studies | 4500 |
| Diploma in Computer Hardware | 2500 |
| Diploma in Computer Network | 4500 |
| Diploma in Web Development | 5500 |
| Diploma in Web Designing | 3500 |
| Diploma in Software Development | 5500 |
| Diploma in Computer Programing | 4500 |

LONDON METROPOLITAN COLLEGE
197, Arasady Road, Jaffna
Tel: 021 2227230 , 0217538395

## Bsc (வெளிவாரி)

### மதுரை காமராஜர் பல்கலைக்கழகம்

*மேற்படி பல்கலைக்கழகத்தினால் புதிய ஆண்டுக்கான பதிவுகள் கோரப்பட்டுள்ளன.
*A/L இல் முழுமைச்சித்தி அடைந்தவர்களும் A/L இல் இரண்டு பாடம் சித்தி அடைந்தவர்களும் விண்ணப்பிக்கத்தகுதியுடையவர்கள் ஆகும்.
*பதிவுகள் யாவும் எமது நிறுவனத்தினுடாக நடைபெறுகின்றன.
*BA, B.C.O.M, B.B.A. ஆகிய பட்ட நெறிகளுக்கும் மேற்படி பல்கலைக்கழகத்தில் பதிவுகள் கோரப்பட்டுள்ளன.
*BA இல் வரலாறு , அரசியல் விஞ்ஞானம், சமூக விஞ்ஞானம், தமிழ், ஆங்கிலம்,பொருளியல் ஆகிய பாடநெறிகளில் ஒன்றினைத் தெரிவு செய்து இப்பட்ட நெறியினை நிறைவு செய்யலாம்.
இதுவரை காலமும் ஆங்கில மொழியில் நடைபெற்ற B.A சமூகவியல் பாடம் இந்த ஆண்டில் இருந்து தமிழ் மொழிக்கு மாற்றப்பட்டுள்ளது.

முக்கிய குறிப்பு: 1. இப்பட்டங்களானது இலங்கை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்டவை யாகும்.
2. பரீட்சைகள் யாவும் மதுரை காமராஜர் பல்கலைக்கழகத் தினால் அங்கீகரிக்கப் பட்ட புதிய உயர் கல்லூரி வளாக பரீட்சை மண்டபத்தில் நடைபெறுகின்றன.

விரிவுரைகள் ஆரம்பம்: 26.01.2013 காலை 8 மணி
கவனிக்குக: கடந்த காலங்களில் எமது நிறுவனத்தின் ஊடாக மேற்படி பட்ட நெறிகளை நிறைவு செய்த பட்டதாரிகளுக்கு பயிலுநர் பட்டதாரி வேலை வாய்ப்பு வழங்கப்பட்டதனை அறியத்தருகின்றோம்.

இணைப்பாளர்.
காமராஜர் பல்கலைக்கழகம்
T.P: 021 222 8148. (சி/5773) (6.7.4)

புதிய உயர் கல்லூரி,
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.

## BRITISH COLLEGE OF HIGHER STUDIES

BCHS
விசேட கட்டணக் கழிவில்
சர்வதேசத் தரம் கொண்ட பின்வரும் கற்கை நெறிகள்

### Spoken English with Grammar 1 1/2 Months

(ஆங்கிலத்தில் பேசுவதற்கு 100% உத்தரவாதம்) (Quick Learning course)

### Diploma in English 2 1/2 Months

* எமது கற்கை நெறிகள் Writing, Speaking, Reading, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச்சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது.
* O/L, A/L பரீட்சை எழுதிய மாணவர்கள், தொழில் தேடுவோர், தொழில் புரிவோர் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும் ஏற்றது.
* Excellent Teachers' Panel & Individual Attention

Jaffna Branch: No. 15, Sirambiyady Lane, off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550
Vavuniya Branch: No. 3, 6th Lane, Vairavarkovil Veethy, Vairavarpuliyamkulam, Vavuniya. Tel: 024 324 5287
Hot Lines: 0777 222 422 / 0777585913 / 071 4299935 / 0777730074
Evening & Weekend Classes for Employees also available..

Starts on
24-01-2013
27-01-2013
02-02-2013
9.00am & 3.00pm

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 23.01.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவறு
ஏற்படாதவாறு
நடந்து
கொள்பவன்
புத்திசாலி.
-மகாவீர்-

# புதன் பொய்கை A

உதயன் ஜனவரி 23 2013 புதன்கிழமை பக்கங்கள்: நான்கு

# பலவீனத்தைப் பந்தாடு

■ இறையன்பு

மற்றவர்களின் பலவீனமே எமது பலம் என்பது யுத்தநெறி. நேருக்கு நேர் மோதுவதாக இருந்தாலும், ஊருடன் ஊர் மோதுவதாக இருந்தாலும் சரி, பலவீனமான பகுதி எது எனத் தெரிந்து அதைத் தாக்குவதுதான் வெற்றிபெறுவதற்கான ஒரே வழி. மிகவும் பலசாலியாக இருக்கிறவனுக்கும் ஒரு பலவீனம் கட்டாயம் இருக்கும். அதை அறிவதுதான் யுத்தத்திற்கான முதற்படி. அது தெரியாதவரை எதிரியை எதுவும் செய்ய முடியாது. ஸ்டிக்ஸ் நதியில் நனையாமல் போன அக்கிலஸின் குதிகால் மட்டும் பலவீனமானது என்கிற நுண்ணிய தகவலை ஹெலன் மூலம் தெரிந்துகொண்ட பாரிஸ், அதை நோக்கி அம்பு செலுத்தி வீழ்த்துகிறான். கிரேக்கப்படைகள் அக்கிலஸை இழந்து தவிக்கின்றன.

துரியோதனனுக்கு காந்தாரி கண்களைக் கட்டவிழ்த்து விட்டபோது உள்ளாடை மறைந்திருந்த தொடைப்பகுதி மட்டும் பலவீனமாக இருக்கிறது. அதை இறுதி யுத்தத்தில் கிருஷ்ணர் சமிக்ஞையின் மூலம் உணர்த்த, பீமன் யுத்தநெறிகளைத் தாண்டி அவன் தொடையைக் கதையால் தாக்கிக் கொல்கிறான். மற்றவர்களின் பலவீனமே எமது பலம் என்பது யுத்தநெறி. மனரீதியாகவும், உடல் ரீதியாகவும் ஏதேனும் ஒரு வகையிலேனும் பலவீனமற்ற மனிதன் இருப்பது அரிது. சர்வதேச பயங்கரவாதம் என்பது எதிரியின் பலவீனத்தைக் குறிவைத்து இயங்குகிற கருத்தாக்கம். அது கொரில்லாத் தாக்குதலின் அடிப்படையிலே அமைந்த தந்திரம்.

ஆனால், இரண்டுக்குமான அடிப்படை வேறுபாடு ஒன்று உண்டு. பயங்கரவாதம் என்பது அந்நிய மண்ணில் நடக்கும் தாக்குதல். கொரில்லாத் தாக்குதல் சொந்த மண்ணில் நடப்பது. சர்வதேசப் பயங்கரவாத தாக்குதலையும், கொரில்லா யுத்த தற்காப்பையும் அடிப்படையாகக் கொண்டது பலவீனத்தை மையமாக்கி நடத்தும் போர் ஒழுங்கற்ற போர்முறை (Irregular Warfare).

உலகளவில் எதிரியின் பலவீனத்தைத் தாக்கி, கடுமையான சேதத்தை விளைவித்து குறிக்கோளையடைந்ததற்கு மிகப்பெரிய சான்று, மாசேதுங் நடத்திய கொரில்லாப் போர். கொரில்லாப்போர் என்பது 4,500 ஆண்டுகள் பழைமையானதுதான். ஆரம்ப கட்டங்களில் மனிதன் நாடோடியாகத் திரிந்தபோதும், நாகரிக வாழ்வைத் தொடங்கியபோதும் சரித்திரத்திற்கு முற்பட்ட நிகழ்வுகளிலும் இப்படிப்பட்ட போரே நிகழ்ந்தது. பழங்கால சுமேரிய, எகிப்திய நாகரிகங்களின்போது நடந்த போர்களும் இத்தன்மையனவே.

கொரில்லா யுத்தம் ராணா பிரதாப், சத்ரபதி சிவாஜி போன்ற வீரப்புருஷர்களால் கையாளப்பட்ட நெறியென்றாலும், அதற்கு அறிவார்ந்த அடிப்படையையும், கருத்தாக்கத்தையும், வழிமுறைகளையும் வகுத்துக் கொடுத்தவர் மாவோதான். அவர், ''சன்-சூ'' போர்க்கலைப் புத்தகத்தில் குறிப்பிட்ட அனைத்துக் கருத்துகளையும் தெரிவு செய்து அணுகுமுறையை வடிவமைத்தார். அது எம்மாதிரியான மோதலுக்கும் பொருந்தும் என்றும், எல்லாப் போர்களுக்கும் ஏற்றது என்றும் அவர் நிரூபித்துக்காட்டினார். மாவோவின் முதல் நோக்கம் நேரடியான, சிறுசிறு தாக்குதல்களை எதிரிகளின் நகரம், தளபாடக் கிடங்கு, தகவல்தொடர்புச் சங்கிலி ஆகியவற்றின்மீது அடிக்கடி நிகழ்த்துவது. தாக்குதல்கள் பல இடங்களில் எதிர்பாராத நேரங்களில் நடக்கும். எதிரிகள் தம்முடைய பலத்தைப் பரவலாக்கி, முக்கிய இடங்களைப் பாதுகாக்கும் நிலைக்குத் தள்ளப்படுவார்கள். எவ்வளவு பாதுகாப்பு அளித்தாலும் அவை வலுவற்றுதான் இருக்கும். ஏனென்றால், எந்தப் பகுதியை மாவோவின் படை தாக்கும் என்பது அவர்களுக்குத் தெரியாது. எதிரியைக் குழப்பமடையச் செய்வதும், எப்போதும் பதற்றத்திலும், பயத்திலும், பாதுகாப்பின்மையிலும் தவிக்கும்படி செய்ய வேண்டும். அவர்கள் முற்றிலுமாக உற்சாகம் குறைய, காற்றுப்போன பந்து மாதிரியாகி விடுவார்கள். அது எதிரியின் பலத்தை நிர்மூலமாக்கிவிடும். பாரம்பரிய ராணுவ நெறியை மேற்கொள்ளாததால், எதிரியை நாடு முழுக்க அலைய வைக்க நேரிடும்.

எனவே, எந்தப்பக்கமும் எதிரியின் பின்புறமாகிவிடும். எனவே, கொரில்லா வீரர்கள் மக்களையே உணவு, உடை போன்றவற்றிற்கும் எதிரியின் நடமாட்டம் பற்றிய நுண்ணறிவுக்கும் நம்ப வேண்டியிருக்கும். விவசாயிகளின் ஒத்துழைப்பைப் பெறும் பொருட்டு, பெரிய நிலச்சுவான்தார்களின் தோட்டங்களைப் பறிமுதல் செய்து, அவற்றை ஏழை விவசாயிகளுக்கு அவர் பிரித்துக் கொடுத்தார்.

மாவோ வேகமாகவும், மின்னலைப் போலவும் தாக்கி கடுமையான சேதங்களை விளைவித்து, விரைவில் மறைந்துவிடும் உத்தியை கொரில்லா வீரர்களுக்குப் பயிற்றுவித்தார். இருபது ஆண்டுகள் பயிற்சி; போராட்டமே பயிற்சியானது. இராணுவமோ நாட்டின் முக்கியமான பகுதிகளைக் காப்பதிலேயே மும்முரமாக ஈடுபட்டது. கொரில்லாக்கள் அவர்களுக்கு உணவு வரும் வழிகளையெல்லாம் தடுத்து நிறுத்தினர். எப்போது வேண்டுமானாலும் தாக்கலாம் என்கிற பயமே அவர்களை செயலிழக்கச் செய்தது. கொரில்லாவிற்கு எப்போதும் சாதகமான சூழல். அவர்கள் எந்த இடத்தைத் தாக்குவது என சுயமாகத் தீர்மானித்துக்கொள்ளலாம். தொடக்கத்தில் மாவோவுக்கு வெற்றி எளிதில் கிடைக்கவில்லை. சீனாவின் அ[...] கேஷி, வெறி[...] வீரர்களைக் கொண்ட இராணுவத்தை அனுப்பியதும் மாவோ உருவாக்கிய சிவப்பு ராணுவம் தப்பி ஓடியது. ஓராண்டு தொடர்ந்து ஓட்டம். ஆறாயிரம் பேர் மட்டுமே தப்ப, ஓட்டத்தில் மாசேதுங் கின் தம்பியும், குழந்தைகளும் கூட பலியானார்கள். பின்பு இரண்டாம் உலகப் போரில் ஜப்பானோடு போரிட்டுப் போரிட்டுக் களைத்துப் போயிருந்த ஹியாங் கேஷியின் இராணுவத்தை நோக்கி சிவப்பு ராணுவம் அடிமேல் அடி வைத்துத் தாக்கியது. சீனாவின் இராணுவம் புறமுதுகு காட்டி ஓடியது. ஹியாங்கே, தாய்வான் தீவுக்குத் தப்பி ஓடினான். எதிரிகளின் பலவீனத்தைப் பந்தாடிய இன்னொரு வரலாற்றுச் சம்பவம் 1991ம் ஆண்டு நடந்த வளைகுடாப் போர். போர் நுணுக்கம் அறிந்தவர்கள் அதைப் ''பாலைவனப் புயல்'' என்றே சிலாகிக்கிறார் கள். ஈராக் 1990ம் ஆண்டு ஆகஸ்ட் 2 அன்று குவைத்தை ஆக்கிரமித்தது. விமானம் மூலமாகவும், தரைவழியாகவும் 1,50,000 ஈராக் சிப்பாய்கள் அதிரடியாக நுழைந்து, குவைத்தை ஆக்கிரமித்துக் கொண்டார்கள். ஈராக் அதிபர் சதாம் உசேன் ஈரானோடு எட்டு ஆண்டுகள் நடத்திய கடுமையான யுத்தம் பலவகைகளில் அவருடைய நாட்டுக்குப் பொருளாதார வீழ்ச்சியை ஏற்படுத்திவிட்டது. குவைத் போன்ற இதர [...] நாடுகளுக்குப் பெருமளவில் கடனைத் திருப்பிச் செலுத்தவேண்டிய கட்டாயத்தில் இருந்தார். குவைத்தைக் கைப்பற்றி, அதை ஈராக்கின் பத்தொன்பதாவது மாநிலமாக அறிவிப்பதன் மூலம் அந்நாட்டுக்குச் செலுத்தவேண்டிய கடன் தொல்லையில் இருந்து மீள்வதுடன் குவைத்தின் வளமான எண்ணெய்க் கிணறுகளின் மூலமாக மற்ற நாடுகளுக்கு அளிக்க வேண்டிய கடனைச் சமாளித்து விடலாம் என்பதுதான் அவருடைய திட்டம். இதனை அமெரிக்கா உட்பட 33 உலக நாடுகளின் கூட்டணி கடுமையாக எதிர்த்தது.



> பயங்கரவாதம் என்பது அந்நிய மண்ணில் நடக்கும் தாக்குதல். கொரில்லாத் தாக்குதல் சொந்த மண்ணில் நடப்பது. சர்வதேசப் பயங்கரவாத தாக்குதலையும், கொரில்லா யுத்த தற்காப்பையும் அடிப்படையாகக் கொண்டது. பலவீனத்தை மையமாக்கி நடத்தும் போர் ஒழுங்கற்ற போர்முறை.

ஐந்து மாதங்கள் கழித்து ஈராக்கியத் துருப்புகளின் மீது விமானத் தாக்குதல்களை அமெரிக்கா தீவிரப்படுத்தியது. ஈராக் அதைச் சமாளிக்க, ஐந்து லட்சம் துருப்புகளைக் குவைத்தில் குவித்தது. தரை மூலமாக தாக்குதல் நடத்தினால்தான் சமாளிக்க முடியும் என்கிற நிலைமை உருவானது. பல பத்திரிகைகள் குவைத்தை மறுபடி மீட்பதற்கு ஒருவாரம் தேவைப்படும் என்றும், 20,000 அமெரிக்க சிப்பாய்கள் உயிரிழக்க நேரிடும் என்று அனுமானித்து எழுதின. ஈராக்கியத் துருப்புகளோ பாதுகாப்பான இடங்களைப் பிடித்து, தாக்குதலைச் சமாளிக்கத் தயாராயின. ஈராக் ஐந்து மாதங்களுக்கு முன்பே உள்ளே நுழைந்து தங்களைப் பலப்படுத்திக் கொண்டு, சக்தி வாய்ந்த பாதுகாப்பு அரண்களை உருவாக்கிக் கொண்டது. அது முதலாம் உலகப்போரை நினைவுபடுத்துகிறது என்றெல்லாம் எழுதினார்கள். ஈராக் அப்போதும் ஐந்து லட்சத்து நாற்பதாயிரம் சிப்பாய்களையும், நாலாயிரம் டாங்கிகளையும், ஆயிரக்கணக்கான பாதுகாப்பு வாகனங்களையும் நிறுத்தி வைத்திருந்தது. சிப்பாய்களோ எடுத்துச்செல்லக்கூடிய கொங்கிரீட் பாதுகாப்புக் கூரைகளுக்கு அடியில் தாக்குதலைச் சமாளிக்கும் வகையில் குவித்து வைக்கப்பட்ட மணல் மூட்டைகள் அரண்வகுக்க ஆயத்தமாக இருக்கிறார்கள் என்று, ''டைம்'' இதழ் போரைப்பற்றிக் கணித்துச் சொன்னது. போர் விமர்சகர்கள் அமெரிக்கத் தளபதி நார்மன் ஷ்வார்ஜ் காஃப் வைத்திருந்த உத்தியைப் பற்றி அறிந்திருக்கவில்லை. அவருடைய கமாண்டர்கள் குவைத்தை நேரடியாகத் தாக்கினால் இரண்டாயிரம் பேர் இறப்பார்கள், எட்டாயிரம் பேர் காயமடைவார்கள் என்று திட்டத்தை வகுத்துக்கொடுத்தனர்.

( C பக்கம் பார்க்க.....)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருட்டுத் தன்மையை நீக்க புதிய ஊசி மருந்து

கண்பார்வை மங்கி பார்வை இழந்து பலர் அவதிப்பட்டு வருகின்றனர். இந்தக் குறையைப் போக்க பிரிட்டனில் உள்ள ஒக்ஸ்போர்ட் பல்லைக்கழக விஞ்ஞானிகள் புதிய கண்டுபிடிப்பில் ஈடுபட்டு வந்தனர். பொதுவாக கண் விழித்திரையில் உள்ள நிறமிகள் படிப்படியாக வெளிச்சத்தை உமிழும் சக்தியை இழக்கின்றன. அதுவே கண் பார்வை இழந்து குருட்டுத் தன்மை உருவாகக் காரணமாக அமைகின்றது.

இந்தக் குறையைப் போக்க எலிகளிடம் விஞ்ஞானிகள் ஆய்வு மேற்கொண்டனர். கண்களில் வெளிச்சத்தை உருவாக்கும் செல்களை அவர்கள் உருவாக்கினர். அதை ஊசி மருந்தாக்கி கண்பார்வையற்ற எலிகளின் கண்களில் செலுத்தினர். அதைத் தொடர்ந்து எலிகளுக்கு கண்பார்வை கிடைத்தது. இரண்டுவாரம் கழித்து ஊசி மருந்து செலுத்திய எலிகளின் கண்கள் பரிசோதனை செய்து பார்க்கப்பட்டன. அப்போது விழித்திரை உருவாகி இருப்பது கண்டறியப்பட்டது.

இந்தச் சிகிச்சையை மனிதர்களுக்கும் செய்து பரிசோதிக்க நிபுணர்கள் முடிவு செய்துள்ளனர். பிரிட்டன் பல்கலைக்கழக கண் மருத்துவ துறையின் அறிஞர் பீடா கபே இது குறித்துக் கூறும்போது இந்தக் கண்டுபிடிப்பு மிக முக்கியமானது. இதன் மூலம் குருட்டு தன்மையை முற்றிலும் நீக்க முடியும் என்று தெரிவித்தார்.






# பக்கவாத நோயைக் குணப்படுத்த புதிய மாத்திரை

பக்கவாத நோயால் நடக்க முடியாமல் போனவர்கள் மீண்டும் நடப்பதற்கு உதவும் மாத்திரையை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

கலிபோர்னியா, ஸ்டான்போர்டு பல்கலைக்கழக பேராசிரியர் பிராங்க் லாங்கோ, பரிசோதனை முயற்சியாக கண்டுபிடித்த இந்த மாத்திரையை முதலில் எலிகளுக்கு கொடுத்து நடத்திய சோதனை வெற்றி கண்டுள்ளது. இந்தப் பரிசோதனையின்போது வலி குறைந்ததோடு, பக்க விளைவுகள் எதுவும் ஏற்படவில்லை என்று ஆய்வு கூறுகிறது.

முதுகுத் தண்டில் காயம் ஏற்பட்டால் மூளை உடலின் மீதான கட்டுப்பாட்டை இழந்து விடுகிறது. ஆனால் இந்த மாத்திரைகள் மூளையின் செயற்பாட்டையும் உயிர்ப்பிக்கின்றன.

முதன்முறையாக வாய் வழியாகக் கொடுக்கப்படும் மருந்து மூலம் பக்கவாத நோயைக் குணப்படுத்த முடியும் என்ற நம்பிக்கை தோன்றியுள்ளது.



## புரிந்து கொண்டேன்



தட்டுங்கள்
திறக்கப்படும்
என்பது
எல்லோரும்
அறிந்தது.
எனக்கு மட்டும்
பொருந்தவில்லை
நான்
பலமுறை
தட்டியும்
உன்
இதயக்கதவு
திறக்கவில்லையே!
புரிந்து
கொண்டேன்.
உன்
இதயத்திற்கு
கதவே இல்லையென்று!

சிந்து சிவதாஸ்
ஐங்கரன் வீதி, சுதுமலை தெற்கு


# தன்னம்பிக்கையை அதிகரிக்கும் சிவப்பு நிறம்



பிரிட்டனில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட பெண்களிடம் நிறம் பற்றி எடுத்த கருத்துக்கணிப்பில் ஐந்தில் மூன்று பேர், சிவப்பு நிறம் தங்களுக்கு அதிக நம்பிக்கையூட்டுவதாகத் தெரிவித்தனர். ஒருவர் அலுவலகத்தில் பாதுகாப்பாகவும் உற்சாகமாகவும் பணிபுரிய சிவப்பு நிறம் மட்டுமே உதவுகிறது என்றும் அவர்கள் தெரிவித்தனர்.



# துரித உணவுகள் பாதிப்பை ஏற்படுத்தும்



துரித உணவுகளை அதிகளவு உட்கொண்டால் கண்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்று ஆய்வொன்றின் மூலம் தெரியவந்துள்ளது.

துரித உணவுகள் உடல் நலத்தைப் பாதிக்கும் என்பது எல்லோருக்கும் தெரிந்த ஒன்று தான். ஆனால் தற்போது இந்த உணவுகள் கண்களையும் பாதிக்கும் என்று தெரியவந்துள்ளது.

துரித உணவு தொடர்பாக மருத்துவப் பத்திரிகை ஒன்று சர்வதேச அளவில் 50 நாடுகளை சேர்ந்த 5 லட்சம் குழந்தைகளிடம் ஆய்வு நடத்தியது. அதில் துரித உணவுகளை அதிகம் சாப்பிடும் குழந்தைகளுக்கு கண்களில் எரிச்சல், தண்ணீர் வடிதல் போன்ற பாதிப்பு ஏற்படுவது தெரியவந்துள்ளது.

துரித உணவுகளில் உள்ள விஷத் தன்மை வாய்ந்த கொழுப்பு உடலின் நோய் எதிர்ப்பு சக்தியை அழித்து உடல் நலத்தை பாதிப்பதும் தெரிய வந்துள்ளது. ஆனால் பழங்கள் அதிகம் சாப்பிட்டால் இந்தப் பாதிப்புகளை சரிசெய்து விடலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருந்துபவர்கள் திருந்தட்டும்

எங்களுடைய யாழ்ப்பாணத்தின் கலாசாரம் திட்டமிட்டு அழிக்கப்பட்டு வருவதாக முன்னாள் நீதியரசரான விக்னேஸ்வரன் குற்றஞ்சாட்டியுள்ளார். எங்களது இளைஞர், யுவதிகள் திட்டமிட்டு சீரழிக்கப்படுவதாக அவர் குறிப்பிட்டிருக்கின்றார். யாழ்ப்பாணத்தின் யதார்த்தமான உண்மையை அவர் உரைத்திருக்கின்றார்.

உண்மையில் திட்டமிட்டு சீரழிக்கப்படுவது இளைஞர், யுவதிகள் மாத்திரமல்லர். இளைஞர், யுவதிகளை வழிப்படுத்த வேண்டியவர்களும் தெரிந்தோ, தெரியாமலோ சீரழிவு வலைக்குள் வீழ்த்தப்பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

கழிவு ஒயிலால் அபிஷேகம் செய்யப்பட்ட பிரதேச சபைக்கு சமீபத்தில் அமைந்துள்ள பிரதேச செயலகத்தில் அண்மையில் வருட இறுதிக்கான 'பார்ட்டி' இடம்பெற்றது. பகல் இந்தப் 'பார்ட்டி' இடம்பெற்ற போது அலுவலகத்தில் பணியாற்றுகின்ற பெரும்பாலான ஊழியர்கள் பங்குபற்றியிருந்தனர். பெண் ஊழியர்களும் பங்குபற்றியிருந்தனர்.

ஏன்... எதற்கு... எப்படி?

ஆனால் அன்றிரவும் 'பார்ட்டி' இடம்பெற்றது. இதில் குறிப்பிட்ட ஆண் ஊழியர்கள் மற்றும் மாவட்டத்தை நிர்வகிக்கும் அதி உயர் அரச அதிகாரியும் கலந்து கொண்டிருந்தார். குறித்த 'பார்ட்டியை' ஏற்பாடு செய்யதவர், 'பார்ட்டிக்கு' இராணுவ அதிகாரிகளையும் அழைத்திருந்தார். அவர்களை, அவர் அழைத்தது எதனை மூடி மறைத்து திருப்திப் படுத்துவதற்காகவோ தெரியவில்லை.

இரவுப் 'பார்டியில்' மதுபானம் பரிமாறப்பட்டு பெரும் தடல்புடலாக இடம்பெற்றது நிகழ்வு. இந்தளவுக்கும் அதில் கலந்து கொண்ட அதிகாரிகளோ, எமது சமூகத்தை வழிப்படுத்த வேண்டியவர்கள்.

இந்தளவுக்கும் குறித்த 'பார்ட்டி' அலுவலகத்தில் பணிபுரிபவர்களிடம் இருந்து பெற்ற பணத்திலேயே நடத்தப்பட்டுள்ளது.

முன்னாள் நீதியரசர் விக்னேஸ்வரனின் கவலை நியாமானது. முதலில் திருத்துபவர்கள் திருந்தினால் சில வேளைகளில் எமது இளைஞர், யுவதிகளும் திருந்தக் கூடும் அல்லவா? அவரின் சொல்லைக் கேட்க வேண்டுமென்ற நியதி நமக்கில்லை என்று அந்தப் பெரிய மனுஷர் நினைத்திருக்கக் கூடும்....!

-நக்கல் நரசிம்மன்.

# உதயனை விமர்சியுங்கள்

தமிழ் நெஞ்சங்களில் இடம் பிடித்திருக்கும் உதயனே. நீ என்றும் வாழ வாழ்த்துகின்றேன். இன்று நேற்று அல்ல. பல காலங்களிலும் உன் நேர்மையைக் கண்டு சகிக்க முடியாதவர்கள் உன் குரலை அடக்க முயன்ற போதும், நீ துணிந்து நின்று வீறு நடைபோட்டாய்.

எத்தனை இடர்கள் வந்தாலும் துணிவுடன் செயற்படுவாய் என்ற நம்பிக்கை எங்களிடம் உண்டு. உன் பணி ஓங்கி வளர இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சுழிபுரம் மேற்கு
கணேஸ்.

★ ★ ★

உதயன் வாசகர்களில் நானும் ஒருவன் என்பதில் பெருமை கொள்கின்றேன். காயம் பட்டாலும் வலிகளோடும், தளர்ந்து விடாது தமிழ் மக்களுக்காக நீ நிமிர்ந்து வருவது பாராட்டத்தக்கது.

ஆனாலும் யாழ்.மாவட்டச் செய்திகளை கூடுதலாக உதயன் வெளியிடுவது சிறப்பாகும்.

வெளிநாட்டுச் செய்தி, இந்தியச் செய்தி என்று வெளிவருகின்ற போதும் அந்தச் செய்திகளில் முக்கியச் செய்திகளை பிரசுரித்து மேலதிகமாக யாழ்ப்பாண செய்திகளை பிரசுரிப்பீர்களா? யாழ். மாவட்டத்தில் இடம்பெறும் நிகழ்வுப் படங்களை முழுமையாக பிரசுரிக்க இடம் ஒதுக்குவீர்களா? இது எனது எதிர் பார்ப்பு மட்டுமல்ல பலரது எதிர்பார்ப்பும் கூட.

உதயனில் குறை என்று சொல்வதற்கில்லை.

எனினும் உதயனில் குறை என்று கண்ணுக்கு பட்டதைச் சுட்டிக் காட்டுகின்றேன். செய்திகளில் சில வேளை அதிகளவில் பெயர்களும், பதவிகளும் பிழையாக வருவதைப் பார்க்க முடிகின்றது. ஏன் இந்தத் தடுமாற்றம்.

எஸ்.முருகேசு
சண்டிலிப்பாய்.

★ ★ ★

உதயனில் ஞாயிறு வெளிவரும் சூரியகாந்தி பகுதி சிறப்பாக வெளிவருகிறது. வார பத்திரிகைக்கு ஈடாக இந்த சூரியகாந்தி பகுதி வெளிவருவது பாராட்டத்தக்கது.

எனவே சூரியகாந்திப் பக்கத்தில் கலைஞர்களுடைய நேர்காணல் மட்டுமே வெளிவருவது எமக்குக் குறையாக இருக்கிறது. எனவே தொழில் சம்பந்தப்பட்டவர்களின், கல்வித்துறை சம்பந்தப்பட்டவர்களின் நேர்காணல்களையும் சூரியகாந்திப் பகுதியில் பிரசுரிப்பீர்களானால் அது வரவேற்கத்தக்கது.

நேர்காணல் பகுதியில் பலரது துறைகள் சம்பந்தமாக அவர்கள் சொல்லும் கருத்துக்களை பிரசுரிப்பீர்களானால் அந்த துறை சம்பந்தப்பட்டவர்களுக்கு நன்மையாக அமையும்.

அதேவேளை உள்ளூரில் பலதுறைகளில் செயற்படுபவர்களை வெளியுலகுக்கு கொண்டு வருவதாகவும் அமையும் என்பது கண்கூடு.

செல்வரத்தினம்,
இணுவில்

# பலவீனத்தைப்....

( A பக்கத் தொடர்ச்சி.....)

ஆனால், அதை அவர் நிராகரித்தார். விமானத்தின் மூலமாக குண்டுமழை பொழிந்து, ஈராக்கின் பலத்தைப் பாதியாகக் குறைப்பது என்றும் 'இடது கொக்கி' மூலமாக இரகசியத் தாக்குதல் நடத்துவது என்றும் அவர் தெரிவித்திருந்தார்.

உலகத்தின் ஒட்டுமொத்த கவனமும் குவைத்தின் தெற்குப்பக்கம் அமெரிக்கத் துருப்புகள் வருவதைக் கண்காணித்துக் கொண்டிருக்கும்போது, இரகசியமாக 2,50,000 சிப்பாய்களைக் குவைத்தின் மேற்குப் பக்கம் மெதுவாக ஊடுருவச் செய்து, அங்கிருந்து வலது பக்கத்திற்குச் சென்று, காலியாக இருக்கும் தெற்கு ஈராக்கில் பாலைவனப்பகுதிகளை வெட்டுத் துவது என்று முடிவானது.

தரைவழியான தாக்குதல் தொடங்கியதும் இந்தப் படை வடக்கு நோக்கி நகர்ந்து, கிழக்குப் பக்கம் திரும்பி, இடது கொக்கியைப் பூர்த்தி செய்ய வேண்டும். இதன்மூலம் ஈராக்கின் பாதுகாப்புச் சபையை அடித்து நொறுக்க வேண்டும். அந்தத் திட்டத்தின்படி அமெரிக்க கடற்படை, குவைத்தின் வடக்குநோக்கி மெதுவாக நகரத் தொடங்கியது. இது உண்மையிலேயே தாக்குதலுக்காக அல்ல, ஈராக்கின் கவனத்தைத் திசைதிருப்புவதற்காக.

ஷ்வார்ஜ்காஃப்பன் உத்தி மிகவும் சக்தி வாய்ந்ததாக இருந்தது. தரைப் படைத் தாக்குதல் நூறு மணி நேரத்தில் முடிந்துபோனது. ஒரு மாத காலம் விமானத் தாக்குதல் நடத்தியதன்மூலம் ஒரே இடத்தில் குவிந்திருந்த ஈராக்கியத் துருப்புகள் பரவலாகச் சிதறவும், ஒரே இடத்தில் குவிந்திருக்காமல் செய்யவும் வழிவகுத்தன. அவர்கள் தங்கள் பீரங்கிகளையும், டாங்கிகளையும் விட்டு விலகியிருக்கவும் செய்தன.

விரைவாகவும், ஆக்ரோஷத்துடனும் டாங்கிகள், காலாட்படை, ஹெலிகொப்டர்கள், குண்டுபொழியும் விமானங்கள் ஆகியவற்றின்மூலம் அமெரிக்கா நடத்திய தாக்குதல் மிகவும் உக்கிரமாக இருந்தது. ஈராக்கிய சிப்பாய்கள் துணிவோடு போராடினார்கள். ஆனால், அவர்களால் வேகத்திற்கும், ஆக்ரோஷத்திற்கும் ஏற்றவாறு உபரிப்படையை நகர்த்தி சமாளிக்க முடியவில்லை.



அமெரிக்க கப்பற் படையினரோ, இரசாயன ஆயுதங்களை ஈராக் பயன்படுத்தினால், இருபதிலிருந்து முப்பது சதவிகிதம் இழப்பு ஏற்படும் என்று எதிர்பார்த்தனர். ஆனால், அதைப் பயன்படுத்த சதாம் உசேன் ஆணை வழங்க வில்லை. வேறுவழியின்றி பெரும்பான்மையான படைகள் சிதற குவைத்தைவிட்டு ஈராக் துண்டைக் காணோம் துணியைக் காணோம் என்று ஓடியது. அமெரிக்க சார்புடைய படைகளின் இழப்போ மிகவும் குறைவாக இருந்தது.

ஷ்வார்ஜ்காஃப் முக்கியமான தாக்குதல், கடலின் வழியாக நடப்பதைப் போன்ற ஒரு தோற்றத்தை உருவாக்கினார். அதை எதிர்பார்த்து ஈராக் காத்திருந்தபோது, அதன் பலவீனமான பகுதியைக் கடுமையாகத் தாக்கினார். அதை யாரும் எதிர்பார்க்கவில்லை. பத்திரிகைகளும், குவைத்தின் தெற்குப் பக்கம் அமெரிக்கத் துருப்புகள் குவிக்கப்படுவதைப்போல மாயத்தோற்றத்தை ஏற்படுத்தின. பெரும்பான்மையான அமெரிக்கக் கொமாண்டர்களுக்கு இது தெரியாது. சாதுர்யமாக ஈராக்கின் பலவீனத்தை நோக்கி அவர் நகர்த்தியதால், அமெரிக்கத் துருப்புகளுக்கு ஏற்பட்ட உயிர்ச்சேதம் சொற்பமாக இருந்தது.

வாழ்விலும் நிர்வாகத்திலும் எதிரியின் பலவீனத்தை நோக்கியே நாம் காய் நகர்த்த வேண்டும். சிலர் புகழையே தங்கள் பலமாக நினைத்துக் கொண்டிருப்பார்கள். அதை நோக்கி குறிவைத்தால் ஆடிப்போய்விடுவார்கள். அதற்கு எந்தக் களங்கமும் விளையக்கூடாது என்பதற்காக, எதையும் பறிகொடுக்கத் தயாராக இருப்பார்கள். பலவீனம் மற்றவர்களுக்குத் தெரியாமல் பார்த்துக் கொள்வது மிகவும் அவசியம்.

பலவீனமில்லாத வாழ்க்கையை வாழ்வது எப்போதுமே பாதுகாப்பானது. ஆனால், அதற்கு எளிமையும் நேர்மையும் அவசியம். தனிப்பட்ட வாழ்க்கையில் இவற்றைக் கையாளுவது சிரமமல்ல. ஆனால், நிர்வாகம் என்பது எண்ணற்றோருடைய கூட்டமைப்பு. அதில் எங்கேனும் ஓரிடத்தில் நிச்சயம் பலவீனம் இருப்பதற்கு வாய்ப்புகள் அதிகம். அதை உணர்ந்து, அந்தப் பகுதியைப் பாதுகாத்துக்கொள்வது அவசியம்.

இரண்டு நிறுவனங்கள் ஒரே வாடிக்கையாளர்களைக் கவரும் போட்டியில் ஈடுபடும்போது மற்ற நிறுவனத்தில் எது பலவீனமானது என்பதைக் கண்டறிய வேண்டும். விலங்குகளை வீழ்த்துகிறவர்கள்கூட அவற்றின் எந்தப் பகுதியை அடித்தால் உடனே உயிர் போகும், அதிகச் சித்திரவதை இல்லாமல் அவை உயிரிழக்கும் என்பதை எதிர்பார்த்துத் தான் தங்கள் அசைவை முன்னிறுத்துகிறார்கள்.

வர்த்தகத்தில், எதிராளியின் பொருளில் எது குறைபாடு என்பதைத் தெரிந்து கொண்டு, அதைச் சரிசெய்யும் வகையில் ஆய்வை நடத்தி, தங்கள் நிறுவனத்தின் பொருளை மேம்படுத்துபவர்கள் விரைவில் சந்தையைப் பிடித்துவிடுகிறார்கள். ரியல் எஸ்டேட்டில்கூட மிக நல்ல நிலம் போவதற்கு வழியில்லாமல் நடுவில் மாட்டிக்கொண்டால், அடிமாட்டு விலைக்கு விற்க நேர்வதைப் பார்க்கலாம். தொடர்ந்து தன்னைப் பலப்படுத்திக்கொள்வது ஒவ்வொரு மனிதனுக்கும் அவசியம்.

தலைசிறந்த நிர்வாகியாக இருக்கிறவர் பேச்சில், எழுத்தில், கூட்டங்களை நடத்துவதில், உடலசைவு மொழியில், உடைகளை உடுத்துவதில், கம்பீரமாக நடப்பதில், மிடுக்காக நடந்துகொள்வதில் தன்னை அச்சு அசலாக வெற்றி பெற்றவர்களைப்போல காட்டிக்கொள்ள முனையும்போது எதிராளிக்கு நடுக்கம் வந்துவிடுகிறது. வெகு எளிதில் அவனால் கவர்ச்சி ஒளிவட்டத்தை உண்டுபண்ணிவிட முடிகிறது.

அதற்குப் பிறகு அவன் கீழ் பணிபுரிபவர்கள் அவன் சொன்னதற்கெல்லாம் சொக்குப்பொடி போட்டதைப்போல மயங்கிவிடுகிறார்கள். சிலருக்கு பெரிய விஷயங்களில் பலவீனம் இருக்காது. ஆனால், சின்ன விடயங்களில் பலவீனம் இருக்கும். தன்னுடைய பலவீனத்தை நண்பர்களிடமிருந்து கேட்டறிவதும், அவற்றைக் கவனமாக தவிர்க்க முயல்வதும் உறுதியான பலன்களை அளிக்கும். அப்போது தான் வீழ்த்த முடியாத மனிதனாக வீறுகொண்டு எழலாம். ஒழுக்கமும், சுயக்கட்டுப்பாடும் கொண்டவர்கள் எந்த நேரத்திலும் நிமிர்ந்து நிற்கிறார்கள். ★

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உண்மையான அமைதி எங்கே இருக்கிறது....


> அமைதியுடனும் கவனத்துடனும் செய்தால் வாழ்க்கை சிறப்பாகவும், நிறைவாகவும் இருக்கும். ஆனால் பல சமயங்களில் அப்படிச் செய்ய முடியாமல் தடுமாறிப் போகிறோம்.

■ என்.கணேசன்

ஒரு தாவோ கதை. டெரெக்லின் என்ற தாவோ அறிஞர் சொன்னது. ஒரு சக்கரவர்த்தி தன் அன்றாட வேலைகளைச் செய்வதில் முழு கவனத்தோடு ஈடுபட முடியாமல் தவித்தார். உள்நாட்டுப் பிரச்சினைகள், வெளிநாடுகள் மூலம் பிரச்சினைகள், நிர்வாகப் பிரச்சினைகள், குடும்பப் பிரச்சினைகள், அவ்வப்போது முடிக்க வேண்டியிருந்த அவசர வேலைகள் என பல விடயங்களை அவர் கவனிக்க வேண்டி இருந்தது.

முழுக் கவனத்தோடு எல்லா அம்சங்களையும் ஆராய்ந்து ஒவ்வொரு பிரச்சினையையும் அணுகித் தீர்க்க வேண்டி இருந்தது. அதற்கு மன அமைதி முக்கியத் தேவையாக இருந்தது. மன அமைதி இல்லாத போது எதிலும் முழுக் கவனம் செலுத்துவது முடியாத காரியமாக இருந்தது. இந்த சிக்கலை எப்படித் தீர்ப்பது என்று ஆலோசித்தவர் தன் மந்திரியை அழைத்துச் சொன்னார். தினசரி நாலா பக்கங்களில் இருந்தும் நான் கவனிக்க வேண்டிய வேலைகளும், பிரச்சினைகளும் வந்த வண்ணம் இருக்கின்றன. அந்த நேரங்களில் அவற்றைச் சரியாகக் கையாளத் தேவையான அமைதி இல்லாமல் தவிக்கிறேன்.

அதனால் அந்த நேரத்தில் பார்த்தவுடன் அமைதி கிடைக்கும் ஏதாவது ஓவியம் என் முன் இருந்தால் அதைப் பார்த்து நான் என் அமைதியை மீட்டுக் கொள்ள முடியும் என்று நினைக்கிறேன். எமது நாட்டில் உள்ள ஓவியர்களில் சிறந்த ஓவியரைத் தேர்ந்தெடுத்து 'உண்மையான அமைதி' என்ற தலைப்பில் எனக்காக ஒரு ஓவியம் வரையச் சொல்லுங்கள்.



மந்திரி நாட்டில் உள்ள தலை சிறந்த ஓவியர்களைப் பற்றி விசாரித்தார். மூன்று ஓவியர்களைத் தேர்ந்தெடுத்தார். மூவரும் மிக நல்ல ஓவியர்கள் எனப் பேரெடுத்தவர்கள். அவர்களில் ஒருவரைத் தேர்ந்தெடுப்பது கடினமாக இருந்தது. அரசரிடம் அதைச் சொல்ல அரசர் மூவரிடமும் ஓவியம் வரையச் சொல்லலாம் என்றும், அந்த மூன்று ஓவியங்களில் ஒன்றைத் தேர்ந்தெடுக்கலாம் என்றும் சொன்னார்.

மூன்று ஓவியர்களும் அரண்மனைக்கு வரவழைக்கப்பட்டார்கள். அரசரின் தேவை அவர்களுக்குச் சொல்லப்பட்டது. மூவரும் அரண்மனையில் இருந்தபடியே 'உண்மையான அமைதி' என்ற தலைப்பில் ஓவியம் வரைய ஆரம்பித்தனர். அவர்கள் வரைந்து முடித்த பின் அரசரும் மந்திரியும் ஓவியங்களைப் பார்வையிட வந்தனர். முதல் ஓவியம் மலைகள் சூழ இருந்த அமைதியான பெரிய குளத்தினுடையதாக இருந்தது. மிக அமைதியான ஒரு சூழ்நிலையை அந்த ஓவியம் வெளிப்படுத்தியது. இரண்டாவது ஓவியம் பனி மழை பெய்து முடிந்த பின் அமைதியாக இருந்த பனி மலையினுடையதாக இருந்தது. சத்தங்களும் உறைந்து போனது போன்ற பேரமைதியான ஒரு சூழ்நிலையை அந்த ஓவியம் சித்தரித்தது.

மூன்றாவது ஓவியம் ஒரு பெரிய நீர்வீழ்ச்சியுடையதாக இருந்தது. அதைக் கண்டதும் மந்திரி சொன்னார். நாம் சொன்னதை இந்த ஓவியர் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை போல இருக்கிறது. இதை விட்டு விட்டு முதல் இரண்டில் ஒன்றைத் தேர்ந்தெடுக்கலாம் என்றார். 'ஒரு நிமிடம் பொறுங்கள்' என்ற சக்கரவர்த்தி அந்த ஓவியத்தை சிறிது ஆராய்ந்து விட்டு இந்த ஓவியம் தான் நான் எதிர்பார்த்தது என்று சொல்ல மந்திரிக்கு குழப்பமாக இருந்தது. "சக்கரவர்த்தியே இதில் அமைதி எங்கே இருக்கிறது. தடதடவென்று சத்தத்துடன் விழுந்து கொண்டிருக்கும் நீர்வீழ்ச்சி அமைதிக்கு எதிராக அல்லவா தோன்றுகிறது" என்று தன் அபிப்பிராயத்தைச் சொன்னார். சக்கரவர்த்தி சொன்னார். "இந்த ஓவியத்தில் நீர்வீழ்ச்சி பிரதானம் அல்ல. நன்றாகப் பாருங்கள்."

மந்திரி நிதானமாக அந்த ஓவியத்தை ஆராய்ந்தார். அந்த நீர்வீழ்ச்சிக்கு அருகில் ஒரு மரம் இருந்தது. அந்த மரத்தின் ஒரு கிளையில் இருந்த கூட்டில் ஒரு பறவை அமைதியாக உறங்கிக் கொண்டிருந்தது. சக்கரவர்த்தி சொன்னார். பக்கத்தில் அத்தனை இரைச்சல் இருந்தாலும் அதனால் பாதிக்கப்படாமல் உறங்கிக் கொண்டிருக்கும் அந்த பறவையிடம் உண்மையான அமைதி இருக்கிறது. இதைத் தான் நான் எதிர்பார்த்தேன் அந்த ஓவியமே அரசர் பார்வையில் இருக்கத் தேர்ந்தெடுக்கப்பட்டது.

இந்தக் கதையில் மிக ஆழமான பொருள் இருக்கிறது. அந்த சக்கரவர்த்தியின் நிலையில் தான் எல்லோரும் இருக்கிறோம். கடமைகளும், வேலைகளும், சரி செய்ய வேண்டிய பிரச்சினைகளும் தினமும் எம்மை அணுகிய வண்ணம் இருக்கின்றன. அமைதியுடனும், கவனத்துடனும் செய்தால் வாழ்க்கை சிறப்பாகவும், நிறைவாகவும் இருக்கும். ஆனால் பல சமயங்களில் அப்படிச் செய்ய முடியாமல் தடுமாறிப் போகிறோம். சக்கரவர்த்தியைப் போலவே எமக்கும் எல்லாவற்றையும் சமாளிக்க அமைதி தேவைப்படுகிறது. எது போன்ற அமைதி வேண்டும் என்று தேடும் போது தான் மூன்று வகை அமைதிகள் மூன்று வகை ஓவியங்களின் மூலம் சொல்லப்பட்டன.

குளத்தின் அமைதி கண்ணுக்கும் கருத்துக்கும் இனிமை தான். ஆனால் குளம் மேற்பார்வைக்குத் தான் அமைதியாக உள்ளதே ஒழிய அதன் அடியில் எத்தனையோ நீரோட்டங்களும், அமைதியின்மையும் இருக்க வாய்ப்புண்டு. வெளியே மட்டும் தெரியும் அமைதி அடுத்தவர்க்குத் தெரிவது. உள்ளே உள்ள குழப்பங்களையும் கொந்தளிப்புகளையும் மறைக்கிறது. அந்த புற அமைதி மட்டும் நமக்குப் போதுமானதல்ல என்பதால் அது தேர்ந்தெடுக்கப் படவில்லை. பனிமலையின் அமைதி குளத்தின் அமைதியை விட உத்தமமானது. அதன் உள்ளேயும் அமைதி தான். ஆனாலும் அந்த அமைதியும் தற்காலிகமானது. எந்த நேரமும் ஒரு பனிப்புயல் வரலாம். அந்த நேரங்களில் அந்த அமைதி காணாமல் போகலாம். இப்போதைய தோற்றம் முழுவதும் பனிப்புயலின் பின் மாறிப் போகலாம். எனவே தற்காலிக அமைதியும் நமக்குப் போதுமானதல்ல என்பதால் அதுவும் தேர்ந்தெடுக்கப்படவில்லை.

நீர்வீழ்ச்சி எப்போதும் விழுந்து கொண்டிருப்பது. அதன் சத்தமும் எப்போதும் இருந்து கொண்டிருப்பது. அந்த சூழ்நிலையிலும் அதனால் பாதிக்கப்படாமல் உறங்கும் அந்த பறவையின் அமைதியே நமக்குத் தேவையானது. நம்மைச் சுற்றி எங்கும் அமைதி இருக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது வீண். அது இயற்கையில் சாத்தியமில்லை. அந்த தொடர் நீர்வீழ்ச்சியைப் போல அன்றாட வாழ்க்கையில் செய்ய வேண்டியது நிறைய இருந்து கொண்டே இருக்கிறது. அது ஓய்வதில்லை. அந்த வேலைகளுக்கு இடையேயும், அந்தப் பறவையின் அமைதியான உறக்கம் போல, எமது உள் மனம் அமைதியாக இருக்குமானால் அதை விடப் பெரிய சாதனை வேறெதுவும் இருக்க முடியாது. அந்த அமைதியின் முத்திரை நாங்கள் செய்கின்ற செயலின் சிறப்பில் கண்டிப்பாக வெளிப்படும்.

அந்த சக்கரவர்த்தி தன் முன்னால் அந்த ஓவியத்தை வைத்துக் கொண்டது போல, நாமும் அந்தக் காட்சியை மனதில் பதித்துக் கொண்டு அவ்வப்போது மனக் கண்ணில் பார்த்துக் கொண்டு நம் அமைதியைத் தக்க வைத்துக் கொள்ள முயற்சிப்போமா? ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org